# திருக்குறள் - நயவுரை

[குறள் - புதுவுரை]

ஆசிரியர்:

புலவர். மு. கோவிந்தசாமி, M.A., B.O.L., M.Litt.

தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர்,

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

U.G.340

விற்பனை:

பாரி நிலையம்

59, பிராட்வே, : : சென்னை-1.

# திருக்குறள் - நயவுரை

[குறள் - புதுவுரை]

ஆசிரியர் :

புலவர். மு. கோவிந்தசாமி, M.A., B.O.L., M.Litt.

தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

விற்பனை :

**பாரி நிலையம்**

59, பிராட்வே, : : சென்னை-1.

முதற் பதிப்பு: பிப்ரவரி, 1962.
பதிப்புரிமையுடையது:

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. வள்ளுவர் தந்த மணப்பரிசு
2. நல்ல நாடு
3. வள்ளுவரும் காந்தியும்
4. குறள் மனம்
5. இலக்கியத் தோற்றம்
6. பாரதி கவித்திறன்
7. பாரதிதாசன் கவித்திறன்
8. நக்கீரர்
9. ஔவை

புரோகிரசிவ் பிரிண்டர்ஸ், சென்னை-1.

“பல பிறப்புக்களில் செலுத்த வேண்டிய அன்பை, இளமையிலேயே என்னிடம் செலுத்திச் சென்ற என் தாய்க்கு இந்நூல் உரிமை.”

# முகவுரை

தமிழ்த் திருக்குறளுக்கு 600 ஆண்டுகளுக்கு முன் பதின்மர் உரை கண்டனர். அவற்றுள் இன்று நால்வர் உரைகள் நிலைத்தும், சிறந்தும் உள்ளன. அவருள் மணக் குடவர் தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் போன்றவர். அவரை வழியாகக் கொண்டே கடைசியில் பரிமேலழகர் உரை வகுத்துள்ளார். பரிதியும் காளிங்கரும், பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் போன்றோர்.

இந்நால்வர் உரையும் பயனுடையவேயாகும். ஒவ் வொருவரும் ஒவ்வொரு நோக்கிலிருந்து விளக்கங் காண் கின்றனர். ஆசிரியர் கருத்திற்கு மிக நெருங்கி உரை காண்பவர் மணக்குடவர். வேறுபல அனுபவக் கருத்துக் களுடன் பல தெளிவுகட்கிடம் காட்டுபவர் பரிதி. பின்னைப் புதுமைக்குமுரிய பல கருத்துக்களுக்கும் விதையிட்டு விரி வாக எழுதுபவர் காளிங்கர். வடமொழி யறிவைக்கொண்டு எவ்வாறெல்லாம் விளக்கங் கூறலாமெனும் திறங்காட்டி எழுதுபவர் பரிமேலழகர். அவர் நெறியில் பல விவரங்கள் கிடைப்பதுண்மை யாயினும் மிகப் பலவிடங்களில் ஆசி ரியர் உள்ளம் மறைந்து போவதாகத் தெரிகின்றது. மணக் குடவர், பரிதி முதலிய மற்றைய மூவரினும் வேறுபாடு காட்டவேண்டும் என்னும் திறப்பாட்டுக் குறிக்கோளால் உண்மையல்லாத ஆனால் பிழையுமல்லாத பல விளக்கங் களைக் காட்டுகிறார் பரிமேலழகர்.

அவர்களுக்குப் பின் இன்றுவரை ஒரு பதின்மரைக் குறிப்பான உரை எழுதியோராகக் கொள்ளலாம். அவருள் கவிராசர், இராமாநுசக் கவிராயர் போன்றோர் குறிக்கத்தக்க வராவர். இவர்களும் சில பல இடங்களில் புதிய உரை களையும் திருத்தங்களையும் தந்துள்ளனர். தொட்டனைத்

தூறும் மணற்கேணி குறளே எனில் அது பொருந்தும். ஏழாண்டுகட்குமுன் குறளுக்குப் புதிய விளங்கங்களைப் பற்றிய மட்டிலும் ஒரு குறிப்புரை (பரிதியைப் பின்பற்றி) எழுதினேன். அதனில் சுமார் 1000 குறள்களுக்குப் புதிய விளக்கங்களைக் காண முடிந்தது. பின்னர் மூன்ருண்டுகள் கழித்து மீண்டும் நினைத்தேன். மேலும் சுமார் 500 இடங்களில் புதுமைகள் கிடைத்தன. மீண்டும் இரு முறைகள் அவற்றைப் பற்றி எண்ணியதில் ஒவ்வொரு முறையிலும் 200 குறள்களுக்கு மேல் புதிய விவரங்கள் தெரிந்தன. முதற் குறளிலேயே 'வடமொழியைப் பாணினிக்கு' என்ற மேற்கோளுக்குப் பதிலாக வள்ளுவர் காலத்தோடொட்டியே வாழ்ந்த திருமூலரது 'பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும் அண்ட முதல்வன் அரன் சொன்னவாறே' என்ற வரிகள் மிகவும் வலிமையுள்ளவாகத் தோன்றின. இவ்வாறு புதிய நயங்கட்கு ஊற்ருகவே திருக்குறள் இருந்து கொண்டுள்ளது. இன்னும் எழுத்தெழுத்தாக அசையசையாகக் குறளை உரை செய்தும் பின்னர் அனைத்தையும் ஒப்பு நோக்கியும் ஓருரை செய்யவேண்டும். இம்முறையில் திரு. வி. க. பாயிரம் முதல் பத்து அதிகாரங்கட்கு மட்டில் 1000 பக்கத்திற்கு மேலும் விரிவுரை கண்டார். அவரைப் பின்பற்றிக் குறள் முழுவதற்கும் 4000, 5000 பக்கங்களில் ஒரு பேருரை கண்டால் நாட்டிற்கு நற்பயன் உண்டாகும்.

நயவுரையாகிய இந்நூல் புதுமை விளக்கக் குறிப்புரையேயாகும். விரிவாக எழுத இயலவில்லை. அடுத்து அவ்வாறு விரிவாக எழுதும் எண்ணம் உள்ளது. வள்ளுவர் உள்ளம் துணைபுரிய வேண்டும். ஒரு குறளில் ஏதோ ஒரு சொல்லுக்குப் புதிய குறிப்பு ஒன்று இருக்கும். ஆனல் குறள் முழுவதுடனும் இணைத்து அதனை முடித்துக் காட்டியிராது. ஆனல் முடித்து நினைக்கவில்லை என்பதில்லை. அவ்வளவையும் எழுதிப் பதிக்க நேரமும் வாய்ப்பும் இப்போதில்லை. முடித்துப் பொருள் காண்பது, நினைத்துணர்

வது கற்போர் கடனேயாகும். பெரிய நூலில் பிழையும் குறையும் பல இருக்கக்கூடும்; விரைவில் அவற்றை நீக்கிக் கொள்வேன்.

பண்டையோர் மரபுக்கு மாருமலும் வரலாற்ருேடொட்டியும் இந்நூல் எழுதப்பட்டது. என்றும் பொருந்துவதென்னும் குறள் இன்றைய அரசியல் சமூகக் கோட்பாடுகளுடன் எவ்வாறு பொருந்துகிறதென எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மேனுட்டார் நூல்களுடனும் கருத்துக்களுடனும் இணைத்து ஆராயப்பட்டுள்ளது. நுட்பமான பாடபேதங்கள் தரப்பட்டுள்ளன. காமத்துப்பால் மட்டும் ஒரு தனி நூல் என்னும்படிப் புதிய நோக்குடன் வாத்சாயனர், ஆங்கிலேயர் இன்பியல்நூல்களுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

திருக்குறள் அறிவிற்கு, இவ்வகையில் ஒரு புதிய நெறியும் ஒளியும் தருவதில் முன்னைய உரை ஆசிரியர்தம் முயற்சிகளுடன் எனது சிறு முயற்சியும் பயன்தருமென்ற ஏக்கத்துடனேயே தமிழன்னையின் திருமுன்னர் இம்மலரை வைக்கின்றேன்.

அண்ணமலை நகர்
30—1—62

அன்புள்ள,
மு. கோவிந்தசாமி.

# உள்ளுறை


| | |
|---|---|
| அடக்கமுடைமை | 33 |
| அமைச்சு | 159 |
| அரண் | 183 |
| அருளுடைமை | 64 |
| அலரறிவுறுத்தல் | 270 |
| அவர்வயின் விதும்பல் | 294 |
| அவாவறுத்தல் | 92 |
| அவையஞ்சாமை | 179 |
| அவையறிதல் | 177 |
| அழுக்காறாமை | 44 |
| அறன்வலியுறுத்தல் | 10 |
| அறிவுடைமை | 109 |
| அன்புடைமை | 21 |
| ஆள்வினையுடைமை | 155 |
| இகல் | 206 |
| இடனறிதல் | 126 |
| இடுக்கணழியாமை | 157 |
| இரவச்சம் | 252 |
| இரவு | 250 |
| இல்வாழ்க்கை | 13 |
| இறைமாட்சி | 97 |
| இனியவை கூறல் | 26 |
| இன்னாசெய்யாமை | 80 |
| ஈகை | 59 |
| உட்பகை | 213 |
| உழவு | 245 |
| உறுப்பு நலனழிதல் | 288 |
| ஊக்கமுடைமை | 150 |
| ஊடலுவகை | 305 |
| ஊழ் | 94 |
| ஒப்புரவறிதல் | 56 |
| ஒழுக்கமுடைமை | 36 |
| ஒற்றாடல் | 148 |
| கடவுள் வாழ்த்து | 1 |
| கண்ணோட்டம் | 146 |
| கண்விதுப்பழிதல் | 276 |
| கயமை | 254 |
| கல்லாமை | 103 |
| கல்வி | 100 |
| கள்ளாமை | 74 |
| கள்ளுண்ணாமை | 221 |
| கனவு நிலையுரைத்தல் | 284 |
| காதற்சிறப்புரைத்தல் | 266 |
| காலமறிதல் | 124 |
| குடி செயல்வகை | 243 |
| குடிமை | 227 |
| குறிப்பறிதல் (பொ) | 174 |
| குறிப்பறிதல் (கா) | 259 |
| குறிப்பறிவுறுத்தல் | 296 |
| குற்றங்கடிதல் | 112 |
| கூடாநட்பு | 200 |
| கூடாவொழுக்கம் | 71 |
| கேள்வி | 106 |
| கொடுங்கோன்மை | 56 |
| கொல்லாமை | 82 |
| சான்றாண்மை | 233 |
| சிற்றினஞ் சேராமை | 117 |
| சுற்றந்தழால் | 133 |
| சூது | 223 |
| செங்கோன்மை | 138 |
| செய்ந்நன்றியறிதல் | 28 |
| சொல்வன்மை | 161 |
| தகையணங்குறுத்தல் | 257 |
| தவம் | 69 |
| தனிப்படர் மிகுதி | 280 |
| தீ நட்பு | 198 |
| தீவினையச்சம் | 54 |
| துறவு | 87 |

தூது 170
தெரிந்து செயல்வகை 120
தெரிந்து தெளிதல் 128
தெரிந்து வினையாடல் 131
நடுவு நிலைமை 31
நட்பாராய்தல் 194
நட்பு 192
நலம்புனைந்துரைத்தல் 264
நல்குரவு 248
நன்றியில் செல்வம் 238
நாடு 181
நாணுடைமை 241
நாணுத்துறவுரைத்தல் 268
நிலையாமை 85
நிறையழிதல் 292
நினைந்தவர் புலம்பல் 282
நீத்தார் பெருமை 7
நெஞ்சொடு கிளத்தல் 290
நெஞ்சொடு புலத்தல் 299
பகைத்திறந் தெரிதல் 211
பகைமாட்சி 208
பசப்புறு பருவரல் 278
படர்மெலிந்திரங்கல் 274
படைச்செருக்கு 190
படைமாட்சி 187
பண்புடைமை 236
பயனில சொல்லாமை 51
பழைமை 196
பிரிவாற்றுமை 272
பிறனில் விழையாமை 39
புகழ் 62
புணர்ச்சி மகிழ்தல் 261
புணர்ச்சி விதும்பல் 297
புலவி 301
புலவி நுணுக்கம் 303
புலான் மறுத்தல் 67
புல்லறிவாண்மை 244
புறங்கூறுமை 49
பெண்வழிச்சேறல் 217
பெரியாரைத் துணைக்கோடல் 114
பெரியாரைப் பிழையாமை 215
பெருமை 231
பேதைமை 202
பொச்சாவாமை 136
பொருள் செயல்வகை 185
பொழுது கண்டிரங்கல் 286
பொறையுடைமை 41
மக்கட்பேறு 18
மடியின்மை 153
மருந்து 225
மன்னரைச் சேர்ந்தொழுகல் 172
மானம் 229
மெய்யுணர்தல் 89
வரைவின் மகளிர் 219
வலியறிதல் 122
வாய்மை 76
வாழ்க்கைத் துணைநலம் 15
வான்சிறப்பு 4
விருந்தோம்பல் 23
வினைசெயல்வகை 168
வினைத்திட்பம் 166
வினைத்தூய்மை 164
வெகுளாமை 78
வெஃகாமை 46
வெருவந்த செய்யாமை 143

# திருக்குறள் - நயவுரை

—:o:—

## அறத்துப்பால்

### 1. கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

பல்வேறு உருவங்களுடன் எழுதப்படும் பலமொழி எழுத்துக்களும் 'அ' என்னும் எழுத்தும், ஒலியுருவத்தில் ஒன்றேயாகும். அதுபோலப் பல சமய, நிற, மொழி மக்களுக்கும் பல்வேறு உருவங்களில் நிற்கும் இறைவன் ஒருவனேயாவான்.

எழுத்தெல்லாம் பகவன் முதற்றே, உலகு பகவன் முதற்றே எனவும் கூட்டலாம். மொழிகளையெல்லாம் இறைவனே படைத்தான் என்ற கோட்பாட்டினை இது குறிக்கிறது. 'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத் தென்மொழியைக் குடமுனிக்கு வலியுறுத்தான் கொல்லேற்றுப்பாகன்' என்ற கருத்தினை நோக்குக. உலகச் சமயத்திற்கு வழி வகுத்தது.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

வாலறிவன் என்றமையால் இறைவனை அறிவுருவமாகக் கொண்டு அறிவினை அவனிடம் வேண்டி வழிபடுதலன்றி ஆற்றல், செல்வம் முதலியவற்றை அளிப்பவனாகக் கொண்டு வழிபடல் 'அறிவு சிறந்த' மனித இயல்பிற்கு ஆகா தென்பதாம். உலகக் கல்வியறிவு சிறந்தோரும் (நாத்திகர் முதலோர்) வீண் (சமய) வாதங்களிற் காலத்தைப் போக்காமல் வாலறிவினை வழிபட்டால் உயர் மனிதத்

தன்மைக்குரிய அறிவு விளங்கப் பெறுவர். சமய வாதத்தினும் வழிபாடு சிறந்தது.

**3.** மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

மலர் என்பது அழகு, இயற்கை ஆகியவற்றையும் அழகுக் கலைகளையும் குறிப்பதாகலாம். இறைவன் அழகு-கலை ஆய வடிவினன். அவனைக் கலைகளால் வழிபட்டால் உலகில் நீண்ட காலம் வாழலாம்; புகழால், தான் இறந்த பின்னும் வாழலாம்.

'மலர்' என்றது சரியை நெறியினையும், 'கற்றதனால்' என்றது ஞானநெறியினையும், பின் 'பொறிவாயில்' என்றது யோக நெறியினையும் குறிப்பதாகலாம். முன்பு கல்வி வழிபாட்டையும் இங்குக் கலை வழிபாட்டையும் குறித்தது. மலர் - பூ எனக் கொள்ளலே சிறந்தது. பௌத்த ஜைன சமயப் பொதுமை காட்டியது.

**4.** வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்(கு)
யாண்டு மிடும்பை யில.

'இல்லாருமில்லை உடையாருமில்லை' என்ற நிலையை விரும்பும் உலகம் அவ்வியல்பினனை அடைய வேண்டும். இன்னவர் வேண்டியோர் இன்னவர் வேண்டாதோர் என்னுமல் உலகில் எம்மக்களையும் ஒன்றெனத் தழுவிய பண்புடையனாய் அவனடி சேர்க வென்பதாம். இலான் என்பது இறைவற்கும் அடியார்க்கும் என இருவர்க்கும் பொருந்தும். இது நன்னெறிக்கு வேண்டிய 'நடுவு நிலை' உள்ளத்தை வற்புறுத்துவதாகவும் கொள்ளலாம்.

**5.** இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இதுவும் நடுவு நிலையை வற்புறுத்துவதேயாம். இருள்-பண்பின்மை; 'பகலும் பாற்பட்டன்றிருள்' என்றதனை நோக்குக. எனவே, 'மக்கட்பண்புயர' பொருள் சேர் புகழ் புரிதலும் இருவினை நடுவும் வேண்டும். இருள் - வறுமையாயின் பொருள்சேர் என்பது பொருந்துகிறது. பொருள் - மெய்ப் பொருள்; மெய்யுணர்வுப் பொருள். புகழ் புரிதல் - பாடி வழிபடல். பண்பு - பண்பாடு.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்.

அவித்தல் - பக்குவப்படுத்தலெனின் 'ஓரைந்துங்காப் பான்' என்பதனுடன் பொருந்துகிறது. அவித்தல் - காத்தல் என்பதால் வேண்டுதல் வேண்டாமை குறிக்கப்பட்டது. அவித்தல் உலக நலங் கருதியும், காத்தல் சிறிய தன்னலங் கருதியும் என்க. 'உடம்பு உத்தமன் கோயிலா'தலின் இது உடம்பைக் காக்கும் யோக நெறியை உணர்த்திற்று. உடம்பைப் போற்றுதலும் நீடு வாழ்தலும் பொய் தீரொழுக்க நெறிக் காவனவாம். ஒழுக்க நெறி - அறத்துப் பால் கூறும் 'ஒழுக்காறு'.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

மகன் (மனிதன்) இயல்பு உலக அவையத்து முந்தி யிருத்தலாகும். அதற்கு அவன் தனக்குவமையில்லாதானுக வேண்டும். தனக்குவமையில்லாதானுகவும் தமக்குவமை யில்லாதார் ஆகவும் விரும்பாத மக்களில்லை. அவர் தனக் குவமையில்லாதானைச் சேராவிடில் பிறர்க்குப் பிற்பட்டவர், பின் தங்கியவர்' என்ற மனக் கவலையை மாற்றல் அரிது.

8. அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது.

அறவாழி - அறத்தில் அறத்துக்காகவே வாழ்பவன். அந்தணர் - அறவோராகிய சான்ருேர் - உயர் மனிதர் (Super man). அறமாகிய ஒப்புரவும் அந்தண்மையாகிய உலகோர்க்குச் செந்தண்மையும் உடைமையே அவனைச் சேர்தலாகும். தமிழ் கூறிய, உலகுக் கின்றியமையாவாகிய அற முதலிய முப்பொருளுக்கும் இறைவன்தாள் புணையா மென்றது; பொருளும் இன்பமும் வேண்டினும் தரும் என்றது.

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

கோள் - உடலுறுப்புக்கள். பொறி - கருவிகள். கோள் அறிவுமாம். உடலழகு அறிவு முதலியவற்ருற் பய

னில்லையென்பது. வணங்காத்தலை - வணங்காதவிடத்து. அறிவும் செய்துணைக் கருவிகளுமிருந்தும் எண்ணிய செயல்களை முடிக்க இறைவன் நினைவுவேண்டும்; தனு கரண புவன போகங்களாற் பயனில்லை. கோள் - சாதகத்தில் கூறும் நற்பேறுகள் இருப்பினும் பயனில்லை. எண் குணம் - எண்ணப்படும் குணம். 'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம்' எண்ணப்பட விரும்புவோன், எண்குணத்தானை வணங்கவேண்டும். எண் - ஒன்று, இரண்டு, நூறு, கோடி என்ற எண்வடிவாயவன் (பரிபாடல் - 3). முதற் குறளில் எழுத்து வடிவாயவன் என்பதனையும் இங்கு எண் வடிவாயவன் என்பதனையும் குறித்தபடியாம். இவ்விரண்டு குறள்களாலும் வைணவ சைவப்பொதுமை காட்டியது.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

வாழ்க்கை, நூருண்டுகளையும் நாளைக்கு நூற்றுக்கணக்கான இன்ப துன்பங்களையும் உடையது; ஏற்றத் தாழ்வுகள் மிகவுடையது. அவற்றைக் கடப்பது நீந்துவதேயாகும். அதற்கு இறைவனடிப்புணை இன்றியமையாதது. வாழ்க்கை வாழ்வதற்கே இறைவனடி வேண்டும் என முற்ற முடித்துக் கூறியது. பிறவிப் பெருங்கடலை நீந்தும் நாத்திகர் முதலோரும் கைசோர்வர். அப்போது அவர் புணையின்றியமுழுந்துவர்; புணையா யுதவுவது இறைவனடி என்பதாம்.

## 2. வான் சிறப்பு

1. வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்றுணரற் பாற்று.

வான் - இன்று எனப் பிரித்து இன்று கண்ணெதிரே உலகை நிலைபெறச் செய்தலால் அது 'தான்' கண்கண்ட அமிழ்தமென்க. வானத்திலிருந்து தேவரால் இரண்டும் அளிக்கப்படுவன. கடவுள் வாழ்த்தொடும் கண்ணி மாமழையும், சிலப்பதிகாரத்தும் குறளிலும் எண்ணப்பட்டதிதனலேயாம். நீரும் சோறும் அமிழ்தமெனப்படும்; அவற்றைத் தருவதும் அமிழ்தமாயிற்று. அது தேவரைமட்டும் நிலைப்பித்தது. இது எவரையும் நிலைப்பிப்பதாகலின் இதுதான் அமிழ்தமெனத் தெளிவித்தது.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

துப்பாயதூவும்; துப்பு - பவளம் போன்ற செந்நிறக் குருதி. உணவுடன், உடலில் குருதி நீராகவும் பயன்படுவது. மழையின்றேல் நீரும், அதனாலாய குருதியோட்டமும் இல்லை. குடிநீரின் இன்றியமையாமை குறித்தது. மற்றும் உடலுக்கும் நிலத்திற்கும் ஆகும் குளிர்ச்சியைத் தருதலுமாம். கார்காலம் காதலுக்கும் நெஞ்ச நீர்மைக்குமுரியது. துப்பு - வலிமையுமாம். உணவுப் பொருள்களை உடலில் வலிமையாக மாற்றுவதும் நீர்ப்பொருள்கள்தாம்.

3. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உண்ணின்று உடற்றும் பசி.

முன்நின்று பின்பு அறுவடை, கதிர்வரும் சமயம் முதலியவற்றின்போது பொய்ப்பினும் பசி உடற்றும். விரிநீர் உலகத்தென்றது ஓரிடத்துப் பொய்ப்பினும் உலக முழுவதும் பசி வருத்தும்; எனவே உலக முழுவதும் பசி வராத நிலையை நினைக்கவென்றது. இன்று பொய்ப்பின் நின்று உடற்றும் என்றாக்கி, ஒரு பருவமழை தப்பினால் பல பருவ விளைவு தப்புமாகலின் நீர் வளத்தை நிலைக்கச் செய்ய வேண்டும் என்க. விரிநீர் விளைக்கும் உப்பிருந்து சோறில்லையானால் பயனில்லை. கடல்நீரை நன்னீராக்கி விளைக்கும் அறிவியல் காலம் வருமாயினும் பெரும்பயன் ஆகாதென்றது. உள்நின்று - மனத்தில் நின்று. மற்ற பசி உடலையே வருத்தும். மழையில்லாத காலத்துப் பசி உள்ளத்தையும் வருத்தும்.

4. ஏரி னுழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

ஏர், இங்குப் பொதுவாகத் தொழில்களைக் குறிக்கின்றது. உழவு அடிப்படையாகலின் எத்தொழிலும் நடவாது. புயலென்னும் வாரி - புயலும் மழையுமடித்து வளங்குன்றினால் என்றுமாம். ஏரின் உழாமல் கொலை கொள்ளை முதலியவற்றை (பாலை நிலத்தாரைப்போல) மக்கள் தொடங்குவர். உலகில் தீமைகள் யாவும் மழையின்மையால் தோன்றும்.

5. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

பாலையிலும், உதவாத அயல் நாடுகளிலும் பெய்து கெடுப்பதும், வயலிலும், உதவும் உள் நாட்டிலும் பெய்து எடுப்பதும் மழை. பயிர் வாடக்கெடுப்பதும் தழைக்க எடுப்பதுமாம். கெட்டார்க்குச் சார்பாய மற்றோர் நாட்டில் பெய்தெடுத்தலுமாம்.

6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்(று) ஆங்கே
பசும்புல் தலைகாண்(பு) அரிது.

பசும்புல் மேயும் ஆவினத்தின் ஊனைத்தின்று பிழைக்கலாமென்றலும் ஆகாது. புல்லரிசியும் கிடையாதென்றது. பசும்புற்றலை நீரும் (பனிநீர்) காண்பதரிது. பனி நீரைச் சுவைத்து வாழவும் வழியிராது.

7. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

மழைபோன்ற ஒப்புரவு கடலுக்கும் கடலுலகுக்கும் இல்லை. கடல் நீர்மை - கடல் வாணிபம். முன்பு தொழிலின்மை குறித்து இங்குத் தமிழர் கடல் வாணிபங்குன்றுதல் குறித்தது. கடல், காற்றால் குளிர்ச்சி தருதல் இன்றென்பதாம். அதாவது நாட்டின் நல்ல வெப்பநிலைக்கும் (Climate) மழை காரணமாம். எழிலி என்றமையால் நெடுங்கடல்—உலக எழில் (அழகு) குன்றுமென்பதாம்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

எல்லாம் வல்ல தேவர்களாலும் மழையைப் படைத்துக்கொள்ள முடியாதென்றமையால் மழையினதாற்றல் குறித்தது. சிறப்பொடு செல்லாதென்றது மழைவேண்டுமென வேண்டுதற்காக மக்கள் இடும் சிறுபூசையே ஓரிரு முறை நடக்குமென்றபடி. சிறப்பு - புகழ். புகழ்ந்து போடும் பூசையன்றி, பழித்துத் தெய்வத்திற்குக் 'கண் இல்லையே' என்றிரங்கிப் போடும் பூசையே செல்லுமென்றலுமாம்.

9. தானம்தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்

தானம் பிறநலம். தவம் தன்னலம். தன்னலமும் நிறைவேறுதென்றது. தானம் - அருளும், தவம் - ஆற்றலும் நிலையாவென்றலுமாம். தானம் தவம் இரண்டும் ஒன்றில் ஒன்று தங்குதலாகிய இயல்பு குன்றும்.

10. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

நீர் உலகையும் வான் உலக வொழுக்கத்தையும் இன்றியமையாமையாக் கொண்டன. உலகமின்றி நீரில்லை; மக்கள் ஒழுக்கமின்றி மழையில்லை. ஒழுக்கு - ஊற்று. ஊற்றுநீரும் உண்டாகாதென்றது. ஒழுக்கு - ஒழுக்கமாயின் உள்ளவியல் (பண்பியல்) மழையாலேயாம் என்பது; முன்பு உடலியல் மழையாலமைவது கூறப்பட்டது.

## 3. நீத்தார் பெருமை

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

நீத்தார் - தியாகிகள்; உலக நலனுக்காக எதனையும் துறந்தோர். நீத்தல் - மனத்துக்கண் மாசு நீத்தல். பனுவல் - தத்துவம். சிறந்த (மறை) தத்துவ முடிபுகளையே உயர்ந்தோர் விரும்புவர். அவர் சிறந்ததாகக் கருதும் நூல்களே நமக்கும் நூல்கள்; கோட்பாடுகளே நமக்கும் கோட்பாடுகள். பனுவல் துணிந்த ஒழுக்கத்து நின்று நீத்தாரென்றுமாம்.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

துணை ஒப்பு. தெய்வத்திற்கும் முதலாக வைக்கப்படும் தென்புலத்தார் பெருமையும் துறந்தார் பெருமையும் ஒப்பாகும். இறந்தார் - தென்புலத்தார் இருவரும் உலக வாழ்க்கையைக் கடந்தவர். இறத்தல் - கடத்தல். உலகோர்க்குத் தென்புலத்தார் கண்மறைய நின்றும், துறந்தார் கண்

ணெதிரே நின்றும் 'துணை' புரிவரென்றலுமாம். எண்ணிக் கொண்ட (நினைத்த) அளவிலேயே இருவரும் வந்துதவுவர்.

3\. இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்(று) உலகு.

இருமை: அறம் - மறம்; நல்வினை - தீவினை; பொருளும் இன்பமும் அறத்தின் வழிப்பட்டதென்ற வகை. அவர் திருவேறு தெள்ளியராதலும் வேறென்ற வகை. பெருமை உலகை விளக்குகின்றது; அதாவது மனிதவாழ்வு அவரால் விளக்கமுறுகின்றது.

4\. உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து.

ஒரு தோட்டியான் ஐந்து யானைகளை அடக்குதலே அரிய செயலாம். வரன் - வரங்கள். எல்லா நலன்களையும் உலகோர்க்கருளுதற்கிடமாயவன். தோட்டி - ஊர்க்காவலனாகிய தோட்டியுமாம். வீட்டினையருளுதற்குக் காரண (வித்து) மாய குருவாவான். உரன் - வீரமுமாம்; ஐந்தடக்குபவனே வீரன்.

5\. ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

மழையை யருளும் ஆற்றலாகிய தெய்வத்தன்மை. அறத்தினல் பொருளின்பங்களில் மேலாய இந்திர நிலையும் வேண்டிற்கிட்டுமென்றது; உயர்ந்த அரச பதவியும் கிட்டுமென்பது குறிப்பு. மேற்கூறிய வரங்கட்கு வித்தாய சங்க, பதும, கற்பக நிதிகளையுடையவன்.

'ஆற்றற்கு' என்ற பாடம் சிறந்தது.

6\. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

செயற்கரிய - குறளில் அரியன எனக்கூறிய யாவும். மனமாசு நீத்தல், அழுக்காறு முதல் நான்கும், சிறப்பாக வெகுளியும் நீத்தல். சிறியர் செயற்கரியவற்றையல்லாது, பெரியர் செயற்கரிய வென்பவற்றையே செய்பவர்.

7. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

உலகம் அவனிடத்திருப்பதன்றி அவன் உலகில் இல்லை. ஐம்புலன்களையும் நெறிப்படுத்திவிடுவானாயின் அவனே மனிதன். அதற்கு உரன் (மெய்யுணர்வு-தெளிந்த அறிவு) துணையாகும். தத்துவ ஞானிகளின் கோட்பாடுகளின் வழியேதான் உலகில் என்றும் அரசியல், பொருளியல், இன்பவியல், அறிவியல் துறைகளெல்லாம் இயங்கி வருகின்றன.

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

நிறை - அளவு; அளந்துரைக்கப்பட்ட மொழி. மறைமொழி - என்றும் அழியாத, புதைபொருளாய் மறைந்து கிடக்கும் மொழி. அறை மொழி என்றாக்கி பிறநிலங் (நாடு) களிலும் மொழி பெயர்த்து முழங்கப்படும் (அறை) மொழியென்றுமாம். மனத்தில் மறைந்து நின்று இழுக்கலுடையுழி உதவுமொழியுமாம்.

9. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது.

எவரெஸ்ட் முதலிய மலைகளை ஏறுதல் பெரிதன்றென்பது. குன்றின் வெகுளி எரிமலைப் பிழம்பாய் அழிக்குமென்பதுமாம். அழுக்காறு முதல் நான்கனுள் எரிமலைப் போல அடக்கற்கரியது வெகுளி. குணம்—பண்பு. வெகுளி யற்ற மக்களே பண்பாட்டைப் படைக்க முடியுமென்பது. வெகுளி நிற்பது கணமாயினும் அது குன்றனைய குணத்தையும் அழிக்குமென்பது. வெகுளி நீங்கினால் அவனே மனிதன்; நாகரிக (பண்பு) முடையவன். அரிதாகிய குணமென்னும் குன்றேறி நின்றார் எனக் கூட்டலுமாம்.

10. அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

சாதியால் உயர்வு பாராட்டியோர்க்கு ஒழுக்கத்தால் உயர்வு காட்டித் தெளிவிப்பது. அறவோரல்லாத (தேவரல்லாத மக்கள், நாகர், நரகர் முதலிய) பிறர்க்கும்

செந்தண்மை பூண்டொழுகுவோர். உயர்சாதி இதுவெனவும், உயர்வொழுக்கம் இதுவெனவும் தெளிவித்தவாறு. மற்றெவ்வுயிர் - பிற இன, நாட்டு, மொழி, மதம் பற்றிய மக்கள். அறவாழி யந்தணன் என்றமையால், எவ்வுயிரும் பராபரன் சந்நிதி 'யென்பவர்'.

## 4. அறன் வலியுறுத்தல்

**1.** சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

எல்லாருஞ் செய்வர் சிறப்பென்ற சிறப்புத் தரும் பொருட் செல்வம். வீடுபேற்றைத் தரும் மெய்யுணர்வுப் பொருளுமாம். அறமில்லாதாரிடம் இருக்கும் செல்வத்தினும் அறத்து வழிப்படும் செல்வம் சிறப்பீனும்.

**2.** அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

மறத்தலின் என்றமையால் அறம், காமம் - கடவுள் போல என்றும் நினைக்கத் தக்கதாம். ஊங்கு - தொலைவு எனில் ஆக்கமும் கேடும் அடுத்த பிறவியிலும் தொலைவிலும் இல்லை, அப்போதே கிட்டு மென்பதாம். இதனால் செயலன்று, நினைவே அறமென்றது.

**3.** ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

ஓவாதே செல்லும் வாய் என்பது காலம். கணந்தோறும் இடைவிடாது செயல். நினைவின்பாற் பட்டதாகலின் எப்போதும் செய்யலா மென்பது. செல்லும் வாய் - பொருளின்பங்கள். ஒல்லும் வகையான் செய்பவன் அறவினை செல்லும்; சிறக்கும்; அவன் வாயெல்லாம் செயல் எனப் பிரிக்க. வாய் - சொல். அவன் சொல்லெல்லாம் செயலாகும். சொல்வதைச் செய்வான்; செய்வதையே சொல்வான் என்றபடி.

**4.** மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

பிறவென்றது புறந் (உடல்) தூய்மையை. ஆகுல நீர - வெளியில் தோன்றுவன. மற்ற சொல் செயலிலும் அறம் வெளிக்குப் புலப்படுவதென்பதாம். பொருளின்பங்களில் அறமும் புறத்தே தோன்றுவ தென்பதாம்.

**5.** அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற(து) அறம்.

மற்ற மூன்றும் அழுக்கு ஆறு (நெறி) ஆகலின் முதலில் அழுக்கா றென்ருர். இவற்றுள் இரண்டாவது முதலிலும், நான்காவது மூன்ருவதிலும் அடங்கும். இழுக்கா - கீழாக் காமல், கெடுக்காமல். பிறரது அழுக்காறு முதலிய தன்னைக் கெடுக்காமல் விழிப்புடன் இயன்றது அறமென்க. அறவோர்க்கு எதிர்ப்பு எங்கும், என்றுமுண்டு. அதனைக் கடந்தது அறமென்றது. நாயைக் கண்ட நாய்க்குப் போலக் காரணமின்றி இயல்பாய் எழுவதாகலின் முதலில் அழுக்காற்றைக் கூறினர்.

**6.** அன்றறிவாம் என்னு(து) அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்ருத் துணை.

அறம், பயனைப் பின்னர் தருவோம் என்று கூருது உடனே தரும், செய்க வென்பது. மற்றது - மறம். மறம் அழியும், அறம் அழியாது. அறவுருவம் அழியினும் நினைவு அழியாது: ஔவைக்கீந்த நெல்லிக்கனி இப்போதில்லை, ஆனுல் அவ்வற நினைவு உள்ளது போல. பொன்றுங்கால் - உலகமழியுங் காலத்தும். செய்யும் நேரம் வரட்டும் என் றிராமல் அதுவரை அதுபற்றி நினைத்துக் கொண்டிருக்க, சொல்லிக் கொண்டிருக்க வென்றது.

**7.** அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானேே டூர்ந்தா னிடை.

அறத்தாறு - இல்லற, துறவற ஆறுகள். இல்லறத் தான் தாங்குவோன், துறவறத்தான் அதில் அமர்வோன். ஒருவர் மற்றவர்க்குப் பற்றுக்கோடென்பது. பொறுத் தானேே டூர்ந்தானிடையுள்ள ஏற்றத் தாழ்வு அறமென வேண்டா; பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் என்பது.

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

வீழ்நாள் - வீணாள் என்றுமாம். வீழ்நாள் - விரும்பும் நல்ல நாள். நல்ல நட்சத்திர யோகமுள்ள நாள் என்றெதிர் பார்க்காமல், என்றும் செய்க. தோன்றிய ஒவ்வொரு நாளும் கழிவதற்கு முன்னே என்க- நாளை விரும்பாமல் அறத்தை விரும்புக.

பொழுது போக்கிக் காலங் கழிக்கவே நாளை விரும்பா மல் அறஞ் செய்தல். வழியடைக்குங்கல் - வழியைச் செம்மையாக்கப் பரப்பும் கல். அவன் வாழ் நெறி செம்மை யும் நேர்மையுமடையும். நாட்டும் வீரக்கல்லுமாம். வீரர்க் கன்றி அறஞ் செய்வோர்க்கும் கல் நாட்டுவ ரென்பதாம். வாழ்நாள் வழி (புகழ்) எழுதி நாட்டிய கல். கல் வீழ்நாள் என்றிணைத்து அக்கல் (எடுப்பு) வீழ்நாள் எனலுமாம். வீழ்தல் - இடுதலுமாம்.

9. அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

பின்னும் 'புகழ்ந்தவை போற்றிச் செயல்' வேண்டு மென்றார். பொருள் இன்பங்கள் தமக்காகலின் புகழுமில வென்றார். மற்றெல்லாம் - மறம்; வீரம். புறத்த - புறத் திணைக்குரியன. இங்குப் போரினையும், அங்குறும் அழிவு களையும் வெறுத்தது, என்னலுமாம். இது தூய அஹிம்சை அறநெறி. புகழும் இன்பமும் தொடர்புடையன. புகழ்க் குரிய செய்தாற்றான் 'இன்பம்' என, இன்பத்திற்கு வழி சொல்லியது.

10. செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி

பழி - கொடார்ப் பழித்தலாகிய பழி. வீடு பேற்றினைச் செயற்பாலது; பிறவியுள் உயற் (உய்த்தல்) பாலது என்க. ஓரும் - ஆராய்ந்துரைக்கும். நாட்டில் ஆன்றோர் ஆய்ந்துரைப்பவற்றைச் செய்தலே அறம், அவற்றைத் தவிர்தலே பழி. இங்கும் அறம்-பழி என்றமையின் அறமே புகழ் என்பது பெறப்பட்டது.

## 5. இல்வாழ்க்கை

1. இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

அறவியல்புடைய கடவுளர் மூவர் - இயல்புடைய மூவர். அவர்களது சமயங்களுக்குத் (சைவம், வைணவம், வைதிகம்) துணை யென்பது. வள்ளுவர் சமயப் பொதுமைக் காலத்தவர். தாய் தந்தை மனையாள் எனலுமாம். ஆனால் அவர்கள் வாழ்க்கைத் துணையிலும் மக்கட் பேற்றிலும் பேசப்படுவர். அரசன், ஆசான், ஆன்றோர் (புலவோர்) என்றுமாம்.

2. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை.

துறந்தார் உலகிற்காக வாழும் தியாகிகள்; துவ்வாதார் செயலாற்ற வியலாத ஏழை, கூன் குருடுகள். இறந்தார் - மூதாதையர். அவர்க்குத் துணை - நினைத்துச் செய்யும் அறங்கள். அவர்கள் விட்ட ஆதரவற்ற குடும்பங்களைக் காத்தல்.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை.

தென்புலத்தார் - மூதாதையராகிய தமிழர். தெய்வம் - அவர் வணங்கிய சமயத் தெய்வமும், குடித் தெய்வமும்; விருந்து - இன்று நம் உதவியை நாடும் அயல் நாட்டார்; அன்றித் தமிழ் மக்கள் அனைவரும்; ஐம்புலத்தாறு ஓம்பல் - அவர்க்கு ஐம்புல இன்பங்களையும் அளித்தோம்பல். தலை யென்றதனால் ஓரிரு புலத்தாறேனும் ஓம்புக வென்றது. ஐம்புலத்தார் என்ற பாடம் சிறந்தது.

4. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்று மில்.

பாத்தூண் - நிலத்தையும், மிக்க செல்வத்தையும் குடும்பத்தினர்க்கும் நாட்டார்க்கும் முறையாகப் பகுத்துண்ணல். வாழ்க்கை வழி - வாழ் நாள் வழி என்ற வழக்குகளை நோக்குக. வீடு பேறடையு மென்பது. அன்றி இவர்க்குக்

குறைவுற்ற காலத்துப் பிறர் பகுத்த உணவால் வாழ்வர். அவர் வாழ்ந்த நெறியே உலகுக்கு வழிகாட்டும்.

**5.** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

மனைவி அன்பு; கணவன் அறம். மேற் கூறியவரெல்லாரிடத்தும் அன்பும் அவர்க்கறமும் உடைத்தாயின் என்க. உலக வுயிரிடத்தன்பும் அறனுமாம். அன்பும் அறமுமே தமிழன் கண்ட பண்பாடு (நாகரிகம்) என்பது. தமிழ்ப் பண்பாடு இல்லறத்தை அடிப்படையாக்கொண்டது.

**6.** அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ(து) எவன்.

புறத்தாறு - வெட்சி முதலிய புறத்திணை ஆறு - (போர்கள்), இல்வாழ்க்கை அகத்தாறு. அறமற்ற வெறும் பொருள் இன்பங்களால் இல்லறஞ் சிறவாது.

**7.** இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

முயல்வார் - இல்லறத்தில் முயல்வாரே யாம். இயல்பினல் வாழ்தல் - கூத்தி, பரத்தை முதலானோருடனன்றிக் காதல் மனையாளுடன் வாழ்தல்.

**8.** ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து.

தம்மனைய மற்ற இல்லறத்தாரையும் நெறியிற் செல்வித்து; துறவிகளும் இல்லறத்தை விரும்புமாறு செய்து; அவர்களும் மனையாளுடன் செய்யும் இல்லறத்திற்குதவியென்றுமாம். மனையாளுடன் துறவிகளாய் வாழ்வதினும் மனையாளுடன் இல்லறத்தானய் வாழ்தல் சிறந்தது.

**9.** அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

அஃது - அவ்வில்லறம். பிறர் பாராட்டும் இல்வாழ்க்கை வேண்டும். பிறனைப் பழிப்பது (தன்) இல்லாயின் என்பது, பிறரைத் தாழ்வாக்குமாறு தான் அவ்வளவுயர்வாய் வாழ்த

லென்க. இல்லறத்தாரும் துறவறத்தாரும் ஒருவரையொரு வர் பழிப்பதில்லையாயின் நன்று.

**10.** வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

தெய்வத்துள் வைக்கப்படல் - கண்ணகி கோவலன் போல வானவர்க்கு விருந்தாகி அவர் வழிபட நிற்றல். தெய்வம் போலப் புகழும் பூசையும் பெறல்: எல்லாவுயிரும் தொழ நிற்றல். மற்ற இல்லத்தாரால் தென்புலத்தார்க் கடுத்த தெய்வமாகக் கருதப்படுவான். ஆங்கு வாழ்வு - சீவன் முக்த வாழ்வாம்.

## 6. வாழ்க்கைத்துணை நலம்

**1.** மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

புகுந்த மனைக்குத்தக்க மாண்பு. அம்மாண்பிலும் இல்லற மாண்பிலும் கணவனை வளப்படுத்தத்தக்கவள், அறிவுரு ஆகியவற்றில் மட்டுமன்றி வளத்திலும் (செல்வம் - வருவாய்) சமமானவள் - வாழ்க்கைத்துணை - இல்வாழ்க் கைத்துணை.

**2.** மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்(து) ஆயினும் இல்.

மனைமாட்சி - பிறந்த மனைமாட்சி; இல்லறத்திற்கு வேண்டும் இயல்புகளெல்லாம் என்றலுமாம்; பெண்மைக் காம் மாட்சியுமாம். எனைமாட்சித் தாயினும் - 'பெருமகன் தலைவைத்த ஒரு தனிக் குடிகளோடுயர்ந்தோங்கினும்'; வளத் தக்காளாதலினும் மாட்சியுடைமை முதன்மையென்பது.

**3.** இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை.

இல்லவள் - பொருள் முதல் ஒன்றுமில்லாதவள். ஏழைக்கு வாழ்க்கைப் பட்டவள். மாண்பிருந்து மற்றவை இல்லாவிடினும் குறையில்லை. கணவனை ஏழையென்றிகழ் தல் மாண்பின்மையென்றது. மாணுதவிடத்து வாழ்க்கை

கடைப்பட்டதாகும். 'ஆனல்' என்பது ஆதலாகிய, வளர்ச்சி; அவள் மாண்பு வளர்ந்துகொண்டே யிருக்குந் தன்மையது.

4. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

மக்களுக்குச் சான்ருண்மை (சால்பென்னும் திண்மை) திண்மையாதல்போலப் பெண்களுக்குக் கற்பு திண்மை யாகும். பெறுமவற்றுள் என்றதுபோல 'பெறுந் தக்க' என்ற பாடம் சிறக்கும்; பெண் தன்னிடத்தில் பெறத் தக்கது கற்பு என்றுமாம். செல்வம் அழகு முதலிய வற்றிலும் பெண்ணின் கற்பே கணவன் விழையத்தக்கது. கற்பு - உணர்ச்சி யொற்றுமையுமாம்.

அன்று, கற்புப்பற்றி மிகுதியாகப் பேசப்பட்டது; கற் புடைய பெண்ணுடன் இல்லறம் நடத்தவேண்டும், இன்றேல் துறவறமே சிறந்ததென்பது குறிப்பு.

5. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

தெய்வந் தொழாதவனுயினும் (நாத்திகன் - உலகா யதன்) கணவனுடன் ஒத்துச்செல்லும் மனவொருமையுடை யவள். காமன், இந்திரன் முதலிய தெய்வங்களைத் தொழாத வள். ஒரு குறித்த சமயத் தெய்வத்தைத் தொழாமல் எல் லாத் தெய்வமும் ஒன்றென்ற சமரசமுடையவள். கணவன் ஏழ்மையும், இழிபதவியுமுடையவனுயினும் அவனே இந்திரச் செல்வமும், இந்திர பதவியுமுடைய அரசனென மதித்தல். அவள் வானுறையும் தெய்வமாதலின் பெய்யென மழை பெய்யுமென்றது. குறள் காப்பிய காலத்திற் கண்மைய தென்பது இதனுற் புலப்படும். முதலில் தெய்வந்தொழாஅள் என்றுமாம். தென்புலத்தார்க் கடுத்துத் தெய்வத்தை வைத்ததுபோலக் கொழுநற் கடுத்துவைத்தது. கண்கண்ட தெய்வங்கட்கு முதலிடம் தருவது 'தமிழம்': அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

6. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தற்காத்தல் - தன்னைக் காத்துக்கொள்ளும் உடலாற்ற லும் பொருளாற்றலும். தற்கொண்டார்ப் பேணல் - மாமன்,

மாமி, கணவன் - குடும்ப முதலியோரைப் பேணல். தகைசான்ற சொல் - ஆதிரை, கண்ணகி முதலோர், நாட்டில் வளர்த்த சொல். சோர்வின்மை - வீட்டுக் காரியங்களில் சோம்பலின்மை; உடல் உறுதியுடைமை.

7. சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

இது அரசு - கடமைபற்றியது. நாட்டில் சிறைகளை வளர்த்தலினும் மகளிர் நிறையைக் காத்தலே அரசனது கடன். 'மடவார் கற்பு காவலன் காவல் இன்றெனின் இன்றும்'. கணவன் பரத்தையரிடம் செல்லாது கட்டுப்படுத்திக் காத்தலினும் தன் குணங்களால் அவனை போகாதவாறு காக்க வென்றது.

8. பெற்ருற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழு முலகு.

பெற்ருற் பெறல் - கொண்டவன் பிற பெண்டிரை நினையாமல் தன்னையே நினைக்குமாறு தன் அழகு, இன்ப முதலியவற்ருற்பெறல். ஒருவன் ஒருத்தி யென்ற பேறு பெறல். புத்தேளிருலகில் அப்பேறில்லை என்பது குறிப்பு. அல்வுலகவின்பத்தை ஈண்டே பெறுவரென்பதாம். இவளும் புலவர் பாடும் புகழுடையோள் ஆகலின் புலவரைப் போற்றும் உலகு இவளையும் போற்றும்.

9. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

பிறன் பழிப்பதில்லாயின் நன்று என்றதை வலியுறுத்தியது. தமிழ்க் கற்பையிகழ்வார் முன் என்றுமாம். புகழ் புரிதல் - சொற்காத்தல். ஏறு நடையின்மை - பேடியும் அலியுமாதல். அவர் தம் வாழ்வில் ஒருவர்க்கொருவர் இன்பந்தரவியலாதவராய் (Neurotic) அலித்தன்மையுறுவர். ஆண்மை வளர்வது பெண்மையினுலென்றது. புகழ் புரிந்த இல்லத்தை நடத்தாத பெண்ணுக்கும் பீடுநடையில்லையென்றது. ஆணும் பெண்ணும் தனித்து (Nuns) நடத்தும் இளமை, சமயத் துறவை வெறுத்ததுமாம்.

10. மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

நன்கலம் - மங்கலத்தைத் தாங்கும் நன்கலம் (பூரண பொற்குடம்). மங்கலப் பொருள்கள் - மங்களம். அப் பொருள்களுள் நல்லதாகிய விளக்கு - நன்கலம். குடிக்கு விளக்காகிய புதல்வர் (அகநானூறு): மங்கல நாணும் மற்ற அணிகலன்களுமாம். கற்பும் (புதல்வர்க்காம்) அறிவும் இல்வாழ்க்கையின் இரு கண்களாம்.

## 7. மக்கட்பேறு

1. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

உயிர் அடையும் பிறவிகளுள் மனிதப் பிறவி சிறந்தது. மக்கட்பேறு - மனிதப் பிறவி. 'அறிவறிந்த' என்பதால் மனிதன் சிறப்பது அறிவொன்றினால்தான் என்பது. அறிவறிந்த - வெறும் இன்பவுணர்ச்சியோடன்றி அறிவுணர்ச்சியோடு புணர்ந்து பெற்ற அறிவறிந்த மக்கள்; 'மக்களறிவுடைமை' எனப் பொதுவாகவே கூறிய ஆசிரியர்க்கு ஆண் பிள்ளைகளே அறிவுடையவர் என்ற கருத்து எள்ளளவு மின்மையறிக.

2. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

எழு பிறப்பு - ஏழு பரம்பரை. தாய், தந்தை, குரு, அரசன், சான்றோர், இனத்தார், தெய்வம் என்ற ஏழுவகையினருமாம். நாட்டின் பண்பை வளர்ப்போர் மக்களே (இளைஞர்) என்பது. 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' (புறம்) என்றதும் அது. பழிபிறங்காப் புகழ்ச் செயலே பண்பாடாகும்'. பழிபிறங்கா என்றமையால் நாட்டிற்குற்ற பழிகளைக் குறைக்கவும் இல்லாமலாக்கவும் பாடுபடவேண்டும். முதலில் அறிவுடையர் என்றது; இங்குப் பண்புடையர் என்றது. பெற்றோர் பண்பு வளர்ச்சிக்கு மக்கள் முதற் காரணம்.

**3.** தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.

பொருள் - தம்மை ஒரு பொருளாகச் செய்பவர். பிள்ளை யில்லாதவரை எவரும் மதியார். அவர் கருமமே கட்டளைக் கல்லாக வரும். இது முயற்சியுடையாரென்பது. சோம்பேறிகளாலும், நோயாளிகளாலும் நாடு வளராதென்றது. மக்களைப் பொருளாக்கவே பெருமுயற்சி வேண்டுமென்பது.

**4.** அமிழ்தினு மாற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

இவ்விரு பாடல்களும் மக்கள் பெற்றோரின் முதுமைக் காலத்துச் செய்யும் பணிகளைக் குறித்தவுமாம். முதுமையில் அவர் தம் சிறு (இளம்) கைகளால் அளித்த உணவு அமிழ்தமாம். இது நஞ்சு தோன்றிப் பின் தோன்றாத அமிழ்தம்; சிறந்த மக்கள் தொட்டதையெல்லாம் அமிழ்தமாக்க வல்லவர்.

**5.** மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு.

தீண்டல் என்றதால் (அரவு தீண்டியதுபோல) தொட்ட மாத்திரத்தில் உடல் முழுவதும் குளிருமென்பது; உடல் சிலிர்த்தலுமாம். முதுமையில் தம்மைத் தொட்டு, நடக்க நகர உதவலும், பரிவு மொழிகள் கூறலும் இன்பம். மெய் தீண்டிச் சொல்லும் சொல் இன்பம் எனக் கூட்டி, உண்மைப் பொருள்களை உணர்ந்து பேசும் அறிவு மொழிகள் என்றலுமாம். மக்கள் எனப் பொதுவாகக் கூறியதால் இவ்வின்பம் பெற்றோர்க்கேயன்றி மற்றவர்க்குமாம்.

**6.** குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

குழல் யாழ் என இரண்டு கூறியது இருவகை (ஆண் பெண்) மக்களையும் குறிக்கவாம். கேளாது, அவர் குழல் யாழ் இனிதென்பர் என்றாக்கி, மக்களைக் கலைகளில் வல்லவராக்கவேண்டுமென்க. அறிவோடு கலையும் இணைய வேண்டும்.

7. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

முந்தியிருப்பச் செயல்—முந்தும் இயல்பு (Pushing nature) டன் இருக்கச் செய்தல். அவ்வையத்தும் எனப் பிரித்து பிறநாடுகளிலும் எனக் கூறுக. அன்றி அவன் காலத்து உலகில் என லுமாம்.

8. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

தம்மினும் மக்கள் அறிவுடையராதலிற் பொருமை கூடாது. நாட்டில் பிற்சந்ததி நல்லறிவுடையராகப் பாடு படுவதே பெரியோர் கடன். செல்வம் ஆற்றலுடைமை யினும் அறிவு சிறந்ததென்றது. தம்மில் என்றமையின் தம் செல்வம் ஆற்றல் அனைத்தையும் அளிப்பதனுல், அவர் அறிவுடையராதல் என்றுமாம். மாநிலத்து மன்னுயிர் - பிற நாட்டார்; அறிவை அவர் மொழிபெயர்த்துப் படித்தறிதல். மக்கள் தம்மில் அறிவுடைமை - அவருள் ஒருவர்க்கொருவர் சிறந்த அறிவுடைமை. ஒருவன் அறிவு குறையினும் தீதென்பது. பிறர்க்கென வாழ விழைபவர் மக்களை அறி வுடையராக்க வேண்டும்.

9. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றேன் எனக்கேட்ட தாய்.

ஈன்ற பொழுதில் என்ற குறிப்பு, சான்றேனைப் பெற்ற வள் சாகும்போது அமைதியாகச் சாவாள் என்ற கருத்தினை யுடையது. சாதாரண உயிரைப் பெற்ற போதினும் ஒழுக் கத்தால் விழுப்பமுடைய உயிராகலின் பெரிதுவக்கும் என்றுர். கேட்டபொழுது, தான் முன் நினைத்தது உறுதி யாகலின் பெரிதுவத்தலுமாம்.

10. மகன்றந்தைக் காற்று முதவி இவன்றந்தை
என்னேற்றுன் கொல்லெனுஞ் சொல்.

இவனைப் பெற்ற தொன்றுபோதுமே வேறு பலவற்றிற் காக ஏன் நோற்கிருன் என்பது. அவற்றையெல்லாம் இம் மகனே தருவான் என்பதாம். இவன் தந்தை - சாத்தந்தை போல மகனுல் தந்தை பெயர் பெறவேண்டும். இவன்

தந்தை என் நோற்ருன், இவனல்லவோ அத்தந்தைக்குப் பிறக்க நோற்க வேண்டுமென்னு மாறு தந்தை சிறந்தவனுக வேண்டுமென்றது. தாய் தந்தையரின் குணநலன்களால் பிள்ளைகள் வளரவேண்டும்.

## 8. அன்புடைமை

**1.** அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

தாழ்-நீரைத் தாங்கும் மதகுப் பலகை. அன்பு வெள்ளத்தை அது தடுக்க முடியாது. சிறு துளிகளே பெருகி அப்பலகையைக் கடந்து ஒலியுடன் விழும். பூசல் - ஒலி; கதறியழும் ஒலியுமாம். தாழ் - கோட்டைக் கதவு; பூசல் - போர். அடைத்து வைக்கும் கோட்டைக் கதவைப் புன் கணீரே போரிட்டுடைக்கும் என்பது. அறத்தினுள் அன்புநீ (பரிபாடல்-3) என்றதால் அன்பினை முதலில் வைத்தது.

**2.** அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

தம் இனம், நாடு, சமயம் முதலியவற்றையுடையாருடனேயே நட்பு கொள்வர்; தம்மனைய அன்பிலாருடனேயே நட்பர். அன்புடையார் அன்பிலாருடனும் நட்பரென்பது குறிப்பு. இறந்த பின்பும் நிற்பது என்பு; அது போல இறந்த பின்பும் பிறர்க்குப் பயனுவர். பின்பும் 'அன்பிலது என்பில'தென்ருர்; இறந்து எலும்பாகும் வரையும் உரிய ரென்றுமாம்.

**3.** அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

முன் பிறப்பில் உயிர்களிடத்தும் இறைவனிடத்தும் அன்பு செலுத்தி யதாலென்க. தமிழன் உடலோடியைந்த தொடர்புமாம். மீண்டும் என்பென்ருர். அன்பே உடலின் என்பு - இன்றியமையாததென்பது. மனிதப்பிறவி அன்பு செய்தற்கே அளிக்கப்பட்டது, உடலுள் இருப்பதற்கு உயிர் எனப் பெயர் கூருதே 'அன்பு' எனக்கூறுக என்றது; இப்போதன்பில்லையேல் விலங்குமுதலிய கீழ்ப் பிறப்பே கிடைக்குமென்பது குறிப்பு.

4. அன்பீனு மார்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

ஆர்வமும், உடைமையும் (பொருள்) ஈனுமென்க. நாடாகும் சிறப்பு எனக்கொண்டு நாடு முழுவதும் நட்பாகும் சிறப்பென்க. தனக்கென உடைமையை நாடாத சிறப்புமாம். ஆர்வம் மேலுமேலும் எழுச்சி; சுறுசுறுப்பு. முதுமையிலும் தளர்ச்சியின்மை, சுறுசுறுப்பை யளிப்பது.

5. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்ரு ரெய்துஞ் சிறப்பு.

சிறப்பு - புகழ்; மதிக்கற்பாடு. உலக முழுவதும் அன்புற்றமர்ந்த என்க. வை - அகம்; உலகத்தாருள்ளம். செல்வத்தால் இன்பம் கிடைக்கலாம், ஆனல் அன்பின்றிப் புகழ்; புகழோடு கூடிய இன்பம் கிடையாதென்றது. தன் நாட்டில் இன்புற்ருர் பிற நாடுகளில் எய்துஞ் சிறப்புமாம்.

6. அறத்திற்கே அன்புசார்(பு) என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணே.

அகத்திற்குரிய அன்பு அறத்திற்கேயென்பர், புறத்திணேக்குரிய மறத் (வீரப் - போர்)திற்கும் அதுவே காரணமென்பது. இல்லறம் துறவறத்திற்கேயன்றி அரசனது மறத்திற்குமென்பது.

7. என்பி லதனே வெயில்போலக் காயுமே
அன்பி லதனே அறம்.

அன்பில்லாதவன் மனிதனல்லன்; புழுவுக்கு ஒப்பென்பது. அறக்கடவுள்; வெயில் - காய்கதிர்ச் செல்வக்கடவுள். காயும் போதும் அறம் அதனே அன்போடு (அன்பில்) காயுமென்பது. என்போடியைந்த என்றதனுல் என்பும் அன்பும், என்பின்மையும் அன்பின்மையும் ஒன்று. எனவே என்பில்லாததும் அன்பில்லாததும் காய்தற்குரியன. அமைதியின்றிப் புழுப்போல் நெளியும் வாழ்வுறுவர்.

8. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

வன்பாற் (பாலே) கண் வாழ்க்கை - பாலேவன வாழ்க்கை; அங்கு வாழும் மறவர் (கொடியோர்) வாழ்க்கை.

அவர் உடலிலும் உளத்திலும் கொழுமையிராது; நீடித்திராது; பிறர்க்கும் பயன்படாது. நானிலமுடைய தமிழகத்திற்குப் பாலை உரியதாகாது; அதுபோல அன்பகத்தில்லா வாழ்க்கையும் தமிழ் மண்ணுக்குரியதன்று. வேனிற்பாலை போலச் செயற்கை; சில காலம் சில விடத்திருந்து மாறும். வன்பார் என்ற பாடம் சிறந்தது.

9. புறத்துஉறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

நுழை புலமில்லான் எழில் நலம்போல அன்பில்லாதவனது எழில் நலனும் (உறுப்பழகு) பயனில்லை. அகத்துறுப்பு - அகத்திணைக்குறுப்பு; அன்பின் ஐந்திணை. புறத்திணைக் குறுப்பு - போருக்குரிய கை, கால், மெய் முதலன. எனவே போரும் காதலைக் காக்கவே என்பதாம். இரண்டும் உறுப்பென்றமையால் அன்புச் செயலுக்கே அவையும் பயன்பட வேண்டுமென்பது. உறுப்பு - உடலுறுப்பென்றலே பொருந்திய உரை.

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு.

உயிர் நிலை - உயிர் நிலைக்கும் வீடுபேறு. 'தள்ளும் உயிர்நிலை' என்றவிடத்தை நோக்குக. அஃதிலார்க்கு உடலாகிய பிறப்பு தொடரும். அவர்க்கு உயிர்நிலை அன்பில். அன்பிலாச் செயல் ஒன்று செய்யினும் இறப்பரென்றது. போர்த்த உடம்பென்றது கண்காட்சியில் வைத்தற்குரியரென்றற்காம்.

## 9. விருந்தோம்பல்

1. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

மனைவி மக்களை ஓம்பி வாழ்தல். அவருடன் கூடி விருந்தோம்பற்காம்; மகமுறை கூறி உண்பித்தல். வேளாண்மை - உழவு. விருந்தோம்புதற்காக வேளாண்மை. செய்யும் தொழில் விருந்தினரை ஓம்பவேயாம். விருந்து - புதியவர், உலகோர் (தமிழர்) அனைவருமாம்.

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

பக்கத்து வீட்டில் சாவு வீழ்ந்திருக்க உண்பதுபோலாம். விருந்தினர் வருதற்கஞ்சிப் புறங்கொடுத்தாராக உண்ணல். சாதி வேறுபாடு காட்டி விருந்தினரை வேறிடத்தில் அமர்த்தி உண்பித்தலுமாம். உண்டல் சாவாம்; அருந்து அருந்து (உண்ணீர் உண்ணீர்) என ஊட்டினும் வேண்டா மென்றது. புறம் - முதுகுமாம். விருந்து பக்கத்திலிருந்து பார்த்திருப்பதாக எனலுமாம்.

3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

வைகலும் வருவிருந்து; ஒரு நாட் செல்லலம் இரு நாட் செல்லலம் எனவருதல். ஒரு வேளை இரு வேளை யென்னுமல் இருக்குமளவும் ஓம்புதல். வைகலும் - வரும் போதெல்லாம். ஓம்புவான் - ஓம்பும் பொருட்டே வாழும் வாழ்க்கை யென்க. வைகல் - தன்னிடத்தேயே தங்கி விடுமாறு ஓம்புவான்.

4. அகனமர்ந்து செய்யா ளுறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

முகனமர்ந்து வரும் நல்விருந்து. செய்யாளுறையும் முகன் - திருமகள் களை பொருந்தியமுகம். இவன் அகத்தே அவள் உறைவாள். 'மலர் மிசை ஏகினன்' என்ற வழக்குமது; ஓம்புதற்காம் செல்வம் குறையாதென்பது. 'தாளுளாள்' என்ற வழக்கால், முயற்சி யுடையனுவான்.

5. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

இவற்காகப் பிறர் விளைத்துத் தருவரென்பது. ஓம்புதற்காம் பொருளை உலகம் கொணர்ந்து கொட்டும். புலம் - ஐம்புல இன்பம். முயற்சி யின்றியே இவனது ஐம்புலனும் இன்புறும். விற்றும் - வித்தும் என்பது பேச்சு வழக்கு. நிலத்தை விற்றும் விருந்திடுவா னென்றுமாம். புலம் - வீடுபேறு. அதற்காம் வித்தாகிய செயல்வேறு வேண்டாம், விருந்தோம்பலே போதுமென்றது.

6. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

இந்த விருந்தினர் - வீட்டுள் வாராத புலவரும் தவசிகளும் தெருவழியே செல்வர், அழைத் துண்பித்தால் உண்பர். அவர்கள் செல்வதையும் வருதலையும் பக்கந் தோறும் பார்த்திருத்தல். பலர் விருந்து வருகையிற் பெரிதும் உபசரிப்பர்; செல்கையில் மன வெறுப்புடன் செல்ல நடப்பர் அஃதாகாதென்றது. சென்ற விருந்தே, கொண்டு சென்ற பொருளைப் பலர்க்கு மீந்து மீண்டும் வருமாயின் அவ்விருந்துமாம்.

7. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

ஒரு வேளையிட்ட விருந்து ஒரு வேள்வி யென்க. தமிழர் தம் வேள்வி விருந்தோம்பலேயாம்.

8. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

விருந்தோம்பாதார் செல்வம் அழியுமென்றது. விருந்தினரையே பாராதவரும் 'விருந்தோம்பி ஓம்பியே' பொருளற்றே மென்பர், இது நகைப்பாகுமென்பது.

9. உடைமையு ளின்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்க ணுண்டு.

உடைமையெல்லாம் இன்மையாகுமளவும் ஓம்பல் என்க. ஓம்பும் மடமை (விருந்து மடம் படுதல் - கொடை மடம் போல) அறிவுடையாரிடம் உண்டு. ஓம்பாமை அறிவைக் கொல்லும்.

10. மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

முகந்திரிந்து நோக்கல் - விருந்தினருள் ஒருவரை ஒன்ருகவும், மற்ருெருவரையும் வேருகவும் மதித்தல். வந்த விருந்தினர் தன்னை ஓம்புமாறு நோக்கினுல் முகந்திரிந்து குழையுமெனினுமாம். மலரினு மெல்லிது விருந்து: மலரினு மெல்லிது காமம் என்றது காண்க. அனிச்சமனைய பெண் போற்றும் விருந்தும் மெல்லியது.

## 10. இனியவை கூறல்

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

ஈரம் - அருள்; படிறு - மலமாயை முதலாம் அழுக்கு; செம்பொருள் :- மெய்யுணர்வு. இன்சொல்லால் அருளும் மெய்யுணர்வுமுண்டாகி அழுக்கறும். வாய்ச்சொல் - வாய்மையுடைய சொல். சொல் (ஈர) மனதிலும் (படிறிலவாம்) செயலிலும் செம்மை தருவதுமாம்.

2. அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்(து)
இன்சொலன் ஆகப் பெறின்.

ஈதலுடன் கண்ணும் இன்சொல்லும் இணையுமாயின் நன்று. கொடுக்கும்போது பராமுகத்தையும் வெறுப்பையும் விலக்கியது. வருவோன் மலர்ச்சியுடன் குறைகளைத் தன்னிடம் கூறக் கேட்கப் பெறின் எனலுமாம். கொடுப்போன் அகனமர்ந்து செய்யாளுறைதலிலும் அவன் முகத்தில் (திருமகள்) லட்சுமி களை தாண்டவமாட வேண்டும்.

3. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம்.

முகனமர்ந்து இன்சொல் என்றபின் அகத்தானும் இன்சொல் என்றது முகநக நட்பது நட்பன்று என்னும் குறிப்புடையது. முகனமர்ந்து நல்விருந்தோம்பலை வற்புறுத்தியது. அழுக்காறுடன் இன்னுச்சொல் அறமன்றென்றவர், இன்சொல் அறமெனத் தெளிவுறுத்தியது.

4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் லவர்க்கு.

யார் மாட்டும் - இன்சொல் இல்லார் மாட்டும் என்பது குறிப்பு. இன்புறூஉம் இன்சொல் - பொருளில் மட்டுமன்றிச் சொல்லு முறையிலும் இனிமையுடைய சொல். இல்லாகும் யார் மாட்டும் என இணைத்து வறியோர் யாவரிடத்தும் எனக்கூறுக. துன்புறூஉம் துவ்வாமை - அழிபசி; தான் இன்புறுதற்கேதுவாய இன் சொல்லுமாம். நாட்டில் வறுமை நீங்கினுல் இன்பமும் இன்சொல்லும் விளையும்.

**5.** பணிவுடைய னின்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

பணிவெனவே-அடக்கத்தின் ஒரு பிரிவென்றது. காது, கைகளில் அணியும் இரட்டை அணி போன்றன பணிவும் இன்சொல்லும்; ஒரே இனமென்றது. இன்சொல் - பொருட் பயனுண்டாகாத சொல். அன்னாரது 'சொல் வணக்கம்' அன்றென்றது.

**6.** அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

நல்லவை - நல்ல அவையத்தார்; அல்லவை - தீய அவையத்தார். இன்சொல்லால் உலக மக்கட் கூட்டம் நல்லதாகித் தீயமக்கட் கூட்டம் தேயும். அவையறிந்து சொல்லுதலிலும் இன்சொல் வேண்டும்.

**7.** நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

பண்பாட்டிற்குரியது. பிறரிடம் இன்பமுண்டாக்கி அவரும் நன்றியுடன் அவ்வாறே பேசச் செய்யும். இன் சொல் உலகில் வளரும் வகை கூறியது. பயனீன்று - பயனற்ற வெறும் இன்சொல் ஆகாதென்றது. 'பண்பி'ல் 'நகல் வல்லரல்லார்க்கு' என்ற குறளுடன் பொருத்துக.

**8.** சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்.

சிறுமையுள் நீங்கியது. 98-ஆம் அதிகாரத்துக்கூறிய 'பெருமை'க்கு மாறாய சொல். மறுமை - அக்காலத்து மட்டுமன்றி நீண்ட காலத்துக்குப் பின்பும் (முதுமையிலும்) இன்பமாம்; மறுமை - பிறநாட்டார்க்குமாம்.

**9.** இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

இன்சொல் இனிதீன்றலைச் சோதிக்கும் பொருட்டு வன் சொல் வழங்கற்க வென்றது. இன்சொல்லே பேசுமவனும் இடையிடை ஓரிரண்டேனும் வன்சொல் கலத்தலாகாது. மக்களது மழலை இன்சொற்கேளாது அவரிடம் வன்சொல் வழங்குதல் அவர் வளர்ச்சிக்குத் தடையாம் என்றுமாம்.

**10.** இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

கனி - கனிவுச்சொல்; காய் - (வெகுளி) காய்வுச் சொல். கனிவதாக இருக்கும் காய் - செங்காய். உளவாகக் கூறல் - இனிமை பயப்பது ஆனால் இன்னாத (செங்காய்) சொல். கனிவென்றது - முதிர்ந்த அனுபவமுடைய நீடு நினைந்த சொல்லென்பது.

## 11. செய்ந்நன்றியறிதல்

**1.** செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

செய்யாமற் செய்தது - தான் செய்யாமல் இன்னொருவரால் செய்வித்ததுமாம். வானகம் உதவியே வேண்டாதது; வையகம் குறியெதிர்ப்பை நீரதுடையது. எனவே இரண்டு மாற்றலரிது. கைம்மாறு வேண்டாத மாரியை வானகம் வையகத்திற்குச் செய்யாமல் செய்வதாகலின் அரிதென்றார். வையகத்தில் வானகத்தையும் வானகத்தில் வையகத்தையும் மாற்றிப் படைத்தாலும் படைக்கலாம்; இதற்கு மாற்றலரிதென்க.

**2.** காலத்தினுல் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பருவ காலத்தில் விதையும் இளமையிற் கல்வியும் அளிப்பது போல்வது. ஞாலம் காலத்திற் பயன் தருவதாகலின் அதற்குவமித்தார். கேடுற்றவிடத்து உதவியால் உயிரே காக்கப்பெற்று இவ்வுலக இன்பத்தைப் பெறச் செய்தலால், பெற்ற உலகினும் பெரிதென்றார். ஞாலம் காலத்திற் கடங்கியதாகலின் பெரிதென்றார்.

'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆரளவின்றே' என்ற குறுந்தொகை உவமைகள் இங்கு அப்படியே வந்தன.

**3.** பயன்தூக்கார் செய்த வுதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

பயன் தூக்காமற் செய்வன பல பயனற்றவாதலுண் டாகலின் தூக்கின் என்ருர். பயன் தூக்காமல் மாரிக்கு நீருதவலின் கடலை உவமையாக்கினுர். மூன்று குறளிலும் உலகில் பெரியவாகிய மூன்றையும் உவமையாக்கினுர். அது தரும் உப்பு எளியதாயினும் அதன் நயனும் பயனும் பெரிதாகலின் கடலிற் பெரிதென்ருர்.

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

இனிமையில் தினையும் பனையு (பனங்கட்டி)மாம்; தினை விதை - பனைவிதையளவு. எழுதும் பனையோலை யள வொன்றுண்டோ, ஆய்க. தினைப்பயிர், பனைமர உயரமும் ஆம். சிறிதாயினும் காணும் கூரிய (நன்றிக்) கண்ணுடை யர். தான் செய்ததற் கீடாக ஒருவன் தினையளவு செய்யி னும் தான் செய்த பனையளவாகவே அதனைக் கருதுவர். அளவை நோக்காமல் தன்மையையே நோக்குவர்.

5. உதவி வரைந்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

செயப்பட்டார் தேவையினளவு உதவி செய்ய வேண்டும். வரை - மலை. சால்பாகிய மலையினளவிற்று எனவாக்கி நன்றியுடைமை குணமென்னும் குன்றேறி நிற்கு மென்க. 'விருந்தின் துணைத்துணை'—போலக் கொள்க. உதவி செய்ய அதனுல் (வறுமைப்) பட்டாரது சால்பின் வரைத் தென்றுமாம்.

6. மறவற்க மாசற்ருர் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

கேண்மை யொன்றே நன்மைகள் பலவற்றிற்கிடமாக லின் கேண்மை மறத்தல் நன்றி கொல்ல லென்ருர். துன்பத்துட்டுப்பு - காலத்தினுற் செய்தது. மறவற்க, துறவற்க என்பதால் நல்லோர் நட்பை நினைத்தாலே நன்மையுண்டா மென்றது. அவரை நினைத்தலே பலரோடு சேர்ந்தடையும் பயனைத்தரும்; அவர் ஒன்றும் செய்ய வேண்டாமென்பது.

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

எழுமை எழுபிறப்பு - ஏழேழ் தலைமுறை. துடைத்தவரது ஏழு தலைமுறையினரிடத்தும் நன்றி பாராட்டலுமாம். விழுமம் - விழுப்பம்போல அளவில் பெரிய - துன்பமாகலாம். கண் விழுமம் துடைத்தவர் - கண்ணீர் துடைத்தவருமாம்.

8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

அன்றே - அல்லவா என்ற வினா. நன்றல்லதையல்லவா மறப்பது நன்றென்க. நன்று அன்று என்றாக்கித் தான் செய்த நன்றியையும் (எதிர்ப்பயனுக்காக) மனதில் வைத்திராமல் அன்றே மறக்கவென்றலுமாம். எனவே இரண்டும் அன்றே மறக்கத் தக்கன என்பது.

நன்று மறப்பது என்ற பாடம் சிறந்தது.

9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

பெருமீனைக் கொல்லச் செலுத்தும் சிறு மீன் போன்றதாயினும் அவ்வொன்றும் நன்றென்பது. காலத்தினால் ஒன்று செய்து உயிர் காத்தவர்க்கு அவ்வுயிரைக் கொல்லவும் உரிமையுண்டென்றது. நன்றியறிபவர்க்குத் துன்பங்கள் வாரா; வரினும் வெகுவாகக் குறையும்; கொல்ல நினைக்கினும் அச்சூழ்ச்சி அருளால் கெடும் என்றது.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

மகற்கு என்றதால் நன்றியறிவே மனிதத் தன்மை, அதனை மறத்தல் விலங்குத் தன்மையென்பது; பெற்றோர் மக்களுக்குச் செய்த நன்றியுமாம்; தந்தை தாய்ப் பேணலை வற்புறுத்தியது.

மகற்கு எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டு எனக் கூட்டி நன்றி கொன்றவர்க்கு எத்தீமை (கொன்றன்ன) புரியினும் அதனாற் பாவமில்லை, உய்வுண்டு எனலுமாம். அதனால் அவற்குத் தீமை புரிக என்பது பொருளன்று; நன்றி கொன்ற தீமை பெரிதென்பதே பொருள்.

## 12. நடுவு நிலைமை

**1.** தகுதி யெனஒன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

ஒருவரைத் தக்காராக்குதலின் தகுதி யென்றார். நன்று தீது என்பவற்றுள் 'நன்றே'யின் பாற்பட்டொழுகல். பல சமயம், இனம், மொழி இவற்றின் பகுதிகளில் நடுவின் பாற்பட்டொழுகலுமாம். பகை நட்பிடை நடுவாதலுமாம். பகுதி - அறம் பொருளின்பப் பகுதியுமாம்.

**2.** செப்ப முடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து.

செம்பொருளின் இயல்பாகலின் செப்பமென்றார். ஆக்கம் - வளர்ச்சி; பேறுகள். எச்சம் - இவனைத்தவிர்த்த நாட்டு, உலக மக்கள். எச்சம்: எஞ்சி நிற்கும் கலையும் இலக்கியமும். இசையென்னும் எச்சமென்றலின் 'புகழ்' என்னும் பொருளே சிறந்தது. நிலைத்து நிற்கும் கலைகளுக்குப் பொருளைச் செலவிடலே நடுவு நிலைமை.

**3.** நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே யொழிய விடல்.

இது செயலின் பாலதாகலின் 'நன்மை பயக்குமெனின்' (292) என்பது போலக் கொள்ளத் தக்கதன்று. 'அன்றே மறப்பது' என்பதுபோல அன்றே - அப்பொழுதே என்க. பொருட்பகுதியில் நடுவு தவறுதல் அடிக்கடி நிகழ்வதாகலின் விழிப்புடன் தவிர்க்க வென்றது. வந்தபின், நடுவிகந்து வந்ததெனத் தெரிந்தது; தன்னிடம் தங்க வைக்காமல் நல்வழியில் செலவிட்டு (ஒழிய) விடுதல்.

**4.** தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

எச்சம்: புகழ், கலை, இலங்கியங்கள்: ஒருவரது புகழ், மக்கள் முதலிய பிறர்க்குத் தகுதியளிக்காது; 'தம் தம் வினையான் வரும்' என்பதுபோல அவரவர் செயலே தகுதிக்குக் காரணமாம்.

5. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

கணி - கணித்தல், அளவிடுதல். கோடாமையைக் கொண்டு சான்றோரைக் கணிக்க. பொன்னணி முதலிய கேடும் பெருக்கமும் உறல் இயல்பு. நெஞ்சவழகாகிய நடுவு நிலையே நிலைத்த அணி.

பிறவிப் பெருங்கடலில் ஏற்றத் தாழ்வுகள் (கேடும் பெருக்கமும்) இருந்து கொண்டேயிருக்கும். அவற்றிடை 'மன அமைதி'யே தேடத்தக்க தென்றது.

6. கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

கண்டம் எப்போதெனச் சோதிடம் பார்த்தலையாதே; மனதை நோக்கியிரு என்றது. நெஞ்சம் என்றமையான் நடுவுநிலை, மனத்தின்பாற்பட்டதென்பதும் தவறின் மனக் குணங்களையெல்லாம் கெடுக்குமென்பதும் பெறப்படும். யான் என்பது வள்ளுவர். தமிழன் ஒருவன் நடுவு தவறினும் வள்ளுவர் போன்றாரது நூற்பயன் கெடுமென்பதுமாம்.

7. கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு.

தாழ்வினைக் கேடுபயக்குமாறு விட்டு வையாது அவன் வறுமையையும் பிற தாழ்வுகளையும் போக்கும். தங்கியான் அளித்த நீதியால் (தீர்ப்பினால்) ஒருவர்க்குயர்வும் மற்றவர்க்குத் தாழ்வுமுண்டாதலியல்பு. அத்தாழ்வினைத் தாழ்வாகக்கொள்ளாதென்பது. வையாது - வசைமொழியா தென்றுமாம். உண்மை புலனாகும்வரை வழக்கை நீண்ட காலம் தள்ளிப் (தாழ்வு) போட்டுக்கொண்டே செல்லுதலை வையாதென்க.

8. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

கோல் - செங்கோலுமாம். இது அரச நீதி பற்றியது. துலைக்கோல்போல மனம் முக்குணத்தால் ஏதேனும் ஒருபால் தாழ்ந்துகொண்டிருத்தலே பெரும்பான்மை. நடுவில் நிற்றல் அரியதும் (அருஞ்செயல்) சிறியதும் (சிறு நேரமும்) ஆகும். சான்றாண்மைக் குணமென இருமுறை வற்புறுத்தியது.

9. சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்.

நூலாசிரியரும் வழக்குரைப்போரும் சொல்லும் மனமும் ஒன்ருகவேண்டுமென்றது. தந்நலநோக்குடன் இயற்றும் (சொல்) சட்டங்களும் ஆகாவென்றது.

10. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.

கிரேக்கம், சீனம் போன்ற பிறநாட்டரச வாணிகம் பேணியென்றுமாம். பிறநாட்டு வாணிகம் பெருகிய காலம். பிறருக்கு வாங்கிக் கொடுத்தலினும் பிறரதை விற்றுக் கொடுத்தலினும் தமபோற் செயல். அரசன் வாணிகத்தைப் பேணி உயர்த்தி அவர்தம் கோலையும் தன் செங்கோல் போற்செயலென்றுமாம்.

## 13. அடக்கமுடைமை

1. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

ஆரிருள் என்றமையால் அமரருலகம் ஒளியுலகம் என்பது தெளிவாயிற்று. ஆரிருள் - அறியாமை; அமரருள் - மெய்யுணர்வுள். அமர் அருள் - அமைதியான அருள். இருள் - மருள். அமரருள் உய்த்தல் - நித்திய சூரி; சாரூப நிலையிலுய்த்தல்.

2. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங்(கு) இல்லை உயிர்க்கு.

ஊங்கு - மறுமை; இப்பொழுதே ஆக்கமுண்டென்றது. அடக்கம் அறப்பிரிவாகலின் அதனினூங்காக்கமில்லை யென்ருர். உயிர்க்கு (சிறந்ததாக)க் காக்க. உயிரினும் ஓம்பப்படும் என்றதுமது. இல்லறத்தான் இரண்டாவது செல்வமாயும் துறவறத்தார் அதுவே செல்வமாயும் (ஆக்கம்) காக்க. முன்பு இருந்தோம்பியென்றது, அடக்கத்தை யோம்பு என்னுமிதனல் புலனகும்.

3. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.

அறிவறிந்து - அடக்கம் மெய்யுணர்வாலாகுமென்பது. ஆற்றினடங்கல்; பொய்தீரொழுக்க நெறி நிற்றல். செறிவு - அறிவு நிறைவு; சால்பென்னும் திண்மை. சீர்மை - புகழ்; ஆற்றின் - மனமொழி மெய்களில்.

4. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

உலக முழுவதும் இவன் தோற்றம் தெரிதலின் மலையினும் பெரிதென்றார் - குணக்குன்றேறி நிற்றல் - முனிவரும் முனைவனும் (கோயில்) தங்குமிடம் மலையாகலின் அடிக்கடி மலையுவமை வருகிறது. மலை உளியால் தாக்கப் பெறினும் தகராத தோற்றம். திரிதல்: இல்லறத்தாரும், துறவோரும் தத்தம் நிலையைவிட்டு மற்றவர் நிலையில் திரிதல்; மனம் திரியாமையுமாம்.

5. எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

ஊசியில் ஒட்டகத்தைப் புகுத்தினும் செல்வன் சுவர்க்கம் போகான் என்பராகலின் செல்வர்க்கடக்கம் கூடல் அரிதாகும், எனவே செல்வந் தகைத்து. பணியுமாம் பெருமை, பணிவுடையன் இன்சொலன் எனப்பிறவிடத்தும் வற்புறுத்தியதனை நோக்குக. அதனுற்றான் தவசிகள் அடக்கத்திற்கு 'ஒன்றின்மை'யை (வறுமையை) மேற்கொண்டனர். பின்னர், 'வறுமையில் (சுருக்கத்துவேண்டும் உயர்வு) நிமிர்ந்து நிற்க' என்பதனேடிது முரணுது.

6. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

எழுமை - ஒருமை என்பன உடலின் ஏழு பருவங்களுமாம். அடக்கல் - இங்குத் தீமை வராமற்காத்தல். காத்தல் - இல்லறத்தார் நெறியிற் காத்தலும் துறவறத்தார் அவித்தலுமாம். ஒருமையுளடக்கல் - ஒரு நெறியில் புலன்களை வழிப்படுத்தல். ஆற்றினடக்கலென்றலுமாம். ஆமை நீரில் வெளிப்படுத்தி நிலத்தில் அடக்குமதுபோல உலகியலில்

புலன்களை நெறிப்படுத்தி உயிரியலில் அடக்கவேண்டும். கலையியலில் புலன்களை நெறியாக வெளிப்படுத்தவேண்டும். ஐந்நெறியாலும் வரும் ஆமையென ஈற்றுப் பெயருடைய அழுக்காருமை, வெகுளாமை முதலியவற்றை ஆளுதலுமாம்.

7. யாகாவா(ர்) ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

நா - சுவையடக்கம். உண்டி முதற்றே உணவின் பிண்டமாகலின் நாவடக்க முதலென்ருர். மற்ற புலன்களைக் காவாராயினும் என்பது. சொல்லிழுக்கு - பழிச்சொல். சொல்லாயின் அது நினைவைவிடவும் செயலைவிடவும் பலர்க்கும் தெரிதலாலும் பலரையும் தாக்குதலாலும் காக்கவென்ருர்.

8. ஒன்ருனுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயின்
நன்ருகா தாகி விடும்.

தீச்சொல் - பொய்ச் சாட்சியுமாம். ஒரு சிறு பொருட்பயன்கருதியுமென்க. கலப்பாலில் ஒரு துளி நஞ்சுபோல மற்றெல்லாச் சொல்லையும் மனத்தையும் கெடுத்து (நன்ருகா தாக்கி) விடும்.

9. தீயினுற் சுட்டபுண் உள்ளாறும் ஆருதே
நாவினுற் சுட்ட வடு.

மாருதே எனப் பிரித்தலுமாம். சுடும் தீயினுக்கும் ஏழு நாவு உண்டென்பர். சூளையிட்ட பதுமைபோல நீண்டகாலமிருக்கும். உள்ளத்தில் ஆறுமென்பது. உள்ளாறும் - உள்ள நாள்வரையும் எனில் சாகும்வரை ஆருது என்க. தீச்செயலை அன்றே மறக்கவென்றவர் தீச்சொல்லை மறத்தலரிதென்கிருர்.

10. கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றி னுழைந்து.

நீத்தார்க்கும் (குணமென்னும்) அடக்கத்திற்கும் வெகுளி ஆகாதென்றமையின் மனவியல் வளர்ச்சிக்கு வெகுளி பெருந்தடையென்பது. கற்றடங்கல் - (ஆன்றவிந்தடங்கல்.) என்றமையான் மிக்க உழைப்பாலும் சிந்தனையாலுமே (தியானம்) அடக்கம் வருமென்பது. கற்றடங்கல்-

ஆசிரியனது வெகுளிக்கு முன் அடங்கிக் கற்றலுமாம். அடக்கமே எல்லாவறமும், 'அனைத்தறமும்' என்றதாம். 'காய்தல்' மட்டுமன்றி, அறம் பார்த்துப் பயன்தரவும் செய்யும் என்பது.

## 14. ஒழுக்கமுடைமை

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
 உயிரினும் ஓம்பப் படும்.

உயிரினும் - உயிராலும். உயிரைக் கொடுத்தும் ஒழுக்கம் காக்கவென்றது. உயிரை ஓம்புதல் போல ஓம்புக. இரண்டும் நெஞ்சில் இருப்பன. எனவே நெஞ்சுட்கொண்டு (நினைவொழியாமல்) காக்க. உயிரோம்பும் உணவை ஒரு நாள் தவிர்க்கினும் ஒழுக்கத்தைத் தவிராமல் நாளும் ஓம்புக வென்பது. விழுப்பம் - வீடுபேறு. எல்லாவுயிரும் வீடு பேறடைவதில்லை. ஒழுக்கம் அவ்வீட்டினைத் தருதலால் உயிரைக் காப்பதைவிட்டு ஒழுக்கத்தைக் காக்க.

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
 தேரினும் அஃதே துணை.

ஓம்பிக் காத்தற்குரியது செல்வமன்று, ஒழுக்கம். பல நாட்டாரது ஒழுக்கங்களையும் (நாகரிகம்) தெரிந்தோம்பித் தேரலுமாம். பலவகையான நூல்களைத் தேர்தலுமாம். தேர்தல் - பல்லாயிரம் ஆண்டுகளாக அனுபவித்தறிந்தது. 'நீரின்றமையாது' என்ற குறளால் நீரும் ஒழுக்கமும் உலகிற்கின்றியமையாதனவாம். அதனாலேயே ஒழுக்கம் நீர்மை யெனப் பேர்பெற்றது போலும்!

3. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
 இழிந்த பிறப்பாய் விடும்.

குடிமை என்றதனால் குறள் கருதுவது 'பெருமகன் (ஒரு தலைவன்) தலைவைத்த ஒரு தனிக்குடி' யாகிய குலமன்றி நிறம்பற்றிய வருணாசாரமன்று. இழிந்த பிறப்பு - நரகர் நாகர் பிறப்பு; விலங்குப் பிறப்புமாம்.

4. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
 பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

கொளலாகும் - வேறுபடைத்துக் கொள்ளலாகும். எழுதாக் கிளவியாகலின் மறந்தால் பாடபேதமோ வேறு பாடமோ கொள்ளலாம். ஒழுக்கம் பிறப்பொடு பட்டதால் சாகும்வரை வேறுபடலாகாது. ஒழுக்கம் குன்ற ஓத்து அழிந்துவிடும்; ஒழுக்கத்தொடு படாதமறை (நூல்கள்) அழிந்துவிடும். ஒழுக்கம் 'அற்ருர் மற்ருதலரிது, பூத்தலரி' தென்றது.

5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு.

அறத்தினூங்காக்கமும் இல்லை என்றதால் அழுக்காறு அறமின்மை ஈண்டும் பெறப்பட்டது. எனவே உயர்வு என்பது அறமாம். ஆக்கம் உயர்வு என்றது ஆக்கம் 'மேன்மேலுயர்தல்' என விளக்கியவாறு. அவ்விய நெஞ்சத்தாற்காக்கம் ஒருக்கால் உண்டாம் ஆனுல் ஒழுக்கமிலாற்குயர்வு ஒருக்காலுமில்லை. கண் ஆக்கம் எனக்கூட்டி - கண்ணெளி யென்க. அழுக்காறு முதலாம் தீ யொழுக்க முடை யோரிடம் கண்ணெளியும் மலர்ச்சியுமிராது. சாதி, இனம் பற்றிய அழுக்காறுமாம்.

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

உரவோர் - அறிவோர். மனித அறிவுக்கு மனித வொழுக்கம் வேண்டுமென்பது. இந்திரன் முதலோர் இழுக்கத்தாலுற்ற ஏதம் அறிவோர். ஒல்குதல் - சுருங்குதல், கூசுதல். பிறர் ஒழுக்கமென்ருென்று காட்டி மற்றவரை நெருங்கவும் தொடவும் கூசுதலைச் செய்தல் அறிவுடைமையாகாது; இழுக்கமென்பது.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி.

பழி என்றமையால் பொருள்போல ஒழுக்கமும் புகழ்க்குரியதாக, நல்லோர் புகழ்ந்ததாக இருக்கவேண்டும். மேன்மை - புகழ். பழி - உயற்பாலதாகிய பழி. மேன்மையும் கீழ்மையும் சாதியால் அன்று, ஒழுக்கத்தாலென்றது, இழுக்கம் - தீ யொழுக்கமன்று, நல்லொழுக்க மின்மை.

தீ யொழுக்கத்தரும் எய்தாத பழியை ஒழுக்கமின்மையே விளக்கும்.

**8.** நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்.

நன்றிக்கு வித்து - வரனென்றும் வைப்பிற்கு வித்து. இடும்பை என்றதனல் நன்றி - இன்பம். நன்றி - அறமுமாம். நன்றி - நட்பு. ஒழுக்கம் உடையோரை எல்லாரும் நட்க விரும்புவர் - மறவற்க மாசற்ருர் கேண்மை யென்றதால் நன்றி நட்பாகும். நல்லொழுக்கமும் தீயொழுக்கமாகக் கருதப்பட்டு இடும்பைதரும் என்பதுமாம்; கிறித்து சாக்ரடீஸ் ஆகியோர் ஒழுக்கம்போல.

**9.** ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

தீய 'கோட்பாடுகளை' மறந்தும் சொல்லலாகாது. தீய-தீயின்முன் சொல்லு மந்திரங்கள். மந்திரங்களைப் பிழை படச் (பாடபேதமிட்டு) சொல்லற்க வென்றது. உயர் நூற் பாடல்களில் பாடங்களை மாற்றலாகாதென்பது. தீய - பழிச் (சாப) சொல். வாய் - ஆல் = வாய்மையாகுமாதலால். தவறியும் சொல்லல் வாய்மையாகுமாதலால் (உண்மையாக நடந்து விடும்) சொலலென்பது. 'நாகாத்தலே' ஒழுக்க மென்றது.

**10.** உலகத் தோடொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

உலகம் - நாடு - சான்ருேர் கண்ட நாகரிகம். பிற நாகரிகத்துடனன்றித் தன் நாகரிகத்துடன் ஒட்ட ஒழுகக் கல்லாதார். ஒழுகல் - ஒழுகாதே. அறிவிலார் உலகத்துடன் ஒழுகாதேயென்க. 'கற்றதனல்' என்ற குறளை நோக்குக. ஒழுக்கத்தோடு (செயலொடு) படாத கல்வியும் அறிவுமுடையோர் மனிதராகார். ஒழுக்க முடையோர்க்கும் கல்வி இன்றியமையாததென்பதுமாம். ஒட்ட ஒழுகாதே, தாமரை இலை நீர் போலொழுக வென்றுமாம்.

## 15. பிறனில் விழையாமை

1. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்க ணில்.

பெட்டொழுகும் என்றதால் நினைத்தலும் தவறு. பொருளாள் - அவனைப் பீடு நடையுடையனுக, பொருளாக மதிக்கத் தக்கவனுக ஆக்குபவள். பேதமை 'கயமை'க் குணமாகும். 'நன்றறிவாரில்', மனு போன்றவரும் வெறுப்பர்; வாத்சாயனர் போன்ற இன்ப நூலுடையார் சிறிது கூறுவர். தமிழ் நூலுடையார் பெருந்திணையிலும் சேர்க்க மாட்டார். பேதைமை ஞாலமென வைதது.

2. அறன்கடை நின்ருரு ளெல்லாம் பிறன்கடை
நின்ருரிற் பேதையா ரில்.

அறன் கடைநின்ருர் - அறவோர். கடை - இடம். தவ (அறம்) மறைந்தல்லவை செய்வோர். மீண்டும் பேதை யென்ருர், அறவோராய் நின்ருர் பெரும் பேதையாகக் கருதப்படுவர் என்றுமாம். இது பிறனிடம் செல்லும் பெண்ணைப் பற்றியதுமாம். இல்லறத்தில் நிற்கும் பெண் களுள் பிறனை விழைவோள் பேதை.

3. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்.

தெளிந்தார் - அறிவர்; உறவினர், நண்பர். இந்திரன், கௌதமர் மனையாளை விரும்பியது. உலகில் மறைந்தே ஒழுகுதலால் விளிந்தார் (மறைந்தார்) என்ருர். பிறன் குடியே கெட்டுவிடலால் இல்தீமை என்ருர்.

4. எனைத்துணைய ராயினும் என்னும் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

பெரும் பதவியாளர் துணையோரிடம் தீமை புரிதல். தினைத்துணையும் தேரானென மறைந்து (இந்திரப்-பூனை யாய்ச்) செல்லல். தினைத்துணையும் புகல் - சிறு அளவிலும் நயத்தல்; 'கண்டு கேட்கும்' இன்பமும் ஆகாதென் றது. காகந்தன் (சோழன்) மைந்தனுயினும் என்னும் என்றது. பனைத்துணையராயினுமென்னும்.

5. எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

ஏழைகள், பணியாளரிடம் புகல். இல்லிறப்பான் என்றதால் அஞ்சாது அவர் வீட்டிற்கே செல்வானென்பது. ஒன்றுவுலகத்துப் பொன்றுது நிற்பது இங்குப் பழி. பழி - அறமன்றென நயமாய் விலக்கியது. இழிந்தோராகலின் எங்கும் தூற்றித்திரிவர்.

6. பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்.

அறம் பொருள் முதல் நான்கிற்குப் பதிலாக இவை நிற்கும் என்றது. தன் மனையாள் பகை; பிறனதுறவோரிடம் அச்சம்; ஊர்ப்பழி, பிறவிக்குப் பாவம். நான்கும் அவனை நாற்புறமும் சூழ்ந்தழிக்கும்.

7. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

முன்னவை துறந்தார்க்கு மாகலாம். இது இல்லத்தார்க்குரைத்தது. 'அறத்தான் வருவதே, பிறன்பழிப் பதில்லாயின் என்றவிடத்தையும் நோக்குக. இயலாள்: குணத்தால் ஒன்றுனவள் என்பது. பிறனியலாள் - பிறனியல்பில் நிற்கும் பெண்ணுக்குரைத்ததுமாம். பெண்மை - உள்ளுறு புணர்ச்சி யாகாதென்றது.

8. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனென்றோ ஆன்ற ஒழுக்கு.

மனை நோக்காத - பிறன் வீட்டுப் பக்கமும் பார்க்காதவென்க. பிறன் மனையாளால் பார்த்தற்குரிய (பிறர் நெஞ்சு புகா) ரல்லராதலுமாம். பிறநாட்டை யழிக்கும் வீரர் அவர்தம் கற்பை யழித்தலில்லை எனவே பேராண்மையாயிற்று; வீரரல்லார்க்கு வீரங்கூறியது. தன் மனையை வெறுத்தவன் பிறன்மனை நோக்காமையே உண்மைத் தவவொழுக்கம். அவர்க்குச் சொல்லும் செயலும் ஒக்கும்; தூயவாம்.

9. நலக்குரியார் யாரெனில் நாமநீர் வைப்பில்
பிறர்க்குரியாள் தோள்தோயா தார்.

நாமநீர் வைப்பு - அவள் அச்சந்தரும் கெட்ட நோய் நீர்க்கிருப்பிடம். நீர் - ரோக நீர்; மேகநீர். பிறர்க்குரியாள் - பிறரைத் தேடி அலைபவள். அவள் இருப்பு அச்சந்தரும் நீர்(மை)யுடைய தென்பதுமாம். தன் இல்லாளது நலத்திற் குரிய ரென்பது. தோள் - தழுவியாடல், முத்தத்தோடமைவ தாயினும் ஆகாது.

**10.** அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

பொது நலமுடையாரிடம் வளரும் தீமை குறித்தது. அறனை வரையாமல் நல்ல செய்பவன் பிறனில்லாளை விழையும் சிறுமை ஒரு பக்கமுடையான், அதனை விலக்கியது. பிறனையும் வரையாமல் என்றுக்கிக் கணவனையும் பிறனையும் பொதுமை நோக்குடன் விழைபவள் என்க. இது புதுக்கால நாகரிகத்தில் மிகுந்து வருகின்றது.

## 16. பொறையுடைமை

**1.** அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

அகழும் உழவர்க்கும் விளைத்துத்தரும் நிலம்; அகழிக் காகத் தோண்டும் அரசரையும் அகழியாகத் தாங்கும் நிலம்: இறந்தபின் அவர் பிணத்தையும் தாங்கும் என்பதால் சாகுமளவும், செத்த பின்னும் பொறுத்தலோடன்றித் தாங்கவும் வேண்டும் என்பது குறிப்பு. தம்மை யென்றது பிறரை இகழ்தலையும் பொறுத்தலரிதென்பது. நிலம்போல உலகை வழங்கி வரச் செய்வது.

**2.** பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினும் நன்று.

இறப்பினை - கொன்றன்ன இன்னாதவற்றை. என்றும் - சிலகாலமன்று, என்றைக்கும். அதனை - பொறுத்ததனை. பொறுத்தோம் என நினைத்திருத்தலும் தவறு. பழமையால் நண்பர் கெடும்வகை செய்தலுமாம். தமக்குத் தீங்கிழைத் தவற்கு வரும் மரண தண்டனையை விலக்குதலுமாம். சாவாகிய துன்பத்தினைப் பொறுத்தல் யார்க்குமரிது;

சாவென ஒன்றில்லையென அதனை மறந்து வாழ்க வென்றது. மறத்தலிலும் பொறுத்தல் (நல் நயஞ்செய்து (நலன்) தாங்குதல்) நன்றென்பது.

**3.** இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

இன்மை - 'உடைமையுள் இன்மை' என்றார். வன்மை- கொடுமை. மிக்க வறியராய் வருவோரை விலக்குதல் கொடுமை. வன்மை மடவார் - மிக்க முரடர். மடவார் உலகிற்குப் பொறை (சுமை)யுமாம். மடவார் என்றது அறிவாரையும் பொறுக்க வென்றற்காம். பொறுத்தல் பல வீனம், கோழையின் அறிகுறி என்பாரை மறுத்தது. அதுவே வீரமென்றுமாம்.

**4.** நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

நிறை - 'செறிவு', சான்றாண்மை. நிறையால் தாழ்தல்- பணிதலுமாம். நிறை - உடைமை (செல்வம்) யுமாம். மனப் பொறை யின்றேல் செல்வப் பொறையும் (தாங்குதலும்) இல்லை. போற்றி யொழுகல் - பிறரால் பாராட்டிப் பின்பற்றி ஒழுகப்படல்.

**5.** ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

ஒன்றாக - ஒரு செப்புக்காசாகவும்; தமக்குச் சமமாக அமரவையார். வைப்பர் - உள்ளத்துளெல்லாம் உளனாக வைப்பர். பொன்போல - தம்மைத் தாங்குவோனாக வைத்தல். பொறுத்தார் - துன்பத்துட்டுப்பாவராகலின், வைப்பர். சுடச்சுடரும் பொன் போற் பொறுப்பவர். வாழும் ஒருவனாக வையார், செத்தாருள் வைக்கப்படும்.

பொன் - உரைத்தறியும் சான்றோனாக வைப்பர்.

**6.** ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

ஒறுத்தார் பொன்றுந் துணையுமாம். பொன்றுதல் - மறத்தல். எவ்வளவு காலம் அதனை மறந்திருக்கிறானோ அவ்வளவு காலமும் புகழ். இன்பம் பொறுத்தார்க் கென்று

மாம். பொறுத்தலோடன்றி ஒரு நாட்குரிய 'நன்னயஞ் செய்தலும்' உள்ள நாளெல்லாம் புகழ்.

**7.** திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

தனக்குற்ற நோவுக்கு நொந்துமாம். திறனல்லாதவனுகத் (உடற்குறை செய்து - கை, கால், கண்களைக் கெடுத்து) தன்னைச் செய்யினும் என்க. கிறித்துவையும் அப்பரையும் போலப் பொறுத்தல். வாழ்நாள் முழுவதுமுள்ள நோவிற்கு நொந்து ஒரு நாட்கும் செய்யற்க.

**8.** மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

அறிவு ஆற்றல் - செல்வ மிகுதி. தகுதி - நடுவுநிலை, சான்ருண்மை. தோல்வி துலையல்லார் கண்ணும் கொளலென்பது. துலையில் எவ்வளவு பொருளை ஒருபக்கம் ஏற்றினும் மற்ருெரு தட்டில் தம் நிறைகல்லாலாகிய எடையினுல் வெல்க. விடல் - மறந்துவிடலுமாம். மிக்கவை செய்தல் - சட்டம் செல்வாக்கினுல் தம் செல்வம், அறிவு முதலியவற்றை மறைத்தலும் அழித்தலும். தகுதியைத் தருதலின் தகுதி.

**9.** துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னுச்சொல் நோற்கிற் பவர்.

இன்னுச் சொல் - சாபச் சொல். முனிவரும் - இறந்தோரும் இட்ட சாபங்களைப் பொறுத்தல். இறந்தோர் இருக்கும்போதிட்டதை மறவாவிடில் அவர் சந்ததிக்குத் தீங்கிழைக்க நேரும்; தன்மனம் நினைத்துக்கெடும். வாய் இன்னுச்சொல் - வாய்மை இன்னுதாகிய சொல்; அதனுற்ருன் '(அகம்) தூய்மை' யுடையரென்ருர்.

**10.** உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னுச்சொல் நோற்பாரிற் பின்.

உண்ணுமலும், பேசாமலும் (மௌனம்) வாயைத் திறவாமலே நோற்பர். அவரை உண்பித்தும் அவர்க்காகத் தாம் பேசியும் நோற்றலின், அவர் 'பின்' என்ருர். வழுக்கியும் வாயாற் சொல்லும் ஒழுக்கமின்மையைப் பொறுத்தது.

## 17. அழுக்காறாமை

1. ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்து
அழுக்கா றிலாத வியல்பு.

அழுக்கு ஆறு - தீ நெறியின் முதற்குணம். பிறர் நெஞ்சில் தன்னைப்பற்றி அழுக்காறேற் படாமலும் நடக்க வென்றது. மாசிலனாதல் என்பதில் அகற்றப்படவேண்டிய முதல் மாசென்பது, ஆண்டும் பெறப்பட்டது (அழுக் காறவா...); நீரொழுக்குப்போல இடையறாது கொள்க. இடையிற் சிறிது அழுக்காறு புகலும் தீமையாம். 'இன்றி யமையாத' ஒழுக்குமாம். ஒழுக்காறு - ஒழுக்க நெறி.

2. விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

யார்மாட்டும் - தன்னிடம் அழுக்காறு கொள்வாரிடத் தும். அதனைப் போக்கத் தான் கொள்ளலாமென்பாரை விலக்கியது. அழுக்காறற்ற சூழ்நிலை வேண்டும். பெறத் தக்க மனைவி, மக்களிடம் 'அன்மை பெறின்' எனலுமாம்.

3. அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

அதனாலாகிய ஆக்கம், பிறனாக்கமென்றதும் அறம். பிறனது அறத்தின்கண் அழுக்காறு கொள்ளல்; பாரியிடம் மூவேந்தர் கொண்டாற் போல்வது. பிறன் வளர்ச்சிக் குழைத்தல் போக அவரிடமே அழுக்காறு கொள்ளல் ஆகாது. அறன், ஆக்கம் (பொருள்) ஆயவற்றுடன், (பிறனது 'அகவாழ்வில்' அழுக்காறுடையார்க்கு) இன்பமு மில்லையென்பது.

4. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்(கு) அறிந்து.

அழுக்காற்றின் நல்லவை எனவும் பிரிக்க. பலர் பொறாமைக்கிடையே நன்மை செய்தலையும் ஆய்ந்து செய்க. பிறன் நல்லது செய்தலைக்கண்டு பொறாமையால் தானும் செய்யும் நன்மை தீதாமென்பது. அல்லவை - தீயாரது அவை (கூட்டம்). அழுக்காறுடையாரது நட்பினைச் செய்யாரெனலுமாம்.

5. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

ஒன்னார் செய்யாதபோதும் தான் அவர்க்குக் கேடு சூழ்வது, வழுக்கிக்கேடீன்பது - மறந்தும் பிறன்கேடு சூழல். பழக்கத்தால் தான் விரும்பாவிடினும், செய்யுமென்பது. ஒன்னாரீன்பது கேடீன்பது எனப்பிரித்து யாவரையும் பகை வராக்குவது, யாவர்க்கும் கேடீன்பது என்க. ஒன்னார் இழைத்த திட்டத்தில் தவறினும் அது பயனையளித்தே தீருமென்றது.

6. கொடுப்ப(து) அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

பின்னும் உடுப்பதூஉம், உண்பதூஉங் காணின் என்றார்; அழுக்காறு தோன்றும் முதலிடஞ் சுட்டியது. சுற்றம் - இனம். சுற்றம் - ஆதரிப்பார் முதலில் அறலால் நண்பென்னும் நாடாச் சிறப்பறும் என்றது. சுற்றம் - ஏவல் இனையருமாம். அவர் உண்பது கூட இன்றி அவரினும் இழிவனென்பது.

7. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

செய்யவள் - மனையாள் மூதேவித்தன்மையாவாளென் பதுமாம். மூதேவியால் சோம்பலும் வறுமையும், திருமகள் செல்வதால் விருந்து போற்றாமையும் முயற்சியின்மையும் உண்டாகும்.

8. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

திரு - கண்டாரால் விரும்பப்படும் தன்மைகள்; வீடு பேறுமாம். தீயுழி - நரகம்; நெருப்பிடம். பொறாமை எல்லாவற்றையும் தீய்த்துப் பொசுக்கிவிடும்; அரசர் முதலோர் பிறநாட்டைத் தீக்கிரையாக்கலும் ஒருவகைப் பொறாமையேயாம். அழுக்காறு கொண்ட பாவியைப் பொருளைப் பறிமுதல் செய்து தீயிலிட்டுக் கொளுத்திவிடுக எனக் கழறியதுமாம்; பரந்துகெடுக என்றதுபோல. திருச் செற்றல் - நன்மைகட்கே பகை. திரு - மனைவியுமாம். மனையுடனும் பொறாமைகொண்டு வாழமாட்டான்.

9. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

நெஞ்சத்தான், செவ்வியானது ஆக்கத்தைப் பொருமல் கேட்டை நினைக்கக் கெடுவான் எனக் கூட்டுக. நினைக்க - மாறும். நினைத்த அளவில் - விரைவில் மறையுமென்பது. செவ்வியான் என்பது அவ்வியம் செம்பொருள் தன்மைக் கெதிரானது என்றற்காம்.

10. அழுக்கற்(று) அகன்றாரு மில்லை அஃதிலார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.

அழுக்கற்று என்பதற்கு அழுக்காறுற்று எனப் பொருள் கோடல் பொருத்தமின்று. அவ்வாருயின் 'அழுக் குற்று' என்ற பாடம் வேண்டும். அழுக்காறற்று ஆக்கத் தின் நீங்கிளுருமில்லை, அஃதுடையோர் பெருக்கத்தில் நிலைத்ததும் (தீர்ந்தார்) இல்லை; முழுவதும் நெஞ்சத்தழுக் காறற்றுத் தனித்தவரும், அழுக்காறுடையோர், மனித-கூட்டத்திலிருந்து தப்பி நின்றவரும் இல்லையென உலகி யல்பு கூறியதுமாம்; எனவே குறிக்கொண்டு அதனைத் தவிர்க்க வென்றது.

## 18. வெஃகாமை

1. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

நன் பொருள் - அறத்து வழிப்படும் செல்வம். அற வழிப்படாத செல்வத்தை அரசர் முதலோர் வெஃகலுண்டு ஆதலின் இதனை வெஃகற்க என்றது. நன்றே பகுதியாற் பாற்பட்டு ஒழுகுபவர் நன்பொருளாகலின் வெஃகலாகாது. தாஞெருவன் வெஃகக் குடியில் பலரழிவர். குற்றம் - இனமே அழியும் குற்றம்.

2. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

படு பயன் - நிலையாதழியும் பயனுமாம். நடு வன்மை - நடு நிலையாகிய வன்மையு (ஆற்றல்) மாம். நடுவன்மை நாணுபவர் - நடுவிகந்தா மாக்கத்தை அன்றே ஒழியவிடு

பவர். வெஃகல் - காத்துப் பின்னுதவுமாறு பிறர் கொடுத்து வைத்த செல்வத்தை வெஃகலும். பழிப்பு அடுவ - பழிப்பு தன்னை அடுவன.

3. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

சிற்றின்பம் என்றதால் இது பிறன் மனை நயத்தலுமாம் (வெஃகல்); மற்றின்பம் - தன் மனையாளின்பம் கெடுமென்றது. சிற்றின்பம் - பொருளின்பங்களால் வருவனவுமாம்.

4. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

தவத்தோர் வெஃகலாகாதென்றது. புலம் வென்றவர்க்குப் பொருளே வேண்டாம். பின் ஏன் வெஃகலென்பது இலமென்றதை இ இருப்பார் - பிறர் புலங்களை (நிலம்) வெஃகலும் ஆகாது. செய்யார் புலம் எனக் கூட்டுக. வென்ற புன்மையில் காட்சியவர் - வெற்றியுடைய அரசர், உழுதல் செய்யாதார் புலத்தை இல்லாதவர்க்குப் பகிர்ந்து கொடுக்க வென்றலுமாம். ‘பரந்து கெடுக’ என்றவர் இவ்வாறும் நினைத்திருக்கலாம்.

5. அஃகி யகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

உலகியல் அறிவுடையோர்க் காகாதென்றது. அஃகி யகன்ற அறிவு - நுண்மாண் நுழைபுலம். பிறிதின்நோய் தந்நோய் போற் போற்றும் அறிவு வெஃகுதலால் பிறர்க்காம் நோயைப் போற்ற வேண்டுமென்பது. யார் மாட்டும் - குடியினர், பங்காளிகள் மாட்டும். வெறிய - ஆசையும் வெஃகலும் வெறித்தனத்திற் கறிகுறிகள்.

6. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

அருளன்பு நெறிக்காகாதென்றது. நின்றான் பொருள் எனக் கூட்டி அருள் நெறிப்படும் பொருள் என்க. அறநிலையம், கோயில்கட்கு வைத்த பொருளை வெஃகல். கெடும்-குடி பொன்றும். இங்குத் தான் ‘கெடும்’ எனத் தெளி

வாகக் கூறினர். அருளுக்குப் பொருள் செவிலியாயிற்றே என அருளை வளர்க்கவும் பொருளை வெஃகற்க என்றது. ஆறு - பொய்தீ ரொழுக்க நெறி.

**7.** வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

மாட்சிமைப் படுதற்குரிய (அரிதாகிய) பயனுயினும் வேண்டற்க. தான் வெஃகாமல் பிறர் வெஃகித் தேடியது தனக்கு உரிமையாற் கிடைப்பினும் ஆகாது. லஞ்சம், கொள்ளை லாபம், சட்டம் முதலியவற்ருல் சேர்த்தலும் வெஃகலாம்.

**8.** அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

வெஃகுவானுக்கு உள்ள செல்வமும் போய்விடு மென்றது. அஃகுதல் - கை முதலிய குறைதல்; வெஃகு தலால் கை, கால் குறையும் பெரு நோய்களுண்டா மென்பது. அஃகாமை செல்வம் - நோயற்ற செல்வம். கைப் பொருள் - வருந்தி உழைத்த பொருள்.

**9.** அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு.

திரு - எல்லா நன்மைகளும். வேண்டாதவர்க்கு எல்லாம் கிடைக்கும். வேண்டுவோருக்கு ஒன்றும் கிடைக்காது. இல்லதென் உள்ளதென் என்க. சேரல் - அதர்வினுய்ச் செல்லல். அறமென்றறிந்து சேரும் எனக் கூட்டலுமாம். அறம்பொருள் இன்பத் திறமறிந்தென்க. அறமுடையாரே அறிவுடையார்.

**10.** இறலீனும் எண்ணது வெஃகின் விறலீனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு.

இறல் - விறல் (வெற்றி) இறலுமாம். அரசர்க்குரைத் தது. அறவழிப்பட்ட நாட்டுச் செல்வத்தை விரும்பும் அரசர்க்கு எங்கும் தோல்வியும், விரும்பாதார்க்கு எங்கும் வெற்றியும் கிட்டும். விறல் - விறலி - கலையெனலுமாம். கலைகளில் தேர்ச்சி விழைவோர்க்கு வெஃகுதலற்ற

அமைதியான மனம் வேண்டுமென்பதுமாம். போரில் காண்பது வெற்றியன்று, இதுவே வெற்றியென்றது.

## 19. புறங்கூறாமை

**1.** அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்றல் இனிது.

அறங்கூறான் நல்ல எனப் பிரித்துத் தான் நல்லது செய்யுமவனைப்பற்றியே புறங் கூறலுமாம்; அல்ல செய்யுமவனைப் பற்றியும் கூறலாகாது. அறங்கூறாதவனென்ற பெயரை வாங்கினும் புறங்கூறுபவன் என்ற பெயரை வாங்கலாகாது. மறை பிறர்க் குரைத்தலும்; கூலிக்காகப் புறங்கூறுதலும் புறங்கூறலேயாம்.

அறங்களைப் பற்றி எடுத்துப் பேசாவிடினும் என்க.

**2.** அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

சொல்லுதலும் செய்தலோடொக்கும். மனத்துக்கண் மாசிலனாதல் என்பது நினைவும் செயலோடொக்குமென்றது. அழித்தல் ஒரு குற்றம், பொய்த்து நகை பெருங்குற்றம். மனைக் கெழீஇ மன்றிற் பழித்தலே பொய்த்து நகை· பொய்த்தல் - பிறன் பெருமைகளைப் பொய்க்கப் பண்ணுதல். நகை செய்தலின் தீதே என நகையை எழுவாயாக்குக. புறனழித்தல் அறனழித்தலும், பொய்த்து நகை அல்லவை செய்தலுமாம்.

**3.** புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும்.

நூறாண்டுகள் அறமில்லாதவனாய் வாழ்தலினும் ஒரு நாள் அறத்துடன் வாழ்ந்து, இறத்தலே சால் பென்றது. வாழ்தலிற் சாதல் - புறங்கூறும் தொழிலிலேயே நாளைக் கழித்துச் சாதல். அறக்கடவுள் பாராட்டும் ஆக்கமென்க. ஈதலறம் கூறினார் ஔவை; இது 'சாதலறம்' பற்றியது.

**4.** கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

கண்ணற - கண்ணோட்டமற எனின் நயத்தக்க நாக ரிகத்திற்குப் புறம்பானது புறங்கூறலாகும். கண்ணற - கண்ணீர் விடுமாறு. பின்னோக்கிய சொல் - மார்பிலன்றி முதுகிலெறிந்த சொல்.

5. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

முகத்தாலன்றி சொல்லால் உள்ளத்தை அறிவ துரைத்தார். கூறக் கூடாத அரசியல், அணு, ஆகிய வற்றின் (மறை -) இரகசியங்களைக் கூறி விடலும் புறங் கூறலாம். அறங்கூறும் நெஞ்சம் - அறத்தை உணர்ந்து, அறிந்து செய்யவேண்டுமென்பது குறிப்பு.

6. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும்.

பிறன் பழி - பிற நாகரிகத்திற் பழி. புறங்கூறும் பழக்கத்தால் தன் பழியையுங் கூடத் தவிர்க்க முடியாமற் கூறி விடுவான். கூற - படும் எனப் பிரித்து அவன் பழியை எடுத்துரைத்ததும் அடங்கி விடுவான் என்க. புறங்கூறலை ஒழிக்கும் வழி கூறியது; வலியார் முன்; உள்ளான் கொல் உண்டதுணர்வு என்றமை போல. (250 ; 255)

7. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

பகச் சொல்லி - நெஞ்சு வெடிக்கச் சொல்லி; அன்பு கெடச் சொல்லி; புறங்கூறல் உலக வொற்றுமையைக் குலைக்கும். நகச் சொல்லி...தேற்றாதவர் - நகல் வல்ல ரல்லார். எனின் புறங்கூறல், பண்பிற் கெதிரானதெனப் பெறப்படும்.

8. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

துன்னியார் - நெருங்கியவர் - செல்வர்; ஏதிலார் - ஏழைகள். குற்றமும் என்றது புகழுடன் பழியையும் தூற்று தல். ஒருவரெதிரே அவரைப் பற்றியே மறைமுகமாகக் கூறலும் துன்னியார் குற்றம் தூற்றுதலாகும். பிறரைச்

சொல்லிச் சொல்லிப் பழகி நட்பினர் பற்றியே சொல்லும். பிற நாகரிகம், இனம் பற்றிப் புறங்கூறுமையுமாம்.

**9.** அறனேக்கி யாற்றுங்கொல் வையம் புறனேக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

தன்னைப் பற்றியும் மறுவுலகில் இறந்தபின் கூறு வானென அஞ்சிப் பொறுத்தலுமாம். புறங்கூறலைப் பொறுத்தலும் பொறையுடைமை யாயிற்று. அறம் அவனை ஒறுக்குமென்ற அமைதியால் ஆற்றுமென்க. வையகம் பொறுத்தலை நோக்கி அறமும் ஆற்றுகின்றதோ என வியந்தது.

**10.** ஏதிலார் குற்றம்போல் தன்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு.

ஏதிலார் தம் குற்றத்தைக் காணுமுன் (அவர் காணுமாறு போல) தானே கண்டு திருந்தவென்றது. இதுவும் வழி கூறிற்று. புறங்கூறுவான் முன்னேயே அவன் பழிகளைக் கூறுகவென்றது; கண்ணின்று கண்ணறச் சொல்லும் இடம் இது. 'தன் குற்ற நீக்கிப் பிறர் குற்றங் காணு' முறை இதுவுமாம்.

## 20. பயனில சொல்லாமை

**1.** பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

முரண்பட்ட கோட்பாடுடைய பலருமுனிய என்க. எனவே ஒருவர்க்கும் இனியாததென்பது. பயனில் சொல் முடிவில் புறங் கூறலாய் முடியுமென்பது எள்ளப்படும் என் பதால் அறிக். எல்லோரும் - ஒருவன் சொல்ல எல்லார்க்கும் பழியாகும். பல்லார் முனிய என்பதால் பலர்க்கும் பகை யாவான். பல நாட்டாரும் மொழியாரும் முனியப் பயனற்ற நூல்களை எழுதலுமாம்.

**2.** பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நாட்டார்கண் செய்தலிற் றீது.

நயனில எனப் பன்முறை கூறுவதால் இவ்வதிகாரத் திற்கு 'நயனில சொல்லாமை' எனவும் தலைப்புக் கொடுக்க

லாம் போலும்! நட்பைக் கெடுக்குமென்றது. செயலினும் உரையே நட்பை யாக்கும் எனவே சொல்லைப் பயனதாக்குக என்றது. சொல்லல் - சொல்லாதே அது தீதெனலுமாம்.

3. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

புன்மையாற் காணப்படும் என்றது போலச் 'சொல்லும்' என்றார். பயனில சொல்லும் ஒருவனை நயனிலன் எனத் தூற்றலும் பயனற்றதென்பது; அது பயனில வென்றது. உரை நயனில னென்பது எனவும் கூட்டுக. பயனற்ற பொருள்களை விரிவாகப்பாடும் கவிஞர்க்கு உரை நயம் உண்டாகாது.

4. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

பண்புக் கெதிரானது. நன்மையினீக்கும் - 'நாடாச் சிறப்பு' இல்லை. திருவெல்லாம் போய்விடும். நயன் என்பதற்கு நீதியென்பதிலும் 'அறம்' என்பது பொருந்தலாம்; ஒவ்வோரதிகாரத்தும் அறத்தை இணைத்து இங்கு நயனை இணைத்தலின்; அகத்து என்றது எண்ணங்களைக் கெடுத்துவிடும் எனக் குறிக்கவாம். 'நயனுடையான்' என்றலின் நயன் ஒப்புரவுமாம்.

5. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

ஒழுக்கமுடையார்க் குரைத்தது. சீர்மை - புகழ்; சிறப்பு - இன்பம். பயனில நீர்மையுடையார் எனக் கூட்டி அவரது சொல்லாலென்க. சொல்லச் சொல்ல அவரும் பயனில்லாதவராகிறார். சொல்லினால் - கேட்டவர் சீர்மை சிறப்பொடு நீங்குதலுமாம்.

6. பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

தம்மக்களுள் பயனில் சொல்பவனைப் பதடியென்க. என்னேற்றான் கொல் என்னுஞ் சொல்லையன்றிப் பயனில் சொல்லை விளைப்பவன். உரை (மொழி) யால் சிறப்பவன்

மனிதன், அவ்வுரை பயனற்றதாயின் மனிதனல்லன் என்பது. தமிழ் மொழியிலும் பொருளற்ற எழுத்தொலி இல்லை. எனவே பொருளற்ற சொல்லும் தமிழுக்கும் தமிழர்க்கும் ஆகாதனவாம். மனிதவினத்திற் குரைத்தது மக்கள் சேர்ந்து அவனை ஊதி விடுக, பதராய் எரித்திடுக என்றது.

7. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

சான்றோர்க்குரைத்தது. சான்றோரைப் பற்றிப் பயனில சொல்லற்க என்றது. நயனிலவுஞ் சொல்லாமல் பயனில வும் சொல்லாமல் பேசாதிருத்தல் அறங்கூறும் ஆக்க மென்றது.

8. அரும்பய னுயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

சிறு பயனுடையவும் ஆகா. பயனில்லாத பெருஞ் சொல் என்றாக்கிச் சில சொற்களால் (சுருங்கச் சொல்லி) பெரும் பயன் விளக்க வேண்டுமென்றது, அறிவுடையார்க் குரைத்தது. மொழியறிஞர் நீண்ட காலம் நிற்கும் சொற்களை யன்றி விரைவில் மறையும் சொற்களைப் படையார் என்றுமாம்.

பயனுடைய பேசலே அறிவுடைமை.

9. பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

ஞானிகட்குரைத்தது. மாசறு காட்சியவர் அவரே. உபதேச மறை (மந்திரப் பொருள்களை) யன்றி மற்றவற்றை உரையார். மறை பயின்ற பழக்கத்தால் மறந்தும் அவை வாரா. பொருள் தீர்ந்த - சென்ற நாகரிகம், பழம் பெருமை பற்றியே பேசித் திரிதலும் பயனற்றதாம்.

10. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

சொல்லழகும் பொருளழகும் உடைய பாடல்களையே பாடுக. குறைந்தது சொல்லில் நயமுடைய (சொல் நயம்)

வாயினும் நன்று. இன்றேல் சொல்லற்க, பேசாது மவுனியாக என்றது. பேசாதிருத்தல் மனித ஆற்றலை வளர்க்கும்.

பாடலோடியைந்த பண் (சொல் நயம்) பயனுடையது.

## 21. தீவினையச்சம்

**1.** தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

தீவினையை யார் அஞ்சார், அனைவரும் அஞ்சுவர்; ஆனால் அச்செருக்கினைச் செய்தற்கு விழுமியோர் அஞ்சுவர். தீவினையாரை அஞ்சாமல் தீவினையை அஞ்சுபவர்: மனிதன் பகையல்லன், அவனிடமுள்ள தீக்குணமே பகையென்பது. தீவினையார் - ஊரைக் கொளுத்தும் தீவினையுடையார் போன்றோர். செருக்கு - மேலும் மேலும் செய்ய வேண்டுமென்னும் தூண்டுதல் (தருக்கு).

**2.** தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினு மஞ்சப் படும்.

தீயினால் உணவாக்கல் போன்ற நன்மையாதலுமுண்டு. தீவினையால் ஆதலில்லை. மறத்திற்கும் அஃதே துணை யென்றதைப் பொது விதியாக்கலாகாதென்றது. தீ (தீயவை போல) நெஞ்சைச் சுடுதலில்லையாகலின் தீயினு மென்றார்.

**3.** அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

தீய செய்யாவிடல் என்றுக்கி நன்னயஞ் செய்து விடலென்க. பல்லுக்குப்பல், உதைக்கு உதை என்பதை விலக்கியது; அடிக்கு அடி கொடுத்து நிற்றல் கொடிய விலங்குகளின் செயல்; அறிவுடையனாயின் மனிதன் அவற்றின் மேம்பாடு காட்டவேண்டும், அதற்குப் பொறுப்பதோடன்றி நன்மையும் செய்தலே வழி. செறு - யார்க்கும் செய்யா விடலுமாம்.

**4.** மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

மறந்தும் என்றதால் சூழாமை இயல்புக் குணமாறு லன்றி வேறு வகையில்லை. முன்பும் சூழ்ந்ததாலுண்டான கேடு. சூழ்ந்தவனது (கேடு) திட்டத்தை அறம் முற்றுகை யிட்டழிக்கும் எனவே நிறைவேறுதென்பது. அரும் பொருளை ஆய்த (சூழ்தல்) லன்றி இத்தகு கரும் பொருளை ஆய்தல் அறிவினர்க்காகாதென்றது.

5. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

பிறனது இல்லாமையைப் போக்கவும் (தனக்காக வன்றி) தீயவை செய்யற்க. துன்பமொன்று மிலன், நல் லாயிருக்கிறானெனப் பொருது தீயவை செய்யற்க என்று மாம். தடுக்கும் ஆற்றல் இலனென்று என்றுமாம். இலனாகும் - ஒன்றெய்தி நூறிழக்கும் சூதுபோல்வது. பிறன் ஏழை, அறிவிலன் என எளிமையாகக் கருதிச் செய்யற்க என்றுமாம்.

6. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

நோய்ப்பால - நோய்கள்; மனங்கெடுதலால் நரம்புகளும் குருதியும் கெட்டுப் பல நோய்கட்குக் காரணமாம். மனத் திற்கும் நோய்க்குமுள்ள தொடர்பு காட்டியது. தீப்பால - தீமைத் தன்மையுடைய. அப்போது நல்லதாய்த் தோன்றிப் பின் தீமை விளைப்பது.

7. எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

தீ யெச்சம் போலத் தெறுமென்றது. மனத்திற் படாதாகலின் (தவறாது பலன் தரும் இருவினைப்பாற் பட்ட தாகலின்) மனம் அழியும்வரைத் தானும் அழியாது. வினைப் பகை - நல்வினைப் பகை.

8. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வியா தடியுறைந் தற்று.

முன் வீயாதடும் என்றதனை உவமையால் விளக்கியது. செய்த அதே தீமையில் தானும் கெடுவான், அதுபோன்ற தீமைகளிலேயே அவற்குச் சாவு நேருமென்பது. பகைவன்

நிழலோ டொதுங்கித் தாக்குவது போன்றது (சிலப் - கொலைக் களக்காதை). பேயும், கொலை செய்த நினைவும் (ஆகிய) நிழல் போலவுமாம்.

9. தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

தன்னைத்தான் காதலனாதல் - 'உடம்பினை யானிருந் தோம்பு கின்றேனே' என்பது; உயிரார் அழியாமல் உடம் பினையோம்பல். எனைத் தொன்றும் - தினைத் துணையும்; எட்பகவன்னதும்; மின்னதிர்ச்சி சிறியதாயினும் கொல்லு மென்பது.

தன்னைத் தான் காதலன் - நோயின்மை வேண்டுபவன்.

10. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

மருங்கோடி - பிறனிடம் விரைந்தோடி, தீவினையின் அருகோடி, தீவினையை ஆய்ந்து எடுத்துச் செய்தல். செய்தவர்க்கன்றி, வலிந்தொருவர்க்குச் செய்தல். அருங் கேடன் - கேடே அறியாதவன், அவன் மனத்தருகும் கேடு செல்லாதென்பது.

அருமை - இன்மை மேற்று.

## 22. ஒப்புரவறிதல்

1. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு.

கடப்பாடு - செய்யாமலும், காலத்தினாலும், பயன் தூக்காமலும் செய்வது. கடனும் மாரியனையதாகலின் பயன் தூக்கார் உதவி கடலிற் பெரிதென்றார். வேண்டா - செய்யா வெச்சமாக்கி, கைம்மாறு வாங்கியும் கடப்பாடியற்றுதல் என்றதுமாம்.

2. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

'இருந்தோம்பி' என்றதுமது. வேளிரது ஆண்மை. கடை வள்ளல் அனைவரும் வேளிரே. தாள் - நெல்தாள்.

தாளடித்துத் தந்த நெல்லெல்லாம் தக்கார்க்கு விருந்தோம்ப வேயாம். தந்தது - முன்னோர் தேடி வைத்துச் சென்றது மாம்.

3. புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவி னல்ல பிற.

நிலவரை நீள் புகழ் ஆற்றுவது ஒப்புரவிரலேயாம். புத்தேளுலகத்தும் ஈண்டும் என்க; அங்குக் காமதேனு முதலியன உண்டு. ஒப்புரவின் நல்ல; ஒப்புரவின் அல்ல எனப் பிரிக்க. ஒப்புரவினுல் அன்றி மற்றெதனுலும் அவ்வுல கத்துப் புகழ் கிட்டாதென்பது; அவரும் கொடுத்தாற்ருன் புகழ்வர், வானவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ்வான்.

4. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

மனித இனம் எல்லாம் ஒன்று (ஒத்தது) என மத, நிற, மொழி வேறுபாடு கருதாதவன், பிறப்பொக்கும் என்பவன் உயிர்வாழ்வான். அருள் அன்பு போன்றன ஒப்புரவும் ஈகையும். ஒப்புரவு பிற நாட்டார்க்கும், பிறவுயிர்க்கும் எவ் வகையாலும் வரையின்றிச் செய்வது (பரந்தது). ஈகை பெரிதும் தன்னுயிர்க்கே உணவால் உதவுவது. இறந்தாரை எண்ணிக் கொண்டற்று என்பதுபோல் ஒப்புரவில்லார் அளவிலார், ஒப்புரவாளன் அவருள் (உயிர்வாழ்வான் என்ற தால்) ஒருவன்; பதினுயிரவர் நூருயிரவருள் ஒருவன் என்க. பிணத்திற்குத்தான் பக்கத்து உயிர்க்குறுவது தெரியாது, அனைய னென்பது. வாழ்வான் பிறர்க்கென வாழ்ந்து செத்தா ருள் வைக்கப்படுதலுமாம்.

5. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு.

நீரின் றமையாதுலகம், அதுபோல இன்றியமையாத வற்றை அளித்தல். உலகவாம்பேரறிவு - உலகையே ஆர்வ முடைமையாற்றமுவும் அறிவு. அறிவுடையார் எல்லா முடையர் ஆகலின் பிறர்க்கு எல்லாவற்றையும் ஆக்கு வோன்; ஆவதறிவானுய் முன்னறிந்துதவுவோன்.

6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றற் செல்வம்
நயனுடையான் கட் படின்.

துப்பாய தூவும் மழை போலப் 'பழத்தாலும் நிழலாலும்' உதவுவது, தன் கீழேயே பல குடிகளை வாழ்விப்பது. உணவுக்கு மேற்பட்டது பழம். அதுபோல உடை, இருக்கை முதலியன உதவுதல். முன்னது நீர் ஒப்புரவெனில் இது உணவொப்புரவு. பறவை முதல் பிறவுயிர்க் கொப்புரவுமாம். பொதுமாம்பழத்தைப் பகிர்ந்துண்ணும் ஊரில் ஒற்றுமை மிகுதி; பகை குறைவு. இது இன்பமுண்டாக்கும் ஒப்புரவுமாம்.

7. மருந்தாகித் தப்பா மரத்தற்றற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

ஊருணி தன்னை இல்லாமலாக்கிக் கொண்டும், பழமரம் தன்னை வைத்துக்கொண்டும் மருந்துமரம் தன்னைக் குறைத்துக் கொண்டும் செய்யும் ஒப்புரவு. முன்னது பசியையும் மற்றது பகையையும் பின்னது பிணியையும் நீக்கி நாடாக்குவன. இது துன்பநீக்கும் ஒப்புரவுமாம். அசோகன் போல ஊருணி, பழமரம், மருந்து முதலியவற்றை யாக்கலும் ஒப்புரவென்றது.

8. இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

எவ்விடத்தும் எக்காலத்தும் (Time and Space) ஒல்கார் என்க. பிறர்க்கப்போது தேவையில்லாவிடினும், காரணமில்லா விடினும், பிற்காலத்திற்கும் காரணம் படைத்தும் ஆற்றுவர். இராக்காலம், பஞ்சகாலத்தும் என்பது. இரவில் வருவார்க்கும் நீரும் உணவும் (விருந்து) மருந்துமளிப்பர்.

9. நயனுடையான் நல்கூர்ந்தா னுதல் செயும்நீர
செய்யா தமைகலா வாறு.

நல்கூர்தல்-உடலும் மனமும் இளைத்துப்போதல், தேடியும் சேர்த்தும் இளைக்காமல் கொடுத்திளைக்க என்றது. உதவாத செல்வம் உளதாயின் (காத்துக்கொண்டிராமல்) 'ஒழியவிடல்'—நல்கூர்ந்தானுக வென்றது. பிறர் அவ்

வொண்பொருளைக் கொள்ளுமுன் கொடுத்து, தானே நல் கூர்ந்தானுக. அவ்வின்மையைக் கெடுவாக வையாதுலகம். ஒப்புரவு, பொருள் வைப்புழியாதலால் ஒப்புரவின்மை நல்குரவாயிற்று.

**10.** ஒப்புரவி னல்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

'விற்றற்குரியர்' எனவும் இவ்வழக்குக் காட்டினர். கூலிக்கு ஆள் கொள்வாருண்டோ எனச் சிவன் கூவினற் போல கூவியழைத்துச் (ஒப்புரவு கொள்வாருண்டோ என) செய்தல், விற்றுக்கோடல். தன் பொருள்களையோ முடிவாகத் தன்னையோ அடிமையாக்கியும் செய்க. தன்னை அவர்க்கடிமையாக்கலால் அவர்க் கொப்புரவு (குமணன் தலையீந்தாற்போல்வது)—ஆகுமானுலும் செய்க என்றது.

## 23. ஈகை :

**1.** வறியார்க்கு ஒன்றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

குறி யெதிர்ப்பு - இம்மைச் செய்தது மறுமைக் காமெனல், வறியாரை வருத்திக் (கொன்று) கொண்ட பொருளை ஈவதா ஈகை, செல்வரை வருத்தி வேண்டில் கொடுக்க, அன்றி நல்வழியில் தேடிக் கொடுக்க என்றது. செல்வர்க்களிப்பது ஏற்றலாய் முடியும்; ஏதோவொரு வகையில் (திருப்பிக்) 'கொடு' என்றுவது கேட்கிறு னல்லவா ?

**2.** நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

நல்லாறு - முகனமர்ந்தின் சொலி அகனமர்ந்தீதல். மேலுலகமே ஏற்போர்க்கு இல்(இடம்) எனினும், தேவரே இரப்பினும் கொடுக்க. 'புத்தேளுலகத்தும்' என்றூர் முன்பும். அறஞ்செய்யவும், ஆவிற்கு நீர் எனவும் இரத்தல் நல்லாறெனினும் என்க.

**3.** இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

நாட்டில் ஒருவனும் இலன் (ஏழை) என்னுதபடிக் கொடுக்க. இலன் எனக் கூறவும் வலியற்றவர்க்குக் கொடுக்க. இவன் குலனுடையான் இவன் குலனிலான் என ஏற்றத்தாழ்வு காட்டாதே. ஈதல், குலனுடையான் இல னென்ற ஏற்றத்தாழ்வை நீக்கும். இப்போது பொது வுடைமையால் காணவிழையும் சமுதாயத்தை அன்று ஈகை யால் காணவிழைந்தார்.

4. இன்னு திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணு மளவு.

இரந்தோர் இன்முகம் கொடுப்போர் இன்முகமாம். முகத்தானமர்ந்தினிது நோக்கியீதல். காணுமளவு இரக்கப் படுதலாகாது; எவ்வமுரையாமைக் குறிப்பறிந்து கொடுக்க. இன்முகம் - இன்மையைக் குறிக்கு முகமுமாம்.

5. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்.

முன்னும் இன்னுச் சொல் நோற்பாரிற்பின் என்ருர். அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை யென்பதை வலியுறுத்தி யது. பசியை மாற்றுதல் - உணவுக்காம் தொழில், வேலை முதலியவற்றைப் படைத்தளித்தலுமாம். ஆற்றுதலால் உள்வலியும் மாற்றுதலால் வெளி (உடல்) வலியுமுண்டாம். ஏர்ப்பின்னதுபோல ஆற்றலின் பின்னதுலகம். நாட்டில் பசியை மாற்றுதலே (படை) வீரத்திற்கழகு.

6. அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி.

உலகில் அற்ருரை (ஏழைகளை) ஒழிக்கும் பசி. பசியால் உலகில் மனித பலம் (Manpower) குறையும். பொருள் பெற்றபோது அப்பேற்றினைப் 'பெற்ருன்' என்க. மண்ணின் கீழ் வைத்திழக்கும் வன்கண்மையன்றி இடம் (வைப் புழி) பெற்ருனென்பது.

7. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

பசித்தீயாகிய பிணி. பிணிக்கெல்லாம் காரணமாக லின் பிணியென்ருர். ஈத்துவக்கு மின்பத்தால் பசி மறை

யும்; இவற்குப் பசி வந்தகாலத்துப் பிறர் பாத்துண்பராகலின் தீண்டலரிதென்றார்.

8. ஈத்துவக்கு மின்ப மறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

இன்பமீத்துவக்கும் - உணவையன்றி இன்பத்தையல்லவோ ஈகிருனென்பது. அவ்வின்பம் தாமுடைமை (தம்மிடமே) இருப்பதை அறியார்கொல் எனலுமாம்; இன்பம் தன்னுள்ளேயே இருப்பதறியார். உடைமை வைத்திழக்கும் வன்கணவர்க்கீத்துவக்குமின்பமுமாம். காக்கையும் (கொடியவரும்) ஈத்துவக்குமின்பம், இவர் அறியார்கொல் என்றுமாம். ஈதலே இன்கண் என்பதறியாமல் வைத்தலாகிய வன்கண்ணை இன்கண் என்கின்றாரே என்றிரங்கியவாறு.

9. இரத்தலின் இன்னது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

நிரப்பிய - வயிறு நிரப்பும் பொருட்டு, பொருளை நிரப்பும் பொருட்டு; நிரப்பிய பொருளை என்றெல்லாம் கூறுக. தமியர் - தம் குலத்தார் இனத்தார்க்குள்ளேயே உண்ணுமல் பிற நாட்டவர்க்கும் கொடுக்க. இரப்போர்க்குப் பசித்துன்பமொன்றே; தமியருண்போர்க்குப் பழித்துன்பம். அவற்குத் தன் வயிறென்றால் துன்பம்; இவர்க்குப் பழிக்கும் (பலரால்) பலவிடத்தால் துன்பம், எனவே இரத்தலினின்னுதென்றார். வீட்டில் இடம் போதாமல் மன்றத்திலும் பொருளை நிரப்பிய செல்வமுமாம்.

10. சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை.

ஈதல்வரை இருக்கவென்பது; நற்செயல்புரிய நினைப்பவன் அது முடியும் நாள்வரைச் சாகமாட்டானென்பது. ஈதலுக்காம் பொருள் இயையாக் கடையும் என்றது. அன்றே இயையாமல் நாளை நாளையென இழுக்கடிக்கப் பெறலினும் சாதலினிதுமாம். 'இந்திரர் அமிழ்த'மனைய தனக்கு மிக இனிதாகிய பொருளையும் ஈதலியையாக் கடையுமாம். பெண் வழிச் சேர்ந்தும், தன்னலச் சுற்றஞ் சூழ்ந்தும் ஈதல் இயையாக் கடையுமாம். ஏற்போர் சாதல்

இனிதென்பதுமாம். இரப்பவர் சொல்லாடப்போம் உயிர் என்ருர் பின்னும்.

## 24. புகழ்

1. ஈத லிசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு.

படல் - தாழ்த்தல். பிறர் ஈதலாற் கொண்ட புகழ் தாழும்படி ஈந்து வாழ்க. ஈதலாலாம் இசையே உலகிற் சிறந்தது, அதுவும் தாழும்படி வேறு வகைகளிற் புகழ் கொண்டு வாழ்தலுமாம். ஈதல் - கல்வி, ஞானத்தை ஈதலு மாம். ஈதல், இசை ஆகிய இரண்டனுள் இசை சிறிதென்னும் படி ஈதலை மிகவாக்கி வாழ்தலுமாம்.

2. உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க் கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

எல்லாம் இரப்பவர்க்கு ஒன்றீந்தாலும் போதும், புகழ் என்பது. இரப்பார் உரைப்பவையெல்லாம் (கேட்பவை) ஈவார்க்குமாம். 'இன்முகங்காணுமளவு' என்றதிதுவேயாம். பெற்றுச் சென்றவர் உரைத்ததைக் கேட்டு வந்தவர் கேட்க ஈதலும் என்ப. புகழ் மேனிற்கும் - அவர் புகழின் மேல் நடப்பர். புகழால் வாழ்வர். இரப்பார் - ஏக்கற்று நின்று கற்பாருமாம்.

3. ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்ருது நிற்பதொன் றில்.

ஒன்ரு பொன்ரு என்ற நயத்தால் ஒன்ரு - நிலையா என்றலே பொருத்தம். உயர்ந்த - புத்தேளிர் நாடளவும் (வானளவும்) உயர்ந்த; நிற்பது ஒன்றில் என்ருக்கி 'ஒன்று ஈவார் என்ற அந்த ஒன்றில் என்க. புகழ் நிற்பது, அல்லால் ஈகை நிற்ப தென்க.

4. நிலவரை நீள்புக ழாற்றின் புலவரைப்
போற்ருது புத்தே ளுலகு.

மண் தேய்த்த புகழ் - நிலவரை நீள்புகழ்; புகழால் அரசனது நாடு நீளும், பெருகும் என்றலுமாம். புலவரை

மனிதரிடத்திற்றள்ளிவிட்டு மனிதரைத் தம் நாட்டுச் சான்றோ ராகவும் அரசராகவும் ஆக்குவர்என்பதாம். புலம் - வரை: உணர்ச்சிக் கலை எல்லை; அறிவெல்லை; அறிவினால் (கலையினால்) நிலத்தில் நீள் புகழாற்றி னென்றுமாம். அறிவினைப் போற்றாது புகழைப் போற்று மெனலுமாம். அறிவரும் கொடையால் வாழ்தலின்.

5. நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

அழிவில் ஆக்கத்தையும் ஆக்கத்தில் அழிவையும் ஆற்றத் தக்கவர் யாராகக் கூடும்? செயற்கரிய செய்பவரேயாவர். இவர் உடல் தேய்வதால் பெயரைப் பெருக்குவர், சாவதால் பெயரைப் படைப்பர் இதுவே வித்தகம். ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கல் இதுவே. நத்தம் பொதுவிடம்; அவ்விடத்தேயிருப்பது இடுகாடு. பொதுவில் - பொதுவுக்குழைத்து கேடும், அவ்வுழைப்பிலேயே சாவும், வித்தகர்க்கே யென்க.

6. தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

பொதுத் தொண்டனாய் பலர்முன் வருவ (தோன்றின்) தாயின் என்க. அடுத்த மனிதப் பிறவிக் காவனவற்றைச் செய்க. விலங்குப் பிறவியிற் சேர்ப்பனவற்றை செய்யற்க என்றுமாம். புகழ் செய்த பின் வெளி வருக என்றது. பலர் புகழ் செய்ததற்காக வெளிவருவர் அஃது ஆகாது. இன்றேல் நிலக்குப் பொறையாய் உயிர்த்தொழிக என்றது. புகழுள்ள நாட்டிலும் நாகரிகத்திலும் தோன்றுக என்றுமாம்.

7. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

தம்மை இகழ்வார் புகழ் தாழும்படி (பட) வாழாதார். நோவது அழுக்காறு றலுமாம். இகழ்வார் புகழில் அழுக்காறு கொண்டு பயனில்லை யென்பது. தம்மைப் புகழவில்லையே என்றிகழார்; விளம்பரப் புகழ் மெய்ப்புகழன்றாம். புகழுடையாரை இகழ்பவரையும் நோதலாற் பயனில்லை என்றுமாம்; அதனிலும் புகழுடையாரைப் புகழ்ந்து பயன்பெறுக.

8. வசைஎன்ப வையத்தார்க்(கு) எல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

இசை ஒருவன் பெறுவிடின் அது வையத்தில் (நாட்டில்) அனைவர்க்கும்; மனித இனத்திற்கே வசையாம். எல்லாம் இசையென்னும்; எல்லாம் புகழ்ந்தவை; போற்றிச் செயல். தனியொருவனுக் குணவில்லையெனில் சகத்தினை யழிக்கும் மரபு காட்டியது. வையத்தார்க் கெல்லாம் இசை - தான் செய்வது உலகுக் கெல்லாம் புகழ் எனல்.

வசை - புத்தேளுலக வசை.

9. வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

இசையிலா யாக்கை - இசையிலா அரசரும் சான்றோரும் நடத்தும் உலகில் மழையும் விளைவும் குன்றும். வசையுடை வண்பயன் - கொள்ளைப் பொருளும்; இரந்த பொருளுமாம்; தள்ளா விளையுளும், தாழ்விலாச் செல்வமும். யாக்கை என்றது என்பு தோல் போர்த்த வெற்றுடம்பு எனக் குறிக்கவாம்.

இசையின்மையால் அறிவின்மை; அறிவின்மையால் விளைவின்மையுமாம்.

10. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

நிலம் - வசை யென முன் குறளுடன் அந்தாதியாக்கி நாட்டிற் குற்ற வசை யொழிய என்க. இசை யொழிய என்றது 'அல்லது செய்தல் ஓம்புமின்' என்றற்காம். இசை யிருந்து மற்றவை இல்லாமலும் வாழலாம். இசையின்றி மற்றவை யிருந்தும் அவர் வாழாதவர் என்பதாம்.

## 25. அருள்

1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

பூரியார் (கீழோர்) கண்ணும் காட்டும் அருட் செல்வமே செல்வம். செவிச் செல்வமும் செல்வத்துட் செல்வமென் றலின் அருள் கேள்வியால் வளர்வதென்பது. செல்வத்துட்

செல்வம் - பொருளென்னும் செவிலியால் வளர்வது; அறிவுடையார் எல்லாம் உடைமை போல எல்லாவற்றையும் உளதாக்கும் அருள். அருள் குடையாக அறங்கோலாக என்றலின் (பரிபாடல்-37) துறவறத்திற்கு முதலில் 'அருள்' வைத்தது.

**2.** நல்லாற்ருன் நாடி அருளாள்க பல்லாற்ருன்
தேரினும் அஃதே துணை.

நல்லதொரு சமயநெறிபற்றி அருளாள்க. அருள் பல சமயங்கட்கும் பொதுவறம். ஆடி அருளாள்க - ஓடித் திரிந்து (அதர்விஞய்ச் சென்று) அருளாள்க. நல்லாற்ருன் - மனம் சொல் செயல்களான். ஒரு சமயத்தைக் குறிக்காது பொதுவாகக் கூறியமையின் எச்சமயத்தவர்க்கும் அருளாள்க என்பது.

**3.** அருள்சேர்ந்த நெஞ்சினர்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்ன உலகம் புகல்.

இல்லை யென்றேற்கும் துன்பவுலகம் இல்லை; அவர் எல்லாம் உடையராகலின்; செல்வருட் செல்வர். நெஞ்சினர்க்கு இல்லை உலகம், ஆனல் அது அவரிடம் புகல் அடையும் என்க. அருளாளர் நரகையும் தீயரையும் தூய்மைப் படுத்துவர். இருள் - அறியாமையுமாம். ஒளியுலகமுண்டு. அதனை இங்கேயே படைத்துக் கொள்வர் (அங்குப் புகலில்லை) என்பது.

**4.** மன்னுயி ரோம்பி அருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

தன்னுயிரஞ்சும் தீவினைகளைச் செய்யார். பிறர் தீவினைகளைப் போக்குவோர்க்கிதற்கு நேரமேது? இல்லென்ப - வீடென்ப. மன்னுயிரெல்லாம அவனிடம் (புகலடைந்து) தங்கும். இவன் வினைகளை அவையெல்லாம் தடுக்கும்.

தன் பிள்ளை தானே வளருமென்றது.

**5.** அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலங் கரி.

ஞாலங்கரியாக - (யாருமறியும்படி) அருளாடல் இல்லை, அடக்கமாகச் செய்வர். 'எங்நாடோவென நாடுஞ் சொல்

லான் என்றது காண்க ; வளி கண்ணுக்குத் தெரிவதில்லை. அல்லல் வளியில் (காற்றில்) பறந்துவிடும் ; அல்லலன்று' அவர்க்கு வளமும் (மல்லல்) உண்டென்பது. அருளாளரால் வளி (வானை) வழங்குதல் தவருதாகலின், கரியென்ருர் - (மன்னவன் நாட்ட பெயலும் விளையுளும்.)

6. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

பிறவிக்குரிய பொருள், மெய்ப் பொருள் என்க. பொச்சாப்பார்க்கில்லை புகழ்மை யென்றலின் அருளற்ருல் புகழில்லை என்றது. அல்லவை செய்தல் - தீயோர் கூட்டத்தைப் பெருக்கல். பொருள் - பற்றற்ருன் பற்று. பொருளைப் புதைத்த விடத்தை மறக்கும் வழக்குக் காட்டியது.

7. அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு.

அருளுடையார்க்கு இரண்டுலகமும் உண்டு. பொருள் ஒன்றே யுடையார்க்கு இரண்டுலகமும் இல்லையென்பது; பொருளை இவ்வுலகிற்குரிமை யாக்காதவற் கிவ்வுலகமும் இல்லையாகலின்.

பொருளை இகழும் துறவு குறள் நெறிக்கெதிரானது.

8. பொருளற்ருர் பூப்ப ரொருகால் அருளற்ருர்
அற்ருர்மற் ருத லரிது.

பொருள் செவிலி ; அருள் குழவி. செவிலியின்றேல் வேறு செவிலியைக் கொள்ளலாம். குழந்தையில்லாதார் (மலடர்) என்றும் குழந்தை பெறுதலில்லை யன்ருே ? வன்பாற்கண் வற்றல் மரமாம்.

உலகை ஏமாற்றலாம் ; இறைவனை ஏமாற்ற முடியாது.

9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்ருல் தேறின்
அருளாதான் செய்யும் அறம்.

அவ்விய நெஞ்சத்தாராக்கம் போல 'நினைக்கப்படும்' என்பது. அறம் ஏறல் எழுத்துப் போல்வதென்க. உண்மை மொழியறிவில்லாதவன் ஒரு நூலுக் குரை கண்டாற் போலு

மென்க; பிறர் செய்ததை மறைத்துப் பேரைத் தனக் காக்குவான்.

**10.** வலியார்முன் தன்னை நினைக்க தான்தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து.

வலியார் என்பதனை எழுவாயாக்கலுமாம். முன் - முதலில் செல்லிடத்தும் இல்லதனிற்றீய பிற என்றது. சாப மிடும் தவசிகட்கும், போர் மேற் செல்லும் அரசர்க்கும் உரைத்தது. 'வலிமை யுள்ளதே வாழும்' (Survival of the fittest) என்ற கோட்பாடு அருளுக்கெதிரானது.

## 26. புலால் மறுத்தல்

**1.** தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

அருள்நெறி உயிர்நெறி. உடலை வளர்ப்போர்க்கு உயிர் வளராது. உயிர் வளர ஊனை உருக்கலும் ஊனை (புலனை) அவித்தலும் வேண்டும். உயிரோம்ப வந்த வாழ்வை ஊனோம்ப வைக்கிறானென்றது. உண்பான் ஊன் பெருக்கல்—உண்பதற்காகவே (பெண்டிரும் உண்டியும்) வாழ்பவன். அதன் ஊனை உண்பதற்காகவே உயிர்களைக் கொழுக்க வளர்ப்பவனுமாம்.

**2.** பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.

பொருளாட்சி அருளாட்சி இரண்டுமில்லை. ஊன் தின் பவர் தின்றே பொருளையெல்லாம் கெடுப்பர். கொல்லாமை யுடன் உயிர்களைப் போற்றவும் வேண்டும். (Preservation of wild life). அரசக்காப்பில்லாவிடில் பொருள் நிலைத்த லில்லை; ஊன் தின்னாத அருளைக் காத்தலும் அரசின் கடமை யென்றலுமாம். பிறர் கொள்ளாமற் பொருளைப் போற்றல் போல உயிர்களைப் பிறர் கொல்லாமற் போற்றலும் அரு ளென்றது.

**3.** படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்.

புலாலுண்ணாமை தீமை செய்யாத அற உணர்ச்சியை வளர்க்கும். புலாலுண்ணாதவர் (போரிலும்) கொலைத்

தொழிலிலும் ஈடுபடார். நன்றூக்காது - பல பாதகங்களுக்கும் காரணமாகும்.

4. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்.

பொருளல்லது—பொருளாக மதிக்கச் செய்யாதது; சான்ருேரால் எண்ணப்படல் இன்மை. கொல்லாமை அறத்தைப் பரவாமல் தடுத்தலும் அருளல்லது. கொல்லுதல், தின்னுதல் இரண்டு மாகாதென்றது. அருளல்லது என ஒரு சொல்லாக்கலே சிறப்பு.

5. உண்ணுமை யுள்ள துயிர்நிலே ஊனுண்ண
அண்ணுத்தல் செய்யா தளறு.

நரகமும் ஊனேயுண்ண வாய் திறவாது, மனிதன் திறக்கிருனென வியந்தது. உயிர்நிலே—இவன் ஊனே யுண்டால் இவன் ஊனே (உயிரை) விலங்கு முதலியவை உண்டுவிடும். உண்ணுது நோற்கும் துறவிகட்கும் உடம்பு நிலேத்தலால் அது நிலேக்க ஊனுண்டலென்பது பொருந்தாது; அவன் வயிறே அவ்வுயிர்கட்குச் சுடுகாடாம்.

6. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலேப்பொருட்டால் ஊன்தருவா ரில்.

தருதல்—கொல்லல். கொல்வாரில்லேயேல் உண்பாருமில்லே. 'போரும் சமாதானமும்' என்ற நூலில் டால்ஸ்டாய் போரைத் தடுக்க வீரர்களே முதலில் படைகளேக் கீழே போடும்படிக் கேட்டல் போலாம்; கள்ளிறக்குதலே நிறுத்தக் குடி நிற்கும். கொள்ளாதுலகெனின் என்ற பாடம் சிறந்தது.

7. உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

பிறிதினேய் (புண்) தன்னேய் போற் போற்றும் அறிவின்மை அது. முதலில் அறிவாளர் திருந்தவேண்டும். கற்ற கண்ணுடையோர் (முகத்திரண்டு புண்ணே விரும்பாதவர்) இப்புண்ணேக் கொள்ளாரென்றது.

8. செயிரிற் றலேப்பிரிந்த காட்சியா ருண்ணர்
உயிரிற் றலேப்பிரிந்த வூன்.

தானே செத்ததையும் உண்ணலாகாதென்பது. பிணத்தை யுண்ணும் நாகரையும் (நரகரையும்) திருத்தியது. சமய ஞானிகளைத் திருத்தியது. ஊன் செயிர் என்றிணைத்து உடற்பற்றால் மயங்கி என்க. உயிரில் பற்றுடையோர் உண்ணாரென்க.

**9.** அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

வேட்டலின் - வேட்டலைப்போல. வேள்விப் பயன் இதுவே என்பது. வேள்வியினிடத்து என்றுமாம். வேள்வியில் ஓருயிரையும் கொல்லாமை நன்றென்க. வேள்விக்கே கொலையெனின் இவன் ஏன் அதனை உண்கிறானென நகைத்தது. ஆயிரம் வேள்வியாலடையும் இந்திர பதவியிலும் ஒன்றனுயிரையுண்ணாத ஆபுத்திர நிலையே உயர்ந்தது.

**10.** கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

கைகூப்பி என்றதால் எல்லா மக்களுமென்றது ; கடவுளுமாம். ஊனுண்ணும் சமயத்தாரும் உண்ணாரைப் பாராட்டுரென்றது. நினைப்பதோடன்றி அவரை வழிபடுவர். கொல் - ஆன் = கொல்லப்படும் ஆவினம். புலாலை மறுத்தானைக் கொல்லானையென்று - கொல்லாநெறி (சமயம்) யினரைக் கொல்லும் சமயக் காழ்ப்பினைக் கடிந்தது.

## 27. தவம்

**1.** உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்(கு) உரு.

புலான் மறுத்தலையடுத்தமையின் உயிர்க்குறுகண் செய்யாமை - உயிர்க் கொலை செய்யாமையாம். உற்ற நோய் நோன்றல் - உண்ணாது பசி நோய் நோற்றல். குரு - மேலானது. குருக்கள் செய்யும் உபதேசம், குருவிலக்கணமுமாம்.

**2.** தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது.

தவம் - தபம், தபுதல். பொறிவாயில் ஐந்தவியாதவர்க்குத் தவமில்லை. இளமையிலிருந்து தவமுடையார்க் கென்று

மாம். தவமுடைய ஆசிரியரை, சமயத்தை உடையார்க் கென்றுமாம். அவம் என்றதால் தவவாழ்க்கையே வீணாகாத (அவமாகாத) பயன் வாழ்க்கை யென்றது.

3. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.

மற்றையவர் - பிரம்மசாரி முதல் மூன்று நிலையினர், துப்புரவு - தூய்மை. மற்றவரது துன்பத்தை யேற்றுத் தூய்மை யின்மையைப் போக்கியும் துறவிகள் தூய்மை யுறலால் அவர்களும் இருக்கவேண்டுமென்பது.

4. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

மற்றையவரது ஒன்னார் எனத் தொடர்பாக்குக. தவ நெறி கொன்றுருமாம். உலகில் ஒன்னார் உவந்தார் என்ற பிரிவில்லாத சமுதாயத்தைப் படைக்க முடியுமென்பது. எண்ணில் என்றதால் அவ்வாற்றலைத் தவத்தைக் காத்தற் காக்குக என்றது.

5. வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

சொல்லியவண்ணம் செயலாகும். கடவுள் தன்மை பெறுவரென்பது. தேவலோகத்தை இவ்வுலகத்திற்கே இறக்கிக் (Life Divine) கொண்டுவர முடியும். 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி'. மீண்டும் என்றாக்கித் தவத்திற் கெல்லையும் ஓய்வுமில்லை யென்க.

6. தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு.

தவஞ் செய்வார் தம் - தவசிகட்குரிய ஒப்புரவுகளையே செய்பவரே அவஞ் செய்யாதவர். ஆசையறுக்கும் வழியின ராவர். தவசிகட்குத் தொண்டு செய்வதால் ஆசையறும் தவப்பயனுறுமென்றது. தங்கருமஞ் செய்தல் - தன்னுயிர் தானறப் பெறல்.

7. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

உடலினிலும், வாக்கினிலும் ('வாக்கினிலே') ஓர் ஒளி யுண்டாகும். தவசிகள் உடல் பொன்னிறமடையும். முத லில் நோய் நோன்றல் என்றததற்கேயாம். ஒளி - புகழு மாம். 'சேண் விளங்கு அவிரொளியுடன்' விளங்குவர். உள்ளே, யோகவொளி ஆதாரங்களிற் படருமென்றலுமாம்.

8. தன்னுயிர் தானறப் பெற்றுனை ஏனைய
மன்னுயிர் எல்லாந் தொழும்.

விலங்கு முதலிய உயிர்களையும் மனிதப் பிறவியில் தோன்ற அருள்வானுகலின், தொழும். அறப் பெறுதல் - மலமகல, மனமாசு அகலப் பெறுதல். ஒளிவிடல் - துன் பமே இன்பமாய் மாறிவிடல்.

9. கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

கூற்றம் குதித்தல் - சித்தராய் நீண்ட காலம் வாழ்தல்; சாவை யஞ்சாமையுமாம். கூற்றங்கு உதித்தல். இயமனும் விரைந்து தொழில் கேட்டல். அரிய இறப்பைத்தரும் கட வுள் - தன்மையையும் பெறலாமென்றது.

10. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

ஞானமிலர் பலரென்க. நோற்பார் - சிலர் (தவமிலார்) பலரெனவும் கூட்டி துன்பத்தை நோற்கவல்லார் சிலராக லின் என்க. உலகின்பத்தை விரும்புவோர் பலராகலின் என்றுமாம். தவசிகள் எண்ணில், பொருளையும் படைக்கக் கூடுமென்பது. சிலர் - இல்லத்தாருமாம். இலர் - ஏற்கும் ஏழைகள் பலர், உண்ணுது பசி நோற்பார் சிலராகலின்.

## 28. கூடா வொழுக்கம்

1. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்துமகத்தே நகும்.

கூடா வொழுக்கம் - தவத்திற்கடுத்தமையின் தவம் கை - கூடாத வொழுக்கமாம். ஏமாற்றமுடியாத மண் முதல் பூதங்களும் அவற்றின் தொடர்பாய ஐம்பொறிகளு மாம். இயற்கைப் பயன் குன்றலும் ஐம்பூதங்களாலாகும்

தீமையும் உண்டாதல் - நகுதலாகலாம். புலன்களால் ஐந்தாய மனம். புடைத்துணும் சதுக்கப் பூதங்கள் நகுமென்றலுமாம்.

2. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்.

வானுறையும் தெய்வத் தோற்றம். நெஞ்சந்தான் - நெஞ்சமட்டும். தன்னெஞ்சொன்றே அறியுமெனச் செய்யும் குற்றம். குற்றப்படின் வானுயர் தோற்றத்தை எவ்வாறு படைக்கமுடியுமென்க. தன்னெஞ்சறிவது பொய்யற்க என்றலும் காண்க. அரிபிரமர் காணு வடிவுடைச் சிவனின் நெஞ்சக் கருமைபோலவுமாம்; மறையாதென்பது.

3. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

வல்லுருவமுடைய காளை - கண்டாரைப் புணர்ந்து திரியும். புலி பசுத்தோலைப் போர்த்து திரிந்தற்றெனவும் மாற்றுக. வலியின் நிலைமையான் - வலியுடையவன். வல்லுருவம் - நம்பவல்ல உருவம்.

4. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

தவம் அறைந்து: தவத்தைப் பற்றிப் பேசி, மறைகளைப் பேசி (ஒலித்து); வேட்டுவன் சிமிழ்த்து (ஒலித்து)ப் பறவைகளைப் பிடித்தல் போல ஒலியில் மறைந்து அல்லவை செய்தல். தவசிகளென வருவோரைச் சீடராக்கிக் கெடுத்தல்.

5. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவுந் தரும்.

எற்றெற்றென்று ஏதம் - பாறையில் எற்று, மோது என்று வரும் நரகத் துன்பம்.-கொன்றிடு குத்தென்று எமதூதர் தரும் தண்டனைகள். எற்றென்றிரங்குவனவாம். பற்றுடையாரைப் பற்றி பற்றற்றானைப் பற்றியதாகக் கூறும் ஒழுக்கம்.

6. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணு(ர்) இல்.

இவரே ஆகுல நீரர். வன்கணர் அல்லாதார் என்பதில்லை யாவரும் வன்கணர் என்பது. எவ்வுயிர்க்கும் இன்கணர் என்பது போய் வன்கணராதல் ஆகாது. பிறர் வெளிப்படையான வன்கணராகலின் - வண்கணரில் லென்ருர். துறவார் - பொருளைத் துறவார். வஞ்சித்து வாழ்தல் - பொருள் சேர்த்து வாழ்தலுமாம்.

7. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

இன்மை அரிதே வெளிறு என்பதனேடு கரியாருடைத்தென்பதனை ஒப்பிடுக. கண்டனையர் - கற்கண்டனையர், மூக்கிற்கு அரியார் - மூக்கில் வைக்கத்தகாத (குண) நாற்றமுடையவர். குன்றி - குள்ளமாய்; அகத்தியன், வாமனன் முதலோர் வடிவமுடையராயினுமென்க.

8. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

மாசு - ஆக = மாசு பெருக என்க. நீராடி மாண்டார். குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொண்டாரென்றது. மண்ணு மேனியர் தினம் நீராடிகளை வைதாற் போல் வைததுமாம். நீறு ஆடி எனின் திருநீறு பூசி மறைந்தொழுகுவாரென்க.

9. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

போர்க்கலையும் இசைக்கலையும் பயிற்றும் தவசிகள் (கலைஞர்) பற்றியது. கலையில் மயங்காது வினை கொண்டறிக வென்றது. தவவேடமில்லாதாரிடமும் மனத்தூய்மையுண்டறிக என்றது. கொல்லா வினையாலும், கலைவளர்த்தலாலும் தவசிகளை அறிக வென்றது.

10. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.

உலகமானது சான்றோர் பழித்தவற்றை ஒழித்துவிடின் அவர்களைத் திருத்தவேண்டி துறவு நெறியும் கோலமும் வேண்டாமென்க. வேண்டா - இல்லறத்திலேயே இருக்கலாமென்பது. மழிக்கும் புத்த சமணமும், நீட்டும் இந்து சமயமும் வேண்டாம்.

# 29. கள்ளாமை

1. எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

திருடனும் பிறர் பழிப்புக்கஞ்சி கையில் காப்பை யவிழ்த்து அழைத்துச் செல்ல விழைகிறன். எனவே எள்ளாமை வேண்டுவானென்கிறர். எனைத் தொன்றும்-குண்டூசியும்; எனைத்தொன்ருலும் - கொள்ளை லாபம், பிறர் கூலியைத் திருடல், வரி ஏமாற்றுதல் முதலியவற்ருலும்.

2. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

நினைத்தலும் சொல்லலும் செய்தலோடொக்கும், கள்வே மெனல் - கள்வேமென்று சொல்லாதே. பிறன்மனை நயத்தலும் அடங்கும். கொள்வோமெனல் என்ற பாடம் சிறக்கும்.

3. களவினா லாகிய வாக்க மளவிறந்து
ஆவது போலக் கெடும்.

ஒன்றெய்தி நூறிழத்தலன்று, நூறெய்தி இருநூறிழத்தல்களவு. வந்த பொருளையன்றி இருந்த பிற பேறுகளையும் கொண்டு செல்லும். செல்வம் ஆவது போல இவன் கெடும்.

4. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

காமத்துப் பாலின் களவிற் காதல், விளைவின்கண் வீயா விழுப்பம் (இன்பம்) தரும். இக்களவிற் காதல் வீயா விழுமம் தரும். இவ்வாசையும் ஆராவியற்கையது (வீயாதது). கன்றிய காதல் பரம்பரையாகவும், இளமையிலிருந்தும் வளர்ந்தது. காதல் நல்லறங்கட்கெனவும், களவு செய்தது பயனுல் நன்ருகாது.

5. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

திருடனுக்குக் கோயில் சொத்தும் தாயின் தாலியும் எல்லாம் ஒன்றே. அருளும் அன்புமில்லாமையின் உலக

மெல்லாம் அவற்கெதிரிகள்; தன் குடும்பத்திடத்தும் அன்பில்லா நாடோடி யென்பது; அவன் நெறி இல்லறமுமன்று துறவறமுமன்றென்பது.

6. அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

கன்றிய காதலென மீண்டும் கூறலின் நெய்யெறும்பு போல் அதிலேயே ஊறிக்கிடப்பாரென்பது. அறவோரிடத்தும் திருடுவதே அளவின் நின்றொழுகாமை. அளவை நூலின்கண்ணும் திருடுவர்: இடைச் செருகுவர், பாடலை மறைப்பர் என்பது.

7. களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில்.

அளவென்னும் ஆற்றல் - நீதிநூலறிவு; தர்க்க நூலறிவு. காரறிவாண்மை என்றமையின் அளவையறிவு செவ்வறி - வாண்மை, தூயறிவாண்மை யென்பது. ஆண்மை, அளவு புரிந்தார்கணில் எனக் கூட்டி ஆண்மையுடைய வரசர் பிற நாட்டைக் கொள்ளையிடார், ஆனிரைகளைத் திருடார், நேரே படையெடுத்து வெல்வரென்பது.

8. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

கரவு - எல்லாக் குணங்களையும் மறைப்பது. நீதிபதி எது கேட்பினும் இல்லை, இல்லை யென்னும் இயல்பு. நெஞ்சிற்கு அரவு என்றாக்கி அறம் அரவாக அவரைக் கொல்லுமென்றுமாம். கரவு - பிறர்க்கறியாமல் மறைக்கும் கரவு.

9. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

கெடுவல் யானென்பதறிக என்றாங்கு அளவல்ல செய்ததும் வீவர் என்றறிக. அவர் சாவு களவிலேயே என்பது. களவேயறிபவர் அளவிலராய் மற்ற நாற்பாதகங்களும் புரிவர்.

10. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

புத்தேளுலகென்றதால் கள்வார்க்கு நரகமென்க, உயிர் நிலை தள்ளுதல் உயிர் நிலையாதாதல்; எப்பொழுதும் சாவு காத்திருக்கும். கள்வார்க்குப் பிறவியருது.

## 30. வாய்மை

1. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்.

நேரே தீமையாக இல்லாதாயினும் தீச்சொற்பொருட் பயன் தருவதுமாம். யாதொன்றும் - ஆயிரம் சொல்லுள் ஒன்றும் போல்வது; மனம், சொல், செயல் யாதொன்ருலும் எனலுமாம்; உலகத்தில் எப்பொருளேயும் 'உண்மைப் பொருளின் வடிவே எனலுமாம்.

2. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

'புரை தீர்ந்த நன்மை'யே வள்ளுவரின் குறிக்கோள். இடத்த - எப்படியும் வலதுகையாகாது; இடதுகைபோல் வதேயாம்; எனினும் அதுவும் கையாளுற்போல வாய்மையே யாம். புரைதீர்ந்த நன்மைபயக்கும் செயலைக் (சான்ருேர் பழிக்கும் வினை) கடிந்தவர் சொல்லைமட்டும் கொள்கிருர் என்பது எண்ணத்தக்கது. பொய்ம்மை - இங்குப் புல வரது கற்பனைகளும், விளையாட்டுப் பொய்களுமாம்.

3. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

மனச்சான்றிற்காக வாழும் சான்ருண்மை வாழ்க் கையைப் படைக்கிருர். அது பிறரைத் தனக்குத் தண்டனை கொடுக்கவிடாது, தானே கொடுத்துக் கொள்ளும். நெஞ்சறிவது, - முன்பும் அகத்தாளும் இன் சொலினதே அறம் என்ருர்.

4. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்.

மாசிலளுதலே (வாய்மையனுதல்) அனைத்தறமாகலின் உள்ளத்துள் எல்லாம் (எல்லா அறங்களின் வடிவாக) உள

னென்பது, அரிச்சந்திரன் கதையை நினைத்ததாகலாம். உள்ளத்துளதாதல் - பொன் போற் பொதிந்து வைக்கவிருத்தல். பிறர் உள்ளத்திற்குப் பொய்யாதவனுக ஒழுகின் என்றுமாம்.

5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
 தானம் செய்வாரின் தலை.

முன்னும் தானம் தவமிரண்டும் என்ருர். இல்லத்தார் துறவறத்தார் இருவரினும் தலை. மனத்தினும் சொல்லினுமுள்ள தூய்மை, செயலினும் சிறந்தது. தலை - தலைமேற் கொண்டாடுவர்

6. பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
 எல்லா அறமுந் தரும்.

எய்யாமை - எய்தல் (செய்தல்), - செய்யாமை. செய்யாமலே எல்லா அறப்பயனையும் தரும். பொய்யாமை - இல்லை என்று சொல்லாமை. வைத்துக்கொண்டு கேட்போர்க்கில்லை யெனலும் பொய்.

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
 செய்யாமை செய்யாமை நன்று.

உலகத்தில் வாய்மையறம் பொய்க்காமல் பார்த்துக் கொண்டால் போதும். உலகோர் பிற அறங்களைச் செய்யத் தூண்டவேண்டாம். உண்மைப் பொருளை (கோட்பாடு) அஞ்சி மறையாமல் சொல்லவேண்டுமென்றது. ஆற்றின் என அருமை கூறியது.

8. புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை
 வாய்மையால் காணப் படும்.

மனத்துக்கண் மாசிலனுதல் வாய்மையொன்ருலேயே ஆகும் என இடஞ்சுட்டியது. காணப்படல் - உண்டாக்கப் படல். தூய்மை - நோயின்மையுமாம். வாய்மையுடையவன் பிறர் மனத்திலுள்ள எண்ணங்களையும் அறியவல்லவனுவான்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
 பொய்யா விளக்கே விளக்கு.

பொய்யா விளக்கு - நந்தா விளக்கு. யவனர் தந்த பாவை விளக்குகளை நினைத்துச் சொல்லியதாகலாம். பின்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் (கடல் கடந்து) சென்று என்பாராகலின் சான்றோரிடம் பொய்யா என்றுமாம். அகல்போல உடையாத விளக்குமாம். மனத்திற்கொளி செய்தலின் விளக்கே விளக்கென்றார். முதலில் விளக்கு (தீ) கண்டதும் நாகரிகம்; வாய்மை கண்டதும் நாகரிகம்.

**10.** யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

மெய் - நிலைத்தது; மெய்ந்நூல்கள்: கிரேக்க, சீன நூல்களையும் நினைத்தது. வாய்மையல்லாத பிறவற்றால் மெய்ப்பொருளைக் காணவியலாதென்பது குறிப்பு. அவ்விளக்கு கொண்டே தேடுக என்றது.

## 31. வெகுளாமை

**1.** செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்
காக்கில்என் காவாக்கால் என்.

வெகுளி கணமேயுங் காத்தலரிது என்ற செல்லிடம், செல்லிடம் - சினம் தோன்றுமிடம். தோன்று முன்பெல்லாம் காக்கவேண்டுமெனத் திட்டமிடலிற் பயனில்லை, தோன்றுகையிற் காப்பதே காப்பு.

**2.** செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற.

செல்லாவிடம் - வலியார் மேற்செல்வது. செல்லிடம்- ‘மெலியார்மேற் செல்லுமிடத்துத் தோன்றுவது. அருட்செயலன்றென்றது.

**3.** மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்.

மறத்தல் அதனினும் நன்றென்றது. தீய பிறத்தல் - தீய பிறவி; தீமைகள்; யார்க்கும்—மாணு செய்தல். தீமைகட்கெல்லாம் பிறப்பிடமென்றது. தீயபிறத்தல் - தீய சொற் பிறத்தல். யார்மாட்டும் - நெற்றிக் கண்ணிடத்தும்.

4. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

பகை - வழுக்கியும் கேடீனும்பகை. நகல்வல்லரல்லார் என்றபடி பண்பாட்டைக் கொல்லும் என்பது. நகையும் உவகையும் சினம் எனக்கூட்டி கோபச்சிரிப்பு, உவகைச் சினம் முதலிய பகையென்க. பகை - உட்பகையுமாம்.

5. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

தன்னைத்தான் காதலனுயின் என்றதுமது. சினம் நரம்புகளை எரித்துக் குருதியை உறையச்செய்து கொன்றுவிடவும் செய்யும். அழுக்காறு, துயர முதலிய தீக்குணங்கள் உடலையழிக்கு மென்றது. கொல்லுதல் - தங்கருமம் செய்தலைத் தடுத்தலுமாம். உயிரைப்பற்றியாயின் தன்னலம் ஆகுமென்பது.

6. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

ஏமப்புணை - நாடாச் சிறப்பு. இனம் - ஆசிரியர், மாணவர், அமைச்சர் முதலினமாம். இனம் - சேர்ந்தாராகலிற் கொல்லும். முதலில் இனத்தைச் சுட்டுத்தனியனுக்கிப் பின் தன்னைச் சுடும். குற்றமுள்ள எதிரியையன்றிக் குற்றமற்ற அவரதினத்தையும் சுடும் என்றது ஒருவனுல் இனமே அழியுமெனத் தனி மனிதர்க்கும் இனத்திற்குமுள்ள பொறுப்பு சுட்டியது.

7. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

கேடு தவருதடையுமென்பது, இதனுல் இனத்துடன் தான் கெடுதல் கூறியது. தரையிலடித்த பந்துபோலுமாம். எதிரியைக் கொல்லாது தன்னையே கொல்லும் ; பாரதத்தில் பாண்டவரைக் கொல்ல ஆரணியத்தில் முனிவர் யாகத்தில் தோன்றிய பூதம் போல.

8. இணரெரி தோய்வன்ன இன்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

எரி இன்ன - இருந்த வீட்டிற்குத் தீவைத்தாலும் ; பயிர்களைக் கொளுத்தினுலும் என்க. நெருப்பிடை உடலையிட்டு

வருத்தினும் ; பலர், எதிரி செய்தது தம்மை வருத்தவில்லை யேனும் அவர் செய்ததற்காகவே வெகுளுவர் ; வருத்தினும் வெகுளற்க என்றது. புணரின் - செய்தவரே தன்னிடம் ஓர் உதவிக்கு வரினும்.

**9.** உள்ளிய தெல்லா முடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின்.

சினத்தால் அலையாது அமைதியுடைய (சாந்தி) தூய மனத்தவராகலின் அவர் எண்ணிய யாவும் ஈடேறும். உள்ளத்தில் வெகுளி இருப்பின் வேறு உள்ளுதற்கு இடமேயிராதென்பது; அவர் மனம் பாம்பு புகுந்த மனையாகும்.

**10.** இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

உண்மையில் துறந்தார், என்போர். துறந்தார் என்ற பேரே சினத்தைத் துறந்தவர் என்பதையே குறிக்கும். அதனாலேயே நீத்தார் பெருமையில் குணமென்னும் குன்றேறி நின்றார்க்கு வெகுளி ஆகாதென்றது. சினத்தைத் துறந்தார் இல்லத்திருப்பினும் துறவிகட்கு ஒப்பாவர் ; துணை-துறவிகட்கும் வழிகாட்டிகள். இறந்தாரனையர் - எப்பொழுதும் அதனாற் சாவர்; உறுதி; கேடு பிழையாதற்றென்றதும் காண்க.

## 32. இன்னா செய்யாமை

**1.** சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

சிறப்பீனும் செல்வம் - ஞானம், சித்து, அறிவியல் நுட்பம். செல்வம், அறிவு இரண்டின் செருக்காலேயே பிறர்க்குத் துன்பம் செய்வர் அஃதாகாது, இன்னா செய்தலால், பெறினும் ஆகாது.

**2.** கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

கறுத்து - பகைத்து. மறுத்தின்னா செய்யாமை - தானும் பகையாமை. பகையே தீமைகட்கெல்லாம்

காரணம். மாசற்றுர் கோள் என இருமுறை கூறியது காண்க. மாசற்றுர் - அற நூலார். உயர்ந்த கோட்பாடு களைக் (தமது நாகரிகக் கோட்பாடு) கறுத்து இழித்துரைப் பவரையும் எனக் கூட்டினுமாம்.

**3.** செய்யாமற் செற்றுர்க்கும் இன்னுத செய்தபின்
உய்யா விழுமந் தரும்.

உய்தல் - உருப்படுதல். தான் உருப்படாமைக்குரிய விழுமம். அது செய்யாமற் செய்த உதவி, இது செய்யாமற் செற்றது. தான் உய்யாமைக் கேதுவாய விழுமம்.

**4.** இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

நன்னயம் - நல்ல ஒப்புரவுகள். பிறரைக்கொண்டு செய் வித்தால் நாணுர் எனவே தானே செய்து நாணச் செய்க என்றது. ஒருமுறை செய்தலால் சாகும்வரை நம்மைக் கண்டு தலைகுனியவேண்டும்; நினைத்துக் கண்ணீர் விட வேண்டும்.

**5.** அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்ருக் கடை.

பிறிது - பகையுமாம். பகைவர்க்குற்றுர் இறக்கத் தமக் குற்றுர் இறந்ததாக உணர்ந்து கலங்குதல் என்பது எளி தன்று. அவ்வாறியலுதலே அறிவென்பதாம். அதிரவரும் பிறிதின்நோயை முன்னறிந்து காவாவிடத் தென்றுமாம். நோய்க்கு மருந்து கண்டதும் நாகரிகம்; அறிவு கண்டதும் நாகரிகம்.

**6.** இன்னு வெனத்தா னுணர்ந்தவை துன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல்.

உணர்ந்தவை - பிறன்கேடு சூழ்தல். உணர்ந்து, செயலுக்காக அவரை நெருங்கலாகாது. உள்ளலும் தீதென்றது. தீமையென அறிந்ததைப் பிறரைக்கொண்டு செய்து பார்த்தலாகாது.

**7.** எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானு
மாணுசெய் யாமை தலை.

எனைத்தானும் - குண்டூசி முனையளவும்; எஞ்ஞான்றும் - எக்காலத்தும் எவ்விடத்தும்; யார்க்கும் - செல்லிடத்தும் செல்லாவிடத்தும்; மனத்தானு - தீய கோட்பாடுகளைப் பரப்பாமை வேண்டும்.

8. தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல்.

அறிவியல் சோதனைகளின் பொருட்டும் பிறவுயிர்களுக்கும் நாடுகளுக்கும் இன்னு செய்யாமை. அறிவான் - அறியும் பொருட்டு. இன்னு செயல் - பிறவுயிர்களிடம் வருந்துமாறு வேலை வாங்குதலுமாம்.

9. பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு
பிற்பகற் ருமே வரும்.

தாமே - செய்த அதே தீமைகள் திரும்பிவரும்; அல்லது அவையேபோன்ற தீமைகள். முற்பகல், பிற்பகல் என்றமையின் காய்கதிர்ச் செல்வனே கரியாவான் என்றது. ஒறுத்தார்க்குரிய ஒருநாள் இன்பமும் இன்றிப் பிற்பகலில் வரும். தாமே என்ற பன்மையால் ஒன்று பல வாய் வருதலாம்.

10. நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

நோய் - உடல்நோய். இப்பிறவியில் நோய்வாய்ப்படுவோர் முன்பு பிறர்க்கு நோய் செய்தவர் என்பது. பிற்பகல் என்றமையின் இப்போது நோய் செய்தார் இப்பிறவியிலேயே துன்புறுவர், அது வேண்டாதார் செய்யார். வறுமையும் (இன்மை) விழையத்தக்கதாகலாம்; ஆனுல் அது நோயின்மையாகிய, நோய் - வறுமையாகவேண்டும்.

## 33. கொல்லாமை

1. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

கொல்லாமை - போரிற் கொல்லாமையும், மரண தண்டனையை விலக்கலும்; போரைத் தவிர்த்தது. பிறவினையெல்லாம் என்றதற்கேற்ப அறவினையெல்லாம் (அனைத்

தறன்) என்க. பாதகங்களில் கொலேயே முதலும் எல்லா வற்றுக்கும் காரணமுமென்பது. கொல்லாமை கோறல்- கொல்லா நெறியை அழித்தல்.

**2.** பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலே.

போர்களுக்கும் கொலே (கொள்ளே)களுக்கும் காரணம் யாவருக்கும் போதிய உணவும் சொத்தும் இன்மையே யாகும். எனவேதான் கொல்லாமையிற் பகுத்துண்ணலேக் கூறினர். பழியஞ்சிப் பாத்தூண் எனவும் முன்பு வற்புறுத் தினர். யாவர்க்கும் உறுபசியென்பது இல்லாமலாக்கினு லன்றி உலகில் கொலே நீங்காது. துறவறத்திற்கும் பகுத் துண்ணல் கூறியது.

**3.** ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

பாதகத்துள் கொலேக்கடுத்துப் பொய்யை வைக்கிருர். பொய்மையும் வாய்மையிடத்தவெனத் துளி இடம் அதற் களித்தலின் இரண்டாவதாயிற்று. கொலே செய்துவிட்டு இல்லேயென்போரைக் கண்டு கூறியது. பொய்த்தல்- கொலே இன்றியமையாதென வாதித்தல்; உலக நன்மைக் காயினும் கொலே ஆகாதென்பது. செயலேப் பற்றியதற்கு முதலிடந் தந்தாரென்றுமாம்.

**4.** நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி.

யாதொன்றும்-புலி முதலியனவும் ஒன்றை மற்ருென்று கொல்லுதல். புலியும் பசுவும் ஒரு துறையில் குடிக்கச் செய்யும் நெறி, முடியாதாகலாம், முயலவேண்டும் எனவே சூழும் என்ருர்.

**5.** நிலேயஞ்சி நீத்தாருள் எல்லாங் கொலேயஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலே.

நீத்தார், போர்க்கலேயை வளர்க்கவோ போர் செய்யத் தூண்டவோ கூடாது. அரக்கரையும் நரகரையும் கொல்ல லாகாது. மரண தண்டனேயை ஒழிக்க நூலெழுதவேண்டும் என்றது. சூழும் இல்லறத்தான் தலே என்க.

6. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

கொல்லும் கூற்றையும் மாற்றும் அளவு (அஹிம்சை) கொல்லா நெறி கூறுகிறுர். யாவரும் சாவா நெறி காட்டியது. கூற்று செல்லாது: தவிர்க்க முடியாத சாவு (நாள்) குறுகின் அவ்வறவோன் தானே உயிரை விடுவானென்பது; வடக்கிருத்தல் முதலியவற்ருல் விடுதல்.

7. தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

இது போர் வீரர்க்குரைத்தது. போரில் சேராவிடில் தம்முயிர்க்கே கொலை தண்டனை வரினும் போரில் சேர்ந்து கொலை செய்யற்க என்றது. தன்னைப்போன்ற மனிதன், இனத்தான் உயிராகலின் 'இன்னுயிர்' என்ருர். சேர்ந்து விட்டவர், படையைத் தொடாமல் எதிரியால் மாள்வதே மேலென்பது. பிறிதின் உயிர் பிறிதுஇன் உயிர் என்க.

8. நன்ருகும் ஆக்கம் பெரிதெனினும் சான்ருேர்க்குக்
கொன்ருகும் ஆக்கங் கடை.

இது வேள்விக் கொலை பற்றிக் கூறியது. பொருளுக்காக உலகில் நடக்கும் கொலைகளைப்பற்றிக் கூறியதுமாம். கொன்ருகும் ஆக்கம் - கொன்றன்ன இன்ன செய்தலும் கொலையே. சான்ருேர் - சமயச் சான்ருேர் - சமயக் கொலை தவிர்த்தது.

9. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

அந்தணர் என்போர் யார் எனக் கூறியதுபோலப் புலையர் யார் எனக் கூறியது. அவர் ஓர் சாதியல்லர், கொலை வினையர் யாவரும் புலையர் என்பது. புன்மை தெரிவார் - தீமைகள் யாவையென வரையறுக்கும் நூலாளர். புன்மை தெரிவார் - புன்மை செய்வார்; மற்ற பாதகம் புரிவோரும் கொலையை இழிவாகவே கருதுவர் எனலுமாம்.

10. உயிருடம்பின் நீக்கியா ரென்பர் செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

எதற்கும் அஞ்சாதவரும் பெருநோய்களுக்கும் கொடு நோய்களுக்கும் அஞ்சுவர்; பாம்பெனில் படைபோல.

செயிருடம்பெனத் தொழுநோய் காட்டிக் கொலை விலக்கியது. அதனுல் வறுமையே, செல்வமில்லை எனவும் அச்சுறுத்தியது. முதுமையில் நோயுடையார் இளமையில் நீக்கினுரென ஒரே பிறவிக் காக்குதலுமாம். செயிருடம்பிற் செல்லாத் தீவாழ்க்கை - பிறவி. கொல்லாமை பிறவியறுக்கும்.

## 34. நிலையாமை

1. நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

நிலையின என்றுணரும் புல்லறிவாண்மை - உலகத்தார் உண்டென்பதில்லை யென்னும் புல்லறிவு. கடை நில்லாதவற்றை - கடை போக நில்லாதவற்றை. எனவே நல்லறிவால் (ஞானம்) நிலையாமை யுணர்வுண்டாமென்றது. புல் - அறிவு; மனிதர்க்குரிய ஆறறிவன்று புல்லுக்குரிய ஓரறிவுடைமை யென்றுமாம். அறிவு, நிலையாமையை உணர்வது.

2. கூத்தாட் டவைக்குழாத்து அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

அவைக் குழாம்-கூத்தாடும் கலைஞர் குழாம். வேறூர்க்கும் வேற்று நாட்டுக்கும் செல்லும் நாடோடித் தன்மையது. பாலை மறவர் கொள்வர், பிறவரசர் கொள்வர் என்பது.
அவை கலையுமுன் அவர்களை இன்புறுத்தல் போலச் செல்வம் சிதறுமுன் பிறரை இன்புறுத்துக என்றது.

3. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்ருல்
அற்குப ஆங்கே செயல்.

தன் குடியிடத்தும் நாட்டிடத்தும் தங்கும்படி அதனைப் பாதுகாக்க வேண்டும். தான் தேடியது எச்சத்திற் கேமாப்புடையதாக்குக என்பது. கல்வி, கலை முதலிய நிலையான அறங்களைச் செய்க.

4. நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

நாள் என்றமையால் வீழ்நாள் படாமை நன்ருற்றுக என்றது. ஒருநாள்தானேயென வீணுக்க வேண்டாம்.

அறுப்பதைப் பயன்படுத்தி வீட்டைக் (வீடு பேறு) கட்டிக் கொள்க என்றது.

அறுப்பவன் வினைத் தச்சன்.

5. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

நாவும் விக்குளும் - சொல்லும் செயலும் அடங்கு முன் மேற்சென்று செய்தல். உயில் (Will) எழுதியாவது செய்தல். நல்வினை செய்யாதோர்க்கே நாச்செற்ற விக்குளுடன் சாவுண்டாம்; மற்றவர் சிரித்துக் கொண்டே யிறப்பர்.

6. நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்துஇவ் வுலகு.

செல்வம் உளன் என்றவன் இன்று யான் இலன் - ஈக என்று இரக்கும் என்க. இவ்வாறு நிலையாமையை உணர்த்தும் (குருவினது) பெருமையுடைத் தென்பது. நாளுக்கு நாள் உலகம் மாறிக்கொண்டே யிருப்பதனை அறிந்து நடவாதவன் முதற் கூறிய புல்லறிவாளன்.

7. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

கோடிப்பொழுது வாழ்வது பற்றி; கோடிச் செல்வத்துடன் வாழ்வது பற்றி; நினைத்தபடி ஒரு நாழிகையும் வாழாது, ஆனல் எந்நேரமும் வாழ்வதெப்படி என்பதுபற்றி நினைத்துக் கொண்டும் எழுதிப் பேசிக் கொண்டுமிருப்போர் பலர். அது கோடியாகிய நுனிக்கொம்பர்க் கப்பால் ஊக்குதல் போலாம்.

8. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

'சேக்கை' மரனொழிய என்ற நாலடி வழக்குண்மையான் குடம்பை என்பது கூடு எனவே குறிக்கும். பறவைக்கு எத்தனையோ கூடுகள், அதுபோல உயிர்க்கு எத்தனையோ உடல்கள்.

இம்மனிதவுடல் இடையில் வந்தது, பயனுக்குக என்றது.

9. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

பிறப்பும் இறப்பும் நிலையாதன. பலர் 'எனக்கெப்போது சாவு வரும்' என விழைவர், அச் சாவும் நிலையாது என்றது. உறங்குவது, விழிப்பது என்ற குறிப்பான் உறங்கப் போகு முன்னும் விழித்தெழும்போதும் நிலையாமையை நினைவு கூர்க (எண்ணுக) என்பது. நிலையாமை யுணர்வில்லாதவன் தினமும் சாகிருன்; உள்ளவன் என்றும் சாதலில்லை; அவனது உளதாகும் சாக்காடு! இவ்வுணர்வு வீழ்நாள் படாமை நன்ருற்றும்.

10. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சி லிருந்த உயிர்க்கு.

வாடகை வீட்டிலிருப்பதையும் ஒண்டிக் குடித்தனத்தையும் நாடோடி வாழ்க்கையையும் நாகரிகமன்றென வெறுத்தது. புக்கில் - மாமி வீடு (புக்ககம்). இறைவனை உயிர் மணந்து புகும் 'வீடு'. உடல் முழுவதும் உணர்ச்சியாயில்லை, உடலில் ஏதோ ஓர் சிறு இடத்தில் உயிர் இருப்பதென்ற கருத்து இங்குக் குறிக்கப்படுகிறது.

## 35. துறவு

1. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனி னதனி னிலன்.

அறம், பொருள், இன்பம், புகழ், மனைவி, மக்கள் முதல் யாதனின் நீங்கியா னெனல். கண்டு கேட்டு முதலிய ஐம்புல இன்பங்களுள் எதனைத் துறந்தானே அதனின் இலனெனலுமாம். ஒரேயடியாகத் துறத்தலரிது. படிப்படியே துறக்க என்றது. அதனுற்ருன் ஒன்ருக, பின்சார என்றெல்லாம் கூறினர்.

2. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.

துறந்து செய்யும் தவத்தால் வேண்டிய வேண்டியாங் கெய்தலாம் என்றதுமது. ஈண்டியற்பால - பெருகக் கூடியன. ஈண்டு - இவ்வுலகிலேயே அடையுமின்பங்கள்

என்பதாம்: அறத்தில் ஒரு பொருளைத் துறக்கும்போது, அது வேண்டியபோது தனக்கோ சந்ததியார்க்கோ அடையும்படி ஏற்பாடு செய்வர். பின்னல் ஈண்டியற்பால் பல, எனவே துறப்பது பற்றிப் பின் நினையற்க என்றது.

3. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

அடல் வேண்டும் - பொறிவாயிலைந்தவித்தல். துறவோர்க்கு அவித்தலும் இல்லறத்தார்க்குக் 'காத்தலும்' வேண்டும். ஐம்புலம் வேண்டும் இன்பங்களை யெல்லாம் ஒருங்கு என்க. எல்லா அவாக்களையும் அடல் வேண்டின், விடல் வேண்டுமென்பதுமாம்.

4. இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

ஒன்று இன்மை ஒன்று உடைமை - வேண்டுதல் வேண்டாமை, மயலாகும் பெயர்த் தென்க. இயல்பாகிய நோன்பு அதுவே. துறவுக்கு இன்மையை (வறுமை) யுடைமையே இயல்பாகும் எனலுமாம்.

5. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றூர்க் குடம்பு மிகை.

எனவே உடம்பு கடைசியாகத் துறக்கத்தக்கதென்பது. அது வரை அதுபிறப்பறுப்பதற்கே உதவியாகலான். உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்பர் திருமூலரும்; அன்போடியைந்த வழக்கென்றதும் அது.

6. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.

யானெனது - இருள்சேர் இரு வினை. வானோர் - சமயச் சான்றோர். உயர்ந்த உலகம்: கைலாய, வைகுந்த, நிர்வாண பதவிகள். வானோர்க்கும் அச் செருக்குண்மையில் உயர்ந்த உலக மென்றார். செருக்கறுக்கும் பொருட்டு வானோரும் இம் மண்ணுலகில் பிறப்பர். எனவே இவ்வுலகே பிறவியறுக்குமிடம் என்றது. புகுதல் - வந்து பிறத்தல்.

7. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

இடும்பை யுடம்பிற்கியல்பென்பர். இடும்பைகட்கு நம்மிடம் பற்று மிகுதி யென்பது. பற்று விடாச் செம்பிற் களிம்புகள் அவை. பற்றும் இடும்பையும் வேம்பும் கசப்பு மாம்.

**8.** தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

தீர என்றது ஒன்றுடைமையும் மயலாகும் 'என்றற் காம்'. ஒரு சிறு மீனை அவாவினும் பெரு மீன் தூண்டிலிற் பட்டு விடுகிறது. மற்றையவர்பட்ட வலையில் தாமும் பட்டார் எனலுமாம். தலைப்பட்டார் - வழிகாட்டும் சான்றோராயினர். வலைப்பட்டார் - பின்பற்றுவோராயினர். வலைப்பட்டார் - இல்லறத் துறவியாயினர்.

**9.** பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.

நிலையாமை அதிகாரத்துக்குப் பின் துறவு வைத்தலின் நிலையாமை காணப்படும், பற்றறும், பிறப்பறும் என வரி சையாக்குக. காணப்படுதல் - மெய்யுணர்தல். கண்ணே என்றதால் 'சீவன் முக்தி நிலை' குறிக்கப்படும். அற்றது பற்றெனில் உற்றது வீடு.

**10.** பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பற்றற்றான் - குருவுமாம். முள்ளை முள்ளாற் களை தல் போலப் பற்றையறுக்க வேறோர் பற்று வேண்டும். அதுவும், பற்றற்ற குருவினைப் பற்றுக. பற்றறாத குரு வேண்டா மென்றது.

## 36. மெய்யுணர்தல்

**1.** பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணுப் பிறப்பு.

பொருளை பொருளல்லாததாக உணருமென்றுமாம். பொருளல்லாத உலகையே பிரமமென உணரும் குழப்பம் - மருள்; முதற்பொருள் அல்லாத தெய்வங்களை முதலாக நினைக்கும் மருளுமாம்: உண்மைக் கோட்பாடல்லவற்றை

உண்மையாக நம்பும் மருளுமாம். உலகையும் உடலையும் நிலைப் பொருளாகக் கொள்ளும் உலகாயதமுமாம்.

கடவுட் பொருளைக் கண்டது மெய்யறிவு.

**2.** இருள்நீங்கி யின்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

மருள் - அறியாமை; மாயை; மலம்; போன்றன. மாசறு காட்சி - மனமாசற்ற அறிவு (ஞானம்). தெருட்சியும் அதுவே. இன்பமென்றதால் இருள் - துன்பமாம். மெய்யறிவினாலன்றி மெய்யின்பம் (மனித இன்பம்) இல்லை யென்பது. இருளும் மருளும் ஒன்றே.

**3.** ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து.

ஐயம் - கடவுள் உண்டோ இல்லையோ; உலகை ஆக்குவது மண்ணோ, தீயோ, வானோ; சைவ வைணவ, பௌத்த, ஜைனங்களில் எது சிறந்தது; என்பன போன்ற ஐயங்கள். வையத்தின் வானம் நணியது: அவர் மனம் (புலன்கள்) மண் நிலையினீங்கி வான் (பூத) நிலையிலேயே எப்பொழுதும் இயங்கும்; இங்கேயே எண்குணங்களின் இயல்புகளை எட்டுவரென்பது; வானவெளியில் (தில்லைவெளி) நிகழும் (தாண்டவக்) கலைக்காட்சி நணியதென்றுமாம்.

**4.** ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

ஐயுணர்வு - புலனுணர்வு - சிற்றறிவு. மெய்யுணர்வு - அறிவுணர்வு; மெய்யறிவு. ஐயுணர்வு - சித்துக்களின் உணர்வுமாம். மடம்படும் உணர் நெய்யட்டி, இடம்படு ஞானத்தீயால் (உடம்பெனும்மனை - அப்பர்) என்றதுமது. ஐயுணர்வு மெய்யுணர்வுக் கடிப்படை.

உலகியலறிவு சிறப்பினும் உயிரியலறிவு இன்றேல் பயனில்லை.

**5.** எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

ஓரறிவுயிரையும், கொடியோரையும் மெய்ப்பொருளின் வடிவாகவே காணல்; எவ்வுயிரும் பராபரன் சந்நிதி; நிலை

யாததில் நிலைத்ததையும் நிலைத்ததில் நிலையாததையும் காணல். பல சமயத்தின் கோட்பாடுகளின் மெய்ப் பொருட் காண்பதுமாம்; சமயக் கணக்கர் தந்திறம் கேட்டுணரல்.

6. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

கற்றல் - சிற்றறிவு. உலகக் கல்வி கேள்வியும் கலையும் மெய்யுணர்வுக்கு வழியென்பது. ஆசிரியர் நூலெழுதியதும் அதற்கே. வருநெறி - ஐயத்திற்கும் தெளிவிற்கும் இடையே ஊசலாடும் நெறி. எப்போதும் மெய்யொளியிலேயே நிற்பர். கற்றல் - ஆழ்ந்து நினைத்தலுமாம்.

7. ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

உள்ளம் உள்ளது - உள்ளத்துள்ள பொருளை. மலர் மிசையேகினான் என்பதுமது. ஓர்தல் - தியானம்; சமாதி. அப்பொருளைக் காண வேறு ஒரு பிறப்பு வேண்டாம், இப் பிறப்பிலேயே ஆகுமென்பது. உள்ளம், அங்குள்ளது (உயிர்) இவை பற்றிய அறிவு; தத்துவ தரிசனமும் ஆன்ம ஞானமும். மெய்யுணர்வுக்கு மனம் துணை.

8. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

இடும்பை இயல்பென்பதுபோல பிறப்பு, பேதைமை என்றார். சிறப்பு - பிறவியற்ற வீடென்பது இங்குப் புலப் படும். முன்பும் செம்பொருள் கண்டார் என்றார். மனிதப் பிறவிப் பயன் செம்பொருட் காட்சி. செம்பொருள் என்றது இருள்சேர் இருவினை முதலியன செம்பொருள் காட்சிக்குத் தடை யென்பதற்காம்.

9. சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

சார்பு - குரு. சார்புகெடல் - ஐம்புலச் சார்பு அவா கெடல். நோய் - உடல் மனநோய்களுமாம். அந்நோய்களும் மெய்யுணர் நெறிக்குத் தடையாம். சார்பு - மெய்ம்மறை நூல்களுமாம்.

10. காமம், வெகுளி, மயக்கம், இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்.

நாமம் கெடல் - 'கிழங்கை அகழ்ந் தெடுத்தல்' வேர் கெடல். இவற்றின் பிரிவுகளும் ஆகாவென்றது. காமம் - வெஃகுதல்; வெகுளி - இன்னாச்சொல்; மயக்கம் - புல்லறிவு என்பன போன்ற பிரிவுகள்.

அழுக்காறு அவா என முன்புரைத்ததும் அது. இவை பற்றிய (நாமம்) அச்சமுமாம். 'நமனையஞ்சோமென்ற' அச்சமின்மை. மயக்கம் - மருள். காமத்திலும் வெகுளியிலும் மயங்கலுமாம்.

சார்பினிடத்துக் காம வெகுளி மயக்கமுமாம்.

## 37. அவாவறுத்தல்

1. அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

ஒருவனை எவ்வுயிரினும் (அறுவகை அறிவுயிர்) பிறப்பிக்கும் வித்து. அவா ஒன்றிருப்பின் அஃது இடையறுது அதனினின்றும் அவாக்களைப் பிறப்பித்துக் கொண்டேயிருக்கும். ஆராவியற்கை யென்றதுமது. வரனுக்கு வித்து கூறியவர் பிறப்பிற்கு வித்துக் கூறினர். காமமுதல் மூன்றனுள் முதலாகலின் வித்தென்றார்.

2. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

பிறவாதிருக்க வரந்தர வேண்டும் என்றார் பெரியாரும், வேண்டாமையை இறைவனிடத்து வேண்டவரும். பற்றற ஒரு பற்று வேண்டுதல் போல வேண்டாமைக்கு ஒரு வேண்டுதல் (அவா) வேண்டும். மற்றது - பிறப்பு. அது வேண்டாம் வேண்டாம் என்கையிலேயே வரும்.

3. வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்.

விழுச்செல்வம் - தேவர்க்கும் செல்வமாம். வீடு பேற்றினையே விலைக்கு வாங்குதலின் விழுச் செல்வம். மனதுள் ஒன்றும் இன்மையே எல்லாச் செல்வமும் என்றது. வேண்

டாமையென்பது சுழி '0'. அதனை எவ்வெண்ணிடன் பக்கத் திடினும் வரும் மதிப்பு, பிற 1—9 எண்களைச் சுழியின் பக்கத்து இடுதலால் வருதலில்லையன்ருே?

வீடும் வேண்டாமை யென்றுமாம்.

4. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

அகந்தூய்மை வாய்மையா லென்ருர். வாய்மையும் அவாவின்மையும் மனத்தைத் தூய்தாக்கும். பொய்யா மைக்குப் பின்சார அவாவின்மை யென்றது.

5. அற்றவர் என்பார் அவாஅற்ருர் மற்றையார்
அற்ருக அற்ற திலர்.

அற்றவர் - துறந்தார். அழுக்காறு முதனுன்குமற்ரு ருள் அற்ருர். அரிதென்ற, கொடிய வெகுளியற்ருரும் அற்றதிலர் என்பது. மற்றைய அற்ருர் கிளை, இலை, முதலிய அற்ருர். அவாவற்ருர் வித்தற்ருர்.

6. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

வஞ்சிக்கும் அவாவினை அஞ்சுவது அறன். அஞ்சுவ தஞ்சாமை பேதைமை. வஞ்சிப்ப தென்றதால் விழிப்பு டனிருக்க. ஒரு புலனைக் காக்கையில் வேருென்றன் வழிப் புகும்.

அறனே என்பதினும் அறிவே என்ற பாடம் சிறக்கும், அஞ்சுவதஞ்சல் அறிவார் தொழில் என்றமையான்.

7. அவாவினை யாற்ற அறுப்பின் தவாவினை
தான் வேண்டு மாற்ருன் வரும்.

அவாவினை - அவாவை விளைக்கும் செயல்களை. தவா வினை - நல்வினை. செய்வதெல்லாம் நல்வினையாகும். தவா வினை - வீடுமாம். வேண்டுமாற்ருன் வருமென்றதால் மனி தப்பிறவியும் வேண்டுவதே' எனவிழையினும் அதுவும் வரும். வினையாலன்றித் தன் விருப்பால் பிறக்கவும் சிறக்க வும் வல்லன். அவாவினை வறுத்தல் - உயிர் கெடச் செய்த லுமாம்; வறுத்த விதையாக்கல்.

**8.** அவாஇல்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

தவாவினை தான் வேண்டுமாற்ருல் வரும் என்றவர் மேன்மேல் வரும் என்ருர். தவாவினை - இன்பம். துன்பம் மேன்மேல்வரும். துன்பமின்மைக்குக் குறுக்குப் பாதை காட்டியது.

**9.** இன்பம் இடையரு தீண்டும் அவாவென்னுந்
துன்பத்துள் துன்பங் கெடின்.

துன்பத்துட் டுன்பம் - துன்பங்கட்கு வித்து. இடையரு தீண்டல் - தவாஅது மேன்மேல் வரல். மேற்குறளை மறு தலையால் உறுதிப்படுத்தியது. மீண்டும் அவா தோன்று தற்கிடமில்லாதபடி இடையருதீண்டும்.

**10.** ஆரா வியற்கை யவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

ஆரு என வல்லினப் பாடமும் உண்டோ, ஆய்க.

அயரா என்பது ஆரா எனவும் பெயரா என்பது பேரா எனவும் ஆயின. பேர் ஆகிய இயற்கை. பேர் - புகழ் எனலு மாம். நீப்பின் அந்நிலையே - பற்றற்ற கண்ணே.

## 38. ஊழ்

**1.** ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

ஆகூழ் - ஆக்கந்தரும் ஊழ்; அறத்திற்கும் ஊழ் வேண்டுமென்பது குறிப்பு. ஆக்கம்போகூழ். பொருள் ஆதலும் போதலும் இதனுள் அடங்கும். அசைவின்மை - இடுக்கணழியாமையுமாம். மடியுள் பொச்சாப்பும் அடங் கும். சிலர் பலராகிய காரணமென்றதால் அவ்வூழ் நோன் பாலாகுமென்பது. ஒருவற்கு முயற்சி தோன்றினுல் ஆகூழ் காலமென அறிக.

**2.** பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.

அறிவு என்றமையால் மனிதனை ஆக்குவதும் அழிப் பதும் ஊழென்பது. இருவேறுலகத்தியற்கையும் ஊழின்

கையில் என்றது. கல்வியும் ஒருவற்கு ஊழாலேயே ஆமென்பது. ஊழ் என்பது முற்பிறப்பில் மனம் அடைந்த பக்குவம். எவ்வளவு கற்றும் ஏறாத மூளைகளைக் கண்டு ஏற்பட்ட நம்பிக்கை, ஊழ்.

3. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.

ஊழ் - ஊறிப்போன நம்பிக்கை. எவ்வளவு கீழ்ப்பட்டதாயினும் ஒரு சமயமும் கோட்பாடு முடையவர்க்கு எத்தனை சிறந்த நூல்களை உணர்த்தினும் மனம் மாறுவதில்லை. எல்லாம் சரியென்று தலையாட்டி தன்னிலையிலேயே நிற்பர்! அது கண்டுரைத்தது. வேம்புக்கு எவ்வளவு நல்ல எருவிடினும் கசப்புதானே மிகும்! ஒரு இனத்திற்குப் பரம்பரையாக அமைந்த ஒரு அறிவுப் பக்குவ நிலையுண்டு. அவர் எவ்வளவு கற்பினும் வளர்ச்சியுறவில்லை, அது கண்டுரைத்ததுமாம்.

4. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

இல்லறம் துறவறம் போல இரண்டும் இருவர்க்கும் இன்றியமையாதவென நம்பியது. தேவருலகம் திருவிற்கும் மண்ணுலகம் ஞானம் பெற்று வீடு பெறற்கும் உரியது. திருவை முற்கூறியது செல்வத்தால் அறிவு வேறுகு மென்றற்கு. அறிவுடையவரும் செல்வத்திற்காக அறிவு திரிகின்றனர்.

5. நல்லவை யெல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

ஆபவை: அறிவு, இடம், பொருள், ஏவல், காலம்-இடம், வலி முதலியன. ஊழ் இங்குப் பெரிதும் பொருள் பற்றியது. முயற்சி தோன்றுங் குறிப்பறிந்து செய்க. யாவும் கைகூடும் என்றது.

6. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

பால் என்றமையால் ஆணை(பாலை)ப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாததுபோல ஊழினையும்

மாற்ற முடியாதென்பது. வீண் அலைச்சல் வேண்டாமென மனத்திற்கு ஒருவித 'அமைதி' காட்டியது. எவ்வளவு கொடுப்பினும் செல்வம் குறையாதென்றதும் இந்நம்பிக்கை யாற்ருன்.

7. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது.

நாட்டுக்குச் செல்வத்தை அரசன் வகுத்தலும் ஊழ் என்றது. அரசு இக்காலத்தில் இவ்வாறு வகுக்க வேண்டுமென வகுத்தான் வகுத்தானென்பது. ஒவ்வொரு நாளுக்கும் நாழிகைக்கும் ஊழ் திட்டம் வகுத்துள்ளது. தொகுக்கும் ஊழிலார் ஏழைகள்; துய்க்கும் ஊழிலார் செல்வர். எனவே ஊழ் பொது.

8. துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியு மெனின்.

உப்பிற்கும் காடிக்கும் கூற்ருய் ஏழைகள் வந்திரப்பதும், அவற்கு ஈதல் வேண்டுமென்பதும் ஊழ் எனவே ஈதலைத் தவிர்க்கலாகாதென்பது. துறந்துபோகிறேனென்பதற்கும் ஊழ் வேண்டுமென்பது.

9. நன்ருங்கால் நல்லவாக் காண்பவர் அன்ருங்கால்
அல்லற் படுவ தெவன்.

இன்பத்துள் இன்பம் விழையாதான் என்பதோடொப்பிடுக. நடுநிலை (அமைதி) உள்ளமே ஊழைவெல்லுமென்றது. பிறவிப் பெருங்கடலில் அலையேற்றமும் (நன்று) தாழ்வும் இயல்பு; அவற்றிற் கசையாத அமைதி மனத்தோணி இறைவன்.

10. ஊழிற் பெருவலி யாவுள மற்ருென்று
சூழினுந் தான்முந் துறும்.

தன்வலி, துணைவலி முதலியவெல்லாம் வலியல்லவாம். ஊழை வெல்லச் சூழினும், முந்துறுமென்க. அவ்வினையை மற்ருெருவரால் சூழினும், அதனைவிட்டு வேருென்றைத் தொடங்கினும் முந்துறும் என்றலுமாம். ஆனல் தாழாது ஞற்ற அடுத்த பிறவியிலேனும் வெற்றியுறும், இப்பிறவியில் மெய்வருத்தத்திற்குக் கூலிவரும்.

# பொருட்பால்

## 39. இறைமாட்சி

1. படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

வெல்படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலையெனப் பின்பு கூறலின் படை முதலாகாதென்ற பரிமேலழகர் உரை ஆசிரியர் கருத்துக்கு முரணானது. ஆறிற் குறைந்தவன் சிற்றரசன். இன்றும் அரசுகள் படையாலேயே நிலைத்தலின் முதலிற் படை வைத்தார். இன்றும் என்றும் அரசியல் கோட்பாடுகளில் படையரசு, குடியரசு என இரு பிரிவுண்மையின் இரண்டனையும் முதலில் கூறினர். அரணுள் நாடடங்கும், பின்னர் நாட்டிற்கடுத்து அரண் கூறிலின். குடி: தள்ளா விளையுளும் (உழவர்) தக்காரும் தாழ்விலாச் செல்வரும். நட்பு - மற்ற அரசுடன் கொள்ளும் அரசியல் உறவு. அரணைக் கடைசியில் வைத்தது முதல் (தரமான) படையிருப்பின் அலெக்சாந்தரைப் போலத் தொலையிலும் வெல்லலாம், அரண்வேண்டாம் என்றற்காம்.

2. அஞ்சாமை யீகை அறிவூக்க மிந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு.

மேற்கூறிய முதல் நான்கிற்கும் இந்நான்கையும் இணைக்கலாம். அறிவுகொண்டு பயிரை விளைக்கவும் பொருளை வளர்க்கவும் வேண்டும். எஞ்சாமை வேந்தர் - பரம்பரையாக வரும் வேந்தர்; வேந்தியல்பு ஊறியகுருதியர். குருதியர் ஆகவே இயல்பு என்றார். அகத்திற்கே புறம், (புறத்திணை); ஈகைக்கே அஞ்சாமை (படை) யாகலிற் படைக்கடுத்து ஈகையை வைத்தார். முதலிரண்டாலும் பொருளையன்றி அறிவை வளர்க்க என்றற்கு அடுத்து அறிவு கூறினர். எஞ்சாமை வேந்தர் - வல்லரசு; பிறர்க்கெஞ்சாதவர்.

3. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு.

இவை மூன்றும் படைக்குரியன. கல்வி - போர்க் கல்வி; அரசியல் அறநூற்கல்வியுமாம். நன்மைகளை

நிறைவேற்றுதலில் தூங்காமையும் துணிவுடைமையுமாம்; உட்பகைவரிடம் உயிர்க்கஞ்சாத் துணிவு. கல்வி, கலை வளர்ச்சியில் தூங்காமையுமாம். நீங்கா நிலனுள்பவர் - எஞ்சாமை வேந்தர். அறிவும் வீரமும் நீங்காவென்றது. அறிவு முன் கூறியவர் இங்குக் கல்வி வேண்டுமென்றார். அக்பர், ரஞ்சித்சிங் போன்ற (கல்வியிலா) அறிவுடைய அரசர் சிறப்பினும், கல்வியும் வேண்டுமென்றது.

4. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

மறங்குன்றினால் (வீரம்) மானம் போனதாகக் கருதுவதைவிட அறங்குன்றினால் மானங்குன்றியதாகக் கருதுக வென்பார் அறனிழுக்காது என்றார்; அறத்திற்கே மறமும் மானமும் என்பதாம். மானம் - தன் நாட்டுப் பெருமையிற் பற்று. சில அரசுகள் அறத்தையே நாடும் சில மறத்தையே நாடும்; இரண்டும் இன்றியமையாத வென்பார் உடன் கூறினார்.

5. இயற்றலும் ஈட்டலும் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

இயற்றல் - நல்ல சட்டங்களை இயற்றல்; புதிய (அறிவியல்) உண்மைகளைக் காணலுமாம். ஈட்டல் - புதிய, அறிவியல் முறைகளாற் பொருளீட்டல், வகுத்தல் - பொருளை ஏற்றத்தாழ்வின்றி வகுத்தல்; பொருள் திட்டங்களை வகுத்தல். வல்லதரசு - வல்லரசு அதுவே.

6. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல(ன்) அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

எளிதாகவும் நேராகவும் நீதி கிடைக்கச் செய்க. எளிது - குறைந்த செலவில் விரைவில் நீதி. உறும் ஊறும் என்றாக்கி நாடுமேலோங்கும் என்க; அரசருள் ஏறெனல், இறையெனலுமாம். மீக்கூறல் - சான்றோரும் நூலோரும் புகழ்தலுமாம்.

7. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

அரசப் பதவியாளரைப் பற்றியது. அவர்கள் மக்களிடம் இன்சொல்லுடையராதல் வேண்டும். அரசு வகுக்

கும் திட்டங்களை (வீணுக்காமலும், பொருள்கையாடாமலும்) நிறைவேற்றலே ஈத்தளித்தல். சொலாற் கண்டனைத்து - விரைந்து தொழில் கேட்டல். ஒவ்வொரு குடிமகனும், தான் விரும்பியது (Individual freedom) நடக்கும், அதனுலேயே தன் என ஒருமையாற் கூறினர்; குடியரசியல் புரைத்தது. இன்சொல் - அரச கட்சியும் பிற கட்சிகளும் ஒருமித்தல்.

8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

வேண்டிய வேண்டியார்க்கு வேண்டியாங் செய்தச் செயலே முறை செய்தல். ஒரு பகுதி, ஒரு இனத்தவரையே காக்காமல் எல்லோரையும் முறையாகக் காத்தல். இறையென்றமையின் அவர்க்கு இருள்சேர் இருவினைசேரா, பிறவிப் பெருங்கடல் எளிதில் நீந்துவரென்பது. முறை செய்தல் - குடிகளை அயலாகக் கருதாமல் தன் மக்கள் என்ற முறை கொண்டாடிச் செய்தல். இறை - தங்குதல். தாங்கள் தங்குதற்குரிய இடம் அவனே என்பர்.

9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

கைத்தல் - வேம்பும் கடுவும் போலக் கூறுவனவற்றைத் தாழ்ந்து கேட்டல். உலகு என்றமையால் உலகச் சான்றோரும் எதிர்க்கட்சியாரும் கூறும் கடுஞ்சொற் குறைபாடுகளை நினைத்தல். முரண்பட்ட கோட்பாடுகளை அமைதியாக ஆய்தலே பண்பாட்டை வளர்க்கும் என்பது. கவிகை - கொடைக்காகக் கவிந்த கையுமாம். உலக முழுவதும் அவனரசின் கீழ்வரும். உலகு - மக்கள், உலகாகிய கவிகைக்கீழ் வேந்தன் தங்குமென்றலுமாம். அரசன் மக்களுக்கடக்கமென்ற குடியரசுக் கோட்பாடுணர்த்தியது.

10. கொடையளி செங்கோல் குடியோம்ப னன்கும்
உடையானும் வேந்தர்க் கொளி.

ஒளி - கலங்கரை விளக்கம். இவன் சூரியனும் மற்றவரசர் கிரகங்களாகவும் ஒளி பெறுவர். கொடையளியால்

குடியோம்பலே செங்கோலென்பது. கொடையளி - இன் சொலால் ஈத்தளித்தல், ஒளி - புகழுடையனுமாம்: உலக நாடுகளையெல்லாம் வழி நடத்தும். அரசன் குடிகளால் (வரி முதலிய) கொடுக்கப்படுதலும், அருள் செய்யப்படுதலும், அறங் காக்கப்படுதலும், நாட்டை ஓம்பப்படுதலும் உடைய னுகவெனக் கூறலுமாம். குடிகள் நான்கியல்புகளையும் உடையராக, அரசன் பெறின் என்க.

## 40. கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

அதற்கு என ஒருமையாற் கூறியமையால் ஒரு ஒரு தொழில், சமயம், நெறி (கோட்பாடு) பற்றிக் கசடறக் கற்க என்பது. பின் அதற்குத் தக நிற்பின் அதுவும் சிறக்கும் தானும் சிறக்கலாம். பின் எதனில் நிற்கக் கூடுமோ விழைகிருேமோ அதனைக் கற்க வேண்டும். நிற்கக் கற்க - நிலைத்து நிற்கக் கூடிய உண்மைகளையே கற்க. கசடறக் கற்க வேண்டலின், சிறந்த நூல்களையே தெரிந்து கற்க. கசடு - உண்மையை மறைக்கும் ஐயம் முதலிய; உயிர் மலமுமாம். கற்றலினுல் அந் நூலிலுள்ள கசடு அறுமா றென்றலுமாம். 'சிறப்புடைய மகற்குத்தான் கல்வி'யெனல் ஆசிரியர் கருத்திற்கு முரண். மக்கட்பேறுரைகாண்க.

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

எண் - கணிதம் (Science). எழுத்து - மொழி, கலை (Arts); இன்றைய உலகின் கண்கள். வாழ்நாள் வழியையும், பொய்தீர் ஒழுக்க நெறியையும் கண்டு செல்லும் கண்கள். உயிர் - மனித வுயிர். எண்ணுந்திறனும் எழுதுந் திறனும் (மொழி) (மனிதர்க்கேயுரிய) மனிதனே சிறப்பாகக் கண்டவை (Inventions). வாழுமுயிர்க் கென்றது, சிறந்து வாழவேண்டின் வேண்டும், வெறும் காலந்தள்ள வேண்டின் வேண்டாம் என்றற்காம். வாழும் என்றதால் உண்டுறங்கி வாழும் விலங்கு வாழ்வு (மனித) வாழ்வாகாதென்பது; கலை, கல்வி வாழ்க்கையே வாழ்க்கை.

3. கண்ணுடைய ரென்பவர் கற்ரோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

இயற்கையறிவினுல் வாழ்வோமெனில் அதற்கு இப்புண்கள் இடையூறும் நோயும் விளேக்குமென்பது. கல்லாதவர் கற்ரோர் முகத்துப் புண் எனக் கூட்டி உலகில் கல்லார் உள்ளவரை, கற்ரோர் அதனைத் தமது புண்ணுகக் கருதுகவென்றது; பிறிது நோய் தந்நோய் போல் போற்றல். கல்லாதார் இல்லாதாராக்குவது கற்ரோர் கடனென்றது. கல்லாதவர் கற்ரோர் கண்ணுடையர் - கல்லார் கற்ருர் கண்களைக் கொண்டு காண்கின்றனர், தமக்கெனக் கண்ணிலர்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

அவன் தோற்றம் உலகிற்கு மகிழ்வளிக்கவும் அவன் இறப்பின் உலகமெல்லாம் வருந்தவும் வேண்டும். உள்ளல்-பின்பென்றும் நினைத்தலுமாம். மக்களோடு உவப்ப, உள்ளவென்றலுமாம். உள்ள - தம் கலையை அவர் நினைந்து மகிழ எனலுமாம். இருக்கும் போது உவப்பவும் உள்ளவும் இருத்தல்தானு தொழில் எனக் கேட்டு, இறந்த பின்பும் தம் நூல்களை அவர்கள் கூடும்போது மகிழவும், பிரியும்போது வருந்தவும் செய்க என்றலுமாம். உலக வாழ்வில் ஒரு மகிழ்வும் இறப்பில் வெறுப்புமுடையது; வாழ்வில் ஈடுபாடு வேண்டும், கல்வி.

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்ருர்
கடையரே கல்லா தவர்.

முன் தாய்தந்தையரிடத்துக் கடமை கூறி இங்குக் குருவிடம் கடமை கூறுகிருர். கேடாம் செல்வத்திற்கு ஏக்கறுதலை விட்டுக் கேடில் செல்வத்திற்கு ஏக்கறுகவென்றது. ஏக்கறுதல் சொல்லாடச் சோர்வுபடுதலுமாம். கற்ருரா கடையர்? கல்லாரே கடையர் என்க. ஏக்கற்றுக் கற்பாரைப் பழிப்பார்க்குரைத்தது. யாம் கல்லாத கடையர் என்ற ஏக்கத்தை விட்டுக் கற்க; கல்லாதவர் கற்ருர் கடையர் : கற்ருர் வழிப்படும் அரசு, சமயம் ஆகியவற்றிலேயே ஒன்றி வாழவேண்டியவராவர்.

6. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

குறள் போன்ற மணற் கேணிகளைத் தோண்டுக; களி, பாறைக் கேணிகளைத் தோண்டற்க. ஊறுது, இராது. ஆசிரியரைக் கேட்டுத் தெரிந்து கற்க. நவில்தொறும் நூல் நயம் என்றதும் அது. மணற்கேணி - ஆற்று மணற்கேணி. எனவே நூல்கள் இயற்கையாகத் தோன்றிய, முனிவர் கண்ட மறைகள் என்பது. கற்றல் கடினமன்று, எளி தென்று ஊக்கியது. எளிதாகப் புலப்படுமாறு செய்த நூல்களைக் கற்க.

7. யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

சாந்துணையுங் கற்றால்தான் எல்லாவற்றையும் நாடூராக் கலாம். யாதும் ஊரே என்னும் கல்வியே கற்க. ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு இனமென்னும் கல்வி ஆகாது. நாடு - நாட்டுப் பிரிவுமாம். குறைந்தது தன் நாடளவாவது அறிய பயன்பெறக் கற்க. சாந்துணையும் கற்ற அத்தனை அனுபவங் கொண்டெழுதினாற்றான் அவன் உலகம் புகழும் புலவ னாவான். உலக மொழிகளில் பெயர்க்கத் தக்க நூலெழுதக் கூடும்; அவனும் உலக மொழிகளையெல்லாம் கற்று நேரே அவற்றுள் எழுதக்கூடும். சாந்துணையும் ஊராமால் என்றாக்கி, நாடோடி வாழ்வில் கல்வி வளராதென்றது. யாதும் நாடும் ஊருமாகுமோ? தனக்கென ஓர் நாடும் ஊரும் வேண்டுவதுபோல தனக்கெனக் கல்வி வேண்டும், பிறர் கல்வியால்தான் வாழ முடியாது; பிறர் கண்களால் தான் காண முடியாது.

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்(கு)
எழுமையும் ஏமாப் புடைத்து.

எழுமை - இளமையில் கற்றது முதுமைவரை ஏழு பருவத்திற்கும்; ஏழு தலைமுறைக்கும்; ஏழு வரிசைப்பட்ட உறவினர்க்கும். ஒரு அளவு செலவழித்து அதுபோல் ஏழு மடங்குப் பொருள் எடுத்துவிடலாம், கற்க என்றது. ஏழ்கடல் சூழ் உலகிற்கும் ஏமாப்புடைத் தென்றலுமாம். ஒரு விளக்கால் பல விளக்கேற்றல் போல்வது.

9. தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

உலகவின்பத்தைத் தானடைய மேலும் கற்கக் காமுறுவர். தன் நூல்களில் உலகின்புறக் கண்டு மேலும் நூலெழுதக் காமுறுவர் எனவெல்லாம் கொள்க. உயர்ந் தோர் மாட்டாகலின், உலகம் கற்றறிந்தார் இன்புறுவது கண்டு தானும் இன்புறுவதாகலின் அனைவரும் கல்வியைக் காமுறுவர் என்றுமாம். உலகுடன் நட்புகொள்ளக் காமுறுவர். யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பர். உலகமெல்லாம் (முதலில்) இன்புற்றால்தான் தனக்கும் இன்பமுண்டாகலின் (வாழ்க்கையை) காமுறுவ ரெனலுமாம்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

கேடில் விழுத்துணையாகும் (இழுக்கலுடையுழி ஊற்றுக் கோல்) கல்வி. கேடில்லாத மற்ற நாட்களிலும் நல்ல துணை (மாடு) யாம். ஒருவற்கு மாடல்ல - செல்வம்போல் தனி யுடைமையன்று, பொதுவுடைமையென்றது. மற்றை யவை கேட்டில் விழுகின்ற செல்வமுமாம். முல்லையார் மாடுகளைச் செல்வமாகக் கொள்வராகலின் செல்வம் 'மாடு' எனப் பேர் பெற்றது. செல்வத்தால் வாழமுடியாத பிற நாடுகளில் ஒருவன் சென்று கல்வியினால் வாழ்தல் கூடுமாகலின் விழுச் செல்வமென்றார்.

## 41. கல்லாமை

1. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றி கோட்டி கொளல்.

கோட்டி கொளல் - அவையத்து முந்தியிருத்தலும், இருத்தலும். வட்டு - உருளை, ஆகுபெயராய்த் தேர்ப் பந்தயமு மாம். நிறைந்த இலக்கியங்களில்லாத (நூல்) ஒரு மொழி யைக் கற்பிக்க வருதலுமாம்; கோட்பாட்டைப் பரப்புதலு மாம். ஆசிரியனென வருதலும் நூலெழுதலும் கோட்டி கொளலாம். வட்டு சூதெனில் - அதற்கும் நிறைந்த எண் ணிக்கை விழ வேண்டும். நிறைந்த நூல்நிலையமின்றி என்றுமாம்.

2. கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

இல்லாளைக் காமுற்றற்று என இருவகையுமாம். இரண்டும் வினை பெயர் என்ற சொற்களைக் குறிக்கலாம். அவன் சொல்லில் பெயரும் வினையும் இராவென்பது. இல்லாதாள் - பேதையும், கிழவியுமாம்: காமம் கைக்கிளையும் பெருந்திணையுமாம், ஐந்திணையாகாது; அணியிராது. கல்லாதான் பெண்கா முற்றற்று என்ருக்கி கண்ணில்லான் முலையில்லாளைக் காமுற்றதென்க. நண்ணுரும் உட்கும் பீடினை உடைப்பது முலை. கேளாரும் வேட்பமொழிவது சொல். எனவே கல்லாமை பகையை வெல்லாதென்பது. பருவத்தில் முலைவளராவிடினும் கல்வி வளராவிடினும் குறையாம். தாமரைக் கண்ணுன் உலகின்பமே .சொல்லின்பமும்.

3. கல்லா தவரும் நனிநல்லர் கற்ருர்முன்
சொல்லா(து) இருக்கப் பெறின்.

கற்ருர் கல்லார் முன் சொல்லாதிருக்கப் பெறின். ஆசிரியர்க் குறைத்தது. கற்குந்திறனிலார் (கடைமாணக்கர்) முன் கற்பிக்கச் செல்லலாகா தென்பது.

4. கல்லாதான் ஒட்பங் கழியநன் ருயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

கொள்ளார் - மேற்கோளாகக் கொள்ளார். ஒட்பம் - அனுபவ அறிவு. நன்ருயினும் என்றதால் பொழுது போக்காகக் கொள்வர். அறிவுடையார் ஒட்பம் நன்ருயினும் கல்லாதார் கொள்ளார் என்றுமாம். மலர்தலும் கூம்பலுமுடையராகலின் கொள்ளார். ஒரு துறையில் பொது அறிவுடையவன் அத் துறையில் தேர்ந்த நூல் அறிவுடையோர் முன் நிற்க வியலாதென்பது.

5. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

தகைமை கல்லாவொருவன் தலைப்பெய்யினும் சோர்வு படும். சோர்வுபடல் - தீச் சொற்பொருட் பயனுண்டாதல். தகையோர் சொல்வதெல்லாம் தீச்சொற்பயனுகவும்,

கல்லார் சொல்வது தீச்சொல்லாகவும் தோன்றுமென்பது. சிலபோது உடற்சோர்வும் வாய்ச்சோர்வும் படுமென்க. படும் - நீங்கும் எனக்கொண்டு, சோர்வு நீங்குமென ஊக்கியதுமாம். நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வு படுமென்பார். கல்லார் - அறிவு நல்கூர்ந்தாரே.

6. உளரென்னும் மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லாதவர்.

நஞ்சையின் பயனறியார், சிறுபயனளிப்பர். எனவே திருத்தி வளம்படுத்தல் கற்றூர் கடனென்பது. கற்றிலனு யினும் கேட்க என்றது அதற்கே. சலவைக்கு உப்பு மண்தரும் களர். (ஒலியற்) புலைத்தொழிலுக்கே அவர் பயனுவரென்பது. கள ர்- கூத்தாடும் களருமாம்; (மன்றம்) பிறர் ஆட்டத்திற்கெல்லாம் இடமாகும் அடித்தொழிலராவர். நஞ்சையையடுத்துப் போரடிக்க உதவும்; அதுபோல கற்றூரது அனுபவத்திற்கிடமாவர்.

7. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று.

நுழைபுலம் - செவிப்புலமுமாம். நுண்மாண் நுழைபுலம் - ஆழ்ந்த சிறந்த நூலறிவு. புலம் - ஆசிரியன் இலக்கணமுமாம்; ஏருத செவியிலும் நுழையும் அறிவு. புனைபாவை - கொல்லிப்பாவை வழங்கிய காலம்; யவனர் தந்த பாவைக் காலம் வள்ளுவர் காலம். மண்பாவை - சோளக் கொல்லைப்பொம்மை யெனக் கேலிசெய்தது. மனிதர்க்கு அறிவே அழகென்றது. பாவை - பாவைக் கூத்தாடும் பாவையுமாம். இரண்டிடத்தும் கலைத்திறம் இருக்கலாம் ஆனல் சொந்தமற்றது, நுண்மாண் நுழைபுலத்தால் பின்னிருந்தியக்கப்படுவது.

8. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னுதே
கல்லார்கண் பட்ட திரு.

திருவேறு தெள்ளியராதலும் வேறென்றற்கு முரணுது. இதனுல் ஊழ் வள்ளுவர்க்கு முழுவதும் உடன்பாடன்று. இவர் வறுமையால் சுடச் சுடர்வர். அவர் திருவினுல் (கண்டபடி) திரிவர். வறுமை உலகுக்குப் பயன்பட வைக்கும்: திரு அவ்வாறு வைக்காது. அறிவில்லை, திரு

பயனில்லை. எனவே கல்லார் கல் - அனையார் என்க. கல் லார் கண் (ணேறு) பட்டாலும் ஒருவரது திருவெல்லாம் இன்னாதாகும். வறுமை கல்வியை வளர்க்கும், செல்வம் தடைப்படுத்தலுமுண்டு என்பது குறிப்பாம். அதனாலேயே முன்பு, மாணவ வாழ்க்கையை வறுமையுடையதாக்கினர்.

9. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

ஒரு குடியில் அண்ணனாய்ப் பிறக்கினும், அன்றி இனத் தலைவனாய் பிறக்கினும் என்க. ஒரு குடிப்பிறந்த பல்லோ ருள்ளும் மூத்தோன் வருகவென்னாதென்ற புறப்பாடலைக் காண்க. செந்தண்மை பூண்டொழுகக் கல்லாதார். மேற் பிறந்து கல்லாதார், கீழ்ப்பிறந்த ஆசிரியனிடம் ஏக்கற்றும் கற்றாரெனலுமாம். மேல் கீழ் என்பன மேலுலகமும் (தேவ ரும்) மண்ணுலகமும் (மக்களும்) ஆதலுமாம். மேற் பிறந்தார் கல்லாதாரை அண்டிப் (கீழ்ப் பிறந்து) பொருள் பெற்றுக் கற்றாரெனலுமாம்.

10. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ(டு) ஏனை யவர்.

விலங்கொடு விலங்காய் வாழும் அநாகரிக மக்கள் அனையரென்க. அவர் வாழுமிடம் கடும்புலி வாழும் காடென்க. இலங்கு நூற்கல்வி (மொழியுமே) யே மனிதனை விலங்கினின்றும் பிரித்த தென்பது. நாகரிகம் இலங்கு நூல். கற்றாருள்ளும் இலங்கு நூற் கற்றார் மக்கள், இலக்க மிலா நூலோர் விலங்கெனலுமாம். கல்லாரொடு, சர்க்கஸ் பயில்வான் மாதிரி பழகுகவென்றது.

## 42. கேள்வி

1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

அருட்செல்வமும் செல்வத்துட் செல்வமாகலின், கேள்வி அருள்நெறி பற்றியதாக வேண்டுமென்பது. கல்வி யும் கேடில் செல்வம். கேள்வியும் பதிலுமாக வருதலின் 'கேள்வி' எனப்பட்டதுமாம்; எனவே குணங்களையே செல் வமாகக் கருதுவது தமிழ்ப் பண் பென்பது.

2. செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

'சிறிது வயிறு' என்ருக்கி உண்பது சிறிதாகவும் கேட்பது பெரிதாகவும் வேண்டுமென்க; செவி பெரிதாக வேண்டும். ஒரு வயிற்றுக்கு இரண்டு செவி பெற்றததற்கே. பெரிதுண்பார் கேள்விக்குரியராகார். கேள்வியுடையார்க்கு உண்ண நேரமிராது; உண்பாரக்குக் கேள்விநேரம் இராது. சிறிது வயிற்றுக்கென்றமையின் செவிக்கு எவ்வளவும் அளவின்றி ஈயலாம், தெவிட்டாதென்பது. வயிற்றுணவுக்கே பெரு நேரத்தைக் கழிக்கும் உலகியலை வெறுத்தது.

3. செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்ருரோடு ஒப்பர் நிலத்து.

ஒப்பர் - தெய்வத்துள் வைக்கப்படுவர். தேவர் இங்கு வந்து அவர்க்குச் சிறப்பொடு பூசனை செய்வர். அவரும் எழுதாக்கிளவியாகிய கேள்வி மறையராகலின் அவரோடொப்பர். ஆன்ருேர் - ஆன்றவிந்தடங்கிய சான்ருேர். புலாலாயினும் தூயதாயது அவியுணவாவதுபோலக் கேட்பது எப்பொருளாயினும் அதன் தூய்மையையுணர்க என்றது. செவியுணர்வின் என்பதும் பாடம்.

4. கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்ருந் துணை.

குரு கற்றிலனாயினும் கேட்கவென்றுமாம். கேள்வி பெரிதும் முதியோர் கல்வி பற்றியதுமாம். ஆயினும், எனவே கற்போரும் கேட்கவேண்டும். வறண்ட காலத்து ஆற்று 'மணற்கேணி' ஊற்ருந் துணை; கேட்டனைத் தூறும். ஊற்ருந் துணையும் - 'சாந்துணையும்' - கற்க என்றது.

5. இழுக்கல் உடையுழி யூற்றுக்கோல் அற்றே
யொழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

இழுக்கல் - நீத்தம். ஊற்றுக்கோல் - புணையாகிய மரம். பிறவிப்பெருங்கடற்புணையென்பது. வெறும் நூலறிவாரிடம் கேளற்க. செயற்கையறிந்து உலகத்தியற்கையுமறிந்த ஒழுக்கமுடையாரிடம் கேட்க. அறிவோடொழுக்கமுடையார்; பலகற்றும் உலகத்தோடொட்ட ஒழுகக் கற்ருர்.

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

சிறியதாயினும் மூலைக்கல் (Corner stone) போல், 'ஓட்டையான அணைக்கட்டில் அடைக்கும் ஒரு சிறு கற்போலப்' பெருமை தரும். நல்ல அவையிற் கேட்டலுமாம். ஆன்ற - ஆன்றோராதற்குரிய. எனைத்தானும் - எவ்வளவு துன்புற்றேனும் 'ஏக்கற்றும்' என்க. பெரிய இருட்டிற்குச் சிறு ஒளிபோல பெருமையுமாம். எவ்வளவு மிகுதியும் கேட்கலாம். 'மிகினும் நோய் செய்யாது.' நல்லவை அனைத்தானும் - பலதுறை அறிவையும் அவரவரிடத்தும் கேட்க.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்(து)
ஈண்டிய கேள்வி யவர்.

இழைத்துணர்தல் - உறை கல்லில் இழைத்த மாற்றறிந்து பொன்னனை நல்லவை ஈண்டிய கேள்வியவர். நகையிழைத்தல் போலக் கலை நிரம்பிய வருமாம். பிழைத்துணர்ந்தும் சொல்லார் - வழுக்கியும் வாயாற் சொல்லார். கேட்பதினும் சொல்வதினும் பிழைத்துணரார். கேட்டலில், (பேதைமை) கருத்துக்களுள் ஏதங்கொண் டூதியம் போக விடாதவர். தெளிவாக உணரும் வரைச் சொல்லார்; பிறர் தம்மைப் பிழையாக உணர்ந்த வழியும் வெகுண்டுரையார் என்க.

8. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

அணிகளுக்காகத் துளைப்போர் பலர். இதுவே உண்மை அணி என்றது. கேளாத்தகைய வென்றதால் கோளிற்பொறி இதுவே என்பது. கேட்பதற்கே செவி, வைரக் கடுக்கனுக்கும் கம்மலுக்கும் அன்றென்றது.

9. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

கேள்வியர் - ஆசிரியருமாம். வணங்கிய வாய் - கேட்போர் காதுகளில் வளைந்து நெளிந்து புகும் சொற்கள். வணக்கம் - பணிவு. கேட்டல் 'அடக்கத்திற்காக வேண்

டும். நுணங்கிய கேள்வியரல்லாரும் வணங்கும்படி யான சொல்லுடையராதல், கேளாரும் வேட்ப மொழிவது உலகில் அரிது எனலுமாம். வணங்கியவாயினர்-மாணவர். பணிந்து ஆசிரியர்க்குப் பதிலுரைக்க வேண்டும்.

**10.** செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

வாயுணர்வின் மாக்கள் - நாகாக்காதவர், பொறிவாயி லவியாதவர். மாக்கள் - விலங்கு மனிதர். வாயுணர் வொன்றே யுடையது விலங்கே.

விலங்கொடு மக்களனையர் என்றதுமது. கல்வி கேள்வி யாலேயே மனிதன் (விலங்கின் வேருகி) மனிதனுகிருன். அவியினும் - விலங்காகலின் அவியில் (வேள்வித் தீயில்) இட்டுக் கொல்க, என்றது. கேள்வியுடையோர் அவியினும் வாழ்வோரே என்பது குறிப்பு.

## 43. அறிவு

**1.** அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

மெய்யறிவே இறப்பினை (அற்றம்) த் தடுப்பது; போரில் இறுதி வராமல் தடுப்பதும் அறிவுடைய போர்த் திட்டங் களும் தளபதிகளும். அற்றம் - மரணமுமாம். செறுவார்- உள்ளிருந்து போரிடுவார். கட்டியவராலும் அழிக்க முடியா தது. அற்றம் - மறை வுறுப்பு. மறை வுறுப்பை மறைக்கும் உடையினும் குற்ற மறைக்கும் அறிவு சிறந்த தென்பது; அற்ற மறைத்தலோ புல்லறிவு. அஞ்சாமை யல்லால் துணை வேண்டா என்ருங்கு உள்ளரணின்றி வெளி அரண் களாற் பயனில்லை எனலுமாம்.

**2.** சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப(து) அறிவு.

உய்த்தல் - அல்லவை தேய அறம் பெருகல். பொருளை மனம்போனபடிச் செலவிடாது நன்றின்பாலுய்ப்பதுமாம். அறிவு சென்றவிடத்தால் என்ருக்கி அறிவுடைய பல கோட் பாடுகளிடையேயும் தமக்கும் நாட்டிற்கும் நல்லனவற்

றையே கொள்க வென்பது. எல்லாத் துறைகளிலும் அறிவு சிறக்கின்றது;

ஏதாவது தமக்கு நன்மையான (பிடித்த) ஓரிரு துறைகளில் உய்க்க என்பது.

நன்ருற்றின் என்றமையால் தீது நன்றென்பன அறமறங்கள். ஒரு பயனை யடைய அறிஞர் பல நெறி கூறுவர், ஒரு நெறி பற்றுக.

**3.** எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

சமய, அரசியல் கோட்பாடுகள் பலவற்றுள்ளும் உண்மை எதுவெனக் காண்பது. யார் எப்பொருளைத் தன்னிடம் கேட்பினும் அவை பற்றி யெல்லாம் மெய்ப் பொருளைக் கூற வல்லதுமாம். உரையாசிரியர் பலர் கூறும் பொருளிலெல்லாம் உண்மைப் பொருளைக் காண்டலுமாம். யார் யார் வாய்க் கேட்பினும் - 'கல்லார்' வாய்க் கேட்பினும்.

**4.** எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

எண் - சிந்தனை. பிறர் சிந்திக்கத்தக்க உண்மைகளைச் சொல்லி நுண் பொருள் காண வல்லாரே எளிதாகப் புரியச் சொல்ல முடியும். நுண் பொருள்களெல்லாம் யாவரிடத்தும் பரவ வேண்டுமென்பது. நுண்பொருளை எளிதாகச் சொல்லியது குறளொன்றே. ஐயத்தை ஆசிரியர்கட்கு எளிதாகச் சொல்லி அவரது நுண்பொருளைக் காண்டலுமாம். அறிவெனில், புரியாததே இருத்தலாகாது.

சிந்தனையைத் தூண்டும் நூலெழுத வேண்டும்.

**5.** உலகம் தழீஇய தொட்ப மலர்தலும்
கூம்பலும் இல்ல(து) அறிவு.

சான்றேரையும் உலகோரையும் தழுவியது, அவர் தம்மைத் தழுவியதுமாம். வழக்கும் செய்யுளும் தழுவியதுமாம். காலத்துக்கும் பொருளுக்கும் செல்வாக்கிற்கும் ஏற்ப மலர்தலும் கூம்பலும் இல்லதென்க. அறிவுலகம் தழுவியதெனவும் கூட்டுக. உலகம் மலர்தலும் கூம்பலும் இல்லாது தழுவிய தென்க. சிலரானன்றி எல்லோராலும்

மலர்ச்சியுடன் பாராட்டப் பெறும் அறிவென்க. நல்லோர்க்கு மலராது தீயோர்க்குக் கூம்பாதெனலுமாம்.

**6.** எவ்வ(து) உறைவ(து) உலகம் உலகத்தோ(டு)
அவ்வ(து) உறைவ(து) அறிவு.

உலகம் எக்காலத்தும் நிலைத்து வழங்கி வருவதற்குரிய கோட்பாடுகளையே சொல்லுவதும் விளக்குவதும் அறிவு. உலகத்தோடுறைவது என்றமையால் எக்காலத்தும் உலகிற்கு அது பொருந்த வேண்டும்; விளக்கந் தருவதாக வேண்டும். தன்னெறியில் உலகைச் செலுத்துவதன்றி, அது செல்லும் நெறியையும் செம்மையாக்க வேண்டும். உலகத்தோடொட்ட ஒழுகல் என்றமையால் ஒழுக்கமுடைமை அறிவுடைமை.

**7.** அறிவுடையார் ஆவ(து) அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

அறிவு இன்னதென்று அறிவார், பலரும் அறிவெனக் கூறுவனவற்றுள் அறுவினை யறிவார். அறிவுடையார் யார் எனவும், அதற்குரிய வழியையும் அறிவார். அறிவுடன் வழியையும் அறிந்தும் அந் நெறியில் ஒழுக அறிவாரென்க. அறிவில் மட்டுமின்றி உண்மையில் அறிஞராய் வாழ்வாரே அறிஞர்.

**8.** அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

அவாவினை அஞ்சுவதோரு மறனே என்பது. காம வெகுளி மயக்கம் இவை மூன்றன் (நாமமும்) அச்சமும் கெட வேண்டும். அஞ்சாமையும் வேண்டுமென்பது; 'நமனை யுஞ்சோ' மென்பது. கொடியர், பாம்பு, மின்சாரம் முதலியவற்றிற் கஞ்சுதல்.

**9.** எதிரதாக் காக்கும் அறிவினர்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

வருமுன்னன்றி வந்தெதிர்ந்தபோதும் (எதிராக) காத்தல். அதிர வரும் நோய் - எற்றெற்றென் றேதம். முன்னறிந்து காத்தலை இங்குக் கூறுதலால் 'அறிவுடையாராவ' தென்பதற்கு வேறு பொருள் செய்தலே சிறப்பு.

அதிர வருவதோர் நோய் - திடீர்ச் சாவு, கதறலுக்குரிய சாவுமாம்.

**10.** அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

அறிவுடையாரது இனமே செல்வர் இனம். அறிவிலார் கூட்டமே 'ஏழை வறியர்' இனம் என்பது: அறிவியலால் செல்வம் ஆதலின். தம்மைச் சூழ அறிவிலாரை அறிவுடையார் உடையராக; அதேபோல் அறிவுடையாரை அறிவிலார் உடையாக, இருந்து செல்வம் (அறிவு) என்னுடையரேனும் இலரென்று கூறி அறிவு எல்லோர்க்கும் பொதுவுடைமையாக வேண்டும், பரவ வேண்டுமென்க. அறிவிலார் முதல் எல்லாச் செல்வமும் உடையார் என்ருக்கி, எல்லாமிருந்து அறிவற்ற மக்களை ஒருவனும் (நாடும்) உடையராயிற் பயனில்லை என்க.

## 44. குற்றங்கடிதல்

**1.** செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

தாம் அறிவுடையர், எல்லா முடையர் என்ற செருக்கு. சினம் - ஒழுக்கத்திற்கே முதற் குற்றமென முதலிலிருந்தே குறிக்கொண்டு விலக்கப்படுவது. சிறுமை - அறிவையடுத்தலின் சிற்றறிவாம். சிற்றறிவும் குற்றமென்பது. சிறுமை - சிறிதளவுமாம்;

'பெருமைக்கு மாருனதுமாம்; சிறுமை பல செய்து சீரழிக்கு மென்றதால் பழியும் வறுமையுமாம்.

**2.** இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு
உவகையும் ஏதம் இறைக்கு.

அரசிறை தருதற்கு மக்கள் இவறலுமாம். செல்வத்தை இறுக்கித் தனதாக்கல் அரசற்கு முதற் குற்றம். மாண் பிறந்த மானம் - நாட்டுப் பெருமையில் பற்றின்றித் தற்பெருமையிலேயே பற்று. மாணு உவகை - மக்களையும் எதிர்க் கட்சியையும் ஒடுக்கி விட்டோமெனும் உவகை.

**3.** தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

பின்னல் தினைத்துணையாக வளரக்கூடிய (இப்போதைய) ஊசி முனைக் குற்றம்; தீ யெச்சம்போலத் தெறுவதாகலின், மக்களிடத்து வரினும் பனைத்துணையாக்கொண்டு நீக்குவர்.

**4.** குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம் பகை.

பொருளாக - பொருட்படுத்தி மறவாமல் மடியின்றிக் காத்தல்; இலேசாக மதித்து விடாமை, அறிவற்றம் காக்குமென்றது இக் குற்றத்தையே. அற்றம் - அவமானம் அரசர் பகைவரது குற்றத்தை மனதிற் காக்க வென்றலுமாம்; அதுவே பின்னர் அப்பகைவரை அழிக்கக் காரணமாகும். காக்க - அறிவற்றங் காக்கும் என்றதால் அறிவாற் காக்க என்க.

**5.** வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

எதிரதாக் காத்தலதுவே. எரி - சிறு தீப்பொறி. வைத்தூறு - 'எல்லாமுடைய' வாழ்க்கை. வைத்தூறுடன் குடியும் தானும் கெடும் என்பது குறிப்பு. மிக விரைவிலழியும்.

**6.** தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

தன் குற்றம் - சட்டத்திலுள்ள குற்றம். பிறர் குற்றம் - மக்கள் ஒழுக்கத்திலுள்ளது. ஒழுக்கங்கண்டு, திருத்தற்குரியது என்பது குறிக்க முதலில் தன் குற்றமென்றார். ஏதிலார் குற்றம்போல் என்றதுமது.

**7.** செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பால(து) அன்றிக் கெடும்.

கெடும் - செல்வமும் தானும் கெடுமென்க. முன்பும் இவறலும் என முதற் குற்றமாக்கினர். இங்குப் பல குறள்களில் இவறலைக் கடிதலால் இவறலே அரசற்கு முதற்

குற்றமென்பது. இவறல் - நாட்டு நலத்திட்டங்களை நிறை வேற்ருமை. செயற்பாலதோரும் அறனே. குற்றத்துள் செல்வத்தைப் பற்றி எடுத்தோதியமையால் செல்வத்தைப் பிறர் நலத்துக்காக்காமை மலையினும் மாணப் பெரிய, கடலி னும் பெரிய குற்றமென்பது.

8. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன்(று) அன்று.

முதலில் 'செருக்கும்' - இவறலும் எனவெல்லாங் கூறிய எற்றுள்ளும். பற்று அரசுக்குமாகாது. ராஜ ரிஷியாக வாழ்க என்பது. அறம் பொருளெற்றுள்ளுமாம்.

9. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

வியத்தல் - செருக்கு; எல்லாமுடைய செருக்கு; வல் லரசு என்ற செருக்கு. நன்றி - மக்களுக்கு நன்றியாகச் செய்யும் வினை. பொருளைப் பயக்கும் வினையுடன், (அறமும்) நன்றியும் பயக்க வேண்டும். பின்னும் வியந்தான் விரைந்து கெடுமென்ருர். வியத்தல் - தன் அழகு, செல்வம், ஆற்றலை வியத்தல்.

10. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

மக்கள் விரும்பும் நலன்களை அவரறியாமலே அறிந்து செய்யின் என்க. ஏதில - பகையாவன எனலுமாம். மக்கள் விரும்பியவற்றை அறியாமையால் தான் விரும்பித் தனதாக்கின் நூல் பகையாக்கி யழிக்கும் என்பது. நூல் அரச நூலிற் கூறிய சூழ்ச்சிகள்.

## 45. பெரியாரைத் துணைக்கோடல்

1. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

பொருளறிந்தே இன்பமறிந்தே மூப்போர் பலர். இவர் அறனறிந்தே மூத்தவர். வாழ்நாளெல்லாம் அறத்தை நினைந்தே தளர்ந்தவர். அறமே அறிவென்பது. திறனறி தல் - அடுத்தும் கொடுத்தும் தேர்தல். தேர்ந்து கொளல் -

பகைவர்க்கும் தமக்கும் நடுவானவரா, தம்பக்கமே உள்ளவரா எனத் தேர்ந்துகொளல். அறிவிலும் வயதிலும் மூத்த என்க; சாந்துணையும் கற்றவர்.

2. உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

உற்ற என்பது இறந்த நிகழ்காலங்களையும், உறு அமை எதிர்காலத்தையும் குறிக்கும். எனவே முக்காலத்துக்கும் துணை. பேணிக் கொளல் - அவரிடமிருக்கும் சில தீயபழக்கங்கட் (Eccentricism) கிடமளித்தல். நீக்கிக் காத்தல் - எதிராகக் காக்கும் அறிவுடைமை. வந்த நோயைப் போக்குவோரே உலகில் பலர். இனி அதுவராமல் தடுக்கும் சூழ்ச்சி சொல்லும் மருத்துவர் (அறிவர்) அரியர். அதுவே வெற்றி. தமக்குற்றதை நீக்கிக் கொள்வதோடன்றி அரசற்கஃதுறுமல் காத்தலுமாம்.

3. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பேணி என்பதுடன் 'தமரா' என்பதையும் சேர்த்தார். தமரா - உறவின் முறையாக, உரிமைக் குரியராகக் கொளல். நீத்தார் தவிர்ந்த மற்ருேர் 'செயற்கரியதும்' கூறினர். அரியவெல்லாம் கைகூடும் வழியென்பது குறிப்பு. அவர் பொதுவர், தமராதல் அரியரென்பது.

4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாந் தலை.

தம்மிற் பெரியார் - பெரியார் தம்முள் பெரியார்; பிளேடோ போன்றவர் கூறிய அறிவர் (Philosopher) அரசுக்குத் தலைமை யென்பது தமிழ்ப்பண்பு என்பது. தமராவொழுகல் - கொளலன்றி அவரே விரும்பித் தம்முடன் நட்பாதல். தன் வலி துணைவலி (வன்மை)யுள் தலை: மனத்திடமுமாம். பெரியாரது தமரும் தமக்குறவாக ஒழுகுதலுமாம்.

5. சூழ்வார்கண் ஆக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

சூழ்ந்து கொளல் - விடாமற் கொள்ளல்; எங்கும் எளிதில் தங்காமை அவர்க்கியல்பாகலின். கண் - ஒளியும்

கல்வியும் அறிவும் அவர். அவர்க்கிவன் கண்ணுமாம். சூழ்ந்த அரசர் இவன்மேற் கண்ணுக இருத்தலின் என்றுமாம்; அவ்வரசர் இப் பெரியாரைத் தமராக்கக் கண்ணுதலுமாம்.

6. தக்கா ரினத்தனுய்த் தானெழுக வல்லானைச்
செற்றுர் செயக்கிடந்த(து) இல்.

தக்கார் என்றதனுல் வேளாண்மை செய்தொழுக என்றது. கிடந்தது என்றதால் வெல்லுதல் 'இலேசன்' றென்பது. தக்கார் - படைத்தலைவரன்று: அறிவோர், புலவோர் என்பது. அவனைச் செற்றுர் அந் நாட்டிற்குச் செயத்தக்கதொன்றில்லை. அது முன்பே சிறந்திருக்குமாகலின் அதுவே (நாடு) தனக்குத்தான் தேடிக் கொள்ளும். அவனுக்குச் செயக் கிடந்ததில், தமக்குத்தாமே தீமை தேடிக் கொள்வர்.

7. இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்.

அவர் இடித்துக் கெட்டியா யிருத்தலின், அவன் அரணை இடிப்போர் (கெடுக்கும் தகைமையவர்) யாரென்க. அவனே அரணென்பது. 'அடுத்துக் கெடுக்கும்' தகைமையருமாம். கெடுக்கும் தகையருக்கும் 'நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே' என இடிப்பவர்.

8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

ஒன்னுர் வழுக்கியும் கெடுமென்பது. கெடுப்பாரிலான் - தானும் பிறரை வெல்லுமாற்றலில னென்பதுமாம். செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்பு மீண்டும் வற்புத்தப்பட்டது. எனவே அச்சொல் பெரியோரதென்பது. இடிப்பாரை - கடப்பாரை போன்ருர். வெளியில் இல்லாவிடினும் 'பல்குழுவும்' முதலியவற்ருல் கெடும்.

9. முதலிலார்க் கூதியம் இல்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

நிலை - மன்னர்க்கு மன்னுதல்; அதுவே ஊதியம். பெரியோரே 'முதல்' என்பது. மதலை - சால் பூன்றும் தூண்.

பொருள் அறிஞர் (Economists) துணையின்றிப் பொருளா தார நிலை இல்லை. 'இயற்றலும்' முதலிய இல்லை. 'முதல்' என்றதால் இது பெறப்படும். அரசு மாறினும் பெரியாரும் அவரது நூல்களும் தாங்கும் 'நிலை'.

**10.** பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

அரசர் பல்லார் நட்பும் நல்லார் ஒருவர் பகையை வெல்லாது[1] என்பது குறிப்பு. 'ஏந்திய கொள்கையார் சீறின்' என்றது காண்க. நல்லார் ஒருவரே அப்பல்லாரை யும் வெல்வர். பல்லார் பகை அப்போதே நாட்டை யழிக்கும். நல்லார் நட்பின்மையால் நாடு என்றும் உருவாகாத நிலையுறும். துறவற்க துன்பத்துட்டுப்பாயார் நட்பென்றது.

## 46. சிற்றினஞ் சேராமை

**1.** சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

சிற்றினம் பெருமையை (குணத்தை) யஞ்சுதலுமாம். சுற்றமாச் சூழ்தல் - தமராவொழுகல். சிறுமைக் குணங் களையே சுற்றமாகவுடைய சிற்றினத்தைப் பெருமையஞ்சும் எனலுமாம். பெருமை - முன்னதிகாரத்துப் பெரியார். எதிர்மறைமுகத்தால் முன்னதிகாரமே வற்புறுத்தப் பட்டது.

**2.** நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

மொழியினம், நாட்டினம். அறிவு - இலக்கியமும் நாகரிகமும் இரண்டும் இனத்தாலாகும். மணற்கேணிநீரும் களிக்கேணி நீரும். அங்கணத்துள் நீர்போல அறிவு கெடுதலுமாம். நிறம் என்றமையால் ஐவகை நிலத்துள் ளும் ஏற்ப நீரும் அறிவும் திரிதலுமாம். செம்புலப்பெயனீர் போல, நிலத்தொடு நீரியைந்தன்னர் என்றதால் சிறுமை யுடைய பெண்ணும் சிற்றினம் என்பது.

**3.** மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி யினத்தானும்
இன்னுன் எனப்படும் சொல்.

உணர்ச்சி - புலனுணர்ச்சியும் இன்பமும். இன்னுன் - ஒழுக்கம்; சான்ருண்மை - சான்ருேன் என்னும் சொல். கலையுணர்ச்சியுமாம். அவ்வுணர்ச்சியை உலகிற்குதவு தலால் இனமுண்டாகும். நண்பனைச் சொல், உன்னைப் பற்றிச் சொல்கிறேன் என்னும் வழக்குணர்க. சொல் மனத்தானும், உணர்ச்சி இனத்தானும் என்றுமாம். மனத் தானும் உணர்ச்சியும் சொல்லும், இனத்தானும் எனவும் இணைக்க.

**4.** மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்(கு)
இனத்துள(து) ஆகும் அறிவு.

அறிவு - மெய்யறிவுமாம். இனம் - குருக்கள்; மனத் தில் இனத்தால் வளர்வதென்க. மனத்தில் வளரும் சிற்றறிவு இனத்தால் பேரறிவாகும். 'உள்ளமே தகழி யாக' ஞானத் தீயால் என்ற அப்பர் பாடலைக் காண்க. நல்ல நாகரிக இனத்திற் பிறந்ததால் அறிவுடையன் என் னுதே, மனத்தைக் கண்டுரைக்க என்பது-

**5.** மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

மனத்தையும் இனத்தையும் இங்கிணைத்தது. மனந் தூய்மை - மனத்துக்கண் மாசிலனுதலாம் அறம். பொன் மலர் நாற்றம் போல செய்வினையும் தூய்தாம். இனம் - நண்பென்னும் நாடாச்சிறப்பு. மனத்தூய்மைசெய் வினை யுமாம். இரண்டும் என்றமையால் ஒன்றிருந்து மற்றதில் லாமை உலகில் பெரியது. இரண்டும் இன்றியமையா வென்பது குறிப்பு.

**6.** மனந்தூயார்க் கெச்சநன்று ஆகும் இனந்தூயார்க்
கில்லைநன் றுகா வினை.

எச்சம் - மக்கள். மனந்தூயரது நாட்டு மக்கள் நல்ல வராவர் 'அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்றது. நன் மக்களைப் பெறுதலே அறமென்றது. மகனறிவு தந்தையறிவு. பெற்ருேரின் எண்ணங்களும் குணங்களுமே குழந்தை

களிடம் படிகின்றன. அவர்க்காகவேனும் மனந்தூயராக வேண்டும்.

7. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும்.

மன்னுயிர்க்காக்கம் - செந்தண்மை பூண்டொழுகல். ஆக்கம் - உயிர்க் குணங்கள் வளர்ச்சி. புகழ் - அறம், ஒளி - மதிப்பு; திரு. மன நலம் பிறர்க்கும், இனநலம் தனக்கும் ஆக்கம்.

8. மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்(கு)
இனநலம் ஏமாப் புடைத்து.

எல்லாவற்றையும் துறப்போரும் இனத்தைத் துறத்த லாகா தென்பது. சுற்றத்தார் கண்ணேயுள என்றதுமது. தனித்திருக்கும் செருக்கு மனநலத்தார்க் கியல்பு, அதனை விலக்கியது. இனம்—ஆசிரியரும், மாணவரும். சான்றோர்க்கு உடல் நலத்தையும் உலகியல் நலத்தையும் ஆக்கித்தரும் இனம் வேண்டும். துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி என்றார். சான்றோர்க்கினமாகிய நலமுமாம்.

9. மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து.

ஏமாப்பென்றது மறுமையிலேயே, சொர்க்கமன்றி வீடு பேறு என்பது. மற்றஃது - இம்மை- மனமே ஒருவனுடன் மறுமைக்கும் தொடர்வது. மறுமை - அயல் நாடுமாம் அஃதும் - அம்மனநலம் இனநலத்தினும் சிறந்ததென்பது. இனமிருந்து மனம் இல்லையேற் பயனில்லை யென்பது. மன மிருந்து இனமில்லையேற் குறை இல்லை.

10. நல்லினத்தின் ஊங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில்.

அல்லல் என்பதால் துணை - இன்பம்; துணை யென்ப தால் அல்லல் - பகை. தீயினம் - நண்பர்க்கே கொள்ளி வைக்குமினம், குடியிருந்த வீட்டிற்கே தீ வைக்குமினம். அல்லல் - நரகமுமாம். துணை - நாயையும் சொர்க்கத்திற் கழைத்துச் சென்ற தருமனனைய துணை. தீயினம் - சேர்ந் தாரையும் கொல்லுமினம்.

## 47. தெரிந்து செயல் வகை

1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.

செய்பவன் இனம், கருமம், முதல், ஊதியம் நாடு ஆகியன அழிவதும் ஆவதும் ஆகி என்க. வழி பயக்கும் - சந்ததிக்கும்; தன் காலத்திற்கெல்லாம் பயக்கும்.

2. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்(கு)
அரும்பொருள் யாதொன்றும் இல்.

தெரிந்த இனம் - தெரிந்த மனையாளுமாம்; சிற்றினந் தவிர்த்துத் தெரிந்த பெரியோர்; எடுத்த செயல்பற்றிய அறிவு சிறந்த இனமுமாம். தேர்ந்தெண்ணல் - செய்ய வேண்டுவது தேர்ந்து செய்யுமுறை எண்ணல். தமராக் கொளலாகிய அரியது முடிந்திருக்க, அரும்பொருள் இல்லென்ருர். பொருள் - வினையும் பயனுமாகிய இரண்டும். செய்தற்கரியதெனத் தமக்கு ஒன்றுமில்லாது தெரிந்த இனமுமாம்.

3. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

ஆக்கம் - ஊதியம். செயலுக்குத் திறமைமட்டுமின்றி அறிவும் வேண்டுமென்பது. ஊக்கார் - நினைக்கவுமாட்டார். இழத்தல் - ஒன்றெய்தி நூறிழத்தல். தான் வாழ்தலைக் கருதி அழியும் வினை யென்க. அற்றங்காத்தலன்றே அறிவு.

4. தெளிவில் அதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர்.

இளிவு - பழி; பொருளே நோக்காது அறமும் நோக்க வேண்டுமென்றது; உயற்பாலதோருமென்றதனுன். தெளிவிலது-வகையறைச் சூழாமை, அறிவற்றதுமாம். பயனுலோ தோல்வியினுலோ வரும் இளிவு; (இழுக்கம்). தொடங்கார் - ஊக்கார்.

5. வகையறச் சூழா(து) எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு.

அழிவதூஉம் முதலாயவகை. செய்யும் பலவகைகளில் ஏதேனும் ஒருவகைபற்றி எழுக. பலவகையிலும்

செய்தல் கேடாம். பாத்திப்படுப்பது - தன்னரணுக்குள் அவரை விட்டுத் தான் வெளியேகிற்றல். பகை வேறொரு வகையால் சூழுமென்பது பகை - செயலின் பலமுனைகளுமாம் (Phases). எழுதல் - விட்டு விடுதல், ஆராயுமுன்பே வினைவேண்டாமென விடுதலுமாம்.

6. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

எனவே வினைக்கு ஓய்வென்பதில்லை. அல்லாத இடம், காலம், கருவி, துணைகளால் செய்தலும் கெடும், அழிவதைச் செய்தலும் ஆவதை விடுதலும் கேடாம்.

7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு.

துணிந்த பின்னும் எண்ணித் துணிக என்றாக்கி மீண்டு மீண்டும் பன்முறை எண்ணுக என்றது. முறை எண்ணித் துணிக என்பதுமாம். துணிதல் - தொடங்குதல். இழுக்கெண்ணித் துணிக என்றதுமாம்.

8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

பலர் - தெரிந்த இனத்தார் பலர்; தேவர் பலருமாம். ஒருவருடன் சூழாமல் பலர் துணைதேடற்க என்பது. செயல் நிகழும்பொழுது முயற்சியின்மையால் வந்த தளர்ச்சிக்குப் பின் பலரை நாடினும் பயனில்லை. ஆண்டு முழுவதும் சிறிது சிறிதே படிக்காத மாணவர் கடைசியில் தேர்வின்போது பலருடன் படிக்கினும்; பலர் சிபாரிசு செய்யினும் என்க.

9. நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்
பண்புஅறிந்து ஆற்றாக் கடை.

நன்று - அறம். பண்பறியாமை - அங்கணத்துள் உய்த்தல். பண்பு - துணை செய்வோர் பண்பு, திறம்; வரிசையறிதலுமாம். ஒரு வினையையே பல முறைகளில் ஒருவர்க்கு ஏற்றதொரு முறையாற் செய்தல். தவறு - தோல்வி, பழி, துன்பம். ஒரு நாகரிகத்தார்க்கு நன்மை - யென்பது மற்றவர்க்குத் தீமையாகலாம்.

**10.** எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

கொள்ளாத - உலகந்தழீஇய தல்லாதது. உலகம் பழித்ததொழிக. தாம் எள்ளியதைப் பிறர்க்குத்தான் செய்த லாகாது. உலகோரையும் துணைகொண்டு செய்க என்றது. உலகு - மக்கள்; மக்களுக்குப் பிடிக்காததை அரசன் செய்தலாகாது.

## 48. வலியறிதல்

**1.** வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

தன்வலியிருப்பின் மாற்றான்வலி, துணைவலிபற்றிய கவலையில்லை என்பது. எச்செயலுக்கும் எதிரிதோன்ற லுண்டாகலின் மாற்றான்வலி கூறினார். ஆகலின் அதனை எதிர்பார்த்தே செய்யவேண்டும். ஊழ் - வினை வலியும், மாற்றானது துணைவலியுமாம்.

**2.** ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

ஒல்வதென்றமையான் ஒல்லும் வகையான் அறத்தாற் றிற் செய்க என்பது. கட்டங்கல் - மனஈடுபாட்டுடன் செய்தல்; தொடர்ந்து செய்தல். செல்லான் கிழவனிருப் பின் என்ற விடத்துச் செல்லுதல் குறிக்கப்பட்டது. ஒல் வது - நடப்பது; அறிவது - செய்முறையறிவது. இது வினைவலி.

**3.** உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

உடைத்தம்வலி - ஒல்வது. வெறும் மனவூக்கத்தா லேயே ஒன்றைச் செய்துவிடமுடியாது. ஓரளவுவலியு முண்டேல் அது பெருந்துணையாகும். இடைக்கண் முரிதல் - வழிபயவாது, ஊதியமுமின்றி, பொருள் - வலிக்கேட்டுடன் முரிதல். தன்வலி கூறியது. உடை - உடைதல். கெடும் தன்வலியுமாம். பின் முடிவில் (நுனி) முரிவாரைக் கூறுவார் இடையின் முரிவாரையுங் கூறினார். தம்வலி - துணையுடன் தம்வலியுமாம்.

4. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

துணையுடனும் மாற்ருருடனும் அமைந்தொழுகல் துணையுடன் அமையாவிடில் உள்ளூரக் காரியத்தைக் கெடுப்பர். வினைமுடியுமளவும் மாற்ருர் மேலோங்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். வியவற்க எஞ்ஞான்றும் என்ருர். வியத்தலால் ஊக்கங்கெடும். விரைந்து கெடல் - கருமத்திற்கு முன்கெடல். வியத்தல் - தன்னை மிகவாக நினைத்தல். அமைந்தொழுகல் - அமைந்த தொழிலில் ஈடுபடல்; வியத்தல் - கிடைத்ததை விட்டு யான் அப்பெருந் தொழிற்குத் தகுதியுடையேனென ஏங்கிச் செருக்குதல்.

5. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

சாகாடு - சகடம். மயில் தோகைகளை கிரேக்க முதலிய நாடுகட்கனுப்பிய வணிக நினைவுடன் கூறியது. பிறர்க் கன்றி - அச்சுபோன்ற தனக்கே கேடென்றது.

6. நுனிக்கொம்பர் ஏறினூர் அஃதுஇறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

கொம்பும் ஒடிதல்போல வினையுங்கெடும். விரைந்து கெடாமல் வினையுடன் கெடுவான். முடிவுகாறும் செய்து ஏருமல் விடின் வினை பின்தானே வளருமென்பது, ஆக்கங் கருதி முதலிழத்தல் அதுவே.

7. ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

போரில் வீரர்க்கும், மற்ற வினையில் வினை செய்வார்க்கும் அளித்தலைப் பற்றியதுமாம். ஒரேயடியாகத் தராமல் திங்கள் தோறும் (ஆற்றின்) அவர் வாழ்க்கையளவறிந்தீக. ஈயுமாற்றின், பயனும் ஆற்றின் என்றுமாம்: பொருள் - தன்வலியுளடங்கும்; பொருள், கருவி, காலம் என்றலின் இது பொருள்வலி பற்றியது. சிறப்புடையதனை எடுத்தோதுகிருர்.

8. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

அவரால் வரும் வருமானத்தளவை ஈகை, தாண்டலாகாது; அது நுனிக் கொம்பாய்விடும். ஒரோவொரு பொழுது போகலாம்; ஆனால் நிலையாகப் போகாறகலக் கூடாதென்பது. மலையைக் கல்லி எலியைப் பிடித்தலாகாது.

9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

இல்லாகித் தோன்றாக் கெடல் - யாதுமிலன் என இன்சால்வென்சி (Insolvency) போடும்போதே தெரியுமென்பது காட்டாற்றுப் பெருக்காய்க் கெடல். உள போல - வகை மாண்டது போல.

தோன்றா - இனித் தோன்றா வகை.

10. உளவரை தூக்காத ஒப்புர(வு) ஆண்மை
வளவரை வல்லைக் கெடும்.

கடை வள்ளலர் ஒப்புரவை எண்ணிக் கூறியதுமாம். வரை - மலை. பாரியின் பறம்பு நாட்டீகையை நினைத்ததுமாம். ஒப்புரவெனப் போற்றினும் உலகியலுக் கெல்லார்க்கும் ஆகாதென்பது. செயப்பட்டார் சால்பென்றமையின் கேட்போரது மனத்தகுதி (உளம் - உள்ளம்) யாகிய உளவரையுமாம்.

## 49. காலமறிதல்

1. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

வேண்டும் பொழுது பகல் வெல்லும்: உரிய பருவத்தில் செய்தால் நல்ல நாள் பார்க்காமல் வேண்டும் பொழுது முடிக்கலாம். கூகையும் இகலும் இரவுக்குரியன. வினைக்குப் பொதுவாய்ப் பகல் சிறந்தது.

2. பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு.

கல்வியும், உழவும், திருமணமும் பருவத்தோடொட்ட ஒழுகத்தக்கன. திரு - நலன்கள். திருமகள் அனைய மனையாளுக்குக் கட்டும் தாலிக் கயிறுமாம்; ஒத்த பருவத்து

மணத்திற்காம் தாலி. திரு - அழகுமாம். இளைதாக முள் மரங்கொல்க என்பதுமது. திரு என்றதால் பொருளை இளமையிலே தேடிக் கொள்க என்றுமாம்.

3. அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

காலமறியும் கருவியால் என்க. நாழிகை வட்டில் (கன்னல்) கடியாரம் முதலியவற்றாற் காலமறிந்து செயின் என்க. செயற்கரியவும் முடியும். காலந்தவறாமை அரிய செய்யும் பெரியோராக்கும்.

4. ஞாலங் கருதினுங் கைகூடும் காலம்
கருதி யிடத்தாற் செயின்.

இடமறிதலும் இணைந்தது. ஞாலங்கருதினும் - உலகமே எதிர்த்தாலும் என்பது. வாமனன் போன்று ஞாலமும் பெறலாம். ஞாலம் - உலகத் தலைமையாகிய அரச பதவியுமாம்.

5. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

கலங்காமை - அமைதி. காலங் கருதலால் தனக்கும் அதனால் நாட்டிற்கும் அமைதி உண்டென்பது. விழிப்புடன், தளர்ச்சியின்றி நிற்றல் - கலங்காமை. கலங்காத ஞாலத் தலைமை கருதலுமாம்.

6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

ஒடுக்கம் - ஐம்புலனும் ஒருவழி நிற்றல்; அடையும் சிறு தோல்வியுமாம். உடையான் - மனம் உடையாதவனுமாம்; கலங்காமை அதுவே. தகர் என்றமையால், காலமறிபவன் விளையாட்டாகச் செய்து முடிப்பான் என்பது.

7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்(து)
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

உள் வேர்த்தல் ஒடுக்கம். புறம்வேர்த்தலால் வலி குன்றும்; உள் வேர்த்தலால் சூழ்ச்சி பெருகும். ஒள்ளியவர் என்றதனால் நல்லறிவிருந்தாலன்றி வினை செய்தலாகாதென்றது. ஒள்ளியவர் விதித்த காலம் பார்த்துள் வேர்ப்பர்.

8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காந் தலை.

அடிமை போல் நடித்தேனும் வினை முடிக்க என்றது. மண் குதிரையாய் நட்டாறு வரும்வரைச் சுமக்க; அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அனையராய்ச் சுமத்தலுமாம். இறு வரை - செயல் முடிவு. செயல் முடியும் வரை உறங்காதே, உறக்கத்திற்காகத் தலையைக் கீழே சாய்க்காதே என்றது மாம்.

9. எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

எய்தற்கரியது - காலம்; காலம் பொன் என்றது. அதனால் எய்தற்கரியதும் எய்துமென்பது குறிப்பு. மலரினு மெல்லிது காலம் என்பது அது. கடந்த காலத்தை மீண்டும் எய்தற்கரியதுமாம். எய்தற்கரியது - மனிதப் பிறவியுமாம். அப்பிறவிக் காலத்தே அரிய செய்க வென்றது; என்போடு 'இயைந்த' என்றார்.

10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

சிறகு முளைக்காமல் கூட்டிலேயே அடங்கிய காலமும், உணவு குத்துதற்காக வெளிச் சென்ற காலமுமாம். வலி நிறையும் காலம் வரை ஒழுக்கம் வேண்டுமென்றது. கூம்பல் - உள் வேர்த்தல். குத்தல் - செய்து முடித்தலும் பயன் நுகர்தலும். கூம்பல் - அரைத் தூக்கமும் அரிது யிலுமாம்; எண்ணுதலுமாம். எண்ணும்போது செய்யற்க, செய்யும்போது எண்ணற்க; (எண்ணிப் பின்) துணிக என்றது.

## 50. இடனறிதல்

1. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது.

முற்றும் இடம் - முடியுமிடம்; முற்றிலும் எண்ணிய பின் அல்லதென்றுமாம்: முற்றும் தொடங்கற்க எனலு மாம். தொடங்கல் - துணிதல். எள்ளற்க - முடியாதென விட்டு விடுதல். பொருள், கருவி முதலைந்தனுள் இடமறிதல் முதலென்றது.

2. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவுந் தரும்.

மன நலம் நன்குடையராயினும் இன நலம் போல்வது அரண். அரணென்றலால் போர்வினை பற்றியவும் இவ்வதிகாரங்களென்பது. அரண் - வினைக்குரிய காப்பான இடமுமாம். அரண் - துணைவலியுள் அடங்கும். தன்வலியுடன் துணைவலியின் சிறப்பு கூறியது. பொருள், கருவி, ஆள் முதலிய ஆக்கம்.

3. ஆற்ருரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்ருர்கண் போற்றிச் செயின்.

இடமறிந்து செய்யாதவரிடம் செயின் எனலுமாம். மாற்றி என்ருக்கி மீண்டும் வெல்லுவர் என்க. ஆற்ருர் - மொய்ம்பிலார். ஆற்றியடுதல் - சிறிது சிறிதாக வெல்லுதல்.

4. எண்ணியா ரெண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

எண்ணியார் எண்ணம் - ஏதிலார் நூல்; நீண்ட காலத் திட்டம். தன்னைச்சூழ்ந்தவரை இடனறிந்து துன்னிச் செயினென்க. எண்ணமிழப்பர்-பிறரிடத்துப் போர் செய்யும் எண்ணத்தையே விடுவர். அவர் அறிந்த இடத்தை முன் தானறிந்து செயினுமாம்.

5. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கி னதனைப் பிற.

நெடும் புனல் என்றதால் ஆழமானது, மடு என்ருகும். செயலுக்கு மிகவும் பொருந்திய இடமென்பது. அடும்புனலின் நீங்கின் ஆழ நீரன்றிச் சிறிது நீரிலும் பிற வெல்லும், சிறிது பொருந்திய இடத்திலும் பிறர் வெல்வர். பிற - நரியும் யானையை வெல்லும்.

6. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

கால் - (திங்கள் வலித்த கால்). தேர் நினைவும் நாவாய் நினைவும் மிகுந்த காலம் அது. நெய்தலில் முடிவது பிற நிலங்களில் முடியாது. பிற நிலங்களில் முடிவது நெய்தலில்

ஆகாதென்பது. தேர் நாவாய்ப் படைகளை உரிய விடத்திலேயே வெல்க என்றது.

7. அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின்.

அஞ்சாமை-மனத்திட்பம். அஞ்சாமையோ துணையோ எதுவும் வேண்டாமெனலுமாம். துணை வேண்டாம், அஞ்சாமை யொன்றே போதுமென்றுமாம். தன் வலியும் இடமும் போதும். எஞ்சாமை - எண்ணத்திற்கும் இடத்திற்குமாகிய இரண்டற்குமாம்.

8. சிறுபடையான் செல்லிடஞ் சேரின் உறுபடையான்
ஊக்க மழிந்து விடும்.

செல் இடம் - தோற்குமிடமுமாம். ஆயினும் அவன் இடத்திற் செல்லல் அழிவென்பது. செல்லிடம் - நுனிக் கொம்பரென்பது. தனக்காகுமிடத்தில் சிறுபடையான் செல்லின் பெரிய படை - யானையையும் வெல்லுமென்றுமாம்.

9. சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோ(டு) ஒட்டல் அரிது.

நிலத்தின் குணங் குறைகளை அறிவராகலின் அவரே வெல்வர். சீர் - முன்பு வென்ற புகழ். அரணில்லாவிடினும் மாந்தர் (வீரர்) மிக்குள்ள உறை நிலமென்க.

10. காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு.

வேல் வீரர் (துணை) களை மத்தகத்தே உடையது. காலாட் களரின் என்றதால் தொடங்கி, விடவுமுடியாது சிக்கிக் கொள்ளுமென்பது. வேலாழ் என்பதும் பாடம்.

## 51. தெரிந்து தெளிதல்

1. அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

உயிரச்சம் - அஞ்சுவதஞ்சல் என்றது. உயிர் நலன் (வீடு பேறு) பற்றிய அச்சம். அரசர்க்கு நான்கு பேறும் உண்டாக வேண்டுமென்ற அச்சம். மூன்றனையும் மன்னு

யிர்கள் எய்தற் பொருட்டு அவற்றைக் காக்கும் அச்சம்: பிழை உயிர் எய்தில் அடையும் பெரும் பேரச்சம்; நான்கும் அரசர்க்கும் வினையாளர்க்கும் பொதுவாம். அறமுதல் நான்கு பற்றிய அவரது கோட்பாடுகளையறியும் திறமறிக. உயிரச்சம் என்பதும் பாடம்.

**2.** குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

குடிப்பிறந்து - ஆன்ற குடிப்பிறத்தலாகிய பண்பாடுடைமை. குற்றத்தினீங்கி வடுப்பரிதல் - தன் குற்ற நீக்கிப் பிறர் குற்றமும் நீக்கல். வடு - நாவினுற் சுடும் வடுவைத் தவிர்த்தலுமாம். குடியிலுள்ள குற்றத்தினீங்கியதுடன் அதன் வடுவினைப் பரிதலுமாம். குடி - பரம்பரையாக அவ்வினைவல்ல குடி. பரியும் நாண் என்றதால் வீரர்| வில் நாணல் பகையறுத்தல் போல இவர் குண நாணல் அறுப்பர் என்றது.

**3.** அரியகற் றுசற்றுர் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு.

'அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்' என்பார். தெரியுங்கால் என்றமையான் நுணுகி நோக்க வேண்டுமென்பது. அரிதேயாகலின் குண நாடிக் கொள்க. வெளிறு அரிதாகுமாறு கற்ற என்றுமாம். அரி - குற்றம். குற்றத்தை அகற்றும் அறிஞருமாம். பதவிக்குரிய படிப்பெல்லாமிருந்தும் பயனில்லை என்பது.

**4.** குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

மிகை நாடி - அவ்விரண்டனுள் குற்றத்தினளவறிந்து. மிக்க - மற்ற குணம். கொளல் - கொள்ளற்க என்றுமாம். மிகை மிக்கதாயின் கொள்ளற்க. குணத்திலுள்ள குற்றமும் குற்றத்திலுள்ள குணமும் நாடியுமாம்.

**5.** பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

இது வினைக்குரியாரைத் தெளிதலின் கருமமே கட்டளைக்கல் என்றது. முற்கூறிய நான்கு குடிப்பிறப்பு, கல்வி

குணம் முதலியன கட்டளைக் கல்லாதல் பின்பே. கட்டளைக்கல் என்றதால் பெருமையின் (அளவு - தன்மை) அளவுப் பெருமைக்கும் சிறுமைக்கும் என்க. பெருமை உண்டாதற்கும் அஃதழிதற்குமாம். அவரது சொந்த வாழ்க்கை (கருமம்)யைக் கொண்டறிக என்றலுமாம்.

6. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.

அற்றார் - ஏற்போர்; அறிவற்றாருமாம்; பிறரிடமிருந்து பிரிந்து வந்தாருமாம். வினையிற்பற்றிலர். பழி - முதற்கூறிய அறம்பற்றிய அச்சம் இராது. முன்பின் கூறும் பெருமையும் காதன்மையுமற்றாருமாம்.

7. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.

உறவினர், அன்பினர் என்பதற்காகப் பதவி தருதல் பேதைமை. அறிவறியார் - அவ்வினை யறிவறியார். காதன்மை - அவ்வினையில் அவர்க்குற்ற ஆசை. அவரறியாமை தம்மறிவையும் பேதைப்படுக்கும். அவ்வினை பற்றிய அறிவே காலப் போக்கில் மறைந்துவிடும். காதல் காரணமாகப் பெண்களை வினையில் அமைத்தலுமாம்.

8. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

வழிமுறை - தன் காலத்துக்கும்; பரம்பரையினர்க்கும் அவன் தருதலன்றி அவன் பரம்பரையும், அவனைத் தொடரும் பிறரும் இடும்பை தருவர். அப் பொருந்தாதவன் தனக்குப்பின் தன் வழியினரையே அமர்த்துதலால் 'வழிமுறை தீரா' என்றார். வினையின் வழிகளிலும் முறைகளிலும் இடும்பையுமாம். தேரான் - தன் குறிப்பினைத் தேரானுமாம்.

9. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

வினையை முதலில் நினைத்து அதற்குரிய ஆளைத் தேடுவதைவிட கிடைத்த ஆளுக்கேற்ற வினைகளை நாடிச் செய்க. யார் யாரை எவ்வெவ்வகையில் ஆராய்தலென்றுமாம்.

10. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

தெளிவும் ஐயுறவும் என்றும் நீங்க மாட்டாவாகலின் விழிப்புடன் தவிர்க என்றது; 'நட்டபின் வீடில்லை' போல்வது. வழிமுறை தீரா இடும்பை என்க. வினை முடியாது. இடும்பை என்க. தேரான் தெளிவு - திறமிக்கவரை வினையில் ஈடுபடுத்தாமையால் அவரறிவு வீணாகி நாட்டிற் கிடும்பை யென்க. வினையில் அமைத்தவரிடம், நிலையாக அமைக்கப்படாமையின் (confirmation), உற்ற ஐயுறவும் இடும்பை என்க.

## 52. தெரிந்து வினையாடல்

1. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

நன்மையும் தீமையும் நாடல் - குணம் நாடிக் குற்றமும் நாடல் (Good and Evil). நலம் புரிதல் - அறத்தையே விரும்புதல். தலைவற்கு நலனை விரும்புதலுமாம். வினை செய்வார்க்குரிய நலங்களை அரசன் நாடுக என்றுமாம். தக்க இன்ன தகாத இன்ன என நாடல். நயஞ்சிறந்த என்பதும் பாடம்.

2. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை.

வாரி பெருக்கி வளம்படுத்தல் - இயற்றலும் ஈட்டலும்; நீர் வளத்தைப் பெருக்கலுமாம்; (தட்டோரம்ம இவண் தட்டோரே.) உற்றவை ஆராய்தல் - அதனால் மக்களுக்குற்ற நன்மை தீமைகளை ஆராய்வான். வினைவாரி பெருக்கி - வினையை மேலுமேலும் வளர்க்க. அரசுக்குரிய வரியை யன்றித்தன் வாரியைப் பெருக்குவானாகாது.

3. அன்பறிவு தேற்றம் அவாவின்மை யிந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

அன்பு - மற்ற வினையாளரிடம் அன்பு; தன் துணைவர், கீழிருப்போர். அறிவு - வினையறிவு, தேற்றம் - தெளிந்தான் கண் ஐயுறவின்மை; அவாவின்மையால் லஞ்சமும் கையாடலும் இல்லையாகும்.

4. எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுகும் மாந்தர் பலர்.

வினை - ஊழுமாம். ஊழால் வேறுவோரைப் பொறுக்க என்பது. மேற்கூறிய அன்பறிவால் தேறியக் கண்ணும், திருவேறு தெள்ளியராதலும் வேறென்றுற் போல்வது. அன்பறிவில்லார் வேறுவர். ஆகவே சிலகாலம் வினைக்கண் விட்டுப் பார்க்க.

5. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென்(று) ஏவற்பாற்(று) அன்று

வினையறிவும் திறமும் இருப்பினும் உழைப்பும் சுறுசுறுப்பும் வேண்டும். ஆற்றிச் செய்தல் - தங்கிச் செய்தல்; மருங்கொற்றியும் தாடவழ்ந்தும் செய்தல். பொறுமையுடன் செய்தல். அறிந்து - ஒவ்வொரு செயலையும் முறையையும் பற்றி நினைத்தல். ஏதோவொரு பழக்கத்தை எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியாகக் கையாளாமை. முற்கூறிய குடி கல்வி, முதலியவற்றிற் சிறந்தான்.

6. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)
எய்த உணர்ந்து செயல்.

இங்கும் தேர்ந்த பின் தேறுக தேறும் பொருள் என்றது. காலம் - பருவம். செய்வானது வயதையும் உணர்க என்றது. தொடங்குங் காலம் செய்யுங்காலம் முடிக்குங் காலம் உணர்தல்.

7. இதனை யிதனு லிவன்முடிக்கு மென்றுய்ந்(து)
அதனை யவன்கண் விடல்.

இதனுல் என்பதே இங்குச் சிறப்பு. மற்றவைபற்றி முன்பு கூறப்பட்டது. வேண்டிய கருவிகளை யெல்லாம் உதவினுலன்றி வினை முடியாது. செய்யும் தகுதியுள்ள பலருள்ளும் குறித்த செயல், குறித்த ஒருவராலேயே முடியுமஃதறிக என்றது. செய்முறையையும் கருவியையும் அவனறிவானென்னுமல் தானும் ஆய்க.

8. வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னுகச் செயல்.

உழைப்பின் பயனில் பங்கு தரவேண்டும் என்பது. தொழில் செய்வோர்க்கே தொழிலை உரிமையாக்குக

என்றது; உழுபவனுக்கு நிலத்தை உரிமையாக்குக. வினை செய்வோன் சொந்த காரியமென நினைக்குமாறு செய்தல்; அத் தொழிலில் அவனைத் திறமுடையனுக்குதல்.

9. வினைக்கண் வினையுடையான் கேண்மை வேருக
நினைப்பானை நீங்குந் திரு.

கேண்மை வேருதல் - அவனை வேலையினின்றும் நீக்குதல், வெறுத்தல். தொழிலிலேயே கண்ணுடையவன்; மேல் வினையாளனையும் தலைவனையும் சுற்றிச் சுற்றிக் காக்காய் பிடிக்காதவன். வேருக நினைத்தல் - அவன் உரிமைச் சுற்றத்தைக் கவர்தல்.

10. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

அமைத்து விட்டோம் என அவன் ஓய்வு (Retire) பெறும் வரைக் கவலையற்றிராதே. நாடோறும் அவன் நலனை (ஒற்றர் மூலமும்) நாடுக என்றது. 'நாடோறும் நாடி வினை செய்யா மன்னவன்' என்பார் பின்னும். வினை செய்வான் - சிறப்பாக நீதித் துறையாரும் காவல் (Police) துறையாரும்; பெரும் பதவியாளரும். உலகு மன்னனையும் வினை செய்வானையும் நாடுக என்றுமாம். இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் கோடாமை உலகு கோடாதென்றுமாம்.

## 53. சுற்றந்தழால்

1. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

பற்றறுதல் - ஏழையாதல்; வேலையை விட்டு நீங்குதல் பற்றறுதல் இருபக்கத்தாருக்குமாம். சுற்றத்தார் - வினை செய்வாரும் உறவினருமாம். காடு சென்ற குமணனிடம் புலவரது பழமை.

2. விருப்பருச் சுற்றம் இயையின் அருப்பரு
ஆக்கம் பலவுந் தரும்.

விருப்பு - அன்பு. அதனுலேயே அன்பறிவென்ற நான்கில் அன்பு முதலில் கூறப்பட்டது, அருப்பரு ஆக்கம் -

நாடாச் சிறப்பு. இறப்பளவும் விருப்பரு என்க. அது வளர்வதன் பாத்தியுள் நீராம்.

3. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந்(து) அற்று.

அளவளாவுதல் - கலந்துறவாடல். கோடு - மலை. மலை யூற்று நீரன்றி மழை நீரால் மட்டும் நிறைந்தற் றென்க. எப்போதும் வற்றுத பயனில்லை; கோடின்றி பல வழியிலும் சிதறி விடும். அளவு அளாவு என்ருக்கி அளவாக அளா வுதலென்ருக்குக. கரையற்ற குளம் வற்றிய காலத்து இருந்தவிடந் தெரியாமை போல இவனும் இருந்தவிடந் தெரியாமல் போவான். கோடில் வழி புது நீர் வருதலும் செல்லுதலுமாகிய அளவளாவுதலில்லை.

4. சுற்றத்தாற் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

சுற்றம் வந்து தன்னைச் சுற்ற வேண்டும். பெற்றம் - எருது. எருதின் சுற்றத்தால் கடாவடித்து அதரிதிரித்த நெற் செல்வம். அதுபோல ஆண்டுக் கெல்லாம் பயனுகும். இவனுந் தன்மையர்க்குச் சுற்றமென்பதில்லை. பொருள் வைப்புழி அது.

5. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

எல்லா இனமும் - அடுக்கிய சுற்றம். நாடு முழுவதும் உறவாகும். அருகுள்ள சுற்றம் இன் சொல்லாலும் தொலைச் சுற்றம் (அடுக்கிய) கொடுத்தலாலும் வரும். அடுக்கிய பல மட்டைகளாற் காக்கப்படும் வாழைபோல் வாழ்வான.

இன் சொல்லுடன் கொடுத்தல். வாழைப்பழ வாயும் கருணைக் கையும் சுற்றத்தை வளர்க்க மாட்டா.

6. பெருங்கொடையான் பேணன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

மாநிலத்தில் அனைவரும் அவன் மருங்குடையார் (துணை) என்க. மருங்குடையார் - துணைவலி. மருங்கு - இடை. அனைவரும் அவன் இடுப்பிலும் தோளிலும் வைத்துக் காக்கப்படுவர். கொடுத்தலும் இன்சொலுமே

இவ்விரண்டு மென்பது. பலர் சுற்றம் நெருங்காதிருக்க வெகுளியைக் கையாள்வர், அதனைத் தடுத்தது.

7. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

கரைந்துண்ணல்-செய்தித்தாளில் வெளியிட்டுண்ணல். சுற்றத்தாரைக் கண்டு மறையா துண்ணல்; விருந்து புறத்த தாயுண்ணல்.

நீரார் - கருப்பர்-திராவிடர்க்கே பகுத்துண்ணும் குணம் சிறந்ததென்பதுமாம். காவா - செய்யா வென்ருக்கி, எச்சிற் கையாலும் காக்கை யோட்டாமல் ஆனல் விளம்பரமடித் துண்ணுதல் உலோபிகட்கே யுண்டு.

8. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

அடிப்படைத் தேவைகளைப் பொதுவாக்கி மற்ற சிறப்புத் தேவைகளை வரிசை யறிந்தளிக்க, ஞாலம் பொது வெனப் பொருளுமாம். எல்லோரையும் விடாமல் வரிசை யாகக் கவனித்தல். திறனைப் பாராட்டுதலே சிறந்தோரைச் சுற்றமாக்கும் வழி.

9. தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

விலகிய சுற்றத்தையும் தழுவ வேண்டும். அமராமைக் காரணம் - இன்னுச் சொல்லும் வெகுளியும்; அடுத்த குறளில் கொடாமை யென்பது பெறப்படுதலின். துறந்த முனிவரும் சுற்றமாவர். அரசியலில் தன்னிடம் காரண மில்லாமலே எதிரிகளும் பகைவரும் தோன்றுவர். சுற்றம்- இளவரசரும், அமைச்சரும்.

10. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல்.

காரணம் - தன்னிடம் குறை. தன்னிடம் குறையில்லா விடில் கூட்டற்க. இழைத்திருத்தல் - இழைத்துணர்தல் - பலமுறை ஆராய்தல். இழைத்திருத்தல் நீங்காமைப் பொருட்டும், எண்ணிக் கொளல் தீங்கிழையாமைப் பொருட்டுமாம். அவனைக் கொள்ளுகிறேனே இல்லையோ காரணத்தை இழைத்து விடுக என்றது.

## 54. பொச்சாவாமை

1. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

வெகுளி, மகிழ்ச்சி இரண்டிலும் மறதி உண்டாகு மென்பது. அறம், மறைப்பொருள் (ஓத்து), உண்மைப் பொருள் ஆகியன மறக்கத் தகாதன. வெகுளி முதற் குற்றமாக இங்கும் வற்புறுத்தப்பட்டது. உவகை மகிழ்ச்சி யென இரட்டித்தலின் மகிழ்ச்சி - உடலின் பூரிப்பால் துள்ளிக் கவிழ்தல்.

2. பொச்சாப்பு கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புகொன் றாங்கு.

புகழ் அறிவு ஆகிய இரண்டினையும் பொச்சாப்பும் நிரப்பும் ஆகிய இரண்டும் கொல்லு மென்க. எனவே நிரப்பினால் மறப்பு வரும். அறிவழிந்தால் புகழழியும்; இவையெல்லாம் தொடர்புடையன.

3. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுஉலகத்(து)
எப்பால்நூ லோர்க்குந் துணிவு.

எப்பால் - நாற்றிசை. வடமொழியாளர், மேலைய கிரேக்க ரோமர், கீழைய சீனர் ஆகிய பாலார். புகழ்மை - அறம். புகழ் - உயிர்க்குணவு. உடலுணவினும் அஃதின்றி யமையாதென்பது எப்பாலார்க்கும் கருத்து.

எப்பானூலோரும் மறவாமல் சொன்னது.

4. அச்சம் உடையார்க்கு அரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

எல்லா நலனும் (நன்கு) இருந்தும் பயனில்லை, பிறர்க்கே பயன்படும். உள்ளழிக்கலாகா அரணாகிய அறிவினையும் கொல்லலின் அரணில்லை என்றார். காலம் இடமறிந்து செயல் மறப்பினும் அரணில்லை யென்றுமாம். அச்சத்திற் கும் நன்கில்லை யென்க.

நன்கு - அரணுக்கேற்ற அறக் கடவுள் பாதுகாப்பு மாம்.

5. முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

வருமுன்னர்க் காத்தல், இது சொல் மறவி பற்றியது. இழுக்குதல்-ஒன்றுனும் தீச்சொற் பொருட் பயனுண்டாதல். 'மறவாமை'யைக் காவாதிழுக்கியவனுமாம்.

6. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில்.

இதுவும் சொல்பற்றியது. வாயின் வழுக்காமை என்றிணைக்க. (யார்மாட்டும் என்றும்) என்பது ஓர் குறள் மரபு. யார்மாட்டும் - மெலிந்தோரிடத்தும். என்றும் - நிரப்புக் காலத்தும். வழுக்காமை - மறை பொருளை வெளியிடாமை. இழுக்காமை - மறந்தும் பிறன் கேடு சூழாமையுமாம்.

7. அரியவென் றுகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

பொச்சாவாக் கருவி - துணைவலி. செயற்கரிய செய்தற்கும் பெரியராதற்கும் பொச்சாப்பு தடை யென்பது. பொச்சாவாக்கருவி - மணியடித்து (Alarm) நினைவூட்டும் கடியாரமுமாம்.

8. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

புகழ்ந்தவை - அறம்; உயற்பாலதோரும் பழி யென்றமையான். போற்றலும் இகழ்தலும் மறவி பற்றியன. புகழ்ந்து அவை என்ருக்கிச் செய்ய வேண்டுவது பற்றிப் பேசிக் கொண்டிருந்து என்க. செய்யும் வரை அதுபற்றிப் பேசுதல் மறவாமைக்கு வழி. எழுமை - ஏழு வகை உயிர்கள்; மன்னுயிர்க் கெல்லாம் இனிதென்பது.

9. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

'கள்ளுண்ணப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்' என்றது போல மறவியைக் கடக்க வழி கூறியது. வலியார் முற்றன்னை நினைக்க என்ருற் போல்வதுமாம். மைந்து - செருக்குக் கொழுப்பு.

10. உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

இது மெய்ப்பொருளை மறவாமை. உள்ளியதுள்ளப் பெறல். ஓர்த்து உள்ளமுள்ள துணரல்; மறப்பின் மறப்பறி யாமை. உள்ளியதுள்ளல் - ஒருபோது நினைத்ததைப் பின் என்றும் மறவாமை. உள்ளியது - உலகத்தார் உள்ளத்து ளெல்லாம் உளனாக உள்ளியது.

## 55. செங்கோன்மை

**1.** ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

ஆராய்ந்து தனக்குரியவரெனக் கண்ணோடாதென்க. யார் மாட்டும் தேர்ந்து - குடிமக்களுடன் ஆராய்ந்து. உரியவர் செய்த குற்றத்தை மறைத்தலோ அன்றி உரிய வர்க்காக வீணே பிறரை ஒறுத்தலோ கண்ணோட்டம். முறை ஓர்ந்து - பல நாட்டுச் சட்டங்களையும் ஆய்ந்து.

**2.** வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

வானுக்கு மன்னவன்கோல் காரணமென்பது குறிப்பு. வானோக்கி என்றதால் மன்னன் தெய்வத்துள் வைக்கப் படும். உலகமெல்லாம் மன்னவனை வானாகக் கருதி வாழ் தலுமாம். ஞாயிறு திங்களை (வானை) நோக்கி வாழும் உலகம், அவற்றின் உலகமுவத்தல், வலனேர்பு திரிதல், பலர் புகழ நிற்றல், தண்ணளி ஆகிய தன்மைகளை கோலில் நோக்கி வாழும் எனலுமாம்.

**3.** அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

மாதவர் நோன்பும் மடவார் கற்பும் (அறம்) கோலால் ஆகுமென்பது. நூல் - மறையனைய உயர் நூல்கள்; கல்வி, கலை, அந்தணர் நூற்றலைச் செய்யும் (நூற்கும் - யாக்கும்) அறத்திற்கென்க. ஆதி பகவன் முதற்றே என்றவர் இங்கு ஆதியாய் நின்றதென்றார், எனவே கடவுளும் மன்னனும் இறையாயினர். திருவுடை மன்னரைக் காணில் என் றதுமது.

**4.** குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு.

குடிதழீஇக் கோலோச்சல் - மக்கள் ஆதரிக்க ஆட்சி (Democratic) செலுத்துதல்; அவர் கருத்தினைத் தழுவுதலு மாம். தழீஇ நிற்றல் - தாங்குதல்; அடித்தாலும் கால் கட்டிக்கிடத்தல். அடி - அவன் ஆட்சியின் அடிப்படைத் தத்துவங்களை (Basic Principles) உலக மெல்லாம் பின்பற் றலுமாம்.

**5. இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட**
**பெயலும் விளையுளுந் தொக்கு.**

மன்னவன் ஆட்ட எனப் பிரித்து விரலை யசைக்க, தலையை அசைக்க மழை பெய்யுமென்க. பெய்யெனப் பெய்யு மழை. விளையுளும் என்றது பெய்யு மழை நீரை வீணாக விடாமல் அறிவியலாற் பயன் படுத்தி விளைப்பா னென்றற்காம். முன்னோர், மக்கள், முறை இவற்றின் இயல்புள்ளி என்க. தொக்கு என்றதால் வித்தாமலே, முயற்சி யின்றியே தானே விளையு மென்க.

**6. வேலன்று வென்றி தருவது மன்னவன்**
**கோலதூஉங் கோடா(து) எனின்.**

கோலுள்ள நாட்டு வீரர் வீரத்துடன் வெல்வர். வேல் முதற் படை இன்றியும் வெல்வர் என்பது குறிப்பு. வேல் கோடாதெனின் என்றுமாம். வேல் கோடாமை-அறப்போர் புரிதல்; (போர்-அறம்). கோல் இல்லாத அரசனை மக்கள் வேலால் (புரட்சியால்), மாற்றுவர் என்றுமாம். என்றும் அரச வெற்றிக்கு முதற் காரணம் வேலே (படையே) என்பது. கோல் கோடிற்றெனின் அவனைவேலால் (புரட்சி) மாற்றுதலினும் அறப் போரால் மாற்றுக, என்பதும் குறிப்பு.

**7. இறைகாக்கும் வையக மெல்லா மவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்.**

முட்டாச் செயின் அம்மன்னனைக் கடவுளும் (இறை) மக்களும் காப்பர் என்க. முறை வைத்துக் காப்பர் என்க. தாங்களே வேண்டுமென முறையிட்டுக்கொண்டு காத்தலுமாம். முடியரசாயினும் குடியரசின் தன்மையிருக்கு மென்பது.

**8. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்**
**தண்பதத்தால் தானே கெடும்.**

'எண்பதத்தா லெய்தும்' பண்பாட்டுக்கு ஆசு காரண மென்பது. தண்பதம் - குளிர்ந்த வரவேற்பு (Cold Reception): எண்பதத்தானோர்தல் - எண்பேராயத்தால் ஓர்தலு மாம். சிலப்பதிகாரம் மணிமேகலையிற் காணும் ஐம்பெருங் குழு, எண்பேராயம் முதலிய பற்றிய குறிப்பாகலாம் இது.

9. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

புறங்காத்தல் - உடலை வளர்த்தல். குற்றம் - மனக் (உள்) குற்றம். எனவே மக்களது உடலையும் உள்ளத்தை யும் வளர்த்தல் கடன். குடிகள் இவனைப் புறங்காக்க இவன் குற்றங் கடிதலுமாம்.

இல்லாவிடில் அவற்கே அழியாப் பழி என்பது குறிப்பு.

10. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்.

கொலைத் தொழில் புரியும் கொடியாரையுமாம். களைப் பயிர்களை இடமாற்றுதலன்றி, அழித்து வீணாக்கி விட லில்லை, மாட்டிற்கிடுகிறோம். அதுபோலக் கொடியாரை அழிக்காமல் அவரைத் திருத்திப் பயன்படுத்துக வென்றது. கொடியாரையும் நல்லராக்குதலே செங்கோன்மை.

## 56. கொடுங்கோன்மை

1. கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்(டு)
அல்லவை செய்தொழுகும் வேந்து.

போரிற் கொல்லுதலும் அறமாகக் கூடுமாகலின் கொலையிற் கொடிதென்றார்; புலாலுக்காகக் கொலையாயின் அது சிற்றுயிர் பற்றியது; இது மக்களைப் பின்பற்றிய தாகலின் என்றுமாம். அலை-கடலலை. கடலில் வாணிகக் கப்பல்களைக் கொள்ளையடிக்கும் கடம்பர் போன்ற வேந்து மாம். அலைமேற் கொண்டல்லவை செயல் - அலைத்துப் பின் கொல்லுதலுமாம்.

2. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

வேலொடு நின்ருன் - ஆறலை கள்வர். இவ்வா றிருக்கும் நாட்டில் ஆறலைப்போர் மிகுவர் என்பது. கொடை, அளி என்பது போய் தானே இரத்தல் கொடுங் கோலாம். கோல் மேற்கூறிய அதன்மேற் கொள்ளும் கோல். குறித்த வரிக்கு மேல் எதனை (நன்கொடை) வற் புறுத்தி வாங்குவதும் கொடுங்கோலாம்:

**3.** நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும்.

நாடொறும் கெடல் - உள போல இல்லாகித் தோன்ருக் கெடல். நாடி முறை செய்தல் - மக்கள் வாசலுக்குச் சென்று நீதி வழங்கல். முறை வேண்டி வந்தாரையன்றி இயலாதவர்க்கு அரசே உதவி செய்து வழக்கை நடத்துக என்றதுமாம். மக்களது குணங் குறைகளை நாடி ஏற்பச் சட்டங்களை இயற்றுதலும் திருத்தலுமாம். நாடுதோறும் என்பதன் விகாரமுமாம்: பிற நாட்டு நீதி முறைகளையும் ஒத்து நாடியுமாம்.

**4.** கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

பொருளை எடுத்துக் கொண்டு பிற நாட்டிற் குடி புகுவர் மக்கள். சூழாது செய்யுமரசு - அறிஞருடனும் மக்க ளுடனும் சூழாதது. (Autocracy - சர்வாதிகாரம் Dictator Ship). குடி - மக்களாதரவை இழக்கும்; அன்றி வேறரசை ஏற்படுத்துவர். சூழாது செய்தல் - தான் மக்களை ஆதரி யாமையும், அவர் அரசை யாதரியாமையும். குடி - குடி நீர். சோறும் நீரும் இழக்குமென்க.

**5.** அல்லல்பட்டு ஆற்ருது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பி நிற்றல். அருவி நீர் கல்லை (மலை)த் தேய்த்தல் போலத் தேய்க்கும். கல் நெஞ்சக்கோலையும் தேய்க்கும். மக்கள் செல்வத்தை வளர்க்காததுடன் உள்ள அரசச் செல்வம் அவரையடக்கு தற்காம். படைச் செலவில் போய் விடலான், தேய்க்கும் என்ருர்.

அன்றே - அன்றைக்கே விரைவில் என்க.

6. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னுவாம் மன்னர்க் கொளி.

மனிதன் - மன்னன் இரண்டிற்கும் 'மன்' அடிப்படையாகலாம். 'வேந்தர்க் கொளி' என்ற ஒளி. இருள் மன்னும், எனவே கொலை. கொலை, திருடருக்குரிய இரவரசர் என்பது. ஒளி - புகழ், படையினலன்றி முறையினுற் பெறலே 'அரசப் புகழ்' என்பது. அவனழியினும் கோலழியாமையின் மன்னுதல் என்ருர்.

7. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழு முயிர்க்கு.

துளியால் உடலும் அளியால் உள்ளமும் வளரும். 'நன்னடை (ஒழுக்கம்) நல்கல் வேந்தர்க்குக் கடனே' என்ருர். துளி - இன்மை : சிறு வறுமை. அளி, சிறிது குறையினும் மக்கட்குக் கேடாம். துளியின்மை அளியின்மைக்குக் காரணமுமா மென்றது. துளி - உணவுக்கும் (முத்து) வாணிபத்திற்கும் காரணம், அளியின்மையால் இவை யிரண்டும் இன்ருவென்பது. துளி என்றதால் ஒவ்வோருயிரையும் (உயிர்த்துளி) நாடி அளி செய்க என்பது. துளி ஓரறிவுயிர்களை (பயிர்) வளர்ப்பது; மக்களது ஓரறிவும் வேலை செய்யாதென்பது. இறைவனையும் வான்சிறப்பையும் இணைத் துரைத்தது போல இங்கும் இணைத்தமையின் அரசன் கடவுட் கொப்பு.

8. இன்மையின் இன்னு துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

கோல் கீழ்ப்பட்ட கொடுங்கோலாயின் அது உலகில் இருப்பதே (உடைமை) இன்னுது, உடன் மாற்றத்தக்கதென்பது, கடும்புலி வாழும் காடு நன்று. உடைமை முறையென்ருக்கி பொருளைப் பற்றிய நீதி என்க. இன்மையினென்றதால் அங்கு இன்மை தான் இருக்கும்; உடைமையிருப்பின் அதுவும் இன்மையாகுமென்பது.

9. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

கோடி பெயல் - தாழ்ந்து கடலில் முகந்து மலையிற் ருழ்ந்து பெய்தல். கோடி - எல்லை, அளவு. மழை மிகுதி

யாக, வேண்டிய அளவு பெய்யாது குறையுமென்பது. கோடி - இறுதி. முறைக்கிறுதி யுண்டாக்கின் உறைக் கிறுதியாய் விடும். உறை - உடலுமாம். அரசன் உடல் குன்றுமென்பது. முறையே அரசனது கற்பு.

**10.** ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

ஆபயன் - ஆகும் பயனெல்லாம். அறு தொழிலர் - அறத்தை வரையறுக்கும் நீதி நூலாளர்: அந்தணர் நூற்கு மறத்திற்கு மென்றது. ஆபயன் - ஆ பசுக்கள் கன்றீனுமை. எருது பசுச் செல்வம் குறைதல், ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் என்ற தொடர்புங் காண்க. மறப்பர் - மறப்பினும் ஓத்துக் கொளலாகு மென்றதுமது. நல்லரசில்லை யேல் மக்கள் தன்னுணர் விழப்பர் (மறத்தல்). அறத்திற்காக நூலன்றி நூலுக்காக அறமன்றென்பதற்காக நூலைப் பின் கூறினர்.

## 57. வெருவந்த செய்யாமை

**1.** தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து.

தலைச் செல்லா வண்ணம் - கொலை தண்டனையை விலக்கியது. ஒத்தாங் கொறுப்பது - குறைவாகவோ மிகுதியாகவோ ஒறுத்தலாகாது. குறைவு குற்றம் செய்யத் தூண்டும்; மிகுதியே வெருவந்த செய்தல். தலைச் செல்லா வண்ணம் - மேல் அப்பீல் எடுக்காதபடி. தக்காங்கு நாடல் - சட்டத்தால் மட்டுமன்றி ஒற்றுலும் உண்மை வெளிப்படும் வரை ஆராய்தல். ஒத்தாங் கொறுத்தல் - தகுதிக்கும் வயதுக்குமேற்ப; இனிக் குற்றம் செய்யாத அளவு ஒறுத்தல்.

**2.** கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

விரைவில் வழக்கைத் தொடங்குக. ஆற அமர ஆய்க என்றது. (கொன்றச் சிலம்பினைக் கொணர்க) என்னுமை. நீங்காமை வேண்டுபவர் - அரசநீதித் துறையினரு

மாம். நெடிதாக்கம் - பெரியநாடு. விரைவில் வழக்குகளை முடித்தலும், கடுந் தண்டனையளியாமையுமாம்.

**3.** வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

வெங்கோல் - கொடுங்கோல். வெருவந்த செய்தல் - இவ்வதிகார ஐந்தாங் குறளிலிருந்து சொல்லப்படுவன. முற்பகல் இன்னா சூழின் பிற்பகலே கெடல் - ஒல்லைக் கெடல். துளியின்மை அளியின்மை என்றதால் மக்கள் உள்ளம் குளிர்ந்திருக்க வேண்டும். அங்கு அச்சத்தாலாய (வெருவந்த செயல்) வெம்மையே கூடாது.

**4.** இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

கொடியனெம் இறையெனல், முன்பும் உறைகோடி என்றார். மக்கள் வாக்குக்கு (Vote)! அன்றும் மதிப்பிருந்தமை காண்க. இறை - வரி வாங்குதலிற் கடியன். உறை - நாடுமாம். இறை - சிறிது நேரம் (வாழ்க்கையில்) கடியனா யினும் என்க.

**5.** அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

முகமலர்ந் தின் சொல் பற்றி மூன்று குறள்களில் வற்புறுத்துகிறார். குறைகள் எளிதில் அரசின் கவனத்துக்கு வரவேண்டும்; உடனே அது பற்றி ஆய்ந்தாவன செய்ய வேண்டுமென்பது. இவ்விரண்டியல்புகள் பேய்க்குமுண்டு; மக்கள் பேயாக மாறி விடுவார் எனலுமாம். மக்கட்கு என்றும் அச்சமே.

**6.** கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும்.

தொலை நாடுகளிலும் செல்லும் செல்வம் - நெடுஞ் செல்வம். கெடல் - வெளிநாட்டு வாணிபம் கெடல். கண்ணோட்டமின்மை வெருவந்த செய்தலாம். இன்னாமுகங் கூறி அடுத்துச் சொல் (கடுமை) கூறினார். அடுத்துக் கடுந்தண்டம் பற்றிக் கூறுவார். ஓர்ந்து கண்ணோடா தென்றவர் இங்குக் கண்ணிலனாயின் என்கிறார். இது

அளவினுற் கண்ணேடலாகலாம். வெளியாரிடம் வெருவந்த செய்யாமை.

7. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

கடுமொழி - நச்சு மொழி. கையிகந்த தண்டம் - ஒத்தாங் கொறுத்தலின்மை. அடுமுரண் - முரண் சேர்ந்த மொய்ம்பு. அமைச்சர், வீரரிடம் வெருவந்த செய்யாமை. மனமொன்றிப் போரிடார் என்பது; அதுவே முரண் தேய்தல். அரம் - வாளுமாம். அராவும் அரமாயின் அராவுதல் தன் கூர்மைக்கும் ஆமாறுபோல அளவான கடுமொழியும் தண்டமும் அரசர்க்கு வேண்டும் என்றுமாம்.

8. இனத்தாற்றி எண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.

சினத்தை இனத்தால் ஆற்றி. இனத்தாற்ருமை சினத்திற்குக் காரணம். சினத்தாற்றுதல் - அதே போன்ற வழக்குகளுடன் ஒப்பிட்டு ஆய்தல்; பிற நாட்டு வழக்கறிஞர் கருத்தையறிதலுமாம். தானே தலைவனென்ற செருக்கும் சினமுமாகா.

9. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

சிறை காப்பு - போர்க்காலத்தில் மக்களைக் காவாதவன்; அரண் கட்டாதவனுமாம். இவனுக்கே வெருவருதலாம். சிறை - சிறகு. மக்கள் தப்பித்து வேறிடத்தில் பத்திரமாக இருத்தல்; நாடு நாடாயின ஞான்று வருதிர் என விடுதலுமாம்.

10. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை.

கல்லார் - கல்நெஞ்சர். கல்லாக ஆக்கப்பட்ட மக்கள் கல்லதர் நெறிக் கள்வர். அவரைக் கட்டுப்படுத்தி வைத்தலே பிணித்தல். அது சிறிது கடுங்கோல் போலவே தோன்றலாம். நிலத்தைத் தாங்கும் அரசு - பொறையென்க. இன்றேல் அவர் பிரஞ்சுப் புரட்சி போன்ற புரட்சிகளை விளைப்பர். கல்லாராகிய அரசர் கைக்கொள்ளும் கொடுங்கோல் என்றுமாம்.

## 58. கண்ணோட்டம்

1. கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.

கண்ணோட்ட மென்னும் பெண் (காரிகை) உலகைப் படைப்பவள் (ஈனுபவள்). 'அழகு' உண்மையான் உலகுள்ளது. கண்ணோட்டக் கலை அவ்வழகை வளர்ப்பது. வெருவந்த செய்யாமையும் கண்ணோட்டம். கடுஞ் சொல்லன் கண்ணிலனுயின் என்றார். உறுப்புக்களுள் கண் சிறந்ததாகலின் அதனழகு கழிபெருங் காரிகையாயிற்று. அருளே சக்தி. அவள் உண்மையான் உலகு உள்ளது.

2. கண்ணோட்டத்(து) உள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

உலகியல் - இவ்வுலகம்; உலகத்தியற்கை. பொருளிலார்க்கும் கண்ணோட்டமிலார்க்கும் இவ்வுலகில்லை. உண்மையான பொறை அவரே யென்பது. கண்ணோட்டம் பிழை பொறுத்தலாகிய பழைமையுமாம். பொறை-பிணம். பிணம் போற் சுமையாவர்.

3. பண்ணென்னும் பாடற் கியைபின்றேல் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத கண்.

பாடலமைப்பவனும் இசையமைப்பவனும் போல வேறுபடும். பாடலுணர்ச்சியுடன் ஒன்றாத பண்போல உணர்ச்சியற்ற கண்கள் என்பது; கோளிற் பொறியாம். உலகியற் குருடர் என்பது.

4. உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினல்
கண்ணோட்ட மில்லாத கண்.

கழி கண்ணோட்டம் ஆகாது. அரை, காற்குருட்டுக் கண்ணும், ஓரக்கண்ணும், சாயுங்கண்ணும் போல அளவில்லாததாகும். அளவு - கருமஞ் சிதையாமை. அளவின்றி ஓடும் குதிரை குடல் அற்றிறப்பது போலக் கேடு தரும்.

5. கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும்.

கண்ணிற்கணிகலம் அணிவார் யாருமில்லை. எனவே கண்ணேட்ட மொன்றே கண்ணிற்கணி யென்பது. கண் புண் என்பது குறள் மரபு. அதனைத் தவிர வேறெதனையும் அணிய முடியாது. பிறர்மேல் கண்ணேறிட்டு வருத்தலால் ‘புண்’ என்பது.

6. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ(டு)
இயைந்துகண் ணோடா தவர்.

மரத்திற்கேனும் கண் (கணு) உண்டு. இவர்க்கதுவு மில்லை. இயைந்து அது பயன்பட இவர் பயன்படலில்லை; மண்ணோடு மண்ணுய் மட்கிப்போன மரமனையர்; வற்றல் மரமனையர். தன்னிடம் கண்ணோடியவர்க்கு நன்றியாகக் கண்ணோடாதவர் தன்னை வளர்த்த மண்ணுக்குக் கண்ணோடாத மரமனையர்.

7. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையு மில்.

கண்ணிலர் - குருடர்; எதிரிருப்பவர் தெரிந்தாலன்றோ கண்ணோடற்கு. உலகின்கண் - இலர், உடையார் என்றுக்கி மனிதன் என வாழ்பவராயின் கண்ணோட்டம் வேண்டுமென்க.

8. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை யுடைத்திவ் வுலகு.

இது செயற்கரிய செயல்; இவ்வதிகாரத்துள் மனத்திற்பதிக்கத் தக்கது. ஒன்று கருமம் இருக்கும், இன்றேல் கண்ணோட்டமிருக்கும். இரண்டும் அளவாயின் கூடும். அளவினுற் கண்ணோடல் இது. பிறர் கருமஞ் சிதையாமைப் பொருட்டுக் கண்ணோடலாம். காந்தியடிகள் அறப்போரும் (கருமம்) நிற்காமல் ஆங்கிலரிடமும் கண்ணோடினுர், அது போல்வது. உலகியல் அறிந்தமையின் உலகம் உரிமை யாயிற்று.

9. ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

பகையுள்ளும் பண்புள என்றதுவுமது. குற்றவாளிகளிடம் ஆத்திரப்படாமல் ஆய்தலும் ஒறுத்தலும் வேண்

டும். தலை ஒறுத்தாற்றும் - கொல்லும் தொழிற் கொலை யாளிகளையும் பொறுத்துத் திருத்தும் பண்பே தலையென்க.

10. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

நெல்லிக் கனியைத் தனக்கின்றி ஔவைக் கீந்ததும் கண்ணோட்டம். மேலும் மேலும் (துன்பம்) பெயக் கண்டு மென்றலுமாம். இறைவன் நஞ்சுண்டதுங் காண்க; சாக்ரடீஸ் உண்டதுமது. நஞ்சனைய சொற்களைப் பொறுத்தலுமாம். பிறர் தம்மீது நாகரிகத்தைப் பெயக் கண்டும் அவர்க்கு வரும் நஞ்சினை (துன்பத்தினை) ஏற்று மகிழ்வர். அமைதல் - பணி செய்து 'கிடத்தல்'. தமிழ் நாகரிகம் காட்டியது.

## 59. ஒற்றாடல்

1. ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

ஒற்று - விரல் - பாதம் இவற்றின் சுவடு (ரேகை) களாலும் ஒற்றி யறிபவர். முறை சான்ற நூலும் என்பதும் பாடம். உறை சான்ற நூல் - விளக்கத்தோடு கூடிய நூல். தலைமைப் புகழ் படைத்த நீதி நூலுமாம். அவர் கண்டுரைத்தது கொண்டு திருத்திய சட்ட நூல்களுமாம். இவற்றாலேயே உலகியலை அறிக வென்றது.

2. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

எல்லார்க்கும் எல்லாம் - இது ஓர் குறள் நடை. எல்லார்க்கும் - உரிமைச் சுற்றத்திற்கும், ஒற்றர்க்குமாம். எல்லாம் - அற முதல் எல்லாம்; மன முதல் மூன்றுமாம். எஞ்ஞான்றும் - இரவிலும். வல்லறிதல் - நிகழ்ச்சிக் கருகிலிருப்போர் அறியுமுன் அறிதல்.

3. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

பகைவர் ஒற்றி வெல்வர். பெற்றதை இழப்பான். பொருள் தெரிதல் - நினைத்ததைத் தெளிவுபடுத்திக் கொள்

ளுதல். கொற்றம் - அரசுமாம். ஒற்றித் தெரிதல் - நிழல் போலிருந்து மறைகளை யறிதல். ஒட்டுக்கேட்டலெனப் படுவது ஒற்றேயாம்.

கொளக் கிடந்ததில் - வெற்றி கிட்டாது; கிட்டினும் நில்லாது.

**4.** வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்(கு)
அனைவரையு மாராய்வ தொற்று.

சுற்றம் - அமைச்சர், படைத்தலைவர், புலவர், புரோகிதர், முதலோர்; துணைவலியினர். வினை செய்வாரது சுற்றமும் வேண்டாதாரும்; வேண்டாதாரது வினை செய்வார் முதலவருமாம். ஒற்று வினை செய்வாரது சுற்றமுமாம்.

**5.** கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

புலியின் தோல் போர்த்த பெற்றத்தின் ஐயப்படாத வேடம். கடா - பெற்றம். உகாமை - பகைவர் புகாமல் (ஒற்றர்) பார்த்துக் கொள்பவரே ஒற்றர் என்க. பகைவருடைய ஒற்றரும் ஐயப்படாத உருவமுமாம். உகாமை - எங்கும் தங்காமல் சுற்றிக்கொண்டே யிருப்பது ஒற்று.

**6.** துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்(து)
என்செயினுஞ் சோர்வில தொற்று.

இறந்தார் - ஒற்றித் தம் நாட்டுள் புகுந்த பகைவர். ஆய்ந்து ஒறுத்தாலும் மறையை விடாதது, மனந்தளராதது இரண்டுமாம். துறந்தார் - அன்று எச் சமயமும் சிறந்ததெனப் பாராட்டப்பட்ட தென்பது. இறந்தாராய்தல் - கடல் கடந்தும் சென்றுய்தலுமாம். என் செயினும் - பெரும் பொருளும் அரசும் தரினும்.

**7.** மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பா டில்லதே யொற்று.

மறைந்தவை - நீண்ட நாளுக்கு முன் நடந்து அடையாள மறைந்தவை. நினைவில் மறந்தவை. பூமிக்கடியில் மறைந்தவற்றைக் கொண்டும் அறியுந் திறம் வேண்டும். அவை - கூட்டம். பகைவர் நாட்டில் மக்கள் கூடுமிடத்தெல்லாம் மறைந்து கேட்டலுமாம். தம்மைக் கண்டு விடுவாரோ என்ற அச்சமிருப்பின் ஐயப்பாடு தெளியாது.

8. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினுல் ஒற்றிக் கொளல்.

மற்றுமோர் ஒற்று - தன்னுட் டொற்றனைத் தன் துணைவர் நாட்டு ஒற்றரைக் கொண்டு ஒற்றித் தெளிதலுமாம். இங்கு ஒற்று - நாட்டுக் காவற் (Police) படையுமாம். மீண்டுமொரு முறை சென்று ஒற்றி வரச் செய்தறிதல்; மற்றுமொரு இடத்திலும் மற்ருெரு நெறியாலும் ஒற்றுதலுமாம்.

9. ஒற்ருெற் றுணராமை யாள்க உடன்மூவர்
சொற்ருெக்க தேறப் படும்.

நிகழ்ச்சிக் கருகிருந்த சான்றுகள் (சாட்சி) மூவருடன் ஒற்றர் சொன்னதும் பொருந்தினுல் மிகத் தெளிவென்பது. அரசியலுடன் பற்றுக் கொண்ட மூவர் - உடன் மூவர். ஒற்றருள் அரசிற்குப் பகையிருப்பின் அஃதுட்பகையாகும். அமைச்சர், படைத் தலைவர், புலவர் ஆகிய மூவருடன் கலந்தாய்க.

மூவர் சொல் - மூன்று கோணங்களிலிருந்தாய்தல்.

10. சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தா னுகு மறை.

பெரிய விழாக்களில் ஒற்றரைப் பாராட்டலாகாது. சிறப்பு - விழா. அங்கெல்லாம் பகைவர தொற்றர் இருப்பாராகலின் இவர் ஒற்றரென்பது புலப்பட்டு விடும். தம் சிறப்புக்களை யெல்லாம் தம் ஒற்றர் அறியச் செய்யற்க. செய்யின் பகைவர் அவரை எப்படியும் தம் பக்கமிழுத்துக் கொண்டு அம் மறைகளை அறிந்து கொள்வர்.

## 60. ஊக்கமுடைமை

1. உடையார் எனப்படுவ(து) ஊக்கம் அஃதில்லார்
உடைய(து) உடையரோ மற்று.

ஊக்கமில்லாதவரை வினை செயற்குரியராக்கக் கூடாது. மனதில் ஊக்கத்தைக் காத்தற்கே ஊக்கம் வேண்டும். அறிவுடையார் போல ஊக்கமுடையாரும் எல்லாமுடையர். உடையர் - உயிருடையர். ஊக்கமில்லாதவர் உயிரில்லாதவர். உடைமை எனப்படுவது என்பதும் பாடம்.

2. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

உடைமை - கேடில் விழுச்செல்வம். பொருளினும் ஊக்கமாகிய உள்ளம், அறத்திற்கும் இன்பத்திற்கும் துணையாகலின் உடைமை என்றார். பொருளை வளர்ப்பதும் நிலைப்பிப்பதும் ஊக்கம்.

3. ஆக்கம் இழந்தேமென்(று) அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார்.

ஆக்கம் - நன்மைகள் - திரு. எல்லா நலன்கட்கும் காரண மென்றது. இல்லை உயிருடையார் எய்தாவினை என்பது போல ஊக்கமுடையார் எய்தா வினையுமில்லை. அவரிழத்தல் ஊழினாலன்றி இல்லை.

4. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

அசைவு - பொச்சாப்பும், மடியும். அதர்வினாய் ஊக்கமுடையா னென்றாக்கி நெறியறிந்து ஊக்கத்தைச் செலுத்துபவனிடம் என்றாக்குக. இவனிடம் வினவிப் பிறரிடம் செல்லும். இவனால் பலருக்கும் நன்மை யுண்டு.

5. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

வெள்ளம் செல்லும் இடமெல்லாம் மலர் பரவுதல் போல ஊக்கம் செல்லும் வினைகளிலெல்லாம் வெற்றியென்பது. எடுத்த காரியம் யாவினும் வெற்றி. வெள்ளம்-அளவு. ஊக்கத்தால் வெள்ளமென்னும் (எண்ணற்ற) அளவான நன்மைகள் உண்டாம்.

6. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

உயர்ந்த கோட்பாடுகளையே நினைத்தல். உயர்வு - செம்பொருளுமாம். செம்பொருட்காட்சி கிட்டாதாயினும் ஊக்கம் கிட்டச் செய்து விடும்; துருவனைப் போல் காண்பர். உயர்வுள்ளிய ஊக்கம் அழியினும் அவ்வுயர்வு நற்பயனைத் தரும். உயர்ந்த முடிபுகளைக் காணா விட்டாலும் சிந்தனையை வளர்த்தல் சிறந்த தென்பது.

7. சிதைவிடத்(து) ஒல்கார் உரவோர் புதையம்பின்
பட்டுப்பா டூன்றும் களிறு.

புதையம்பு - இங்குப் படை நெருங்கிய போர்க்களம். பிறவிப் பெருங்கடலில் புகுந்து தளர்வின்றி வெற்றி காண்பர். போரில் தான் அமர்ந்திருந்த யானை சிதைவிடத்தும் ஒல்கார், தனியே நின்று வெல்வரென்க. பாடூன்றும் உரவோர் ஒல்கார். களிறெறிந்து பெயர்தல் என்றமையால் யானைப் படை சிறந்தது.

8. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

வள்ளியர் - கொடையாளி. பொருளைத் தேடவும் அளிக்க வேண்டும் புகழ் வேண்டும் என்ற நினைவைவளர்க்கவும் ஆகிய இரண்டுக்கும் ஊக்கம் வேண்டும். செருக்கினைப் பிறர் செல்வத்தை எடுக்கப் பயனுக்காது கொடுக்கப் பயனுக்குக என்றது. கடை (சங்க) வள்ளல்களை நினைத்துப் பாடியதாகலாம் இது. எல்லாம் உடையமென்னும் செருக்குடைய புத்தேளுலகத் தலைமையும் போற்றுதலுமாம்.

9. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

கோடு பரியது கூரியது என்றுமாம். படை பெரியது, வலியது எனினும் ஊக்கமுடைய சிறு படையானிடம் செல்லா தென்பது; காந்தி அறப்போரின் முன் ஆங்கிலர் பெரும் படைச் செருக்கு செல்லாததுபோல.

பரியது - விரைவுடையதுமாம். யானைக்குப் புலி வெரூஉம் என்றுமாம். ஆயின் விரைவும், கூரிய நகமும் என்க.

10. உரமொருவற்கு உள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரமக்கள் ஆதலே வேறு.

முன்பும் மண்ணோடியைந்த மரமென்றார். மரமக்கள் - மரத்தால் செய்த மனிதவுரு (பொம்மை) வாகிய வேறுபாடு உடையர். அவரறிவு ஆறறிவன்றென்பது. அதுவும் வளரும் ஊக்கமற்ற வற்றன் மரமென்க. மரமக்கள் - நாகரிகமற்ற, மரக் காடுகளில் வாழும் மக்கள்.

## 61. மடியின்மை

**1.** குடியென்னுங் குன்ரு விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்.

குன்ரு விளக்கம், ஞாயிறு; குன்றிலிட்ட விளக்குமாம் நந்தா விளக்குமாம். இருள்வரக் கதிரவன் மறைகிருன் மாசு, விளக்குத்திரியில் கட்டும் சிட்டம், பக்கு. விளக்கு இருள்வர மாயுமெனல் பொருந்தாது. மாசு-மேகமுமாம். குடிக்கு விளக்காகிய மக்கள் என்றதுங்காண்க. பிள்ளை கள் மடியுற்ருல் குடிகெடும்.

**2.** மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

மடியா-செய்யாவெச்சம். மடித்தொழுகல், மடியைக் கொள்ளுதலில் சோம்பலா யொழுக என்றுமாம். ஒழுகல்-ஒழுகற்க; மடியை மடியிற் கொண்டொழுகற்க என்றுமாம். தனக்கன்று, குடிபற்றியே மடியாகா தென்றலின் ஒருவகை செயலும் முயற்சியுமெல்லாம், பரந்த குடி (இனம்) உயரவே ஆகவேண்டுமென்க.

**3.** மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினும் முந்து.

பேதையென்ற ஒருமையால் ஒருவன் மடியறக்குடி முழுதும் கெடுமென்றது: சுற்றம் உடுப்பதூவும் உண்ப தூவும் இன்றிக் கெடும் என்ருற் போல. தீயினு மஞ்சப் படும் என்பது. பேதை யென்றமையால் அறிவையழிக்கு மென்றுமாம்.

**4.** குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

உஞற்றிலவர்-ஆள்வினைக்குத் தோற்றுவாய். குற்றம் பெருகலால் தலைமுறைகளும் கெடுமென்றது. குற்றம் பெருகல் - இல்லறம் கெடல். பெருகல்-அடுத்த குடிகளும் கெடல். மாண்ட உஞற்றல் - தாழாதுஞற்றல். மடிமடிதல் வயிற்றில் மடிப்புத் தள்ளுதல்; சோம்புதல்.

**5.** நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

கலன் - கப்பல். வாணிபத்தில் மடியாகாது என்பது. கெடு நீரார் கலன்-கப்பல் காற்ருல் கவிழ்தல், திசை மாறல்; இக்கால நிலைகளைப் பெருங்காப்பியங்களிற் காண்க. ஆபரண மென்றல் பொருத்தமில்லை.

6. படியுடையார் பற்றமைந்த கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்த லரிது.

படியுடையார்- உலக மக்களெல்லாம் துணைவந்தாலும் வல்லரசு துணை புரியினும்; படி-பிரதி. ஒருசெயல் கெடின் அதற்குப் பிரதியாகச் செய்துதருவோர் துணையிருப்பினும் என்க.

7. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர்.

இடி, இடிக்குந்துணையாரது இடி என்னுஞ்சொல்-செவி கைப்பச் சொல். முயற்சியிலும் மாண்டது வேண்டு மென இருமுறை வற்புறுத்தியது. இடியெனச் சிரித் தெள்ளுதல். உஞற்றிலவர் இடிபுரிந்தென்ருக்கி பிற சோம்பேறிகள் இச்சோம்பேறியை எள்ளுவரென்றுமாம். மிகப்பட்டுச் செம்மாத்தல்.

8. மடிமை குடிமைக்கண் தங்கிற்றன் ஒன்னர்க்(கு)
அடிமை புகுத்தி விடும்.

ஒரு குடியையும் ஒரு அரசையும் அடிமையாக்குவது அம்மக்களது சோம்பலே என்பது. இந்திய ஆங்கில வரலாறு காண்க. மடிக்குடிகளிடம் அரசுதங்கின், மடிமை யரசிடம் குடிதங்கின் என வெல்லாம் கூட்டுக.

9. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

குடி, ஆண்மையுடைய என்பது குடி செயல் வகையிற் காண்க. மடியாண்மை-மாருத, கோட்பாடுடைய சோம்பல். முதலாளி (நாடுகளில்) வர்க்கத்திடம் இருக்கும் சோம்பல்.

10. மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு.

அடியளந்தான்-சிவன் அடியினை யளந்த திருமால். எல்லாம்-விண்ணவர் கோமான் விழுநூல்; நாகர்க்குரிய நாகரிகம் முதலிய. திருமால் திருமகளை மணந்து அடைந்த (தாயது) செல்வங்களை யெல்லாமெனலுமாம்.

## 62. ஆள்வினையுடைமை

1. அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
 பெருமை முயற்சி தரும்.

அரிய செய்யும் பெரியோரே முயற்சி யுடையவர்கள். பெருமையுடைய செயல்களை மேற்கொள்ள முயற்சி தானே வளரும். முயற்சி அரியவற்றை முடிக்கு மெனலுமாம்.

2. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
 தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு.

வினையற்றவர்க்கு உலகப்பற்றும் அறும். எனவே செய்யும் வினையில் தனது முன்னைய வினைகள் கெடுமாறு முயலவேண்டும்; முன்னைய வினை-பிராரத்தம். ஓம்பல்-ஓம்புக என்பது. வினைக்குறை தீயெச்சம் போலத்தெறும்.

3. தாளாண்மை யென்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
 வேளாண்மை யென்னும் செருக்கு.

வேளிரது ஆண்மை-உழவு; பயிர்த்தொழில் உழவு முதலிய தொழில்களெல்லாம் முயற்சி யாற்முன் நடக்கும். செல்லான் கிழவனிருப்பின் என்றதுமது. பிறர்க்குரியாளுய் வாழும் கொடைத்தலைமைக்கும் முயற்சி வேண்டும். வேள் ஆண்மை-முருகனது வீரம், வீரத்திற்கும் முயற்சி வேண்டும்.

4. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
 வாளாண்மை போலக் கெடும்.

பயன் மட்டுமன்றி அவ்வினையே கெடும், அவ்வினைக்கே இழுக்காமென்பது. பேடிக்கெதிரில் யாரும் படை தொடாரது போல அவ்வினையை யாவரும் செய்யாரென்பது. நகையும் பொழுது போக்குமேயாகும்; ஆகுல நீரது.

5. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
 துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

ஊன்றும் தூணுகிய சால்புடைமை வளரும். கேளிர் துன்பம் துடைத் தூன்றுதல்-குடிசெயல் வகை கூறிற்று. இன்பம்-முன் கூறியமடி, வினை விழைதல்-தாள்தந்தது உண்ணல், உட்கார்ந் துண்ணுமை. தூண்-ஆவுரிஞ்சிக் கல்போன்றவன்; இன்பம் விழையான் வினை விழைவான்-பயனைக் கருதாது (பற்றற்று) பணி செய்பவன் (கீதை).

**6.** முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

திரு-வினை. சிறந்த வினைகளை முயற்சி முடிக்கு மென்பது. கடலைக் கடைந்த முயற்சியே திருமகளைத் தந்த தென்றுமாம். முயற்சியின்மை நற்செயலையும் தீயதுள் புகுத்தி (ஆக்கி) விடும்.

**7.** மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னுள்.

அடிக்கீழ்த்தங்கு முலகு என்ருற்போலத் தாளுளாள். அதன் திருவடியில் தான் விழுதல் போல தெய்வம் அவனடியில் வீழும் என்பது. மடியுள்ளவன் மனைவியும் தூங்குவாள். மூதேவியாவாள். இவள் முயற்சியினும் அவள் மடியினும் உளாள் என்பது. உலகளந்த தாளில் (திருமாலது திருவடிகளில்) உளாள்தாமரையினுள். தாமரையினுள் என்றதால் தாமரையிட்டு முயற்சியை வணங்குவாள் என்பது குறிப்பு.

**8.** பொறியின்மை யார்க்கும் பழியன்(று) அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி.

பொறியின்மை-கண், கை இன்மை. கண்ணில்லை, காலில்லை யென இரத்தலாகாது; உழைத்துப் பிழைக்க வேண்டு மென்பது. அறிவறிந் தென்றதால் அறிவுயர ஆள் வினை தேவை என்பது. பொறி—வினைக் கருவிகளுமாம். வல்லவர்க்குப் புல்லும் ஆயுதம்.

**9.** தெய்வத்தான் ஆகா(து) எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

தெய்வம் (தேவர்) செய்யாததையும் (முயற்சியுடைய, மனிதர் செய்வர். தெய்வம் வகுத்தவகை யன்றிப் பயன்

தராது. முயற்சி ஊழையும் உப்பக்கங் காண்பதகாலின், கூலி தருமென்ருர். ஊழை மாற்றுதலரிதாயினும் சித்துக்கள் கை கூடுதலுமாம்.

10. ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா(து) உஞற்று பவர்.

உஞற்றுபவரது துன்பங்களை உலகோர் (காண்பர்) ஏற்பர் என்றுமாம். தவிர்க்க முடியாதாயினும் அடுத்த பிறவியிற் ருெடருமாறு தள்ளிப் போடுவார்; உப்பக்கம்-அடுத்த பிறவி; மார்க்கண்டேயன் கண்டமாதிரியென்க.

## 63. இடுக்கணழியாமை

1. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ(து) அஃதொப்ப(து) இல்.

அதற்கும் முகமலர்ந் தின்சொலனுக வென்றது. அதனை அடுத்துக் கெடுத்தல் - அடுத்தூர்தல். அதனையடுத்த இன்பத்தில் ஊர்தல் (மிகுதல்) அஃதொப்பதில் என்க. முகநட்டக நட்பொரீஇ விடல் போல்வது. துன்பத்திற்ருன் நகுதல் இன்றியமையாது.

எப்போதும் முகமலர்ச்சியுடனிருக்கும் கலையை வியந்தது.

2. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தி(ன்) உள்ளக் கெடும்.

அகத்தியர் கடலை உழுந்தாக்கியுண்டது போல்வது. அப் பிறவிப் பெருங்கடல் (வெள்ளம்) இறைவன் அடியை உள்ளக் கெடுமென்றது. உள்ளமென்றதனுல் பொருளாலோ உடலாலோ கடக்க முடியாத தென்பது. வெள்ளத்தனைய என்றதால் கப்பல் முழுகிப் போகும் இடும்பையாயினு மென்பது.

3. இடும்பைக்(கு) இடும்பை படுப்பர் இடும்பைக்(கு)
இடும்பை படாஅ தவர்.

பிறரது இடும்பைக்கும் இடும்பை படுப்பர். பாறையைத் தாக்கும் அலைபோல் உடையு மென்பது. தம்மை

வருத்த முடியாமையன்றி அதனுற்றலேயுங் கெடுத்தல் இடும்பைப் படுத்தல்.

4. மடுத்தவாய் எல்லாம் பகடன்னுன் உற்ற
இடுக்கண் இடர்ப்பா(டு) உடைத்து.

பகடு - களிறுமாம். மடுத்த வாய் - போர் முனைகள். பட்டுப் பாடுன்று மென்பது. பள்ளத்தில் வீழ்ந்த யானை போல்வானது இடுக்கண் இடர்தருந் தன்மை தென்றுமாம்.

5. அடுக்கி வரினும் அழிவிலா னுற்ற
இடுக்கண் இடுக்கண் படும்.

அடுக்கி வருதல் - படைகள் அலேயலேயாக வருதல் - போரில் இடுக்கணழியாமை பற்றியது. உள்ள அழிவிலான். அடுக்கிய கோடியாக வரலுமாம். அழிவிலான் - எதிர் சாய்ந்தொழுக வல்லான்; எலிப் பகை முன் நாகம் போல்வான்.

6. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்(று)
ஓம்புதல் தேற்ரு தவர்.

உடல் அறுவது பற்றி (மரணத்தைப் பற்றி)க் கவலேப் படமாட்டார் என்க. அற முதலன அற்றே மென்றுமாம்.

இது நடுநிலேமை (அமைதி) யுள்ளத்தைப் பற்றியது. அறுதலும் பெறுதலும் பற்றும் உள்ளமே 'தன்னலம்' என்பது.

7. இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாருக் கொள்ளாதா மேல்.

பிறவியே துன்பமுடைய தென்பது. உடம்பென்றதால் கொன்றன்ன இடும்பை வரினுமென்க. போரில் எதிரிப் படைக் கிலக்காகும் உடம்பைப் பற்றி வீரர் கவலாதது போல, துன்பத்திற் கெதிரிலும் கவலற்க என்றது. கலங்குதல் புறமுதுகிடுதலாகும். மேல் இடும்பைக் கென்ருக்கி முன் வினைக்கும், அடுத்த பிறவி வினைக்கும் இலக்க மென்றுமாம். அர்ச்சுனன் போலக் கலங்காது எழுந்து வெல்க என்பது.

8. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

இன்பம் விழைதல் இடும்பைக்குக் காரணம்; வேண்டுதல் வேண்டாமை யென்றதனல். எனவே தானே வரும் எதனிடத்தும் அமைதியாக நிற்க வென்றது. இடும்பை - உடல் துன்பத்தை இடும் - பை போன்றது: இடும்பைக்கே கொள்கலம். துன்பமனுபவித்தால் பின் இன்பமெனவும் துன்பத்தையும் விழையாதவன்.

9. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்ப முறுத லிலன்.

இன்பத்துளின்பம் - தலையாய இன்பம். வீட்டின்பமுமாம். வீடும் வேண்டா விறலினர் என்பது. வீட்டினை விழைதலும் பிறவிக் காரணம். இன்பத்துளின்பம் விழையாமை - இன்பத்தின் இடையிலும் பற்றற் றமைதியாக இருத்தல். இன்பத்துள் துன்பத்தையும் துன்பத்துள் இன்பத்தையும் அறிபவன் அவனே.

10. இன்னுமை யின்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னர் விழையும் சிறப்பு.

அலெக்சாந்தர் புருடோத்தமனை விழைந்த சிறப்பு. போர்ப் புண்ணை விழைபவனைப்பகைவரும் சிறப்புச் செய்வர். இன்ன செய்தார்க்கும் இனியவே செய்தல் அதனன் வரும். இன்னமையைத் தான் கொண்டு இன்பத்தைப் பிறர்க்காக்குபவன் ,அவன்.

## 64. அமைச்சு

1. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையு மாண்ட(து) அமைச்சு.

ஆண்டதமைச்சு என்றலுமாம். கருவியும் என்றதனல் உண்மையில் அரசியலை நடத்துபவன், கருவியாயிருப்பவன் அமைச்சன் என்பது. செயலையும் முறையையும் அன்றி செயலையும் செய்வினையாளரையும் நடத்துபவனென்க.

2. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட(து) அமைச்சு.

படை குடி முதல் ஆறனுள் அமைச்சு தவிர்த்த மற்ற ஐந்துடன் ஆருவதாக மாண்டது அமைச்சு என்க. இறை

மாட்சியிலும் அஞ்சாமையை முதற்கண் வைத்தார். குடி காத்தற்குரிய நூல்களைக் கற்றறிதலென்க.

3. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல(து) அமைச்சு.

பேணிக் கொளல் - உள்ள நண்பரைப் பேணிக் கொளல். அரசனோடு மற்ற வினை செய்வோரைப் பிரித்தது முதலாகக் கொள்ளலுமாம். இது பஞ்ச தந்திரத்துள் அடங்காது. பஞ்ச தந்திரம் வள்ளுவர்க்குடன்பாடாகாது. நினைத்த அளவில் பகையையும் நட்பையும் ஆக்க வல்லன் என்பது.

4. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல(து) அமைச்சு.

சூழ்ச்சித் துணைவன் என்றது. ஒருதலையாச் சொல்லல்- செயல் பற்றி யெல்லாம் முடிவு செய்பவன். வினைக்குரி யாரைத் தேர்தலும் தேர்ந்தபின் செயல்களைச் செய்தலு முரியவன். சொல்லாற்றல் மட்டுமின்றிச் செயலாற்றலும் உடையவன்.

5. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.

அறனறிந் தான்றமைந்த சொல்லான் - அறனறிந்து மூத்த அறிவுடையான். அவன் சொல்லும் செயலும் அறத்தை நிலைநாட்டவே என்பது. அறனறிதல் - அரச நூலறிதல். திறன் - போர்த் திறனுமாம்.

6. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.

மதி - யுக்தி, அனுபவம். நூல் - சுருதி- இயற்கை யறிவும் செயற்கை யறிவும்; மன நலனும் இன நலனுமாம். முடியாமல் முன்னிற்பவை எதுவும் நினைத்த வளவில் முடியும்.

7. செயற்கை யறிந்தக் கடைத்தும் உலகத்(து)
இயற்கை யறிந்து செயல்.

செயற்கை, இயற்கை; செய்யுளும் (நூலும்) வழக்கும். அறமின்ன தென்றறியினும் மக்களியல்புளிச் செய்தல்; பண்பறிந்தாற்றலதுவே. மற்ற நாடுகளின் இயல்பறிந்து

இயற்றுதலுமாம். செயற்கை - தன் நாட்டியல்; உலகத்தியற்கை - பிற நாடுகளின் இயலுமாம்.

8. அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

உறுதியுழையிருந்தான் - எப்பொழுதும் உறுதிப் பொருள்களைப் பற்றியே நினைத்திருப்பவன். உறுதி - மன்னுதல். மன்னர்க்கு மன்னுதலைக் கூறுதலுமாம். அமைச்சன் அறிவில்லாதவனேனும் தெரிந்த உறுதியைச் சொல்லுதல் கடன். அரசன் கடன் அறியானெனினும் எனவும் கூட்டுக. அரசன் தன்னிடம் நன்றி கொன்றுத் தீங்கிழைத்தானாயினும் கூறல் என்றது.

9. பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்.

பக்கத்துள் என்றதனால் தொலைவுக்குச் செல்லும் மந்திரிகளைப் (தூதுவர்) பற்றியதாகலாம் இது: அயல் நாட்டுத் தூதுவர் (Envoy). ஒவ்வோர் மந்திரி கோடியுறுமெனலுமாம்.

மந்திரியின் பக்கத்துட்டெவ்வோர் என்றுக்கித் தன் மந்திரியை வசமாக்கிக் கொண்ட பகைவரால் கோடி தீமையெனவும், பழுதெண்ணு மந்திரியை யுடைய பகைவரால் எழுபது கோடி நன்மை தனக்குறும் எனவுங் கொள்க.

10. முறைபடச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

முடிவிலவே செய்தல் - செயலெதுவும் முடியாது எனவே பயன் கிடையாமற் போம்; முடிக்காமல் நீட்டித்துக் கொண்டே செலலுமாம். திறனறிந்தானென்றவர் இங்குத் திறப்பாடிலாதவரென்ருர். முறைபட என்ருக்கி நீதி கெட எனலுமாம்.

## 65. சொல் வன்மை

1. நாநல மென்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று.

யாகாவாராயினும் நாகாக்க என்றலுமது; செல்வத்துட் செல்வமென இச் சொற் கேள்வியையே குறித்தார். அறு

சுவை நா நலத்தினும் ஒன்பான் சுவை நலமே சிறந்த தென்பது. நினைப்பினும் செயலினும் மனிதற்குப் பேச்சே மிகுதியாகலின் யாநலத்துள்ளது மன்றென்றார். கண், கை நலத்தினு மென்றுமாம்.

2. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

நூலாக்கமும் சொல்லாக்கமும் கேடும் வருதலால் என்க. வழூஉச் சொல் புணர்த்தலின்மை வேண்டும். அரசாக்கமும் கேடும் அமைச்சரது (Envoy) சொல்லால் வருதலுமாம். சோர்வு - மறதியுமாம். சொல்லவேண்டுவதை மறத்தலாகாது.

3. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

கேளார் - தன் சமய, அரசியல் கோட்பாட்டை எதிர்ப்பவர்; பகைவர். சொல்லைக் கேட்டவர் தன்னை நட்பாகக் கொள்ளவும், கேளாத அயலாரும் தன்னை நட்பாகக்கொள்ள விழையவும் என்க. விரைந்து தொழில் கேட்டாரும் கேளாருமாம்.

4. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளும் அதனினூஉங் கில்.

பொருளால் இன்பமும் அறத்தால் வீடும் தாமே பெறப்படும். முன்பு திறனறிந்தா னென்பது (635) இத் திறமையையே யாம். அற நூல்களும் பொருணயமுமாம். அற முதல் நான்கன் திறமறிந்து அஃததற்கேற்ப என்க. இன்பமும் என்னுமை இன்பம் (காமம்) சொல்லற்ற இடமாகலின்.

5. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

இயற்றும் நூலில் ஒரு சொல்லை எடுத்து வேறொரு சொல்லைப் போடுவதாகக் கூடாது. பாடபேதம் ஏற்பட முடியாமற் சொல்க. கூறியது கூறல் மாறுபடக் கூறல் ஆகாது. வெல்லுஞ் சொல்லின்மை யறிதல்—தருக்க நூற்றிறமறிதல்.

**6.** வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்ருர் கோள்.

எண்பொருளவாகச் செலச் சொல்லி என்றதுமது. கேளாரும் வேட்பச் சொல்லி என்க. சொற்பயன் - சொற் பொருட்பயன். தாம் வேட்ப சொல்லி - தா மின்புறுவது சொல்லி. மாசற்ருர் கோட்பாடுகளைப் பிறர் வேட்பச் சொல்லி எனக் கூட்டுக. பயனற்ற எளிய பொருள்களில் சொல்வன்மையைக் காட்டலாகாது.

**7.** சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

இகல்வெல்லலரிதென்பதனுல் உட்பகையை வெளிப் படுத்திக் (கீறி ஆற்றும்) சொற்றிறமுடையன். அரிது சொலல்வல்லன் என்க. அஞ்சுவதோரும் என அஞ்சுமிடங் கூறியவர் அஞ்சாமைக்குரிய இடமுங் கூறினுர். பகை வெல்லும் தூதுச் சொல் பற்றியது இது. சொல்லேருழவர் திறங் கூறியது.

**8.** விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

மக்களை யெல்லாம் அரசின் பக்கம் இழுக்கும் ஆற்றல் உடைமை கூறியது. நினைத்த திட்டங்களிலும் போரிலும் மக்களையும் வீரரையும் நடத்திச் செல்லும் சொல்லினன். இனிது சொல்லல் - இன்மொழி புணர்த்தல். ஞாலம் என்ற மையின் எதிரிகள் இருவரையும் இசைவிக்கும் (சமாதானம் செய்யும்) சொல்வன்மை பற்றியது. ஞாலம் - படையுமாம்.

**9.** பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர்.

மாசற்ற தேற்ருதவர் - கசடறக் கற்காதவர். குறள் பாடத் தெரியாதவர் காவியம் பாடக் காமுறுவர்; சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல். சொல்வது சிலவும் கேட்பது மிகவும் ஆக வேண்டும். மறைமொழிகள்: மாசற்றவை சிலவாகவே இருக்கும். மாசற்ற சிலரிடம் சொல்லாது மாசுற்ற பலரிடம் சொல்லக் காமுறலுமாம்.

**10.** இணரூழ்த்து நாரு மலரனையர் கற்றது
உணர விரித்துரை யாதார்.

இணை ரூழ்த்தும் என்றதனால் தனியாய்ப் பிறக்கவில்லை, மக்கட் கூட்டத்திற் பிறந்தானாகலின் அனைவர்க்கும் பயன் படவேண்டுமென்பது. அதற்கு விரித்துரைக்க வேண்டும். நாறு மலர் - மலராதது; மொட்டாகவே காய்வதுமாம்; தமியள் மூத்தற்றென்பது. பல நாட்டாரும், பல தலைமுறை யாரும் உணர வென்றுமாம். நாறு மரத்தனையர் என்பதும் பாடம்.

## 66. வினைத்தூய்மை

**1.** துணைநலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாந் தரும்.

பெரியார் துணைநலம்; துணைநலம் இன நலமாம். வினை இருந்தாலன்றித் துணை நலம் ஆக்கந் தரலில்லை. துணை வினைக்கே யாகலின் வேண்டியவெல்லாம் தருமென்றார். துணை - கருவியுமாம். துணை (நட்பு) வினைக்கரிய காப் பென்றார்.

**2.** என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

நன்றி - வினை உலகிற்கெல்லா முதவலின் உலகமெல் லாம் செலுத்தும் நன்றி. புகழ் என்றமையின் அறவினை யாயிற்று. நன்றி இவ்வுலகிலும் புகழ் வானுலகிலும் கிடைப்பதுமாம். என்றும்-பிறர் பாராத விடத்தும்.

**3.** ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

ஒளி - அறிவு. பொன்போல் ஒளிவிடும் என்றது காண்க. அறிவு (மூளை) மழுங்கும் வினைகளைத் தவிர்க. ஆஅதுமென்னு மவர் - வளரவேண்டிய இளைஞர்கள். ஒளி - உடல் ஒளியு மாம். தீவினையாளர்க்கு உடலும் கருத்தே ஒளியற்றிருக்கும்.

**4.** இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

பிறர் இடுக்கட்படினும் என்றுருக்கிப் பிறர்க்காகவும் இளி வந்த செய்யலாகா தென்க. முன்பும் புகழொடு என்றார். தன்னை யோம்புதலும் (தான்) தலையென்றமையின் தான்

இடுக்கட்படினும் எனக் கொள்ளற்க. அறிவோர் (காட்சியவர்) இடுக்கட் படினும் எனவும் கூட்டுக. நடுக்கற்ற காட்சி - மலர்தலும் கூம்பலும் இல்லாத அறிவு; துளக்கமில் காட்சி.

**5.** எற்றென்(று) இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

எற்றென்று என்றமையின் ஒருநாள் செய்துவிட்டுப் பின் (என்றைக்கும்) நாள்தோறும் ஆறுமல் இரங்குவது என்க. செய்ததனை நினைத்திரங்குவதினும் அந்நேரத்தில் வேறு நற்செயல்களைச் செய்தலே அத்துன்பந் தீர வழியென்றது. இரங்குவ ஒருவன் செய்வானேல் அவனைப் பற்றி இரங்குதல் ஆகாதென்பதுமாம்.

**6.** ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

ஈன்றாள் - பெற்ற பொன்னாடு (தாய்நாடு). நாட்டு மக்களது பட்டினி கண்டும் என்க. அது சான்றோர்க்கும் பழியாகும் வினையெனலுமாம்.

**7.** பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

பழி மலைந் தாக்கம் - கல்லார்கட்பட்ட திரு. சான்றோர் நல்குரவு - நல்லார்கட் வறுமை. மலைந்தென்றமையான் ஆக்கம் பெரிதாயினும் என்பதும் கழி என்பதால் வறுமை சிறிதாயினும் என்பதும் பெறப்படும். ஆக்கத்தினும் நல்குரவு புகழையும் நன்றியையும் பயத்தலால் தலையென்றது. சான்றோர்கழி - சான்றோர் நாட்டைவிட்டுக் கழியும். (இறையனாரகப் பொருள் உரை காண்க.)

**8.** கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

தாம் முடிந்தாலும் - தாம் இறந்தாலும், வழிமுறைக்கு எச்சத்திற்கு, எழுமைக்குப் பீழை தரும் என்க. கடிந்த - உலகம் பழித்தது. தாம் முடிந்தாலும் - தாமே முயற்சியின்றி முடிந்தாலுமென்பது.

9. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

நற்பாலவையும் அழக்கொண்டதாகாதென்பது. அழப் போதல் அழத்தக்க வழியிலேயே செலவாதல்: பிற்பயத்தல்- பிற்பகல் கண்டு விடல். நற்பால் - ஆகூழ். அழுத கண் ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை.

10. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

சலமும் நீராம். சலம் பிறமொழிக்கும் நாகரிகத்திற்கு முரியது. பிற நாகரிகத்தைத் தழுவிப் பொருள் செய்த லென்றுமாம். பசுமட் கலத்தில் நீர் பெய்து உலையேற்றிய தாம்; உணவு அமையாததுபோல வாழ்வும் அமையாது. சலம் - சித்து. சித்தினுல் பொன் செய்தல் நிலையான ஆக்கந் தராது.

## 67. வினைத் திட்பம்

1. வினைத்திட்ப மென்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற.

அஞ்சாமையல்லால் துணைவேண்டா என்றதுமது. மற்றைய கருவி, துணை வலி, கால முதலிய. அச்சமுடை யார்க் கரணில்லை, எண்ணியார் திண்ணியராகப் பெறின் என்றார்.

2. ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.

எற்றென்றிரங்குவ செய்யற்க என்பதனை விலக்கியது. வியாழ வெள்ளிகளது நூற்களைத் தொகுத்ததன்றிது. குறள் அந்நூற் காலத்திற்கும் பிற்பட்டதென முன் நிறுவ வேண்டும். தர்ம சூத்திரங்களுடன் ஒப்புமைப் பகுதி யிருக்கலாம். ஆனல் எது முன்னையதெனத் துணிய ஆதாரம் வேண்டும்.

3. கடைகொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும்.

இடைக் கொட்கல் - அரை குறையாக முடிதல். வினையை முடிவு பெறச் செய்யவேண்டும். போரை முடித்து வெற்றி பெறுதல் மட்டுமன்று, வினையை முடித்து வெற்றி பெறுதலும் ஆண்மையென்றது. வினையே ஆடவர்க்குயிர்.

4. சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்.

செய்யக் கூடியவற்றையே சொல்; எனவே குறைவாகப் பேசு, நிறைய செய்யென்பது. செயற்கரிய செய்தல், சொல்லுதல் என்க. உலகில் பெரியோர் அரியரென்க. எண் பொருளவாகச் செலச் சொல்லி என்றார். எளியவற்றைச் சொல், அரியவற்றைச் செய்யென்றுமாம்.

5. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி யுள்ளப் படும்.

அரசியல் வரலாற்றில் (கல்வெட்டில்) பொறிக்கப் பெறும். ஏனாதி, காவிதி போன்ற பட்டங்களால் உள்ளப் படும். எழுமை எழு பிறப்பும் உள்ளப்படும்.

6. எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

முதற் குறள் விளக்கமிது. எண்ணியாங் கெய்தல்- சொல்லிய வண்ணம் செய்து காட்டுவர்; அதே காலத்தில் அதே விடத்தில் செய்து முடிப்பர். ஆங்கு - தேவருலக இன்பத்தை மண்ணுலகிலேயே எய்துவர். சால்பென்னும் திண்மையுமாம்.

7. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னார் உடைத்து.

அச்சாணி - மெலிவு, கருமையுடையது. மெலிந்தவர் கருப்பர் என எள்ளற்க என்பது. சேமவச்சனையருமாம். பெரிய உடலை இயக்குவது சிற்றுயிரேயன்றோ?

யானையை எறும்பும் வெல்லும்.

8. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

அறிவு திரியாது கண்ட வினைக்கண், மடியும் இடுக்கண் அழிதலும் இன்றித் தூக்கமும் இன்றி என்றும் விழிப்புடன்

செயல். கண்ட கண்ட வினைகளில் மனத்தை ஓடவிடா மலுமாம்.

**9.** துன்பம் உறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

இன்பம் பயத்தல் - தானின்புறுவது உலகின்புறல். வினை இன்பமே பயக்கும் ஆகலின் துணிவாற்றிச் செய்க என்பது. துணிவாற்றி இன்பம் பயத்தல் - உறுதியாக இன்பம் பயத்தல். உறவரல் - அடுக்கிவரல். பழவினைத் துன்பமுறவரினும் மெய்வருந்தக் கூலிதருமாகலின் செய்க என்றுமாம்.

**10.** எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா(து) உலகு.

எனைத் திட்பம் - சொல் திட்பம், மனத் திட்பமுமாம். மனத்திட்பமும் வினைத்திட்ப மில்லாவிடிற் பயனில்லை. எதுவிருந்தும் செயலில்லாவிடிற் பயனில்லை யென்றது. இயந்திரமிருப்பினும் ஓட்டுவோன் வேண்டும்.

## 68. வினை செயல்வகை

**1.** சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

துணிவெய்தல் - கலங்காது காணல். துணிந்த நேரமே செயத்தக்க நேரம், வேறு பஞ்சாங்கம் பார்க்க வேண்டா மென்றது. மனத்துணிவே காலமறிதல். தாழ்ச்சி - மடியும் மறதியுமாம்.

**2.** தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

விரைந்தும் பொறுத்தும் (மெல்லவும்) செய்வனவற்றை அறிக. அறத்தினை விரைந்தும் இன்பத்தினைப் பொறுத்தும் செய்தல் போல்வது. தொழிலாளரை வாட்டாமல் ஓய்வு கொடுத்துச் செய்வனவற்றை அவ்வாறு செய்க. தூங்கியும் தூங்காமலும் - இரவிலும் பகலிலும்; பிறர் அறியவும் அறியாமலும் செய்வனவுமாம்.

3. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

ஒல்லும் வகையான் அறவினை, செல்லும் வாயெல்லாம் செயல். தனக்கியலும் போது நன்று, அன்றி வினை முடியும் காலம் வரின் அப்போது செய்தலும் நன்றென்பது. வாய் நோக்கிச் செயல் - வினை செய்யாத வரையில் அது பற்றிப்பேசிக் கொண்டிரு என்றது. காலம் இடம் முதலிய ஒல்லும் வாய் அன்றி அவற்றுள் ஒன்றிரண்டு குறையினும் குறையில்லை.

4. வினைபகை யென்றிரண்டின் எச்ச நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

பகையை அடுத்தலின் பகை நீக்கும் வினையென்க. நினையுங்கால் என்றமையான் எச்சம் மனத்திலுமாகாது. சிறுவிதை பெரு மரமாதல் போல, பாம்புச் சிறு குருளை போல என்பது.

ஒரு நாட்டுப் பகை பல நாட்டுக்கும் பரவும்.

5. பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

இருள் - பகை. பின்பும் இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று என்பார். பொருள் - ஊதியமும், வினைக்காம் செலவும். ஐந்தும் இருள்தீர எண்ணி - வினைக்கு ஐம்பொறி என்று எண்ணியுமாம்.

6. முடிவு மிடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

இடையூறும் பயனும் - அழிவதும் ஆவதும். படுபயன்-நிலைத்த பயன். முடிவிற்குப் பின் அம்முடிவினால் வரும் இடையூறு. முடிவு - அதனாலுறும் உயிர்ச் சேதமுமாம்.

7. செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

செய்யும் வினைத் துறை பற்றிய அறிஞரைக் (Expert) கலந்து செய்க. தலைவனும் செய்வானும் ஒருவர்க்கொருவர் மனம் பொருந்தி நடக்கவேண்டும்.

8. வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

ஒரு பகை யழிப்பிலேயே பிற பலபகைகளையும் அழித்தலாக முடிதல்; ஒரு சமாதானத்தால் பிற பலரும் சமாதானப்படல். அறவினையால் பொருளின் வினைகளையும் ஆக்கிக் கோடல். வினைக்குரியார் ஆடவராகலின் நனை கவுள் யானையால் என்றார்.

9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை யொட்டிக் கொளல்.

வினைகள் இனிதே முடிதற்கு பகை யென்பதே உலகில் இருத்தலாகாதென்றது. விரைந்து ஒட்டிக் கொளல் வினை விரைந்து முடியும் வழியாம். பிற பகைவர் இருவரைச் சமாதானப்படுத்தினால் அவரிருவரும் தமக்குத் துணையாவர்.

10. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார் பணிந்து.

உறை - ஆயுள். போரில் அழியவிருக்கும் நம்மவரும் பகைவரும் நடுங்குதலறிந்து சமாதானங் கூடுமேல் ஏற்றுக் கொள்வதே இருசாரும் உய்யும் வழி என்பது. உறை - நாடுமாம். வல்லரசுகள், சிறு நாடெனச் சிதைத்தலாகா தென்றது.

## 69. தூது

1. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

அன்பும் குடிப் பிறப்புமே, இவ்விரண்டும் பண்புடைமை என்கிறார் பின்பும். பண்பாடும் நாகரிகமும் உடைய குடியினர் தூதுவர். அன்புடைமை யான்ற குடியென இணைக்க. என்பும் பிறர்க்கீயும் குடி. அயல் வேந்தரும் அவாவும் பண்புடைமை; அரசின் கோட்பாடுகட்கு மாறு படாமையுமாம். வேந்தவாம் பண்புடைமை யென்றதால் ' அரசுகளால் நாகரிகம் ' வளருமென்பது.

2. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்(கு)
இன்றி யமையாத மூன்று.

காதன்மை கந்தாகத் தேர்ந்த அறிவறியானல்லன்; அறிவுடையவன் என்பது. முற்கூறிய சொல்வன்மை; தன் வேந்தனிடம் அன்புச்சொல்; பகை வேந்திடம் அறிவுச் சொல்வன்மை.

**3.** நூலாருள் நூல்வல்ல னுகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

வேலாருள் என்றதால் அவர் வேலைக் கீழே போடும் படிச் செய்யக் கூடிய நூல்வல்லன் என்க. இவன் போர் முகத் தூதுவன். அரசியல் நூலாருள் வல்லனென்க. நூலறிந்தோர்க்கும் அதனை மேலும் விளக்கும் நூல்வல்லனு மாம். நூலாருள் என்றதால் புலவர் தூதுக்குரியர் என்ப தாம்.

**4.** அறிவுரு வராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

உரு - பின்பு படைத்தகையாற் பாடு பெறுமென்றார். தோற்றப் பொலிவு - உரு. நுண்மாணுழை புலத்துடன் எழில் நலமும் உண்டாயின் வேண்டு மென்பார். கல்வி - அறிவுடன் கல்வியும். செயற்கையும் உலகத்து இயற்கை யும்; மதி நுட்பமும் நூலும்; உருவிற்கு முன் அறிவு வேண்டும்.

**5.** தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

அயலரசிடம் காவாத நீக்கல். தன்னரசிடம் நன்றி பயத்தல். தொகச் சொல்லல், நகச் சொல்லல் - பிற நாட்டுத் தூதனுய்ச் செல்லும் அமைச்சன் (Envoy) மிகுதி யாகப் பேசக் கூடாது; வெகுளி கடுஞ்சொல் என்பதே கருதலுமாகாது. நன்றி-தன்னரசிடம் விசுவாசம் (Loyalty).

**6.** கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாந் தூது.

சொல்லேருழவர்க்கும் அஞ்சாமை வேண்டும். கண் ணஞ்சாமை அதுவே. எண் பொருளவாகச் சொல்லி, அவர் உள்ளத்து மறைகளைக் காலத்தாலறிந்து வருவது, எஞ்சாமல் அவர் கருத்தையறிதல்.

**7.** கடனறிந்து காலங் கருதி யிடனறிந்(து)
எண்ணி யுரைப்பான் தலை.

எண்ணியுரைத்தல் - சொற்களை (ஒன்று இரண்டென எண்ணி) அளந்து உரைத்தல். உழையிருந்தான் கூற லாகிய கடனறிந்து என்க

**8.** தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

தூய்மை - அழுக்காறு முதலிய நான்கு மில்லாதவன். அவனே பொருளுக்கும் பிறவற்றிற்கும் அறை போகான். துணைமை - தன் அரசியற் கோட்பாட்டில் உண்மையான துணை. ஜனநாயக அரசின் தூதன் பொதுவுடமை (Communist) வாதியாகாத, துணை போல்வது.

வாய்மை - இல்லாததையே வாய்மையிடத்ததாகச் சொல்லித் திரிதலாகாது.

**9.** விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

நாகாத்தல் தூதர்க்கு மிக இன்றியமையாதது. நாவினுற் சுட்டவடுமாற்றம். பிற அரசர் வடுவாகச் சொன்னதைத் தன்னரசிடம் கூறுமையுமாம். இவற்றிற்கு அஞ்சாமை மிக வேண்டுமென்பது. தன்னரசனுரைத்த வடுமாற்ற மாகிய தூவாத நீக்கலுமாம். விடுமாற்றம் - தன்னரசன் மறந்ததையும் உணர்ந்து சொல்க என்பது.

**10.** இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

தன்னரசிற் கிறுதி பயப்பினும் என்க. எஞ்சாதுரைக்க என்பது. உறுதி பயப்பது - உறுதி கூறல். எதிர் (பகை) அரசற்கிறுதி பயப்பது பற்றியாயினும் உறுதி பயப்பது.

## 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

**1.** அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

இகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகுவா ரென்றமையின் இதுவும் தூது பற்றியதாகலாம். இன்றேல், பிறவரசரிடம்

கொண்ட அவரது இகல் அமைச்சன் மீதே திரும்பும். தீக்கு ஆய்வார் எனப் பிரித்து தீக்கடைவார் எனலுமாம். வெறுப் பிற்ககலாமலும் நகைக் கணுகாமலும் என்க.

2. மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கந் தரும்.

மன்னர் விழைப - அரசுத் தலைமை. மன்னிய ஆக்கம் - சாணக்கியனுக்குக் கிடைத்த புகழாக்கம்.

3. போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கு மரிது.

அரியவை - அரசற்கேயுரிய பிறர்க்குரியவல்லாத விருப் பங்கள்; ஈடுபாடுகள்; அரசும் உரிமைமகளிரும். அவற்றிற் காக்கமளித்துக் காக்க என்பது. அரியவை - வெகுளிக் குரிய செயல்களுமாம்; போற்றற்கரியது அதுவே யாகலான்.

4. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியார் அகத்து.

அரசரெதிரிலும், அரசரிடத்தேயும், அரசவைப் பெரி யோரிடத்தும் ஆகிய மூவிடத்துமாம். செவிச் சொல் - கேள்விப்பட்டதாகக் கூறும் கோள் சொல்லுதல்.

5. எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை.

அரசன் தன்னிடம் சொன்னது, செய்யுமாறு விட்டது பற்றியன்றி மற்றெது பற்றியும் ஓராமை என்க. அரசன் யாரிடம் எது பேசினலும் அதுபற்றி யெல்லாம் பலரையுங் கேட்டுத் தெரிந்து கொள்ள அவாவுதல் ஓர் அழுக்காரும்.

6. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

அடுத்த குறிப்பறிதல் அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்தது. வேட்பத்தாஞ் சொல்லி என்ருர். அவன் கேட்டாலன்றிக் கேட்பதுபற்றியன்றிக் கூருமை.

குறிப்பறிதல் - குறிப்பெழுதிக் (Diary-note) கொள்ளல். காலங்கருதல் - காலந்தவருமையுமாம் (Punctuality).

7. வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.

வினையில சொல்லா விடல் - பயனில சொல்லாமை வினையில - தன் வினையல்லாத பிறர்வினை பற்றியனவாம். கேட்பினும் என்றதால் வேண்டுப சொல்லாது விட்டதல்ல வாம்.

8. இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்.

இளையர் - சிற்றரசர், அரசகுமாரர். இனமுறையர் - அரச குடும்பத்தாரிடமும் ஒளியோ டொழுகல். இவரிடத் தும் அரசனிடத் தொழுகுமாறே ஒழுகுதல் வேண்டும்.

9. கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

கொளப்படல் - வேலையில் உறுதியாயிருத்தல் (Confirmed) சாகும்வரை வேலை உறுதியென்பதால் அரசுக் கெதிரானதைச் செய்யலாகாது. கொள்ளாத - நெறிதவறி வரிகோடல் முதலியன. யானை புக்க புலம் போல நாடு கெடும்.

10. பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

பழையம் - அரசின் பெரும் பதவியாளரிடமெல்லாம் செல்வாக்கு (நட்பு) உடைமையால் பலர்க்கும் தீமை யானவற்றைச் செய்தல் கேடுதருமென்பது. அயலரசன் தங்நாட்டைப் பற்றிய போது, தாம் அங்நாட்டின் பழைய குடிகள் என்னும் உரிமையால் அவ்வரசுக் கெதிராகச் செய்தலாகா தென்பது. இவ்வதிகாரம் அரசாங்கப் பதவி யாளரைப் பற்றியதுமாம்.

## 71. குறிப்பறிதல்

1. கூருமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாருநீர் வையக்(கு) அணி.

மாரு அணியெனலுமாம், கணி யென்ருக்கிக் குறி சொல்வோ னென்க. கூருமை - கேள்வி கேட்டறிதலும்

ஒன்றைச் சொல்லி யறிதலும். யவன - ஆபரணங்கள் பரவியகாலம்; நகைப் பைத்தியம் பிடித்தவர்க்கு உண்மையான நகை இவையெனக் கண்ணோட்ட முதலியவற்றைக் காட்டியது.

**2.** ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

ஐயப்படா துணர்தல் - எதிரிலிருப்பவர் 'எல்லாவற்றையும் தெரிந்துகொண்டார்' என்ற தெளிவுறும்படி உணர்தல்; அவரறியாமலே தானறிதலுமாம். மலர் மிசையேகி நம் மனதில் உள்ளதைக் கூறுமலே அறிந்தருள் புரிவது தெய்வமாகலின், ஒப்பக் கொளல். மாருமை - இவ்வறிவும் மலர்தலும் கூம்பலும் இல்லாமை.

**3.** குறிப்பின் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

தனக்கு அக்கண்ணின்மையால் கண்ணையும் கொடுத்தென்க. படை முதலிய உறுப்பினுள்ளுமென்க. குறிப்புணர்தல் - இங்குக் குறிப்பு நினைத்தலுமட்டுமன்றி நினைக்கப்போவதுமாம்.

**4.** குறித்தது கூருமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு.

கண்ணுல் ஒப்பிலர்; மற்ற கை முதலியவற்ருல் ஒப்புடையவர். புறவுறுப்புக்களால் ஒப்புடையர், அகவுறுப்பாகிய அறிவால் ஒப்பிலர் என்றுமாம்.

**5.** குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

கண் புண்ணென்றுணரப்படும், உணராவிடின் வாயின் (வாயும்) கண்ணும் பயனில்லை யெனலுமாம். வீணே உண்டுண்டுறங்கும் வாழ்க்கை வேண்டாமென்றது. புறவுறுப்புக்களும் அறிவை வளர்க்கப் பயனுகவேண்டும். இன்றேல் மூக்கு நாக்குப்போல நேரே அறிவுக்குத் துணையாகாவாம்.

**6.** அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

உவப்பினும் கடுத்தல் தவருமல் வெளிப்படலின் கடுத்தது காட்டும் என்ருர். நெஞ்சங்கு அடுத்தது எனவும் பிரிக்க. விளையாட்டிற்காகக் கடுத்ததா உண்மையாகவே கடுத்ததா என்ற குறிப்பைக் காட்டல். கண்ணுடியில் வலம் இடமாகவும் இடம் வலமாகவும் தெரியும், அவற்றை உணர்ந்தே அறியவேண்டும். அதுபோல மனதிற்கு மாருன குறிப்புக்களும் முகத்தில் தோன்றலாம், உணர்ந்தறிக என்றது. அறிதல் (குறிப்பு அறிதல்) என்பதற்கே.

**7.** முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்.

முகம் அறிவொடு (முதுக்குறைவு) பட்டதாகலின் அதனை எப்பொழுதும் மலர்ச்சியுடனும் அமைதியுடனும் வைக்க என்பது. அறிவு வளர்ச்சிக்கு கைகால் முதலிய வற்றிலும் முகவுறுப்புக்கள் மிக்க துணை செய்வன. உவப் பினும் காயினும் என்றமையின் மெய்ப்பாட்டியலை அறிவது குறிப்பறிவாமென்றது.

**8.** முகநோக்கி நிற்க அமையும் அகநோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.

இஃது ஈகையும் ஒப்புரவும் பற்றியது. இலனென்னும் எவ்வ முரையாமை (கூருமை)க் குறிப்பறிந்து கொடுக்க என்றது. அமையும் - இவ்வுலகம் அமைதியுறும்: வழங்கி வருமெனலுமாம்.

**9.** பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

ஒரு நோக்கு நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து என்ற வகையை யெல்லாம் உணர்தல். உவப்பு கேண் மையையும் காய்வு பகைமையையும் உரைக்கும். குறிப் புணர்வான் பகையை நீக்கிக் கேண்மையை வளர்ப்ப ரென்றது. பேசிக் களைக்காமல் கண்ணுலேயே அவர் பேசி விடுவர் என்றது.

**10.** நுண்ணிய மென்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற.

பிறவற்றில் நுட்பமானவரும் கண்ணில் நுட்பமிலராயின் பயனில்லை. நா நுட்பம் (உண்ணலில் நுட்பம்) எல்லாம்

கண்ணுட்பத்தை வளர்ப்பதாகவேண்டும். நுண்ணியமென்பாரை, நுண்ணியமென்பார் பிறரை அளக்குங் கோலென்க. பூதக் கண்ணுடி, கருடன் முதலியவற்றின் கண் நுட்பமுடைய மென்பாரும் உடலுள் நெஞ்சத்தை நோக்கவல்லராகாமையின் நுண்ணியராகா ரென்றது. அலேக்குங்கோல் என்பதும் பாடம். முகத்திலும் கண் சிறந்தது.

## 72. அவையறிதல்

1. அவையறிந்(து) ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

சொல்லின் தொகையறிதல் - அகராதியறிவு, தமிழ்ச் சொல் பிற சொற்ருெகையறிதல். பெயர் வினை; இயல்; திரி சொற்களின் தொகையுமாம். தூய்மை - வாய்மைச் சொல்.

2. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

இடை - பெயர் வினைகட்கிடை இடும் இடை உரிச் சொற்கள். இவ்விரு சொற்களைப் பயன்படுத்துவதிலேயே மொழித்திறன் உள்ளது. நடை - யாப்பு (style). அகவல், தூங்கல், துள்ளல். செப்பல் நடை. பொருள் நயம், சொல் நயம் உடைய நடையுமாம். இடை நடுவு நிலேயுமாம்.

3. அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.

வகை - நகை முதலிய ஒன்பது சுவைகளை யுண்டாக்கும் சொற்களின் வகை. முற்கூறிய தொகையின் வகையுமாம். அவை - சிற்றின அவை; பெரியார், நல்லோர் அவை.

4. ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்.

மொழித்திறமறியாத அயல்மொழி வெறியர் - வெளியார். சுதை வண்ணம் - பொம்மை. ஒளியார் - தங்கணத்தர். ஒளி - புகழ். முன்பே மொழிப் புகழ் உடையாரிடம் சொல்க.

5. நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

அவையிற் பேசப்புகும் பலருள் முதலிற் பெரியோர்களைப் பேசவிட்டுப் பின் மற்றவர் பேசுக, அதுவே செறிவு. முதியவர்களிலும் தான் சிறந்தவன் (முந்தியவன்) எனச் செருக்காமையுமாம், எல்லார்க்கும் நன்றும் பணிதல்.

6. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.

ஆற்றின் இலை எனப் பிரித்து ஆற்றில் வீழ்ந்த இலை அலைபடுதல்போல என்க. காப்பார் இல்லை யென்பது. வியன் புலம் என்றமையான் வெள்ளம் பெருகும் ஆறென்க. ஏற்றுணர்வார் - பரந்த நூலறிவுடையார். புலம் - நாடு. பரந்த உலகமெல்லாம் ஏற்கும் நூலறிவுடையாருமாம்.

7. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

கசடறக் கற்றுச் சொற்றெரிதல். அகத்து விளங்கல் - பொன் போற் பொதிந்து வைத்தல். அவ்வினையாளரொடு பயில் வகை ஒருகால் விளங்கும்; சொல்லக் கசடறும் எனலுமாம்.

8. உணர்வ(து) உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந்(து) அற்று.

சொல்லல் நீர் சொரிந்தற்று - செவ்விதினுரைப்ப அவ் விரு காலும் வளரும், பாத்தி - நாற்றுப் பாத்தி. அடிப்படை நன்கு அமையுமென்பது. உணர்வது என்றமையால் தாமின்புறுவதனை இன்புறுவோர் (ரசிகர்). கலைஞனிடம் ஈடுபாடு (sympathy) உடையோர். மற்றோரிடமாயின், விழலுக்கிரைத்தல் என்க.

9. புல்லவையுள் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்.

மேலே பாத்தி என்றமையின் புல் அவை புல் (களை) வளரும் பாத்தி என்க. நல் அவை - நெற்பாத்தி, புல்லறிவாளரவையுமாம். நன்கு செலச் சொல்லுவார் என்றதால்,

அகப்பட்டுக்கொண்டால் ஏதோ கூறி தப்பித்துக் கொள்க என்றது.

**10.** அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்.

புல்லார் சொல்லத் தான் கேட்டலும் அங்கணத்துள் உக்க அமிழ்தமாம். தான் - அமிழ்தம். அங்ஙனம் - அறிவில்லாதாரே தீண்டத் தகாதார் என்பது. கணம் - தன் கோட்பாடு உடையார் முன்னர் சொல்லப் புகுதலே இன்ப நெறி என்றது.

## 73. அவையஞ்சாமை

**1.** வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

வகையும் தொகையும் தூய்மையும் முற்கூறியன, வாய்சோரார் - வழுக்கியும் வாயாற் சொல்லார்; சோர்வின்றிச் சொல்லுதலுமாம். வல்லவை - வலிய சொற்கள். நினைத்ததை வெளிப்படுத்தும் சொற்கள்.

**2.** கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

கற்றார் முன்பு தாம் கற்றவையும் தெளிவு படும்படிச் சொல்லுவார். செல - தம் சொற்கள் மதிப்புடையவாக, செலச் சொல்லுதலே சொல்லக் கற்றதென்பது.

**3.** பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத் தஞ்சா தவர்.

அரியராய இவர் பெருமை எளியராய அவ் விறந்தாரை எண்ணிக்கொண்டற்று. பகையகமென்றலின் இது நட்பகமுமாம். படையமைச்சர் கிடைத்தல் எளிது; அவையமைச்சர் அரியரென்பது. உயிரை வீணே விடுதல் (தற்கொலை முதலிய) வீரமன்றென்பது. அரியரவையகத்தெனக் கூட்டி எளியவரென்க.

**4.** கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

தாம் கற்ற துறையறிவை அவர்க் கூட்டி அவர் துறையறிவைத் தாங்கொள்க என்றது. பல துறையறிவும் வளரும் வழியுரைத்தது. இது பல துறைபற்றிய கேள்விப் பயனும். தாம் கற்ற மிக்கார் - ஆசிரியர். ஆசிரியரும் அறியாத மிக்க கொளலென்க.

5. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

இன்றேல் ஆற்றினிலை தளர்ந்தற்று. அளவு - அளவை நூல், தருக்கம். அவை - பட்டி மண்டபம். அவையஞ்சா மாற்றம் - அவையினர் அஞ்சாத மாற்றமுமாம். ஆற்றினளவு - சொல்லவேண்டிய நேரம், இடம், பொருள், அவையோரளவுகள்.

6. வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு.

அல்லார்க்கு, வீரன் பொம்மைக் கைவாள்போலாம். அதன் கண்ணுவது அஞ்சத்தக்கதாகிறது, இவற்கதுவுமில்லை. நுண்ணவை யென்றதால் நூலெனில் நுண்ணறிவை வளர்க்கவேண்டும். அன்று வாளும் நூலுமே நாட்டையாண்டன. நூல் - நூல் நிலையம். பலர் வீட்டில் பெரிய நூலகம் வைத்திருப்பர், அவர்க்குரைத்தது.

7. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்(து)
அஞ்சும் அவன்கற்ற நூல்.

பேடிகைவாள் - முலையிரண்டுமில்லாதாள் பெண்மை போல்வது. காலக்கேடும் பொருட்கேடுமேயாம். ஒள்வாள் - 'இவ்வே பீலியணிந்து' என்றவாள்.

8. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

பல்லவை கற்றல் - பல அவைகளிற்கற்றல்; பல நூல்களைக் கற்றல். பலர் நடமாடும் நூல் நிலையங்களாக இருப்பர், பயனில்லை. பலவகைக் கோட்பாடுகளையும் அறிந்திருத்தல். நல்லவையுள் நன்கு - நல்ல உண்மைகளுள் தேர்ந்து.

9. கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

கல்லாரும் அவரை மதியாரென்பது. கடை - கீழ், கயமை. கல்லாதவர் பின்சென்று வாழ்வரென்றுமாம். அச்சமே கீழ்களதாசாரமென்றது இவ்வவை யஞ்சுவார்க்கும் உரியது. கல்லார் (முன்) விலங்கென்றலின் விலங்கிற் கடையவர்.

10. உளரெனினும் இல்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

பொருள், கல்வி, உயிர் உளரெனினுமென்க. களனென்றதால் போர்க்களத்தில் சமாதானம் பேசுவோரைப் பற்றியதுமாம். களனஞ்சிக் கற்ற - ஆசிரியர்க்கஞ்சிக் கற்றலுமாம்.

## 74. நாடு

1. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

தள்ளாவிளையுள் - தன்னிடம் இருப்போரையும் வருவோரையும் உணவில்லையெனத் தள்ளாவிளையுள்; ஒரு ஏகரையும் கரம்பெனத் தள்ளாத; ஒரு சொட்டு மழை நீரையும் கடலுள் தள்ளாத விளையுளுமாம். பொருள் ஏற்றத் தாழ்விலாச் செல்வர். தாழ்விலா என்பதனை இரு பக்கமும் கூட்டுக. தாழ்வு - பொருள் குறைவும் சோம்பலும். விளையுளையும் செல்வரையும் அறிவியலால் ஆக்கும் தக்கோர்.

2. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

பொருள் - கேடென்றதனுல் கப்பல் கவிழ்தலால் ஏற்படும் கேடென்பது. ஆற்ற விளைவது - வேலி ஆயிரம் விளைவது. எனவே வெளிநாட்டு வாணிபத்தால் தொழிலால் பெட்டக்கது. பொருள் - மூலப்பொருளுமாம்.

3. பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்(கு)
இறையொருங்கு நேர்வது நாடு.

இறையொருங்கு நேர்வது. அரசியலில் மனமொத்து நடப்பது. பொறை - தென்புலத்தார் முதலோரைத் தாங்கும் பொறை; வாழ்க்கைச் செலவு மிகுதியுமாம்; போர்ச் செலவுமாம்; உலக நாடுகளெல்லாம் வரினும் தாங்குதல். நிலவிளைவு தாங்கி, நில இறை நேர்வதுமாம்.

**4.** உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா(து) இயல்வது நாடு.

வேளைதோறும் எடுக்கும் பசியன்று, பஞ்சத்தாலும் யானைத்தீயாலும் உறுபசி. ஓவாப்பிணி - பெருவாரி நோய்; தொத்துநோய், தீராநோய். செறுபகை - அயல் பகை. இயல்வது - இயல்பான ஆற்றலுடையது. அமைதியுடையது. வேலையில்லாத் திண்டாட்டம், போதிய வருவாயின்மையால் உறுபசியுமாம்.

**5.** பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

சமய, அரசியற் கழகங்களில் சிலவிருக்கலாம். ஆனல் பலவிருப்பின் போட்டியும் பொருமையும் மிகுதியாம். கட்சிக்குள்ளும் அரசப் பெரும்பதவியாளருள்ளும் அரசின் மீதுள்ள பகை. குறும்பு - கொள்ளைக் கூட்டத்தாரும், கொரில்லாக்களும். குறும்பர் - பல்லவர் காலத்தவர்: இஃது குறட்காலவாராய்ச்சிக் குதவும் குறிப்பாகலாம். பல்குழு - பல எதிர்க்கட்சிகளுமாம்.

**6.** கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்ற
நாடென்ப நாட்டின் தலை.

கேடு - பெருமழை; காற்று, தீ இவற்ருலும் கேடு. தலைக்கேடு எனக்கூட்டி மரணத்தொகை மிகுதியாகாத நாடென்னலுமாம். வளம் - விளையுளைத்தவிர்த்த பொருள், ஆள், அறிவு வளம்.

**7.** இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு.

இருபுனலுமுடைய மலையுமாம். மழைவளத்தை முதற்கண் வைத்தார்; அஃதில்லாவிடினும் மலையிலிருந்து வரும் ஊற்றுநீரை வைத்தார். அகவொழுக்கத்திற்கு வாய்ந்த

மலையுமாம்; வெப்ப நிலையைச் சமன்செய்ய வாய்ந்த மலையுமாம்.

8. பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

பிணியின்மையாகிய நோயற்ற செல்வமாம். செல்வம் விளையுமின்பமுமாம். ஐந்தும் நாட்டின் ஐம்பொறிகளாம். விளைவின்பமாய ஏமம் - நன்கு விளைந்தால் பாதுகாப்பே (போரே) தேவையில்லை என்க. பிணியின்மை - பிணித்துக் கட்டிவைக்காமல் அவிழ்த்துச் செலவிடும் செல்வம்; பிணியின்மை - தளை (அடிமை)யின்மையுமாம்.

9. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு.

பிறநாடும் தன்னைநாட வளந்தரு நாடு. நாடா - நிலத்தை நாடாமல் உழாமலும் வித்தாமலும் வளந்தருவது. நாட - பிற நாட்டின(து) என்றாக்கி பிற நாட்டினது வளங்களைக்கொண்டு வாழ்வது நாடல்ல என்க.

10. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்தமை(வு) இல்லாத நாடு.

அமைதியுடைய நிலையுடைய (Stabilised Government) அரசியல் இல்லாதது நாடாகாது. உள்நாட்டு வெளி நாட்டுப் பகையாலும் கொடுங்கோன்மையாலும் அமைதி கெடும்.

## 75. அரண்

1. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தன்
போற்று பவர்க்கும் பொருள்.

ஆற்றுபவர் - முற்றுகையிடுவோர். போற்றுபவர் - உள்ளே காவலாக நிற்பவர், இருவர்க்கும் அரண் துணையாகும். தற்போற்றுதல் - தற்காப்பு. ஆற்றுதல் - முற்றியோரை எதிர்த்தலுமாம். பொருளாக மதிக்கத்தக்கது.

2. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடைய தரண்.

மணிநீர் - கடல், நெய்தல். மண் - மருதம். மலை - குறிஞ்சி, காடு - முல்லை. நானிலமும் அரணமையு மென்பது. மலையரண் - பாரியின் பறம்பும், மண்ணரண் - குவாலியர் கோட்டையும் போல்வன. அணிநிழற்காடு- பதுங்கவும், சளைப்பின்றிப் போரிடவும்.

3. உயர்வகலம் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்.

அரண், போர்முறை, அரசியல் பற்றிய நூல்கள் பெருகியிருந்த காலம் அது. மலையுயர்வு, கடலகலம், மண் திண்மை, காட்டருமை என்னலுமாம். உள்ளழிக்கலாகா அரணென்பார். அருமை - பிறர் அவ்வாறமைக்கலாகாத அருமையுமாம்.

4. சிறுகாப்பின் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்க மழிப்ப தரண்.

சிறுபடையான் செல்லிடம் அதுவாகலின் ஊக்க மழிந்துவிடும். சிறு காப்பு - செலவு சிறியதாகிய காப்பு. ஊக்கமழிப்பது - நினைக்கமுடியாதது. சிறு காப்பு-என்றது நாட்டில் இராணுவச் செலவில் பெரும் பொருளை யழித்த லாகாதென்பதற்காம்.

5. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர தரண்.

கொளற்கரிதாய்க் கொண்ட கூழ் - செலவழிக்கக் குறையாத கூழ். நீர் - குடிநீர். எனவே நீரும் சோறும் குறைவற்றது.

6. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடைய தரண்.

இடத்துதவும் - அரண் இடனறிதல் வகையிற் சேர்ந்தது. ஆள் - ஆள் - சி (ஆட்சி)க்கு உதவுபவராகலின் ஆள் ஆவர். நல்லாள் - கொற்றவையுமாம். போரிற் காப்பவள். பொருள் படையாயின், தக்கவிடத்துப் பயனுக்கு மென்க. உறுபொருள் - நெல் முதலிய. உல்கு - செலா வணியிலுள்ள நாணயங்கள்.

7. முற்றியும் முற்று தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

அரணைக் கைப்பற்று முறை கூறியது. அறைப் படுத்தல் - அரணையும், அங்கிருப்போரையும் அடியோடழித் தலுமாம். முற்றியு முற்றுதெனக் கூட்டி முற்றுகை யிட்டாரோ இல்லையோ உடனே பற்றலென்க. வீரரை அறைப்படுத்தினாலும் (கீழறுத்தும்) பற்றற்கரியது.

8. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

எதிரியின் முற்றுகையைத் தகர்ப்பதுமன்றி அவரைப் பற்றி வெல்வதும் என்க. பெரும் பகுதியைப் பிடித்துக் கொண்ட - வர்களையும் ஒரு மூலையில் இருந்துகொண்டு வெல்வதாகவேண்டும்.

9. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

முனை முகம் - வாயில். அரண் வாயிலிலேயே, போர் தொடங்கிய அளவிலேயே (வினை முகம்) வெல்வதாக வேண்டும். முனை முகத்தும் ஆற்றலராக எதிரிகள் சாய என்றுமாம்.

10. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்கண் இல்ல தரண்.

ஆங்கமை வெய்தியக்கண்ணும் என்றதுபோல முடித்துக் கூறல். வினைமாட்சி யில்லார் - பேடிகள், மனத்திட்ப மில்லார். அச்சமுடையார்க்கரணில்லை என்றது.

## 76. பொருள் செயல் வகை

1. பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்ல(து) இல்லை பொருள்.

பொருள் - தகுதி. இவ்வுலகத்திற்கும் அவ்வுலகத் திற்கும் தகுதியுடையராகச் செய்தல்; பொருளல்லவர் - கீழ்ப்பட்டவரும் ஒடுக்கப்பட்டவரும், அத்தகையவரை உயர்த்துவதே பொருள்.

2. இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

இல்லாருமெள்ளுவர் (ஈன்ருளும்) என்க. எல்லாரும் - மன்னுயிரெல்லாம் தொழும் என்பது. சிறப்பு - சிறப்பொடு பூசனை. இல்லார் - இரப்போர். செல்வர் - இரப்போர்க்குக் கொடுப்போர்.

**3.** பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கம்
எண்ணிய தேயத்துச் சென்று.

யவனரது பாவை விளக்கு கிரேக்கத்திலிருந்து தமிழகம் வந்து இருளறுத்ததுபோலாம். இருள் - அறியாமை. அறியாமையை யறுக்குங் கல்வி பொருளால் வரும். உடையார் முன் இல்லார்போல் நின்றும் என்பதில் ஆசிரியருக்குத் தன்னிடம் உள்ள தனைத்தையும் கொடுத்து நின்றுங் கற்க என்ற குறிப்பு உண்மை அறிக. ஞாயிருயின், இன்ருெரு பகுதியிலும் நாளை உலகின் மற்ற பகுதியிலும் அறுக்கும்.

**4.** அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள்.

இன்பமும் என்றதால் வீடும் என்ற குறிப்புள்ளது. ஈனும் திறனறிந்ததால் பொருள் தீதின்றி வந்த என்க. தீதுடன் வருவது அறத்தை ஈனுதன்றே? அறவிருப்பமும் இன்பவிருப்பமும் ஒருவற்குப் பொருளைத் தேடும் விருப்பத்தை யுண்டாக்கும்.

**5.** அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

அருளென்னும் அன்பீன் குழவி என்பார். அருளொடும் - எல்லாம் சிவன் தந்ததென்ற அருள். அன்பு நாட்டினிடத்தது, அருள் பரந்த உலகத்திடத்தது. புல்லார் புரளவிடல் - தேங்கவிடாமல் பயன்படும்படியாகச் (புரளுதல்) செய்தலுமாம்.

**6.** உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

உல்கு பொருள் - வெளிநாட்டு வரி, செலாவணியைக் குறித்தது. வெளிநாட்டு வாணிபச் சிறப்பைக் குறிப்பது. உறுபொருள் - நிலமுழுவதும் அரசிற்குச் சொந்தமென்பது.

7. அருள்என்னும் அன்பின் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

அன்பு - நாட்டுப்பற்று. நாட்டுப்பற்றே உலகப் பற்றை உண்டாக்குவது. அருளென்றமையின் அவ்வுலகையும் பொருள் படைப்பதென்பது. செவிலி - மருத்துவச்சி. அருள் பிறக்க மருத்துவம் பார்ப்பவள் அவளென்பது. அன்பிற்குரிய இல்லறமும் அருளுக்குரிய துறவறமும் உண்டு.

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்(று)
உண்டாகச் செய்வான் வினை.

ஏறு தழுவுதல் போல யானையும் வீரனும் செய்யும் போருமாம். குன்றேறி நின்று தன் கை வேலால் யானையை வீழ்த்தல் போல எளிது என்பது. யானை குன்றேறிப் போர் செய்தல் அரிது, அவ்வாறரியதும் முடியுமென்றுமாம்.

9. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.

முன்பும் இருளறுக்கு மென்றார். செருக்கு - செல்வமுமாம். பொருளைக் கொண்டு வாங்கிய படைகளால் செருநர் பொருளை யெல்லாம் வென்று வருதலென்பது.

10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

ஒண் பொருள் - பொன் மணி முதலிய ஒளியுடைய பொருள். பொருளின் கிளையும் இலையும், பூவும் கனியும் போல்வன இரண்டும். எண் பொருள் - எண்ணத்திற்குரிய (நெஞ்சிற்குரிய) பொருள்கள் அறமும் இன்பமும் என்பது. ஏனை இரண்டையுமுண்டாக்காத வழி அது ஒளியிழந்த புதைக்கப்பட்டுத் துருப்பிடித்த பொருளென்பது.

## 77. படைமாட்சி

1. உறுப்பமைந்(து) ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

படை குடியென அங்கும் முதலில் வைத்தது பொருத்தமே; தலையென்றதுமது. செல்வத்தைக் கொணர்

தலின் தலையென்றதுமாம். உறுப்பு - உயரம், மார்பகலம், உடற்கட்டு முதலிய தோற்றம்.

2. உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவுஇடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

தொலைவிடம் - இமயம், பர்மா முதலிய தொலைவிடங்களுமாம். தொல்படை - எந்தைக்குத் தந்தை அவன் தந்தை தந்தை என வரும் படை. ஊறு - மார்புப்புண், விழுப்புண்.

3. ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

படையைக் கடலுக்குவமித்தல் வழக்கு. படை ஆரவாரத்தில் இல்லை, ஆண்மையிலேயே உண்டென்பது. நாகம் - மலை; மலையில் ஆர்ப்பரித்து மோதிய கடல் (அலை) சிதறுமென்றுமாம். உயிர்ப்ப - தோன்ற, கரிகாலன் போன்றவன் பிறந்ததும் கெடுமென்பது.

4. அழிவின்(று) அறைபோகா(து) ஆகி வழிவந்த
வன்கண் அதுவே படை.

வழிவந்தது. தொல்படை. புலிக்குப் பிறந்த புலிகள். அழிவின்று - வலிவின்மையால் தோற்பதும் சாவதும். அறைபோதல் - எதிரியுடன் சேர்தல்; தன் படையையே தோற்கச் செய்தல்.

5. கூற்றுஉடன்று மேல் வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை.

நிலையிற்றிரியாது ஐம்பொறியும் அடங்கி மலையிலும் மாணப் பெரிய தோற்றமுடன் கூடியெதிர் நிற்றல்; அதுவே மனத்திட்பம். புலனுற்றல் உள்ள முனிவர்களே வில் வீரராயும் ஆசிரியராயும் இருந்துள்ளனர். கூற்றுவனும், வீடணனைப் போன்று என்னையும் ஒருவனுக ஏற்றுக்கொள்க என நிற்றல். மார்க்கண்டேயனைப்போல மந்திர சக்தியும் கடவுட் பற்றுமுடையதாதல்.

6. மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

மானங்காக்கும் மறம். மறத்தில் மானம். வழிச் செலவு (Tradition) போர் முறை மரபுகள். தேற்றம் - வேந்துவக்கும் பண்புடைமை. வழிச் செலவு - பூகோள அறிவு. தேற்றம் - வெற்றியைப் பற்றிய உறுதி.

7. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
 போர்தாங்குந் தன்மை யறிந்து.

வெட்சி, வஞ்சி, வாகை முதலிய போர்த்துறைகளுக்கேற்றதார் (மாலை)களை அணிந்து செல்வது. தலைவந்த போர் தாங்கும் என்றமையால், வீணே முற்பட்டுப் போரைத் தொடங்கலாகாதென்பது. சமாதானத்திற்கும் தற்காப்புக்காகவுமே படையென்பது.

8. அடல்தகையு மாற்றலு மில்லெனினுந் தானை
 படைத்தகையால் பாடு பெறும்.

நால்வகையும் நாவாயுமாகிய வகைகளும், படைக்கலப் பெருக்கும், அணி வகுப்பும், ஆடை விருதுகளுமாகிய தோற்றப் பொலிவே - படைத்தகை. இல்லெனினும் என்றதால் அவையே முதலென்பது.

9. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
 இல்லாயின் வெல்லும் படை.

சிறுமை - எண்ணிக்கைக் குறைவு. மேற் செல்ல வேண்டாத வெறுப்பு - அலெக்சாந்தர் படைக்குச் சிந்து வெற்றிக்குப் பின் ஏற்பட்டது போன்றது. வறுமை - படைக்கல, உடல்வலி, குடும்ப வறுமைகள். சிறுமை - வென்ற நாட்டில் செய்யும் கொடுமைகளுமாம்.

10. நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
 தலைமக்கள் இல்வழி இல்.

நிலைமக்கள் - மூலப்படை, வழிவந்தது. தலைமக்கள் - படைத் தலைவர், அமைச்சர், அரசர் முதலோர். சால என்றமையின் சிலராவது தலைமக்கள் வேண்டுமென்பது. நிலைமக்கள் - பின்னால் இருந்தவிடத்திருந்தே ஏவுவோர் படைத் தலைவர் அமைச்சர் முதலோர். தலைமக்கள்-படைத் தலையில் (முனையில்) செல்லும் காலாள் வீரர் எனலுமாம்.

# 78. படைச் செருக்கு

1. என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர்.

கல் நின்றவர் - கல் போன்று செயலற்று 'இன்று போய் நாளை வா' என்னும்படி நின்றவர். கற்சிலைபோல் எதிர்த்தாங்கியவர் எனலுமாம், இகலெதிர் சாய்ந்தொழுகுக என்றது.

2. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

முயலை எய்த வீரனைவிட யானைப் பிழைக்க எய்த ஏந்தல் (வீரன்) இனியவன் என்றுமாம். கோழையை வெல்வதினும் வீரனிடம் சாதலினிதென்பது. தமிழர்க்கு வேல் சிறந்தது, முருகன் படை யாலஃதறியப்படும்.

3. பேராண்மை என்ப தறுகண்ஒன்(று) உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

ஒன்றுற்றக்கால் - ஒரு பொருள் கிடைத்தால். ஊராண்மை - நாட்டிற்குதவுதல். எனவே போர் செய்தல் பெற்ற பொருளால் நாட்டைக் காக்கவே என்பது. பகையைக் களைதற்கன்றி எதிரியை அழித்தற்கன்று போர் என்பது. இடுக்கணுற்றால் இராணுவ ஆட்சியினும், குடியாட்சி (ஊராண்மை) நெறியைக் காத்தலே சிறந்தது.

4. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

வெற்றிச் சிரிப்பு, வீரச் சிரிப்பென்பது. ஒரு யானை மீது வேலெறிய அது வீழ்ந்துவிட்டது. அதை நோக்கி வந்தவன் அதன் மேல் பதிந்த தன் வேலைப் பிடுங்கிக் கொண்டு வெற்றி நகை செய்தது. யானை பிழைத்த வேல் என்றது கொண்டு யானையை எறிதல் அரிதென்பது.

5. விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.

எதிரிலிருப்பவன் விளையாட்டுக்காகக் கண்முன் வேலை வீசிக் கண்ணிமைக்கிறதா என்று பார்ப்பது பழக்கம்.

இமைப்பவன் கோழை யென்பது. தன் வேல் செல்லும் விரைவைக் கண்டிமைத்தலும் தோல்வியாம். இமையாத வரே இமையா நாட்டத்தவர் நாடு (வீரசொர்க்கம்) அடையலாம்.

**6.** விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை யெடுத்து.

வீரர்க்கு வீழ்நாள்படாமை ஆற்றும் நன்று (அறம்) அதுவேயாகும். சாந்துணையும் ஒவ்வொரு நாளும் அவரவர் கடமையைச் செய்யவேண்டும். வழுக்கு - இளநீருமாம். முதிர்ந்த (நிறைந்த) நாளாகக் கருதாமல் முதிரா நாளாகக் கருதும்.

**7.** சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

இமய முதல் குமரி வரைச் சுற்றிச் சுற்றி ஒவ்வொரு நாடாக வெல்லுதலால் சுழலும் இசையாயிற்று. உயிர் - மூச்சு. மூச்சு விடுதற்கும் நேரமில்லாதவர் - உயிரார். ஒவ்வொரு நாளும் வளரும் புகழும், சுழலும் இசை; பலர் காதுகளிலும் சுற்றித் திரியும் புகழ்.

**8.** உறின்உயி ரஞ்சா மறவர் இறைவன்
செறினுஞ்சீர் குன்றல் இலர்.

உயிரஞ்சாமை - உயிர்ப்பலி ஈயவும் அஞ்சாமை. தன் அரசனையும் எதிர்ப்பரென்பது. இறைவன் செறினும் - சிவனே நெற்றிக்கண் காட்டினும் என்க.

**9.** இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.

சொன்னதை முடித்த பின்னரே சாவாரை என்க. அவர்களிடம் குறை சில காணிற் காயாரென்பது. ஏதோ வொரு குறிக்கோளை வாழ்வில் கொண்டு அதனைச் செய்து முடித்தலே வீரமென்பது. பிழைத்தது - முற்றுகையில் காலந்தாழ்த்தல்.

**10.** புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்க துடைத்து.

புரந்தார் - மக்கள். விற்றுக்கோட் டக்க துடைத்து என்றாற் போல்வது. இவ்விரப்பும் ஓர் ஏருடைத்து. பின்னர் சாக்காடு இரந்துகேட்டாலன்றி இல்லை, எனவே அத்துடன் சாவு இல்லையாகிச் சாவாநிலை (இறவாநிலை) எய்துமென்பதுமாம்.

## 79. நட்பு

**1.** செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

முன்பும் அரியவற்றுளெல்லா மரிதே என்றார். நட்பரண் ஆறும் என அரணை அடுத்து வைத்தது நட்பு, காப்பு எனக் குறித்தற்குமாம். நட்பு - துணை வலி. காப்பு - இடிப்பாரையில்லாத ஏமராமன்ன னென்றார். செயற்கரியவற்றுள் நட்பும் ஒன்று; அது செயற்கரிய செய்யும்.

**2.** நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

பௌர்ணமி போன்று கலையின்பமும் (கடலாட்டின்பம்) நாட்டிற் கெல்லாமின்பமும் என்பது. பின்னீர - முதலிரண்டா நாள் பிறைபோல (ஒளியற்ற) ஒரே இருளென்பது. அறிவும் கலையும் நிறை நீர, குறை நீர எனலுமாம். பேதையார் என்ற குறிப்புக் காண்க. நீர்(மை)யுடையவர் கேண்மை நீர் நிறை நீர எனலுமாம்.

**3.** நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

அகல்வானத் தும்பர் உறைவார் பதியின்பமென்பது. புதிய புதிய இன்பமுமாம்; பண்பு வளர்ந்து கொண்டே போகும். ஆடைக்குரிய நூலை 40, 60, 100 (நெம்பர்) எனச் சொல்லச் சொல்ல நயமும் மதிப்பும் மிகுமாப் போல என்றுமாம். வள்ளுவர் நெய்தற் றொழிலர் என்பதற்கிது குறிப்பாகலாம். பண்புடையாளர் நூல்களோடு நட்புக் கொள்க என்றுமாம். நவில்தொறும் தொட்டனைத்தூறும் நயம்.

**4.** நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு.

மிகுதிக்கண் நக்கு அவரைத் தூண்டிவிடற்கன்று என்க. இடித்தல் - அடித்துத் திருத்தலுமாம். இது கழகங் களில் ஒருபோது பொழுது போக்கிற்காகக் (Hobby) கூடும் நண்பரைப் பற்றியது. மேற் சென்றிடித்தல் - அவன் நினைக்கும் போதே அறிந்திடித்தல்.

**5.** புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

புணர்ச்சி (முதல் சந்திப்பு)யும் பழக்கமும் வேண்டா. பிசிராந்தையார் நட்பு போன்றது. பேனு நண்பர்களும் (Pen Friends) ஒரு துறையில் நூலெழுதும் இரண்டாசிரி யரதும், ஒரு நூலாசிரியரிடம் உலகில் பலர் நினைக்கும் நட்பும் இத்தகையதாகலாம்; உணர்ச்சி - புலனுணர்ச்சியாகிய ஒத்த விருப்பு வெறுப்புக்களுமாம்; ஒத்த கோட்பாடு களுமாம்.

**6.** முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்(து)
அகம்நக நட்பது நட்பு.

நெஞ்சத்தகம் என இரட்டித்து மேல், நடு, அடி மனங் களுள் அடி மனம் கலக்கும்படி நட்க என்றற்காம். நகை வேழம்பரது (Comedians) நட்பு நட்பன்று. முகநகவே நட்பது வினைவேறு சொல்வேறு பட்டாரது தொடர்பாம்.

**7.** அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்கண்
அல்ல லுழப்பதாம் நட்பு.

பின் ஆறென்றமையின் அழிவினவை அழிவாறு என்பது. நீக்குதல் - முன்னறிந்து நீக்குதல், எனவே அறிஞர் தொடர்பு. கண் அல்லல் - புன் கணீர் பூசலுமாம். ஆறு - வாழ்வாறு. வாழ்க்கை நட்பு. சாவிற் சாதல், நோவினோதல் முதலன.

**8.** உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

இழந்தவள் எனப் பாடமாயின் இன்னும் சிறக்கும். உடுக்கையை இழந்தவள் கையால் அல்குலையும் மார்பையும் மறைத்தல் போலத் தம் வயின் குற்ற மறைப்பர் என்பது; உடுத்தல் திறனிழந்த முடவனுக்குப் பிறரே ஆடையணிதல் போல நண்பனே இடுக்கண் களைய வேண்டுமென்றது.

9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
ஒல்லும்வா யூன்று நிலை.

அரசர் கொலு வீற்றிருக்கை மலிந்த காலமது. கொட்பு - தவணை சொல்லுதலும், மறைதலும் பதுங்கலும். துன்ப காலத்தில் இவற்றைச் செய்தொழுகாது ஊன்று நிலை. ஒல்லும் வாயென்றமையின் செயலால் இயலாவிடின் ஆறுதலேனும் கூறுக என்றற்காம்.

10. இனையர் இவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னும் நட்பு.

புனைதல் - நட்பு பேச்சன்று, உணர்ச்சியென்றது. மறவற்க என்றதால் நட்பு நினைப்பதன்று, பேசுதலன் றென்பது. இனையர் என ஒப்பிட்டுப் பார்த்தல் ஆகாது. அவர் இவ்வளவு செய்தார், ஈடாக யாமித்தனை செய்தோம்; அவ்வளவு படித்தவர் யாமிவ்வளவு படித்தவர் என வெல்லாம் புனைதல்.

## 80. நட்பாராய்தல்

1. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

நட்டலினுற் கேடில்லை. ஆனுல் வீடில்லை என்பதுணர்க என்றது. பேயோடாயினும் பிரிவரிது. வீடு பேறில்லை யெனலுமாம். நட்பு வீடு பேற்றிற்கும் துணை செய்யும். அர்ச்சுனற்குக் கண்ணன் செய்தது போல.

2. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.

கேண்மையே சாந்துயரம் எனலுமாம். தான் - வினையுமாம். வினைக்குக் காப்பாகாமல் கெடுக்கும். சாகுமளவும் துயருமாம். பிற்கூறும் குணனும் குடிமையு முதலியவற்றை ஒவ்வொன்ருக ஆய்ந்து, ஆய்ந்து; மனம் சொல் செயல்களை ஆய்ந்தாய்ந்துமாம்.

3. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு
இனனுமறிந்தி யாக்க நட்பு.

குண நாடிக் குற்றமும் நாடல். குற்றம்-பழி. குடிப் பிறந்து தன்கட் பழி நாணல். இனம் - உன் நண்பனைச் சொல் உன்னைப் பற்றிச் சொல்கிறேன் என்கிற இனம். குணக் குடியுமாம், அவன் இனத் திடமும் குண முதலிய நாடலும். யாக்க என்றமையால் நூல் யாப்புப் போல அருமை யுடைத் தென்பது. குணம் - ஒழுக்கம்.

4. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல் வேண்டும் நட்பு.

நட்கும் தன்னிடம் பழி ஏற்படாமற் காப்பவனை - நாணு வானை. தன் குடிக்கட் பிறந்த ஒருவனை நட்குமாறு கூறியது. தன் மக்களுள் ஒருவனை அடைக்கலமாகக் கொடுத்தும் எனலுமாம். சான்றோரையும், முனிவரையும் நட்பாக்கு முறை யுரைத்தது, இராமனை முனிவர்க் களித்ததுமது.

5. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்(பு) ஆய்ந்து கொளல்.

வழக்கு - உலக வழக்கு; முறை. வழக்கறியுந் திறனை யாய்ந்து கொளல். இடித்து - தன் தலையிலடித்துக்கொண்டு வழக்கு - குறை. தாய் - மனைவி முதலோரிடமும் கூறாத குறைகளையும் கூறல நண்பரிடமே யுண்டு.

6. கேட்டினும் உண்டோர்(ர்) உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

நீட்டியளப்பது - அவர் குணங்களைக் குறையாதளப்பது. கிளைஞர் உறுதியை அளக்குங் கோலுமாம். அற முதல் உறுதிப் பொருள்கட்குக் கிளைஞருமாம்.

7. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

ஒருவுதலால் தனக்குப் பொருட்கேடு வராமையால் தங்கும் அப்பொருளே ஊதியம். அறிவுடையார் கேண்மை ஊதியம் என்பது பேதையார் என்றதால் அறியப்படும், விடல் - மறந்து விடல். பேதையார் - வரைவின் மகளிர், பேடி முதலோர்.

8. உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

உயர்வுள்ளல் என்றது. ஆற்றறுப்பார் நட்பால் உள்ளஞ் சிறுகும் எண்ணங்கள் மிகுமென்பதுமாம். அமரகத்தாற்றறுப் பார். உள்ள லும் கொள்ளற்க.

9. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளஞ் சுடும்.

கெடுங்காலை - தோல்வி யுறுங்காலை. அடுங்காலை - வெற்றியுறுங்காலை. வெற்றி மகிழ்ச்சியினும் அது மறவா தென்பது. போர் நட்புப் பற்றியது. கெடுங்காலை வறுமைக் காலமுமாம்.

10. மருவுக மாசற்ருர் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு.

மறவற்க மாசற்ருர் கேண்மை என்ருர். ஒப்பு - குண முதலிய முற்கூறிய ஒப்பு. வயது முதலொப்புமாம்; உணர்ச்சி யொப்புமாம். மாசற்ருர் - 'மனத்தின்கண் மாசின்மை' வள்ளுவர் உள்ளத்தில் பதிந்துள்ளது.

## 81. பழைமை

1. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

கிழமையைக் கீழ்ந்திடா - பழமை யென்பதற்காக நண் பனது உரிமைச் சிறிதையும் விரும்பலாகா தென்பது. அரசனிடம் குடிமக்களது பழமையுமாம். மக்கள துரிமை யைச் சிறிதும் கீழ்ந்திடாமையுமாம்.

2. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்(கு)
உப்பாதல் சான்ருேர் கடன்.

உப்பாதல் என்றதனுல் அது மிகினும், குறையினும் இன்பமில்லை என்பது. உமணர்சாத்தும் போக்குவரத்தும் மிகுந்த காலமது. பிழை எதுவாயினும் பொருத பழக்க முடைய ராகலின் சான்ருேர்க்குரைத்தது.

உறுப்பு - கண், கண்ணுேட்டம்.

3. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

பழகிய என்றதால் புணர்ச்சி பழகுதலும் வேண்டு மென்பது. ஒருவர்க்கொருவர் கெழுதகைமைச் செய்தா லன்றி நட்பிறுகாது. குழந்தை வளர்ச்சிக்குக் குறும்பு போல நட்பிற்குக் கெழுதகைமை இன்றியமையாதது. முரசுக் கட்டிலில் புலவர் உறங்கிய உரிமை.

4. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின்.

சிறு கை யளாவிய கூழென வேண்டியிருப்பர். தான் சொல்வதைக் கேளாதுமாம். தன்னிடம் கூறுமலே உரிமை களைக் கொள்ளலுமாம். அறிவுரையைக் கேளாவிடினும் கூறல் கடனெனக் கூறுவர். உடுக்கை யிழந்தவன் கை போலச் செயினென்க.

5. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

பேதமையையும் பொறுத்தல். நண்பனது அறிவை வளர்த்தலே முதற் கடன். தன் வினையை எடுத்துச் செய்து அதனில் ஏதங்கொண்டு ஊதியம் போகவிட்ட பேதைமை. பெருங் கிழமை - பெருநாள், நல்ல நாள் என உணர்தலும் நாள் இழுக்கம் என்றார்.

6. எல்லைக்க(ண்) நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு.

தொலை நாடுகளில் சென்று போரிட்டுத் தொல்லை யுற்றார் நட்பினை நாட்டிலேயே (எல்லைக்கண்) இருக்கும் அரசர் துறவார் என்க. தொல்லைக்கண் நிற்றல் - பாட்டனும் பாட்டனும், தந்தையும் தந்தையும், தனயனும் தனயனும் நட்பாக வருதல்.

7. அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

கேண்மை அழிவந்தவுமாம், அன்போடியைந்த வழக் குடையார், பிறவிதோறும் வழிவந்ததுமாம். வழி வந்த - பெருகி வழிந்த சமயம், கேண்மையவர் அழிவந்த - தனது பிற நண்பர் கெடுமாறு செய்யினும்.

8. கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின்.

வீழ் நாள் படாதாற்றிய நட்பறம் என்பது. நாளி ழுக்கம் - நாள்தோறும் செய்யும் இழுக்கமுமாம்; புதுப் புது இழுக்கமுமாம்; நாள் காலமாயின் தனது பொன்னனை காலத்தை வீணுக்கினும் என்பது.

9. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு.

அன்பின் வழி வந்த என்றார். விடாதாரை உலகம் விழையும், வெறும் நட்பன்றி விழையப்படுதலு முடையது. இவரும் வீழுமிருவர் என்க. உலகு கெடாக் கேண்மையு மாம். உலக சகோதரத்துவம் காட்டியது.

10. விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

ஒன்னார் விழையுஞ் சிறப்புடையர், பண்பாட்டினை வளர்க்குமென்பது. பகைவரும் கெழுதகைமை யுடையா ரால் நட்பாகக் கருதப்படுவர்; பகை நட்பாகக் கொண் டொழுகும் பண்பு; பகையுள்ளும் பண்புள என்றார்.

## 82. தீ நட்பு

1. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்ற லினிது.

பருகுவார் - 'பருகுவன்ன அருகா நோக்க'முடையரா தல். நிறை நீரதாதலின் பின்னீரதாதல் இனிது. இனித் தீநட்பினர் யாரென வகைப்படுத்திக் கூறுகிறார்.

2. உறினட்(டு) அறிஒருஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.

முன்பும் ஒப்பிலார் நட்பென்றார். வந்தால்வா போனல் போ என்னும் பற்றற்ற நட்பு. நட்புறின் அறின் என்க. ஒப்பிலார் - தம்மிலும் அறிவு, கல்வி, செல்வத்தில் மிக வுயர்ந்தார் அன்றி மிகத் தாழ்ந்தார்.

**3.** **உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது**
**கொள்வாருங் கள்வரும் நேர்.**

நம் திருமணத்திற் கிவ்வளவு செய்தார், அவர்க்கும் அவ்வளவு செய்வோமெனச் சீர்தூக்கல், இது நட்பு வாணிபம். வேசையரிடமும் கள்வரிடமும் நட்பாகா தென்றுமாம்.

**4.** **அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னர்**
**தமரின் தனிமை தலை.**

கல்லாமா - போரறியாக் குதிரை. இவரும் நட்பு செய்யத் தெரியார். கல்லாமா - மண் குதிரையுமாம், யானையுமாம், துணைவலியன்று. தனித்த வாழ்வு சிறந்தது.

**5.** **செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை**
**எய்தலின் எய்தாமை நன்று.**

எவ்வளவு உதவியும்; அதனைப் பயன்படுத்திக் கொள்ளாத சிறியவர். துணைக்கோடற்காம் பெரியாரல்லாத சிறியவர்.

**6.** **பேதை பெருங்கெழ்இ நட்பின் அறிவுடையார்**
**ஏதின்மை கோடி யுறும்.**

பேதைகள் நட்பு, பின்பும் எதிர்மறையாக, தீமைத்தே நல்லார் தொடர்கை விடல் என்பார். அறிவுடையார் பகையாலும் பொய்படலும் புனை பூணலும் இல்லை.

**7.** **நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்**
**பத்தடுத்த கோடி யுறும்.**

நகை வகை நட்பு - உட்பகைவர், வெறும் முகநக நட்பு, பொழுது போக்கிற்காகக் கொள்ளும் நட்பு. நகை வகை - கேலிச் சிரிப்பு, குறும்புச் சிரிப்பு, சென்ற பின் புறஞ் சிரிப்பு முதலன.

**8.** **ஒல்லுங் கருமம் உடற்று பவர்கேண்மை**
**சொல்லாடார் சோர விடல்.**

தன்னால் முடிவதனைச் செய்யாமை நண்பனால் முடிய விருப்பதனைக் கெடுத்தல். சோரவிடல் - மறக்கவிடல்;

தேய் பிறையாகவிடல். முடியுங் கருமத்தைப் பற்றி பேசு தல்கூடச் செய்யாதவர்.

9. கனவினும் இன்னது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

சொல்லுதல் எளியராய்ச் செயல் அரியவர். வினை வகையால் வேருகு மாந்தர் இவரே. கனவினும் என்றமை யான் தூக்கத்தையும் கெடுத்துவிடு மென்பது. தலைவனைக் கனவிற்காணத் தலைவி விழைதல் போல இவர் நட்பைக் கனவிற் காண விழையார் உலகோர்.

10. எனைத்துங் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

பழித்தல் - புறங் கூறல், வாசல் வழியும் செல்லற்க. மன்றிற் பழித்தல் - அவர் புகழில் கொண்ட பொருமையா லாம். எவ்வளவியலுமோ அவ்வளவு சுருக்கிக் கொள்ளுதல் நல்லதென்றுமாம்.

## 83. கூடா நட்பு

1. சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

தீர்விடம் என்பது நல்ல பாடம். வாய்க்கும்போது உடைத்துச் சொல்லி நட்பைத் தீர்த்துவிடலுமாம். அவர் நட்பு மீண்டும் சீர்ப்படுமாஞல் பட்டறையில் வைத்துச் செம்மையாக்கல்போலக், கொள்ளத்தக்கது.

2. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

கோட்பாடு, சமயம் முதலியவற்ருல் ஒரு குடியிற் பிறந்தும் வேருனவற்றைத் தழுவுவோர் - இனமல்லார். வரைவின் மகளிர் மனம், வாழ்க்கைத் துணை மனமன்று. இரு மனப் பெண்டிர் அவரே. வேசையரும் வாழ்க்கைத் துணை யினம் போன்றினமல்லாதவர்.

3. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணர்க் கரிது.

இன்மையரிதே வெளிறென்ருர், அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும் என்ருர். உலகத்தோடொட்டக் கல்லா, வொழுகக் கல்லா மனத்தவர். இது படித்தவரது கூடாநட்பு. கூத்தர்க்கும் கம்பர்க்கு மிருந்த நட்பு. பள்ளிக் கூட நட்பும் இரயில் நட்பாகலா மென்றது.

4. முகத்தின் இனிய நகாஅ அகத்தின்ஞ
வஞ்சரை யஞ்சப் படும்.

வஞ்சிக்கும் அவாவுடையர், ஏதோவொரு பயன் கருதிச் சிரித்துறவாடுவர். பயன் பெற்றதும் விலகுதலின் வஞ்ச ரென்ருர். அகநக நட்பாகாதவர்.

5. மனத்தின் அமையா தவரை யெனைத்தொன்றும்
சொல்லினுல் தேறல்பாற் றன்று.

வினை வேறு சொல் வேறு பட்டாரைச் சொல்லி மனம் வேறு சொல் வேறு பட்டாரைச் சொல்லியது. சொல்-பயனில் சொல். அடுத்த குறள்களிலும் இதனை விவரிக் கிருர். மனத்தின் உணர்ச்சியா னமைதல்.

6. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை யுணரப் படும்.

நல்ல அவையின் கண் சிறக்கப் பேருண்மைகளைப் பேசுவோராயினும் அவர் ஒட்டாராதற் கூடும். கல்வி யாளரை மேலே விலக்கியது போலப் பேச்சாளரை விலக் கியது. சொற் கோட்டமும் உட்கோட்டமும் இன்மை. இது பட்டிகளிடம் கூடாமை.

7. சொல்வணக்கம் ஒன்னர்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

ஒன்ஞர் வில் வணக்கமென்க. அவன் பணிவுடையன் இன் சொலன் ஆகானென்பது. வில் வணக்கம் (போர்) பற்றிய சொல் வணக்கமுடைய தூதர், ஒற்றர் நட்பாகா தென லுமாம்.

8. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னர்
அழுதகண் நீரும் அனைத்து.

அழுத கண்ணீரே செல்வத்தைத் தேய்க்கும் படை யாகும். தொழுதகை - இறுவரை காணும் வரைத் தொழு-

தகை. தொழு தகைமையுள்ளும் என்க. இது பகைவருடன் கூடா நட்பு.

9. மிகச்செய்து தம்மெள் ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லல் பாற்று.

நட்பினை மிகச் செய்து பின்பு விடுவார் அல்லது பழிப்பார். இதுவும் அடுத்ததும் உலகியல் கூறியது. பொய்மையும் என்றதுபோல. மிக - தம்மைத் தீயன செய்யத் தூண்டித் தாமே எள்ளுபவர். சாப்புல்லல் - சாகும்வரைக் கூடாமை.

10. பகைநட்பாங் காலம் வருங்கால் முகம்நட்(டு)
அகநட் பொரீஇ விடல்.

உலகியலில் அக்காலம் வரலுண்டு, அப்போது சமாளிக்கும் திறங் கூறியது. பகை நட்பு என இரண்டாகவும் ஒழுகுங் காலம். முகத்தால் நட்பும் அகத்தால் பகையும் செய்தொழுக என்றது.

## 84. பேதைமை

1. பேதைமை யென்பதொன் றியாதெனின் ஏதங்கொண்(டு)
ஊதியம் போக விடல்.

குற்றமான சமயத்தையும் அரசியலையும் ஆதரித்து ஆக்கமானவற்றை விட்டுவிடல்; குணம் நாடிக் குற்றமு நாடிக் கடைசியில் குற்றத்தையே கொண்டு குணத்தை விடலுமாம்.

2. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல் பேதமை யென அங்கு முரைத்தார். கையல்ல - கிட்டாததனையே விரும்பி நிற்றலுமாம்; தன்னிடமிருப்பதில் பற்றுச் செலுத்தாமை, பின்னும் கையறியா என்றார். கை - ஒழுக்கம்.

3. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

ஆண் பெண் என்ற நாணமுமின்மை, நட்பின் கண் நாடாமை. நாரின்மை - எதிலும் ஒரு ஈடுபாடு (பிடிப்பு) இன்மை. பேணுமை - எப்பொருளேயும் பாதுகாவாமை. பரம்பரைச் சொத்தை விற்றல்; கிடைத்த தொழிலே இழத்தல் முதலன. நாட்டையும் மொழியையும் பேணுமை யுமாம்.

4. ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையா ரில்.

உலகத்தோடொட்ட ஒழுகல் கல்லார் அறிவிலார் மட்டுமன்றிப் பேதையுமாவர். பிறர்க்குரைத்தல் - அவை யறிந்து சொல்வன்மை யுடைமை. உரைத்தல் - உப தேசித்தல்.

5. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையும்
தான்புக்(கு) அழுந்தும் அளறு.

ஞானத்தால் ஒருமையில் எழுமைப் பிறப்பையும் அறுத்தல் போலப் பேதைமையால் எழுபிறப்பையு மடைவ ரென்றது. அளறு - சேறு. பேதைமை வாழ்வைச் சிக்க லாக்கிவிடும். அவன் இருக்குமிடமே நரகமென்பது.

6. பொய்படு மொன்றோ புனேபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

பேதைகள் அரசப் பதவி மேற்கொண்டால் அங்நாடு பிறர்க்கடிமையாகு மென்பது. நாட்டுத் தொழில்களும் நசிக்கும், அறச்சாலே குறைந்து சிறைச்சாலேகள் பெருகும்.

7. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

பேதைச் செல்வர் நிறைந்த நாட்டுச் செல்வம் பிற நாட்டார்க்கும் பிற இனத்தவர்க்கும் உதவும். தம்மவரைப் பட்டினியால் வாடச் செய்யும்.

8. மைய லொருவன் களித்தற்றல் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

உணவு முதலிய நல்வழிகளிற் பயனுகாது; பலர்க்கும் நகை விளேக்கும். தீயன செய்து புனேபூணும்என்பது, உட் கட்படார் ஒளியிழப்பர்.

குடிகாரன் கையில் கத்தியொன்றுடைமை போல என்க. கள், சூது, கூத்தி இவ்வகையிலேயே செல்லும்.

**9.** பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்.

நட்கின் வீடில்லை என்ற கவலை வேண்டாம். இனிது என்றமையால் இவரைப் பிரிதல் இன்பமுங்கூட என்பது. தீமைத்தே நல்லார் தொடர் கைவிடல் என்றதுடன் ஒப்பிடுக.

**10.** கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

சமண பௌத்தப் பள்ளி, கோயில், சமயச் சான்றோர் குழாத்துப்புக லென்க. பள்ளி படுக்கையாயின், கழாக்கால் தூக்கத்தைக் கெடுத்தல் போலப் பேதைகள் அமைதியைக் கெடுப்பர். சமூகத்தில் அமைதியைக் குலைத்துக் குழப்ப முண்டாக்குபவர் பேதைகள்.

## 85. புல்லறிவாண்மை

**1.** அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு.

அறிவுடையார் எல்லாமுடையர் என்பதற் கெதிராக இன்மையு ளின்மை என்றது. கெடுவாக வையா துல கென்றது. பொருட்செல்வத்தை இரண்டாவதாக்கி குணச் செல்வத்தை முதலாக்கியது முதலிலிருந்தே அறியப்படும். உலக அறிவின்மை எனக் கூட்டி உலகப் பரந்த அறிவென்க.

**2.** அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம்.

'ஆக்கமும் கேடும் நினைக்கப்படும் என்றாற் போலப் பெறுவான் தவமென்றார். ஈத்துவக்கு மின்பம் அறியும் அறிவிலான். அறிவின்மை செல்வத்தைப் புதைத்து வைக்கும்; பரவ விடாது.

**3.** அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

ஒன்னுர் வழுக்கியும் கேடுறுவர். அறிவிலாரைப் பிறர் அழிக்க வேண்டாம். அவரே ஒருவரையொருவர் (இராவணன் சேனை போல) அழித்துக் கொள்வர். ஒரு நாட்டையோ குடியையோ அழிக்க வேண்டில் அங்கறிவிலாரைப் பெருக்க வேண்டும்.

4. வெண்மை யெனப்படுவ(து) யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

அறிவின்மை புல்லறிவன்று, அறிவுடையனுகக் கொள்ளும் செருக்கே புல்லறிவு. எல்லாந் தெரிந்ததாகக் கொள்ளல் புல்லறிவு. சிறுமை அணியுமாம் தன்னை வியந்து. அறிவுடைய நாட்டேம், நாகரித்தேமெனப் பழம் பெருமைப் பேசித் திரிதல் புல்லறிவு.

5. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்.

கல்லாத மேற்கொண்டொழுகல் - அறியாத தவத்தை மேற் கொள்ளல்; அறியாத சமய வொழுக்கத்தை மேற் கொள்ளல். அறியாத நூல்களை வீட்டில் அடுக்கியும் கையில் தாங்கியும் திரிதல்.

இனிக் கற்பதும் தெளிவில்லாத தாகும்;

6. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

அற்றம் - இறுதி. குற்றங்கடியாமல் வீணே வாழ்ந்து கொண்டிருத்தல் புல்லறிவு. அற்ற மறையாமை யன்று, குற்ற மறையாமையே அவமானம் என்றது.

7. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

சோர்தல் - மறத்தல், மறையவிடல். உயர்ந்த நூல்களை யெல்லாம் படியாது சிறு நூல்களைப் படிப்பவன், பெரு நூல்களைப் படித்து மறப்பவன், அவை மறைந்துபோக விடுபவன்.

புல்லறிவாளராலேயே பழந்தமிழ் இலக்கியங்கள் பல மறைந்தன. அறிவிலார்க்கு மறை நூல்களை உரையற்க என்றுமாம். ஆசிரியரிடம் கேட்பதையும் கற்றதையும் மறக்கும் மாணவன் புல்லறிவாளன்.

8. ஏவவுஞ் செய்கலான் தான்றேருன் அவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

தேருன் என்று அவ்வுயிர் என்றமையான் அவன் உடலற்ற உயிர், செத்து மறைந்தவன் போல்வானென்பது ஒரு கொள்கைக்காக வாழ வேண்டும், பிறரை அவ்வழியில் நடத்த வேண்டும். இரண்டிலொன்றேனும் இயலாதவன் சான்றேர்க்கு மன நோய்.

9 காணுதாற் காட்டுவான் தான்காணுன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு.

கடவுளைக் காணுதவன் கண்டதாகக் கூறி வேடம் புனைந்து சமயாசாரியனுகவும் முனிவனுகவும் வாழ்வான் அவன் புல்லறிவாளன்.

அது குருடற்குக் குருடன் வழிகாட்டியது போலாம். தானே யாவுமறிந்தவன், பிறர் ஒன்றுமறியாதவர் என்பதாம்.

10. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

அலகை - அமைதியின்றி அலைந்து திரிவது. அலைப்பது. எதற்கும் விதண்டா வாதமிட்டுக் கொண்டு தன் கல்வியால் அச்சுறுத்தித் திரிபவன் அலகை. உலகத்துப் பெரும்பான் மையினரும் பெரும்பாலறிஞரும் கூறுவதனை இல்லையெனல்.

## 86. இகல்

1. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்.

புழு பூச்சி விலங்கு முதலுயிர்க்கும். புலியும் புலியும் புலியும் யானையும் கொள்ளும் இகல் இலக்கியங்களிற் காணப்படும். இகல் பண்பைக் கெடுக்கும். எல்லோரையும் வேறுபடுத்தும். எல்லா வுயிர்க்கு மென்றதால் மனிதனும் விலங்குகளும்கூட ஒன்றி வாழ்க வென்றது.

2. பகல்கருதிப் பற்ரு செயினும் இகல்கருதி
இன்னுசெய் யாமை தலை.

உட்பகையினும் வெளிப்பகை சிறந்த தென்பது. பகல் பெரு நெருப்பு, இகல் தீ யெச்சம். பகல் வெளிப்படை

யாகலின் காத்துக் கொள்ளலாம். இகல் நிழல் தன்னை வீயாதடி யுறைந்தற்று.

3. இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

விளக்கம் - அறிவு; தெளிவு. நோயற்ற உடல் மினு மினுவென்றிருப்பது போல இகலற்ற மனத்தால் உடலும் ஒளி பெறும். தாவில் விளக்கம் - நட்பால் அவனை உலகி லனைவரும் மதித்தல்.

4. இன்பத்து ளின்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

இது குறள் மரபு. இன்பத்துளின்பம் விழையாதான். அவா வென்னும் துன்பத்துட்டுன்பம் என்றதால் இகல் அவாவினால் உண்டாவதென்பது குறிப்பாம்.

5. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

கல்வி, அறிவு, செல்வ முதலியவற்றில் மிகலூக்கல். சாய்ந்தொழுகல் - அவரையே நட்பாகக் கொண்டொழு கலுமாம்.

இகல் மிகலூக்கலுமாம்.

6. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து.

தவல் - தவ்வெனல்; தவ்வென்னும் தன்மை; வாழ்க்கை சுவையற்றுச் சப்பென்றாய் விடும். கெடல் - சுவையற்று மெலிந்து கெடல்.

நணித்து (அருகே) இகலுடையவனிருந்தாலும் அங்குச் சுற்றியிருப்போரனைவர் வாழ்க்கையும் தவலுங் கெடலு முடைத்து.

7. மிகன்மேவல் மெய்ப்பொருள் காணார் இகன்மேவல்
இன்னா அறிவி னவர்.

இகல் உலகியல் பற்றியது. உலகியலில் ஈடுபட்டு இகல் மிக்கவர் மெய்ப்பொருளாகிய செம்பொருளைக் காணார் மெய்யுணர்வு பெறார் என்பது. உள்ள அறிவும் இன்னாவாகி (நஞ்சாகி) விடும்.

மெய்ப்பொருளைக் காணும் வெற்றியே (வாகை) உண்மை வெற்றியாகும்.

உலகையெல்லாம் ஒன்றெனத் தழுவுவதை விட்டு, ஓருயிரை வெறுத்தலும் மெய்யுணர்வன்று.

8. இகலிற் கெதிர்சாய்தல் ஆக்க மதனை
மிகலூக்கின் ஊக்குமாங் கேடு.

மிகலூக்கல்-நுனிக் கொம்பரேறினுர் அஃதிறந்தூக்கல். எதிர் சாய்தல் - காற்றுக்கும் நீருக்கும் எதிர்சாயுமது போலச் சாய்தல். எதிர் சாய்தலும் அளவாக வேண்டும், மிகின் கேடென்றுமாம்.

9. இகல்காணுன் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணுங் கேடு தரற்கு.

ஆக்கம் - ஆகூழ். கேடு - போகூழுமாம். வறுமையை ஒழித்து விட்டால் உலகில் இகலே இராதென்றது. இகல் காணின் கெடுவல் யானென்பதறிக என்றது. இகலற்ற ஒருவனிடத்தும் ஆக்கமுண்டானபோது அழுக்காறு காரண மாகப் பலர்க்கு இகல் உண்டாகும். அஃது அவர்க்கே கேடென்பது. ஆக்கம் - உடுப்பதூவும் உண்பதூவும்.

10. இகலானும் இன்னுத வெல்லாம் நகலானும்
நன்னய மென்னுஞ் செருக்கு.

இகலென்னும் இடுக்கண் வருங்கால் நகுக என்றது. இன்னுத வெல்லாம் அவர்க்கு நன்மை (இன்ப) யாகும். குறு குறுவென்ற முகமுடையராஞல் இகல் எளிதில் உண்டாகு மென்பது. நகல் வல்ல ரல்லார்க்கு இகல் ஏற்படும்; இகலற்ற நிலேயே பண்பாடு.

## 87. பகைமாட்சி

1. வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.

இது அரசியற் பாற்பாடலின் வலியார் முற்றன்னை நினைக்க என்பதுடன் முரணுது. ஓம்பா மெலியார் வேண் டில் பகைக்கட்டும், மற்றவர் ஓம்புக என்றது. ஒல்லானை ஒல்லா தொளி என்றதுமது.

எதிர்த்த வலியாரை மாறேற்க, எதிர்க்காத மெலியாரை எதிர்த்தலைத் தவிர்க்க எனலுமாம்.

**2.** அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

அன்பின்மையே பகைக் காரணம்; துணை - வந்த பகையைத் தவிர்ப்பது. நுகராமல் தேங்கும் செல்வமும் பகைக் காரணம். பகையிடத்தன்புமாம். என்பு - அரியும் என்றுக்கி பகைவர் இவனது என்பினை 'உடலை' அரிவ ரென்றது.

**3.** அஞ்சும் அறியா னமைவில னீகலான்
தஞ்ச மெளியன் பகைக்கு.

ஐந்தன் வகை தெரியான் அறியானென்க. புலனடக்க மின்மையும் பகைக் காரணம். அடக்கமே பகையை வெல்லும். தான் துவ்வான் என்றபின் ஈகலானென்றார். அமைவு மன அமைதி. அச்சமே பகைக் கடிமையாக்கும். தஞ்சம் அடிமை.

**4.** நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

எஞ்ஞான்றும் யாங்கணும் என்பது குறள் மரபு. நீங்கான் வெகுளி என்றலின் நீங்கும் சிறுநேர வெகுளி அரசர்க்காமென்பது.

நிறை - வெகுளிக் கடுத்தலின் பொறை.

**5.** வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

வாழ்நாள் வழி வாய்ப்பன - நன்றாற்றல். பழி - மானம். எடுத்த பிறவியைப் பயன் செய்யாதவர்க்கும் பகை மிகுதி. பகையழித்தற்காம் வழி வாய்ப்பனவுமாம்.

**6.** காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்.

காணாச்சினம் - உட்பகைபோல உட்சினம். பகைவர்ப் புறத்தே சினமுமாம். பிறர் காணாத அவ்வளவு சினமுமாம்.

அவா வெகுளி கூறியமையின், அழுக்காறு இன்னுச் சொல்லையும் இணைக்க, அறமில்லாதவர்க்குப் பகையுண்டா மென்பது.

கழி பெருங்காமம் - பிறர் பொருளில் அவரினுங்காம முடைமை. இவன் சினமென்னும் குன்றேறி நின்றவன்.

7. கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற அடுத்திருந்து
மாணுத செய்வான் பகை.

அடுத்திருந்து மாணுத செய்வான் - பழுதெண்ணுமந்திரி முதலோர். சண்டையைவிலைக்கு வாங்குதல் இதுவே.

கொடுத்துங் கொளல்-முதலில் சண்டை தொடுத்துங் கொளல்.

8. குணனிலனுய்க் குற்றம் பலவாயின் மாற்ருர்க்(கு)
இனனிலனும் ஏமாப் புடைத்து.

குணநாடிக் குற்றமு நாடலில் குற்றமிக வாதல். குண மிகின் குற்றஞ்சிலவாகும். குணக்குன்றில் முட்புதரும், விலங்கும் போல். ஒழுக்கமின்மை பகைக் காரணம்.

9. செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

அறிவின்மை பகைக் காரணம். புலனைந்தும் பகை யாகக் கொண்டவர்க் கெனலுமாம். அஞ்ச வேண்டாததற் கஞ்சுதல்.

10. கல்லான் வெகுளுஞ் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி.

கல்லாமை பகைக் காரணம். கல்லானிடம் உள்ள பொருளும்பகை. இன்னுதே கல்லார்கட்பட்ட திரு வென்றது.

சிறுபொருள் - சிறுபகையுமாம். கல்லாதவன் கொள் ளும் சிறுபகையை எதிர்க்க வேண்டும். அதுவே புகழென் பது. ஒளிகல்லான் - தன்னைக் கண்டொளியாதவனுமாம். சிறு பொருளையும் பிறர்க்கீயாத (ஒல்லானை) வனை ; பின்னரது பெரும் பொருளாகித் தன்னையழிக்கும்.

## 88. பகைத்திறந்தெரிதல்

1. பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று.

[illegible] நகையேயும் - விளையாட்டிலும், கனவிலும். உலகை யெல்லாம் நட்பாக் கொள்ளலே பண்பு. பகையென்ற சொல்லும் வேண்டற் பாற்றன்று. நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி.

2. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

உழவும் மழையும் மிகவும் நினைக்கப்பட்ட காலம். காடு கொன்று நாடாக்கிக் களந்தொட்டு வளம் பெருக்கிய கால மது. சொல்லுழவர் - புலவர். சொல்லுழவர் இதயத்தையே அழித்தலின் ஆகா தென்றார். தன் படைகள், குடிகளுடன் பகைத்தலினும் அமைச்சர் (புலவர்) பகையாகாது.

வில் உழவர் ஏர் உழவர் எனப்பிரிக்க.

3. ஏமுற் றவரினும் ஏழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

ஏமுற்றவனிடம் பலர்க்கும் இரக்கமே தோன்றும் பகையை வெறித்தனமென்பது. கண் மண் தெரியாமல் பிறரையழிக்கும், தன்னையு மழித்துக் கொள்ளும்.

4. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு.

பகையுள்ளும் பண்புள என்றார். பகைவரிடத்தும் அன்பு செலுத்தும் உலகிலேயே பண்பாடும் இன்பமும் வளரும். இன்னாமை இன்பமெனக் கொளல்போல பகை நட்பாக் கொள்ளல்.

5. தன்துணை யின்றாற் பகையிரண்டால் தானொருவன்
இன்துணையாக் கொள்கவற்றி னொன்று.

இரண்டு பகையுள் ஒன்றனை நட்பாக் கொளல். அவ் வொன்று மற்றதையும் நட்பாக்கும், பின்இரண்டும் துணை வலியாகும்.

6. தேறினுந் தேரு விடினு மழிவின்கண்
தேருன் பகாஅன் விடல்.

பகை நட்பில் நடுவு நிலை அதுவே. அழிவின்கண் புதிய நட்பைக் கூட்டலும் உள்ள நட்பைப் பிரித்தலும் ஆகாது. பகை தானே யழிகையில் முற்பட்டழிக்காது தானே யழியு மாறு விடுக.

7. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

இன்றுணையாக் கொள்வதில் மெல்லிய பகைவரிடம் சேரற்க என்றது. பகைவரிடம் தன் மெலிவைக் காட்ட லாகாது; அவரிடம் வலிமையையன்றி மென்மையை எதிர் பார்த்தலாகா தெனினுமாம்.

8. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

செருக்கு - படையும் துணையும். அவனிடமுள்ள படை வகை, துணைவகையறிந்து அதற்கேற்பத்தானும் செய்து கொள்ளல். எதிர்த்துச் செல்லாமல் தற்காப்புப் போர் கூறியது.

9. இளைதாக முண்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

பகைவர் இளையராயிருக்கையிலேயே என்க. இளவர சர்களைக் கொல்லும் பழக்கம் அதனுலேயேற் பட்டது. தானிளையனு யிருக்கையிலேயே எனலுமாம். முதுமையில் தன்வலி குன்றிவிடும். இளைதாகக் கிள்ளின் நகம்போதும் முற்றினுல் உடல் முழுதும் வேண்டும்.

10. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

உயிர்ப்ப உளரல்லர் - செம்மல் சிதைக்கும் வரை மூச்சு விடக்கூட நேரமின்றி முயல்வர்; செயிர் - மூடமும் முரடும். மூடரையும் முரடரையும் நாட்டில் விட்டு வைத்தால் கொலைத் தொழிலே பெருகும்.

## 89. உட்பகை

1. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

நிழலும் நிழல் நீரும் என்க. வெய்யிலே உடலில் படாமல் நிழலில் இருத்தலும் தீது. வெயில் படாது எப்போதும் நிழலிலேயே இருக்கும் நீரும் இன்னாது. இன்னா செய்யாதவரும் இன்னாசெயின் இன்னாததாம்.

2. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

வில்லேர் சொல்லேர் உழவர் பகை பற்றியதே. வாள் போல் வெட்டொன்றும் துண்டிரண்டுமாகப் பேசுவர்; கேள்-வழவழாப் பேச்சினர்.

3. உட்பகை யஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

மண் குதிரைப் பகை. மண் சரிவு, மண் சுவர் போல எப்பொழுது சரியுமென்று தெரியாது. ஆற்றுக்கரை மட்பகையுமாம்.

4. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவுந் தரும்.

இது மொழி சமயம், அரசு பற்றிய ஓரினத் தகத்தே தோன்றும் உட்பகை. மூவேந்தர் கெட்ட தவ்வாறே. மன நலத்தாலாகும் எச்சமும், மறுமையும், மன்னுயிராக்கமும் கெடும்.

5. உறன்முறையான் உட்பகை தோன்றின் இறன்முறையான்
ஏதம் பலவுந் தரும்.

உறவின் முறையாரிடம் உட்பகை இது. சாவைத் தப்ப முடியாது, எப்போதும் உயிரழிவிற்குரிய துன்பங்கள் தொடரும். உணவில் நஞ்சிடல் முதலியன செய்வர்.

6. ஒன்றாமை யொன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்றல் அரிது.

இதுவும் இறன் முறை. ஒன்ருமையைப் பொருந்திய வர். ஒன்றியார் - சூழ்வார்; கட்படின் - அவர் கண்ணேறு பட்டால். ஒன்றியார் - மனைவி மக்கள், உடன் பிறந்தார் முதலோருமாம்.

7. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
உட்பகை யுற்ற குடி.

இது சுட்ட மண்ணின் புணர்ச்சி, கூடாதென்பது. பழங்குடிகள் பலர் ஒருவர்க் கொருவர் அடித்துச் சாதல் உட்பகையாலாம். குடியினர்க்குள் வழக்கிட்டழிதலும் அது. செப்பின் - கூறினல் எனலுமாம். தீரா ஊடலுடையோர் புணரினும் அவர் புணர்ச்சி உளங் கலந்ததன்ருமது போலவுமாம்.

8. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு(து)
உட்பகை யுற்ற குடி.

ஒருவர் உரத்தால் மற்றவர் உரத்தைப் பொருதழிதல், உட்பகை உள்ளூர ஒருவன தாற்றலை யழித்துவிடும். பார்த்தற் கழகாவது போலத் தேயும். உரம் - அறிவுமாம்.

9. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை யுள்ளதாங் கேடு.

எள்ளே சிறுமை - பகவு பகையைக் குறிக்கும். கேடு சிறுமைத்தாயினும் கேடு கேடே. நஞ்சின் சிறுமை போல்வது.

சிறுமைக்குத் தினையைக் கூறியவர் எள்ளைக் கூறினர். தம்மை அரைத்தும் பிழிந்தும் வருத்தும். எண்பகவு என்ருக்கி ஒன்றின் நூற்றில் கூறு, ஆயிரத்தில் கூறு $\frac{1}{100}$. $\frac{1}{1000}$ எனலுமாம்.

10. உடம்பா(டு) இலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ(டு) உடனுறைந் தற்று.

மனைப்பாம்பென வீட்டில் பாம்பை வளர்க்கும் காலம் அது. நெஞ்சில் நஞ்சுடையவர். குடங்கர் - பாம்புக் குடில்-புற்றுமாம்; புற்றருகே வாழ்தல்.

## 90. பெரியாரைப் பிழையாமை

1. ஆற்றுவா ராற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

ஒன்னார்த்தெறலும் உவந்தாரை யாக்கலும் எண்ணின் ஆற்றுவார். அரியவை போற்றலென்ற போற்றல்; யாதொன்றும் பேணுமை என்றதில் பேணுதலுமாம்.

2. பெரியாரைப் பேணு தொழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

பேர்தல் - தீர்தல். பெரியாராலும் தீர்க்கமுடியாத, இடும்பை விளைத்த அவராலும் தீர்க்க முடியாத என்க. இடும்பை தரல். அவர் பிறர்க்குத் துணையாய் நின்று தரல்' பேரா - சாகும்வரை தீராதது.

3. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு.

கேளாது செய்தல் - அவருடன் சூழாது வினை செய்தலுமாம், நினைத்தால் அச்செயலை யழிக்கவல்லவர், கேளாது செய்தல் - பழைமை உரிமையாற் செய்தலுமாம். ஒத்தாரிடத்தன்றி உரிமை பெரியோரிடத்தாகாது.

4. கூற்றத்தைக் கையால் விளித்தற்று லாற்றுவார்க்கு
ஆற்றுதா ரின்னு செயல்.

எல்லோரையும் அழித்துத் தானழியாதிருத்தலின் கூற்றம் ஆற்றுவார்க்கு வமையாயிற்று. கூறுபடுத்தி (பிரித்து) அழித்தலின் அவ்வாறுரைத்ததுமாம். இலக்கியங்களில் கூற்றம் ஆற்றலுக்குவமையாகும்.

5. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

வேந்து - பேரரசன் ; வல்லரசு. எங்கும் அவன் ஆணை செல்லலின் ஓரிடத்தும் இருக்கவிடார். வேந்து - அரசியற் பெரும் பதவியாளருமாம். யாண்டும் - எக்காலத்தும். கைதி என்றைக்காவது பிடிபடுவான்.

6. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

மதுரை எரியுண்டதை நினைத்துக் கூறியதாகலாம். தீயும் ஆற்றலுக்கிடமாக்க கூறப்படும். அவர் சாபம் நாவினுற் சுட்ட வடுவாகலின் உய்யாரென்றுர். எரி சில விடங்களைத் தப்பவிடும், பெரியார்முன் எதுவுந்தப்பாது.

7. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்ஆம்
தகைமாண்ட தக்கார் செறின்.

வான்பொருள் - நந்தரது செல்வமுமாம்; கற்பகதாரு போன்ற செல்வம். வகை மாண்ட வாழ்க்கை - பெருமகன் தலைவைத்த குடி; அறம்பொருள் முதல் வகை மாண்டது மாம். படை குடி முதலிய எல்லா வகையுமுடையதுமாம்.

8. குன்றன்னர் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னர் மாய்வர் நிலத்து.

குணக் குன்றேறியோர்; குடியொடு - குன்றுபோலுயர்ந்து நாடறியும் குடி. நிற்றல் - பதியெழுவறியாப் பழங்குடியாய் நிற்றல். குன்றன்னர் மதிக்கில், குன்றன்னரை மதிக்கில் என்க.

9. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

உலகம் வாழ உயர்த்திய கோட்பாடுடையார். நல்ல எண்ணமுடையவர் (தூயோர்) சீறின் வேந்தனும். நல்லெண்ணம் மலையையும் அசைக்குமென்பது கிறித்துவக் கருத்து. இடைமுரிதல் - அவர் வினை இடைக்கொட்கல். இங்கும் கொள்கையார், கொள்கையாரை என்க.

10. இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

இறந்தமைதல் - தன்னட்டிற் கடந்து தேவரது சார்புடைமை. கடவுளரே காக்கினுமென்க; படியுடையார் பற்றுமாம். தானே செத்து தானே உயிர்க்கவல்ல சித்துமாம்.

## 91. பெண்வழிச் சேறல்

**1.** மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.

எடுத்த செயல் எதுவும் கெடும். வினைவிழைவார் - பெரியார். மாண் பயன் - இன்பமும் வீடும். விழைவார்க்கு வேறு வினை செய்ய நேரமில்லை யெனவே, வேண்டாப் பொருளாம்.

**2.** பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

ஆண்மையைப் பேணாமல் என்க. நாணுத்தரும் - பேடியாவான்; பெண்ணுக்குரிய நாணம் ஆணுக்காதலால், தற்கொண்டாற் பேணாதவளாக எனினுமாம்.

**3.** இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை யெஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்.

நல்லார் - பெண்கள். பெண்களே இவனைப் பழிப்பர். பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டாமல் பழித்தல். மனைமாட்சி யில்லாளென்க.

**4.** மனையாளை யஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

மறுமையிலாளன் இம்மையுமில்லாதவன்; மன நலத் தானாகும் மறுமை யென்ற மன நலமில்லாதவன். அஞ்சுதலின் ஏறுபோற்பீடு நடையில்லை; அஞ்சாததற் கஞ்சும் அறிவிலான். அச்சமே ஆசாரமாகவுடைய கீழ்மகன்.

**5.** இல்லாளை யஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.

நல்லார்க்கு நல்லதாகிய அறம். அறமில்லாதவன் என்பது. செயலில்லாளை அஞ்சுவான் எஞ்ஞான்றும் அச்சம் குடிகொண்டவனாவான். அவன் அஞ்சாத பொருளில்லை அவனியிலே.

**6.** இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோ ளஞ்சு பவர்.

தெய்வத்துள் வைக்கப்படும் வாழ்க்கை, கல்லனைய வீரர் தோட்கஞ்சாதவன் மூங்கில் தோளுக்கஞ்சினனென எள்ளியது. தோள் - கை. கைநீட்டியவிடத்தில் கையெழுத் திடுபவன்; உட்காரெனில் உட்காருபவன் எழுவெனில் எழுபவன். இமையார் - வேல் கொண்டெறியின் இமையா வீரனெனினுமாம். இமைத்தலின்றிப் பழம்பெருமையைக் காத்து வாழினும் என்பதுமாம்.

7. பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

ஆணை ஏவல் செய்தொழுகும் ஆண்மையுடைய பெண்ணைவிடப் பெண்மையுடைய பெண்ணே பெருமை யுடையவளென அவளை இகழ்ந்தது. வினையே ஆடவர்க் குயிரே என்பதை இப்பெண் மாற்றிவிட்டதென வியந்தது.

8. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

எப்பொழுதும் அவள் சிற்றின்பத்தில் ஈடுபட்டவர். நாடாச்சிறப்பில்லை. அவருக்கு ஆண்களே நண்பராகா ரென்றது. நண்பர் அவரது குறைகளை முடியாரென்றுமாம். தம் நாட்டர் குறை முடியார், அவள் நட்டார் குறை முடிப்பர் என்க.

9. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்.

பிறவினை - இன்பமும் வீடும். பெண் இவற் கேவல் செய்வாக்கெனலுமாம். பெண்ணை அடிமைப்படுத்தி ஏவல் கொள்ளலுமாகாது. பெண் இவன் வழிச் சேறல். வாழ்க் கைத்துணை யெனில் துணைவலி யென்பது. துணைப் பெரி யோர்போல இவற் கொப்பான அறிவும் ஆற்றலும் உடை யளாகவேண்டும். அவளை ஒன்றுமில்லாதாளாக்கி அடிமை கொள்ளலும் அறமன்று.

10. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

எண்சேர்ந்த நெஞ்சம் - சிந்தனையுடைய நெஞ்சம். சிந்தனை சக்தியே அழிந்துவிடும். இதுவும் பெண்ணை ஏவல்

கொள்வதே. பேதைமை யென்றதால் அறிவழியும் என்க. எண்சேர்ந்த நெஞ்சத்திடனுடையார் - உலகில் எண்ணற்ற வர் உள்ளத்தில் குடிகொண்டவர். எண் - அறிவியல் (Scientific Mind).

## 92. வரைவின் மகளிர்

1. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.

அன்பின் ஐந்திணைக் குரியாரல்லார். இது சொல்லா லன்றிப் பொருளால் இன்சொல் அன்ருகலின் இவர் செம் பொருள் கண்டார் அல்லர். இழுக்குத் தருதலால் செம் பொருட் (அறக்) காட்சி கிட்டாது.

2. பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

பண்பில்லாத, பண்பினையுடைய மகளிர் என்க. ஆடல் பாடல் முதலியவற்ருல் இவரும் பண்பினையுரைப்பவரேனும் பயன்றூக்கலால் நயனில்லை. நயன் - இன்பம்; நீதி; கொள் வது மிகை கொண்டு கொடுப்பது குறை கொடுப்பவர்.

3. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று.

இவளும் வளத்தக்காள். வளத்திற்கேற்ப நட்புடைய வள். ஏதில் பிணம் - பகைப் பிணம். இன்பத்திற் கெதிரி யாகலின் அவள் பகைப் பிணம் என்பது. இன்ப உணர்ச்சி யற்ற பிணம். அவர் கூலி பெற்றுத் தழுவ, இவன் கொடுத்துத் தழுவலின் நகையாகுமென்றது.

4. பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயு மறிவி னவர்.

அருள் - கோயில்களில் தாசிகளை வைக்கும் பழக்கத் தைக் கடிந்தது. முதலில் அன்பின் விழையாரென்றலின் அருளுக்குரியரல்லாமை பெறப்படும். அறிவின்மையுமாம். பொருட் செவிலி போதலின் அருளில்லையென்பது. அருட் பொருள் ஆயும் அறிவினவர் - இல்லறத் துறவிகளுமாம்.

5. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.

கலேகளால் பொதுநலஞ் செய்பவருமாம்; பொதுநலத்திற்கு வரைவின் மகளிர் அமைப்பு வேண்டுமென வாதிக்கும் அறிஞரும் உலகில் பலர். இம்மகளிர் பொதுநலத்திற் கெதிரிகள்; பொருளே யெல்லாம் தங்நலத்தில் இழுத்தலின்.

6. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

தன்னலத்திற்கும் இவர் நட்பாகாது. கற்புடையாள் நலனேக்க இது புன்னலமாயிற்று. பொதுநல மனத்தார்க்கு இம் மகளிரது தன்னலம் பிடிக்காதென்றது. இரு நலமும் கெடலின் நலமென்பதே நிலத்திலில்லே.

7. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.

நிறை (கற்புடைய மனேவி) நெஞ்சை யுரிமையாக இல்லாதவர். நெஞ்சில் புணர்ச்சி யல்லாத வேறெண்ணத்துடன் புணர்பவர். இது தாமரைக் கண்ணுன் உலகன்றி, மாமுகடி உலகு. உயர்ந்த எண்ணங்களால் நிறைந்த நெஞ்சிற்கு இவரைப்பற்றி நினேக்க இடமிராது.

8. ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

அணங்கு - நீரர மகளிர், வரையர மகளிர் போன்ற பிற நாட்டுப் பெண்களாகலாம். ஊர்வசியே மாதவியாகப் பிறந்தாளென்ற சிலப்பதிகாரக் கதையால் பிற நாட்டுப் பெண்கள் தமிழகத்தே பரவிய பின்பே வரைவின் மகளிர் குலம் பெருகியதாகலாம்.

மாய மகளிரும் அவரே. மணிமேகலேயில் அப்பெண்களின் பரவல் குறிக்கப்படுகின்றது. காமநூல் ஆயுமறிவினர் - (Sexual Science).

9. வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழு மளறு.

வரைவிலா - மணமில்லாத. வரைவிலா இழை - நகைப் பைத்தியத்தை உண்டாக்குபவர். வரைவிலா -

தோள் - அதனுடன் இணைந்த தோள்கள் அளவில்லை. தாமரைக் கண்ணான் உலகென்றவர் இங்கு அளறு என்றார். அளறு - தொழு நோய்ச் சேறு.

**10.** இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

ஒரே சமயத்தில் இருவரைப் புணர்பவர். கள்ளும் கவறும் வரைவின் மகளிர் நட்புடையாரைத் தொடர்வன. திரு நீக்கப்பட்டார் - திருமகளனைய மனைவியை நீங்கினர். மனைவியை விலக்கி (Divorce) வாழ்பவர். அவருள் பலர்க்கும் இம் மூன்றும் உரிய என்பது.

## 93. கள்ளுண்ணாமை

**1.** உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்.

உட்கப்படார் - பகைவரால் வெல்லுதற் கெளியவர்; ஒளி - புகழ், அறிவு, கண்ணொளி உடலொளியுமாம். புகழும் அறிவும் போய்விடும்; மனிதத் தன்மை யிழப்பரென்பது. காதல், கள்ளில் சென்றால் மனைவியிடம் செல்லா தென்பது மாம்.

**2.** உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

புலவர் அமைச்சர் முதல் சான்றோரும் கள்ளுண்டதனை விலக்கியது. எண்ணப்படல் - ஒரு மனிதனாக, ஒரு பொருளாக எண்ணப்படல். ஒறுத்தாரை ஒன்றாக வையாரே என்றதும் எண்ணியது. சான்றோர் உணில் உண்க, சான்றோர் ஆக விரும்புவோர் உண்ணற்க என்றதுமாம்.

**3.** ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

குடித்து வீட்டிற்குள்ளேயே இருப்போரை விலக்கியது. அத்தகைய குடிக்கும் சான்றோர் தன் மகனைச் சான்றோனெனில் ஈன்றபொழுதிற் பெரிதுவ வாளென்பது. தாயும் தந்தையும் (ஆணும் பெண்ணும்) குடித்தால் என்னுவதென்

றுமாம், முகத்துக்கு அணி எனப் பிரித்து முகமலர்ச்சியும் இனிய கூறலும் இல்லை யென்க.

4. நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு.

ஆண் பெண் நாணமற்று விலங்கு போல் திரிவான். பெண்களின் நாணத்தை யழிப்பான். நாணமற்ற தீய வரைவின் மகளிரே அவற்கு முகங் கொடுப்பர்; கற்பு மனைவி அவனிடம் நில்லாள். வரைவின் மகளிரை யடுத்து கள், சூது, மருந்துகளை வைத்தது அதனாலேயே. அவரா லுறும் நோயைத் தீர்க்கு மருந்து.

5. கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

கை - ஒழுக்கமவர்க்கில்லை. மெய்யறியாமையால் அவ ரைப் பகைவர் கொள்ளல் எளிதென்பது; ஒரு மொந்தைக் கள்ளுக்கு உயிர் கொடுப்பான்.

உண்மைப் பொருட்காட்சியு மில்லை.

கையறியாமை - யாரைத் தொடுகிறோம் யாரைப் பிடிக் கிறோம் என்ற உணர்ச்சி யின்மை.

6. துஞ்சினர் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

அவரை நஞ்சு கொடுத்துச் சாகடித்தல் எளிது. இவர் பெயக் கண்டு நஞ்சுண்டமையும் நாகரிக மில்லாதவர். அளவு மீறிக் குடித்துத் தூக்கத்திலேயே இறப்பவர்.

7. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

ஊர் சிரிக்கும் வாழ்வின ரென்பது. கண்சாய்தல் - கண்ணோட்டமிலராதல்; சீக்கிரம் கண் பார்வை யிழத்தலு மாம்.

8. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்(து)
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

மறை பிறர்க் குய்த்துரைக்கும் கயமை வளரும். மற்ற துடன் கள் குடித்தது பற்றியும் கூறி விடுவான். குடிப்பேன்

ஆனல் ஆட மாட்டேன் என்பாரை நகைத்தது. தன் குற்றத்திற்குத் தானே நேர் சாட்சி (Approver) யாவான்.

9. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

கள்ளிலேயே மூழ்கிக் கிடக்கிருனென்பது. காரணங் காட்டுதல் - சாட்சியாக்குதல். கள்ளைக் கொடுத்துச் சாட்சி சொல்ல வைத்தலாகாது.

10. கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

இது அவனை வெளியிற் கொண்டு வந்து காரணங் காட்டுதல். உண்ணும் போதிலன்றி உண்ணுத போதும் அறிவுமயங்குமாகலின் கொல் என்ருர். வலியார் முற்றன்னை நினைக்க என்றது போல அனுபவங் காட்டி விலக்கியது.

## 94. சூது

1. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

ஆளையே விழுங்கி விடுமென்பது. இரும்பால் கட்டிய மீனை விழுங்கினுற் போலுமாம். ஒன்றெய்தலு மில்லை யென்றது. வென்றிடினும் இழத்தொறூஉம் என்றதால் அகப்பட்டுக் கொண்டால் (நட்பின்) வீடில்லை.

2. ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு.

நன்று - அறம். அறமும் பொருளுமில்லை. ஆறு இல்லை யென்றமையின் இன்பமும் ஒழுக்க நெறியுமில்லை.

பொய் தீரொழுக்க நெறிக் கிடையூரும். இவ்வொரு தொழிலில் இறங்கினல் மற்ற நூற்றுக்கணக்கான பொருள் வரு நெறிக்கு நேரமிராது.

3. உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

உருளாயம் - அவ்வாயம் உருண்டு கொண்டே இருப்பது. நிலையாதது. புறமே படும் - சண்டையும் சச்சரவுமே

உண்டாகும். அரசர்க்கு மக்கள் (பொருளாயம்) வரி கொடார்.

**4.** சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

வறுமை தரும் துன்பத்தினும் சிறுமையினும் சீரழிவினும் சூது மிகுதியாகத் தரவியலாது. அறிவையும் புகழையும் அழிக்கும். வறுமையைப் போக்க ஆடுவே மென்பார்க் குரைத்த துமாம்.

**5.** கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

கை தருக்கல் - சகுனியினுடைய கைத்திறந் தருக்கல். இப் பிறப்பில் வறுமையுடையோர் முற்பிறப்பில் சூதாடிய வரென்க. (அஞ்சாமை) ஈகை அவரிடமிராது.

**6.** அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார்.

அகடாரார் - நேரத்திற்கும், நிறையவும் உண்ணமாட்டார் முகடியான் மூடத்தன முற்றவர். தவ்வையின் நட்பால் அழுக்காறுடையானும். அகடு - பொறிகளுமாம்.

**7.** பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

காலை புகின் - விடியலிலிருந்து நாள் முழுதும் ஆடினுல், காலை வைத்தால் எனலுமாம். தலைமுறையாக வருங் குடி யழியும், பண்பாடழியும். அக் கழகத்தில் பழகும் செல்வ மும் பண்பும் ஒருவனை யழிக்கு மென்க.

**8.** பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்(து)
அல்லல் உழப்பிக்குஞ் சூது.

அவ்வுலகமும் இவ்வுலகமும் இல்லை. பொருள் நீங்கிப் பொய்ச் சார்தலதுவே. பொருள் கொடுத்து மெய்யறி யாமை கொளலுமாம்.

**9.** உடைசெல்வ மூனொளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின்.

அகத் தூய்மையும் புறத் தூய்மையு மிராது. உட லுணவும் உயிருணர்வும் (கல்வி) இல்லே. சூதாடும் மாண வர்க்குக் கல்வி வராதென்றது.

**10.** இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉங் காதற் றுயிர்.

இலக்கமுடம் பிடும்பைக் கென்று பிறவியை யறுக்க விரும்புவாரில்லே; மனேவி, மக்கள், தான் என்ற அனேவரை யும் இழத்தொறூஉ மென்க. உயிர் இழத்தொறூஉ மென் ருக்கி சூதில் அடிமையாகி உழைத்துயிர் விடுவானென்க.

வாழ்க்கையே ஒரு சூதாட்டம். துன்ப முழத்தொறும் உடலேயும், இழத்தொறும் சூதையும் வெறுக்க என்றது.

## 95. மருந்து

**1.** மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

உணவு, உடற் பயிற்சி, உடற் பருமன் (எடை), இரத்த இறைப்பு (Pressure) முதலிய மிகினும் குறையினும் என்க. மூன்று மிகினுமாம்.

**2.** மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய(து)
அற்றது போற்றி யுணின்.

முன்னேர் அருந்தியது. அற்றது - தனக்குச் செறிக் கும் உணவு. யாக்கைக் கென்றமையின் உடம்பிற்காக வன்றி உண்பதற்காகவே உண்பதாகாது. உடல் நிற்றற் பொருட்டுச் சிறிது வயிற்றுக்கும் ஈந்தது. பேதிக்கு வேண் டாம்; ஓமியோபதியில் பேதிக்குக் கொடுத்தல் இல்லே.

**3.** அற்றல் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றன் நெடிதுய்க்கும் ஆறு.

பெற்றன் - பெறற்கரியது (உடம்பு) பெற்றனென்பது. நீண்ட காலம் வாழ வேண்டும் என்ற விருப்பமும் வேண மென்பது. உண்க, அற்றல் - அதுவே போதுமென்பது. நெடி துய்த்தல் - கடைசி வரை உணவை யுய்த்தல். அளவறியா துண்டால் நெடிது உண்ணப் போதிய பொருளும் இராதென்றது. அளவு - சத்தளவு (Vitamins). மா,

மாமிசம், உப்பு முதலியவற்றினளவு, கால அளவுமாம். காலந் தவறி உண்ணலாகாது.

**4.** அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

அற்றது - உண்டு கழிந்தது. மலச்சிக்கலின்மையே நோயின்மைக்கு முதற்காரணம். தன்னுடலில் எதுமிக்கதோ அதனையே உண்ணல் மாறுனதாகும். துய்க்க என்றதால் நினைத்துச் சுவைத்துண்ண வேண்டும்.

அவசரமாயும் மெல்லாமலும் வேறு நினைவுடனும் உண்ணற்க என்றது.

**5.** மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு.

மறுத்தல் - அருமையும் சுவையுமுடைமையால் உண்ணும் ஆசை மிகுதல் இயல்பு, அதனை மறுக்க என்றது. உயிர்க்கு - உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே - (திருமந்திரம்). வகைக்காக வேண்டாததை யுண்ணுமல் நல்லதை மீண்டு மீண்டும் (மறுத்து) உண்ணலாமென்றது.

**6.** இழிவறிந் துண்பான்கண் இன்பம்போ(ல்) நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.

இரை - விலங்கும் பறவைகளுமே அவ்வாறுண்ணும். இழிவு - சிறிது. சிறிது வயிற்றுக்கு மீயப்படும்.

நோயின்மையே இன்பமென்பது. கழிபேரென்றமையின் மிகக் குறைந்த உணவும் நோய் செய்யும். கழி நோய்-கழிச்சல் (Diarrhoea) நோய். நீரிழிவறிந்துமாம்.

**7.** தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

தீயளவு - அப்போதைய பசியைத் தணித்தலோடன்றி அடுத்த வேளைப் பசியைக் கிளப்பு மளவும். தீமையளவுமாம். உணவு நெறியிலேயே பெரிதும் நோயுண்டாதலும் தீர்தலும் உளதென்பது.

தீப்போல் பரவும் காலரா (Cholera) முதலியவற்றினளவு.

**8.** நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

நோய் முதல் - முன்னோர்க்கிருந்ததா, மனநோயா உடல் நோயா என வெல்லாமறிதல். வளி முதலா என்றது நோய் முதலே. இக்கால மக்கட்கும் மருத்துவர்க்கும் நோய் முதலறிவு குறைந்து வருகிறது. வாய் - சிகிச்சை தொடங்கும் வயது, பருவம், உடலிடம் முதலிய.

**9.** உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.

உற்றானளவு - ஆற்றலும் வயதும் பொருளளவுமாம். பிணி உடலில் தங்கிய கால அளவு; சுற்றுப் புறத்தில் பரவிய அளவுமாம். காலம் - இந்நோய் சிகிச்சைக்கு இப்பருவமே சிறந்ததெனல். கற்றான் - தனக்கு மருத்துவன் தானே என்பதாகாது. அனுபவத்தால் செய்வோருமாகாது.

**10.** உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்(று)
அப்பால்நாற் கூற்றே மருந்து.

நான்கில் ஒன்று குறைபடினும் மருத்துவம் முடம்படுமென்றது ; கூற்றே - குறையின் மருந்தே கூற்றாகு மென்பதும் குறிப்பு. உற்றவன் தானே அறிந்துண்பது, மருத்துவன் கொடுப்பது, ஒரு மருந்தின் குணத்தை மாற்று மருந்து, உழைச் செல்வானே அறிந்து கொடுப்பதென நால்வகை மருந்துமாம்.

## 96. குடிமை

**1.** இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

செப்பம் - செம்பொருள், அறம் நடுவுநிலைமை. இயல்பாக நாண் - பழகிய பண்பு. இயல்பு - எச்சத்திற்கேமாப்பாக வருதல். செப்பமும் நாணும் இருகண்ணல்லது வேறில்லை என்றுமாம்.

**2.** ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

ஒழுக்கமும் வாய்மையும் - பொய்தீர் ஒழுக்கம். மூன்றும் திரிகரணங்கட்கு முரிய. இழுக்கார் - உயிரினும் ஓம்புவர். குடிப்பிறந்தார் ஒழுக்காம் - முன்னோர் ஒழுக்கம். ஒழுக்க முடைமை குடிமையென்றார்.

3. நகையீகை யின்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

அகனமர்ந்தீதலும் முகனமர்ந் தின்சொலும். இக ழாமை - கேலி நகையன்றென்பது. நகையும் இகழ்தலும் கலந்திருத்தலும் ஆகாது. முகமலர்ச்சிக் கலை குடிமைப் பண்பு. அவர் பிறர்க்கீதல் அதனையே யென்றது.

4. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

பழியெனின் உலகுடன் பெறினுங் கொள்ளலர் (புறம்) தம் குடிப்பிறந்தார், தாம், உலகு குன்றுவ வென்க; உள்ளஞ் சிறுகுவனவுமாம், குடிப் பிறந்தார் குன்றுவனவற்றை எவரும் செய்யார். கோடியால் கோடுவ செய்யார்.

5. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரித லின்று.

வழங்குவது - பொருள், உடல் நடமாட்டம்; தான் வழங்கும் (நுகரும்) உணவு, உடை, முதலியவற்றையும் அளிப்பர்; அரசு வாழ்க்கை எனலுமாம்.

6. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்.

சலத்தாற் பொருள் செய்தல். மாசற்ற குலம் - வாய் மைக் குடி. தீநெறியைப் பின்பற்றி அன்றித் தனக்குற்ற தீமையைப் போக்க வேண்டியென்க; சால்பு - சான்றோரை வளர்த்தல் குடிக்கடன். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வர் என்றுமாம்.

7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

எனினும் கெடுவாக வையா துலகமென்றது. அவர் குடி கலையழகும் வளர்ச்சியு முடையதென்பது. குடி

வானுயர் தோற்றமுடையது. குற்றம் யார்க்கும் இன்னு செய்தது.

8. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

வேற்று நாகரிகக் கலப்பென்றையப்படல். மொழி, இனம், நாடு முதலியவற்ருல் குடி அமையும். குடியில் அனைவர் நலத்தின் கண்ணும் பற்றில்லா விடிலென்க.

9. நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

கால் - கால்பதிவு; காற்றுமாம். சொல்லே ஒருவர் நினைவை எக்காலத்தும் மாருமற் காக்கும் சுவடாம். சொல்- நூல்களுமாம். அவ்வழியாக வரும் காற்று அந்நிலத்துப் பொருள்களின் மணத்தைக் கொண்டு வரும்.

10. நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

நலம் நாண் - நலத்தின் கண் நார். எனவே நார் - நாண். எல்லார்க்கும் நன்ரும் பணிதல். அடக்கம் குடிப் பண்பு. யார்க்கும் - எச்சாதி எவ்வினத்தானுயினும் உயர்ந் தோன் பிறந்தது உயர் குடி. வள்ளுவரும் கண்ணப்பரும் உயர் குடியினர். உயர்ந்த கிளை வளைந்து தாழ்தல் போல உயர்குடி பணியுமென்பது.

## 97. மானம்

1. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.

இன்றியமையாச் சிறப்பின - ஈன்ருள் பசி காண்பானு யினும்; தன்னுயிர் நீப்பினும். குன்றவருப - குடிப்பிறந்தார் குன்றுவது, உள்ளஞ் சிறுகுவ. உயிர் வாழ்க்கை யன்று, குணவாழ்க்கையே மானம்.

2. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

பேராண்மை - பிறன் மனை நோக்குதல் சீரல்ல; ஊராண்மை யின்மையுமாம். சீர் - உலகியற் செல்வம். ஆண்மை - உயிர்ச் செல்வம்.

3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

சிறிய சுருக்கம் - அதன்மேல் சிறுகக் கூடாத சுருக்கம் பெரிய பெருக்கத்தென்க. செல்வர்க்கே செல்வந்தகைத்து. உயர்வு - பண்பிலும் அறிவிலும் உயர்வு கருதி நிற்றல்.

4. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

இழிந்த மயிரனையர் - எல்லாரானும் மிதிபடுவர், அடிமை யாவர். மாந்தர் நிலையினிழிதல் - மனிதத் தன்மையிற்றாழ்தல்.
மனிதத் தன்மையை இழத்தல் அவமானம்.

5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

குன்றியனைய - குன்றி மணி மூக்கிற் கருமையளவு குன்றுவ தினைத்துணையாங் குற்றம். குற்றத்திற்குக் கருமை யன்றி குன்றி முழுதும் உவமையாகாது.
குன்றியளவு நச்சுச் செயலுமாம்; குன்றின் அனையார் - அடங்கிய மலையினும் மாணப் பெரிய தோற்ற முடையவர்.

6. புகழின்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்(று)
இகழ்வார்பின் சென்று நிலை.

தன் பண்பாட்டினை யிகழும் தன் இனத்தவன். போரில் மானங் காப்பவற்குறும் புகழும் வீரசொர்க்கமும் இல்லை. போரில் சாதலை விட்டு அடிமையாகாதே என்றது.

7. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டா னெனப்படுதல் நன்று.

ஒட்டார் - பண்பாட்டையிகழும் அயற்பண்பினர். அயற் பண்பைப் போற்றி வாழ்தலிற் றம் பண்பில் இறத்தலே சிறந்தது. எவ்வளவு பழகினும் ஒட்டார். சாதல், இனிதாஉ மென்றது.

**8.** மருந்தோமற் றூனேம்பும் வாழ்க்கைப் பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

பெருந்தகைமையே மானம். தகைமை - தகுதி, நடு நிலே. மருந்து - அமிழ்து. அமிழ்தத்தாலும் மானத்தை உயிர்ப்பிக்க முடியாது. ஊனே மானத்தாலன்றி மருந்தாற் காத்தலாகாது.

**9.** மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னூர்
உயிர்நீப்பார் மானம் வரின்.

உயிர் நீத்தலால் மானம் காக்கப்படுமானுல் என்க. இது தலேயினிழிந்த மயிரன்று. மயிர் நீத்தல் அவமானம். அதனுலேயே முற்காலத்துக் குற்றஞ் செய்தோரை மொட்டையடிக்கும் பழக்கம் வந்ததுபோலும்.

**10.** இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்து முலகு.

ஒளி - அவர் மனிதவினத்திற்கு ஒளி - வேந்தர்க்கொளி என்றது போல. விளக்கும் கதிரவனுமாம். இரண்டையும் மாந்தர் தொழுவர். விளக்கு மங்கலமுமாம். உலகுக்கு இளிவரின் என்க. தொழுதேத்தல் - படமாகவும் சிலேயாக வும் வைத்துத் தொழுதல்; கோயிலில் வைத்து விளக் கேற்றித் தொழுதல்.

## 98. பெருமை

**1.** ஒளியொருவற் குள்ள வெறுக்கை இளியொருவற்(கு)
அஃதிறந்து வாழ்து மெனல்.

ஒளி - உள்ளபோதேற்படும் மதிக்கற்பாடு என்பதினும் பெருமையென்பது இதனுற் புலப்படும். உள்ள வெறுக்கை- ஊக்கமுமாம். பெருமையைப் பற்றி, இறந்து அடுத்த பிறப் பில் பார்த்துக் கொள்வோமென்பது இளி. வெறுக்கைக் கிளியுமாம். உள்ள பெருமை சிறுமைதான் என்பதும் பாடம்.

**2.** பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

செயற்கரிய செய்தொழில் வேற்றுமையான். ஆறறிவு வரையுள்ள எல்லாவுயிரும் சமம். ஒன்று இரண்டு முதலிய

அறிவாற் செய்தொழில் வேற்றுமையால் ஒவ்வா. ஒவ்வாத தொழில் எதனையும் சிறப்புறச் செய்யின் சிறப்பொக்கும். சிறப்புறச் செய்யும் சக்கிலித் தொழிலும் சிறப்புறச் செய்யும் அமைச்சுத் தொழிலும் ஒன்றே.

**3.** மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்.

மேற் பிறந்தாராயினும் கல்லாதார் - கீழ்ப் பிறந்தும் கற்றூர். கல்வி பெருமையை வளர்க்கும். ஒருபோது பெருமையால் மேற் சென்றவர் ஊக்கத்தால் மேலு மேலும் செல்ல வேண்டுமன்றிக் கீழே செல்லலாகாது. அயரா ஊக்கமே பெருமை.

**4.** ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

கண்ணகியை ஆதிரையை நினைத்துக் கூறியதாகலாம் இது. தானும் ஒருத்தியுடன் ஆண் கற்புடையனு யொழுகல் பெருமை; ஒரு மனமுடைய கற்பு மகளிரே போல ஓரைந்தையுங்காத்து அடக்கத்துடன் நிலையிற்றிரியா தொழுகின் என்க.

**5.** பெருமை யுடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை யுடைய செயல்.

செயற்கரிய செய்யும் நீத்தார் பெருமையுடையர். தியாகத்தினல் பெருமை வரும். உரனும் (அறிவும்) மறை மொழிகளும் பெருமையை வளர்க்கும். அதனையும் நெறி யுடன் (ஆற்றின்) செய்வர்.

**6.** சிறியா ருணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னும் நோக்கு.

பேணித் துணையாகக் கொள்வோம், அவரிடமிருந்து கேள்வியைக் கொள்வோம்; நட்பினைக் கொள்வேமென்னும் நோக்கு. பெரியோரைத் துணைக் கொண்டால் பெருமை வளரும். பெரியோர் நெறியையும் நூல்களையும் பேணிக் கொளலுமாம். நோக்கு - கொள்கை, கோட்பாடு.

**7.** இறப்பபே புரிந்த தொழிற்றுஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின்.

சிறியவரிடம் (ஒட்டார்பின்) பெருமையுடையர் சென்று வாழ்தல் இறப்பே புரிந்ததாம். சிறப்புக்குரிய கல்வி, செல்வ முதலியன சீரல்லவர் கட்படின் என்க. இறப்பே புரிந்த என்றதால் பெருமை உலகை வாழ்விக்கும் சிறுமை அழிக்கு மென்றது.

8. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

அணிதல் - நகை முதலியவைகளைப் பூட்டிக் கொள்ளுதல். நகை, விருதுகள் முதலிய ஆரவாரம் பெருமைக் குணமன்று. பணிதலும் அணிதலும், பெருக்கத்து வேண்டும் பணிதலும் சுருக்கத்து வேண்டும் உயர்தலுமல்ல. அது செல்வப் பெருமை, இது குணப் பெருமை. பணிதல் - வியவாமை; வியவற்க எஞ்ஞான்றும் தன்னை.

9. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

பெருமிதம் - ஒரு வகை மடம். தன் பெருமையை உணராதார் போல அடங்கி நிற்றல் பெருமித மின்மை; தன்னை மிகுதியாக நினைத்துக் கொள்ளாமையுமாம்.

10. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

பிற நாகரிகத்திலும் நூலிலுமுள்ள குறைகளை மறைத்து நிறைகளையே கூறல் பெருமை. பிறர் குற்றத்தைப் போக்குவது பெருமை; அது செய்யாததுடன் கூறித் திரிவது சிறுமை.

## 99. சான்றாண்மை

1. கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

மனிதப் பிறவியின் கடனென்றறிந்து, தத்துவர்கள் கூறும் நல்லன (Good) தீயன (Evil) என்பவற்றுள் நல்லன

வற்றையே மேற்கொள்ளல் கடன். நல்லவை - அறம் நல்லவை - உலகில் நல்லோர் அவை (கூட்டம்) சான்ருண்மையைக் கடனென்னும். சான்று - வழி காட்டி, தலைமை, எடுத்துக் காட்டு.

2. குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று.

செல்வம் கல்வி முதலியவற்ருல் பெருமையடையலாம். ஆனல் சான்ரோராதல் குணம் (ஒழுக்கம்) ஒன்ருலே யாகும். மனிதத் தன்மைக்குச் சான்ருக நிற்பவர்; மனிதன் குணத்தாலன்றி மற்றெதனுலும் மனிதனுக முடியாது.

3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

ஐந்து கால் மண்டபங்கள் மிகுந்த காலம் போலும் அது. சால்பு ஊன்றிய வெற்றித் தூண்களுமாம். ஊன்றியது - ஊண் சால்பை நிலைப்பிக்கும் உணவுமாம். அசோகத் தூண் முதலியன மிகுதியும் பேசப்பட்ட காலமது. ஒப்புரவு நடுத்தூண்.

4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

துறவோர் சால்பு கூறியது. கொல்லாமை சால் பென்றது. பிறர் தம்மைப் பற்றிய தீமை சொல்லாதது. பிறன் பழிப்ப தில்லாதது. சால்பிற்கு நோற்கவென்றது.

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்ருரை மாற்றும் படை.

பணிதல், படை - இது தொழுதகையுள் ஒடுங்கிய படை யன்று. மாற்றுதல் - நண்பராக, நல்லவராக மாற்றும் படை. பிறர் நிமிர்ந்து வெல்லும் பகையை, பணிந்து வெல்லல் அரிய செயல். பணிவு - அஹிம்சை. டால்ஸ் டாயும் காந்தியும் இவ்வஹிம்சையிலேயே பகைவரை வெல்க வென்றனர்.

6. சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்.

பணிதல் மாற்றும் படை என்ருர். அதில் தோற்ருலும் குறையில்லை யென்றது. மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து. துலை நடுவு நிலை. நடுவு நிலைமை சான்ருண்மைக் குணம். கட்டளைக்கல் மிகக் குறைந்த மாற்றையும் (பொன்) உறையிடுகிறது. துலைக்கோல் எந்த இழிந்த பொருளையும் எடை போடும் அளவு போல.

7. இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

மனத்தாருமாரு செய்யாமை என்றதால் செய்தல் நினைத்தல். இனிய செய்தல் - நன்னயஞ் செய்துவிடல். தீமைக்குத் தீமை புரிதல் விலங்கியல். தீமைக்கு நன்மை செயல் மனிதம்.

8. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

இளிவன்று - கெடுவாக வையாதுலகம். மனிதன் தேடத்தக்கது பொருளன்று சான்ருண்மை யென்பது. சால்பின்மையே இன்மையுளின்மை. அதனுலேயே வறுமையை வலிந்து மேற் கொண்டும் சால்பை வளர்த்தனர். இது, அறிவினை நிரப்புக் கொன்ருங்குடன் முரணுகாது.

9. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்ருண்மைக்(கு)
ஆழி எனப்படு வார்.

நடுக்கின்றி நிலைஇய தல்லதை ஒடுக்கங் கூருர் உயர்ந் தோர் உண்மையின் (சிலப்). ஒரு கடல் கோளை எண்ணி யுரைத்த தாகலாம் இது. ஆலிலைமேல் கண்ணன்போல் நிற்பர். சான்ரோரது நூல் பல பெயரலாம், சான்ருண்மை பெயராது.

10. சான்றவர் சான்ருண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னே பொறை.

குன்றின் நில நடுக்கங்கள் உண்டாகலாம். பண்புடை யார்ப் பட்டுண்டுலக மென்றது. கூலியாள் கூலிக்குச் சுமக்கிருன், உலகம் சான்ருண்மைக்காகச் சுமக்கிறது.

தாங்காமை - தள்ளா விளையாமை, கொடு நோய் பரவல் முதலிய.

## 100. பண்புடைமை

1. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

எண் பதம் - சிந்தனு சக்தி (யோகம்). உயர்ந்த எண்ணங்களால்தான் ஒரு பண்பாட்டைப் படைக்க முடியும். யார் மாட்டும் - இது எந்நாட்டார்க்கும் பொதுவுண்மை, பகை, அயல், உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவரிடத்தும் இனிதாகப் பழகுவதே பண்பு.

2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

அன்பான்ற குடியென்றிணைக்க. குடி நாடெனில், ஒற்றுமை (அன்பு) யுடைய நாட்டிற்றான் பண்பாடு தோன்ற முடியும். வழக்கு என்றதால் தமிழ்ப் பண்பு நீண்ட காலமாக வழங்கி வந்ததெனக் குறித்தது. ஆன்ற - அறிவான்ற என்க.

3. உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதாம் ஒப்பு.

மனிதக் குரங்குக்கும் (Ape) மனிதனுக்கும் உறுப்பொத்தேயுள்ளது. ஆனல் மனிதன் குரங்கினின்றும் (பண்பாடறிந்த பின்னரே) வேறுபட்டா னென்பது டார்வின் கோட்பாடு. மனித வினத்தை உடல் நிறம், மூக்கு, மயிர் முதலியவற்றாற் பிரிக்காமல் பண்பாட்டாற் பிரிக்கவென்றது.

4. நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

பாராட்டப்படும் பயனுடையார் - பண்பாட்டை ஏற்படுத்த வல்லவர். நயன் - நடுவு நிலைமை. ஒரு குலத்துக்கொரு நீதியாகாமல் இன மொழி நிற வேறுபாடின்றி அனைவர்க்கு மொத்ததே பண்பாடாகும்.

**5.** நகையுள்ளும் இன்னு திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

யாவரிடமும் எப்பொழுதும் காணும் முகமலர்ச்சியே பண்பாடு. நகைச்சுவைக்கும் (Comedy) முகஞ் சுளித்தல் ஆகாது. பகை நட்பாகக் கொண்டொழுகும் பண்பென்றூர் பின்பும். மூவேந்தர் பகைமையால் சிதைந்த நாட்டிற் குரைத்தது. பிறர் பண்பாட்டினை விளையாட்டினும் இகழ்த லாகாது.

**6.** பண்புடையார்ப் பட்டுண்(டு) உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

பட்டு - தோன்றி. பண்புடையார் தோன்றிய பின்னரே மனித வுலகம் என்ற ஒன்று உருவாயிற்று. இன்றேல் கடல் கோளில் மண்ணில் மறைந்த மதுரை, புகார் போலாகி யிருக்குமென்பது.

உலகம் உயர்ந்தோர் மாட்டு. மண் புகல் - மண்ணுய்ப் போதல். பண்பியல் - Spiritualism, Culturalism.) மண் பியல் - Materialism, உலகில் பண்பியல் வளராதபோது மண்பியல் வளர்ந்து அழிக்கும்.

**7.** அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்(பு) இல்லா தவர்.

வாளும் அரமும் அடிக்கடி நினைவுக்கு வரும் போர்க் காலம் அது. ஒழுகல் (பண்பு) கல்லாதார் அறிவிலாதா ரென்றது. அறிவியலை மட்டும் வளர்த்தல் நாகரிகமாகாது; அதனுடன் மனிதத்தையும் வளர்க்கவேண்டும். அவ்வெறும் அறிவு, தான் தேயாது பிறரைத் தேய்க்கவே உதவும். அவ்வரமே அராவிய வாளால் அறுபடுவர். அறிவே அழிக்கு மென்பது. பண்பில்லாத விஞ்ஞான அறிவு மனித வினத் திற்கே அழிவென்பது.

**8.** நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை.

பகையுள்ளும் பண்பு கூறியது. இன்னு செய் தார்க்கும் இனியவே செய்யும் பண்பு குறித்தது. கடல்

கடந்து வந்த கிறித்துவின் கொள்கைகள் தமிழரது முன்னைய கொள்கைக்குத் துணையாயமை நினைத்தது. பகைவனுக் கருளுவதிற்றான் பண்புள தென்றது.

**9.** நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்.

பகலும் பாற்பட்டன்றிருள் - அவர்க்கு வாழ்க்கையே இருண்டுவிடும். அவரது காலம் வரலாற்றில் இருண்ட காலத்தையே (Dark Period) படைக்கும்; உலகம் இருண்டுவிடுமென்றது. முன்பும் நகையுள்ளு மென்றார். பகல் - பகை. பகலும் - உலகமெல்லாம் அவர்க்குப் பகை யாகும் எனலுமாம்.

**10.** பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

நல்ல (பகுதியுடைய) கலம் களிம்பு, புளிப்பு முதலிய வற்றாற் பொருள்களைக் கெடுத்தது போலும். நன்பாற் கலம் - ஒப்புரவாளன் வீட்டு உணவுக் கலம். பால் காய்ச்சும் பாத்திரத்தில் புலாலைக் காய்ச்சியது போலுமாம். நல்ல நெறியிற் செல்லும் மரக்கலம் தீவளியால் (புயல்) திசை கெட்டதுபோலு மெனலுமாம்.

## 101. நன்றியில் செல்வம்

**1.** வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

வாய் சான்ற பெரும் பொருள் - நாட்டின் எப்பகுதி யினும் உள்ள தன் நிலமும் தொழிலும் தரும் செல்வம்; தேவருலகச் செல்வமுமாம்; அட்ட ஐசுவரியமுமாம். உண்ணல் - நுகர்தல். செத்தான் நுகராமல் ஒண்பொருள் கொள்வார் (நுகர்வார்) பிறர். வாய் சான்ற - வாய்மையால் நிறைந்ததுமாம். வாய் சான்ற துண்ணான் என்றாக்கி, வயிறு நிறைய உண்ணானென்க. வாய் சான்ற பொருள் - மெய்ப்பொருளுமாம். இப்பிறவியிலேயே அதனைக் காண வேண்டுமென்பது.

2. பொருளானு மெல்லாமென் றீயா திவறும்
மருளானும் மாணுப் பிறப்பு.

மருள் - அறியாமை, மாயை. இப்பிறப்பே துன்பம் நிறைந்ததாய் விடும். தனக்குப் பிறக்கும் குழந்தைகளும் தீதாய் விடும். மருள் என்றதால் அருட் பொருளை பொருட் பொருளால் ஆக்கவேண்டுமென்பது. பொருட் பொருளே மெய்ப் பொருளாய் விடாதென்றது.

3. ஈட்டம் இவறி யிசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

ஆடவர் - வீரர், இசையை வெல்லலே வீரம், ஆண்மை. உரைப்பாருரைப்பவை இரப்பார்க்கொன்று ஈவார் மேல் நிற்கும் புகழென அறியவேண்டா ஆடவர். எப்படியோ செல்வம் பிறரிடத்திலிருந்து பிறரால் ஒருவர்க்கு வருகிறது. அதனைப் பிறர்க் குதவாவிடின் நன்றியில் செல்வமென்பது. அவர் வளத்துடன் அவரது பொருட் பாரமும் சேர்ந்த பொறை. இறைக்காத கிணறு நிலத்திற்குப் பொறை யாமதுபோல. தாய் வயிற்றுக்கும் பொறை, நிலத்திற்கும் பொறை யென்பது.

4. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்.

ஒருவரால் - தன் மக்களாலும் நச்சப்படாதவன், மக் கட்கும் கொடாதவனென்பது. ஈயாமையின் மக்களும் இவனைத் தந்தையெனப் பெயரிட்டழையார்.

5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.

கொடுப்பதும் துய்ப்பதும் - ஈத்துவக்கு மின்பம். துய்த் தல் - பிறர் இன்புறக் கண்டு மகிழ்தல். கோடி - புதிய ஆடையுமாம். ஆடைகளை அடுக்கி வைத்தும் பயனில்லை யென்றுமாம். முதலில் கொடுப்பது பின்னர் தான் துய்ப்பது. (தானெ)ன்ருங்கெனக் கடைசியிலேயே வைத்தார்.

6. ஏதம் பெருஞ்செல்வந் தான்துவ்வான் தக்கார்க்கொன்(று)
ஈத லியல்பிலா தான்.

ஈதலியல்பிலாதான் ஏதம், செல்வம் ஏதமென்க. ஏதம் பகையுமாம், ஈயாதவன் சமூக விரோதி யென்பது. தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டென்றார். ஏதம் குற்றமாயின் அவனை உலகினின்றும் கடிதல் (குற்றங் கடிதல்) அறமென்றது.

**7.** அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.

மகட் கொடைபற்றியதுமாம். வீட்டிலேயே வைத்துக் காக்காமல் பெண் செல்வத்தைத் தக்கார்க்குக் கொடுக்க வென்றது. பெண் துறவிகள் (Nuns) ஆயிரக்கணக்கில் மணமின்றி வாழ்ந்த காலமாகும் அது. ஏற்பார் செல்வர்க்கு மணாளர் போன்று இன்றியமையாதவர். அவரின்றேல் இன்பமில்லை, வாழ்வில்லை.

**8.** நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

பயன் மரம் உள்ளூர்ப் பற்றிக் கூறியவர் நச்சுமரங் கூறினார். நச்சு மரம் - எட்டி மரம். எட்டிப் பழம்போல அழகுக்குரியது; பலரையும் ஈர்த்து வருத்தும். நடுவூருள் மரம் என்றதால் செல்வம் சமூகத்திற்குச் சொந்தமென்பது.

**9.** அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

குடும்பத்திற்கும் (அன்பு) தனக்கும் உலகிற்கும் (அறம்) பயன்படாத செல்வமென்றது, தென்புலத்தார், தான் என ஐவர்க்கும் நோக்காதது. பிறவரசர் கொள்ளையிடுவர், பிற நாட்டில் அன்பையும் அறத்தையும் பிறர் வளர்க்கவே உதவுமென்பது.

**10.** சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

மாரி என்றது கடப்பாட்டிற்குரியதென வற்புறுத்தற்காம். மாரி (நாடு) வறங் கூறினும் இவ்வோடு வறங்கூரு தென்ற வரியை (மணிமேகலை) நினைக்க. அடிக்கடி மழை வறங்கூர்ந்த காலத்தைக் கண்டவர் போலும் வள்ளுவர்.

## 102. நாணுடைமை

1. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

திருநுதல் என்றதால் இது ஆடவர் நாணம் பற்றியது; வினையே ஆடவர்க்குயிராகலின். அறந்தவறிய போருக்கு நாணுதலுமாம். அஞ்சுவதஞ்சும் அறிவுடையது நாணம்.

2. ஊணுடை யெச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் என்றது. விலங்கு கட்கு ஊன் எச்சம் பற்றிய வினைகளே லட்ச லட்சம் ஆண்டு களாகத் தெரியும். வேறு வினைகளே தெரியா; அவற்றை அறத்தாற்றிற் செய்யவும் தெரியாது. ஆகலின் மாந்தர் சிறப்பென்றார். ஊணுடை முதலியன அனைவர்க்கும் ஒப் பாகக் கிடைக்கவேண்டுமென்றது.

3. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு.

விலங்குகள் ஊனையுண்டு வாழ்வன. அதனை யுண்ண நாணுதலே (புலால் மறுத்தலே) சால்பென்றது. உலகம் பெரிதும் ஊனை வளர்க்கும் வாழ்வே (Materialistic) வாழ் கின்றது. அதனை நாணி உயிரை வளர்க்கும் வாழ்வே (Spiritualistic) சிறந்ததென்றது. ஊணை என்பதும் சிறந்த பாடம். சால்புக்கு நாண் ஊண்.

4. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை.

ஏறுபோற் பீடு நடை. தமிழர் பீடு நடையுடன் வாழ வழிகாட்டியவர் வள்ளுவர்; தளர் நடையும் பிணியும் ஒன்றென்றது. பெண்ணுக்குப் போல ஆணுக்கும் நாணம் அழகு. இது பெண் இல்லறக் கருமத்தில் நாணுதலுமாம்.

5. பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்(கு)
உறைபதி யென்னும் உலகு.

இவற்றுள் ஒன்றுடையார் இயல்பாக மற்றென்றைக் கருதல் இல்லை. இரண்டும் இணைதலரிது. தம் பழியைப் போக்கப் பிறரைப் பழிக்குள்ளாக்கலே உலகியல்பதனை வெறுத்தது. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்டல். காண்டல் - துடைத்தல். உறைபதி - உறை கல்லுமாம்.

**6.** நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

வேலியிட்டு நாணுழவு செய்தல் கூறியது. இச் சிறை காக்கும் காப்பு ஆகுமென்றது. வியன்ஞாலம் வினையின்றி வழங்குதலில்லையாகலின் அவ்வினையைக் காத்தலும் வளர்த்தலும் கூறியது.

**7.** நாணு லுயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணுள் பவர்.

நாண் - கயிற்றால் தூக்கிட்டுக் கொண்டிறத்தலையும் வெறுத்தது. நாணத்திற்காக உயிரைக் காக்கவேண்டு மென்பதும் குறிப்பு. உயிர் நீப்பர் மானம்வரின் என்றாற் போல்வது.

**8.** பிறர்நாணத் தக்கது தான்நாணு னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து.

பிறர் நாணத்தக்கது - உலகந்தழீஇயது. உலகத்தோ டொட்ட வொழுகல். பிறர் - சான்றோர். பிறர் - பிற நாட்டறவோருமாம். உலக முழுவதும் ஒப்பாகக் கொள்ளும் அறமறங்களைத் தாமும் ஒப்புதலே அறமென்றது.

**9.** குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை.

கொள்கைகளுக்கு (நாணி) உயிர் கொடுக்கவேண்டும் என்றது. குலம் - இனம், தமிழினம். உயர்ந்த கொள்கை களில் தவறுமையே நாணம். குலநலங் கெடுமென்பது.

**10.** நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணல் உயிர்மருட்டி யற்று.

அறிவிற்கும் உணவிற்கும் பிறரால் ஆட்டி வைக்கப்படு வர்; அடிமையாவர். பிறர் கைப்பொம்மையாவர் என்பது; மண் மாண்புனை பாவையற் றென்பது. மற்றோர் நாணுல் மருட்டியற்று என்றமையான் பெண் நாணுல் மருட்டப் பெற்றுப் பெண் வழிச்சேறல் உடையனுவானென்பதும் குறிப்பு.

## 103. குடிசெயல் வகை

1. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

என்ன செல்வ மிருப்பினும் சோம்பலாய் உட்கார்ந் துண்பதில் பெருமையில்லை; உழைத்துண்பதே பெருமை. குடி கெடாதிருக்க வழி. பலருள் ஒருவன் முயற்சியும் போதும்.

2. ஆள்வினையும் ஆன்ற அறிவு மெனஇரண்டின்
நீள்வினையான் நீளும் குடி.

நீள் வினை - வாழ்நாள் முழுவதும் செய்யுமுயற்சி; ஒரு நாளில் நீண்ட நேரம் உழைக்கு முயற்சி. முயற்சி மட்டில் போதாது, குடியுயர அறிவின் றியமையாதென்பது. நீளுங் குடி - ஆரியக் குடும்பம் இங்கிலாந்திலிருந்து இந்தியா வரை பரவியதுபோல.

3. குடிசெய்வல் என்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

நாட்டில் முந்துறும் குடி யென்றுமாம். தெய்வம் பூசனை பெறுதற்கு மடியேந்தி வரும். அடிதற்று என்றுக்கி அவ னுக்கு முன் அடிபோட்டுக்கொண்டு வழிகாட்டிச் செல்லும், தேவரும் துணைபுரிவர்.

4. சூழாமல் தானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.

துணைவலியும் வேண்டாமென்பது. சூழாமல் என்ற தால் நினைக்குமுன் முடியுமென்பது. குடி தாழாது, உஞற்று

தல் தாழாது என்க. தானும் தாழாது ஞற்றுதலுமாம், தெய்வம் துணையாகலின் சூழாமல் என்ருர்.

5. குற்றம் இலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

உலக முழுவதும் ஒரே குடும்பம் ஆகும் வழியுரைத்தது. இன்றேல் உலகம் சிதறுமென்பது. உலகில் ஒவ்வொரு குடியும் தனித்தனி செய்யும் உழைப்பாற்ருன் உலக நலனுண்டு. ஒரு நாட்டிற்குரிமை கொணர்ந்தவனை (நேரு) உலக முழுவதும் அடிமையை நீக்கச் சுற்றுவதுபோல.

6. நல்லாண்மை என்ப(து) ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

ஒவ்வொரு வீடும் வீரர் குடியாகவேண்டும். வீரர்க்கெனத் தனிக்குடி கூடாதென்பது. கொல்லாமையையும் போரையும் தவிர்த்துத் தமிழரது ஆண்மையை (வீரத்தை) ஆக்க நெறியில் திருப்பவேண்டுமென்றது. தன் நாட்டை அடிமையாக விட்டுப் பிற நாட்டிற்காக வாழ்தல் ஆண்மையன்று.

7. அமரகத்து வன்கண்ணர் போல தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

மாற்றுதலுமாம். வெற்றிப் பயனை வீரன் அரசற்கு மாற்றுதல் போலத் தன் உழைப்பின் பயனை மகன் குடிக்கு மாற்றவேண்டும். பொறை யென்றதால் அவற்குப் பொறுமை மிகுதியும் வேண்டும். பொறையொருங்கு மேல் வருங்காற்ருங்குதல் இது. குடியுள்ளும் தனக்கெதிரிகள் தோன்றினுல் அவரை மாற்றுதல் (நட்பாக்கல்) கடனென்றது. ஆற்றுதலே ஊராண்மை.

8. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

நல்ல நாள் என்றில்லை. ஜோசியம் பார்க்கவேண்டாம். தன் மானத்தினும் குடி மானம் பெரிதென்றது. இளமை, முதுமை யென்ற பருவமும் பார்த்தலாகாது. இளையர் செய்க, பெரியர் ஓய்வாக இருக்கலாமென்ற மானமுமாம்.

மானம் கருதல் - ஒருவர் பெரியவர், ஒருவர் சிறியவர் என்ற மானம்; குடி செய்தலில் யாவரும் சமம்.

9. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு.

குற்ற மறையா வழி, யென்ருர். கலம் - மரக்கலமுமாம் இலக்கமுடம் பிடும்பைக்கு. இடுக்கணழியாதவன் என்பது. கொள்கலம் - பாத்திரம்; களஞ்சியம். அவர்க்குத் துன்பமே (எந்நாளும்) இன்பம்.

10. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இல்லாத குடி.

முட்டில்லாத, சாய்ந்த சுவர்போல வீழும். அடுத் தூன்றுதல் - குறிப்பறிந்துதவுதல், பால் நினைந்தூட்டுதல். நல்லாள் - வாழ்க்கைத் துணையுமாம். பெண்ணுக்கும் குடி செய் கடன் கூறியது. மேல் கலமென்றதால், புயல் (கால்) வீசக்கவிழும். அற்றேல் நல்லாள் - நங்கூரமாம்.

## 104. உழவு

1. சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனுல்
உழந்தும் உழவே தலை.

உலக முழுவதும் போர்மேல் சுழன்று வென்ருலும் முடிவில் ஏரின் பின்னேயே சுற்ற வேண்டியுள்ளது. உலகம் ஆண்டு முழுவதும் சுற்றிக்கொண்டே யிருக்கிறது. ஆனுல் சின்னுள் சுற்றும் ஏரின் பின்னது உணவிற்காக என்ற குறிப்புங் காண்க. தமிழகமும் உழவு நாடு. (Agricultural country) எல்லாத் தொழிலிலும் உழவே தலை.

2. உழுவார் உலகத்தார்க்(கு) ஆணியஃ தாற்ரு(து)
எழுவாரை யெல்லாம் பொறுத்து.

ஆணிப் பொன்; எழுவாரை யெல்லாம் தாங்கும் செல்வம், ஆணி - உலகின் வடதென் துருவங்கள்; ஆணி வேர்; படத்தைத் தாங்கும் ஆணியுமாம். சக்கரத்தைத்

தாங்கும் கடையாணியுமாம். வண்டி ஓடச் செய்வதுபோல உலகம் வழங்கச் செய்வது.

**3.** உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

உரிமையற்ற ஊழியஞ்செய் வாழ்க்கையை, அடிமை வாழ்க்கையை வெறுத்தது. ஒட்டார்பின் செல்லும் வாழ்க்கையுமாம். உழுது உண்டு என்றமையால் தன்னுணவுக்காகத் தான் உழைக்காதவனும் அடிமையென்பது. அரசப் பதவியினரும் அரசனைத் தொழுதுண்பவரே. தலைவன் கொடுத்தலின் உண்பவர் என்பது குறிப்பு.

**4.** பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

கொடைக் கீழ் என்பதும் பாடம். பொறை மேல் வருங் காற்றுங்குபவர். பல நாடுகளையும் தம்மரசன் கீழ் வரச் செய்வர். விளையாத நாடுகட்கும் ஈதலான் பல குடைநீழலு மென்றார். புரப்போர் கொற்றமும் ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே என்பது காண்க. எனவே உழவரைத் தாங்குதல் அரசின் முதற்கடனாகும்.

**5.** இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

கரவாது கை செய்தூண் என்றதால் தொழிலாளர் வஞ்சனையின்றி உழைக்கவேண்டுமென்பது. சோம்பேறித்தனமும் ஏமாற்றுதலும், குறைய உழைத்தலும் ஆகா தென்றது. தொழில் பற்றிய வள்ளுவர் கொள்கைகளை இவ்வதிகாரத்திற் காணலாம். ஈவாரும் ஏற்பாருமில்லாத கம்பனுலகத்திற்குக் கால்கோளிட்டது.

**6.** உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

செயற்கரிய செய்யும் துறவிகட்கும் நிலையாகலின் அரியவற்றுள் எல்லாம் அரிதாகிய தொழில். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. உண்ணுது நோற்கும்

பெரியோரும் உழவர்க்குப் பின்னென்றது. அவர் மடக்கிய கையை நீட்ட முடியாது.

**7.** தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

வெப்ப நாடு தமிழக மென்றது. புழுதி யென்றதால் புன்செய்ப் பயிர் செய்முறை யுரைத்தது. வெயிலின் இன்றியமையாமை கூறியதுமாம்.

பசித்துப் புசித்தல் போல காயவிட்டு விளைக்க வென்றது.

**8.** ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

இது நன்செய் முறையுமாம். அதன் காப்பு - நீர்க் காப்புமாம். எல்லா நிலத்திற்கும் வேண்டிய எல்லா நீரை யும் (மழை நீரைத் தேக்குவதால்) காக்க வேண்டுதலின் இன்றியமையாமையும் அருமையும் கூறியது. ஏர் - ஆழ உழுதல்.

**9.** செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும்.

நாளும் செல்லான் என்க. நாடொறு நாடி முறை செய்யா மன்னவன் போல்வான். பொருளுக்காக உழைக் காமல், வெளியே செல்லாமல் வீட்டிலேயே உட்கார்ந்திருப் பவனிடமும் ஊடுவாளது போல. தினமும் பார்த்து வருமளவு, ஒருவருக்கு வேண்டுமளவு நிலமே ஒருவர்க்குக் கிழமையாக (உரிமையாக) வேண்டும். மற்றதை இல்லாத வர்க்களித்துவிடவேண்டும்.

**10.** இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லா ணகும்.

இரப்பாரை யென்பதும் பாடம். நிலம் இலம் பொருள் இலம் என்க. ஒவ்வொருவனும் உழைத்து உண்ண வேண்டுமென்பது விதி. பிறரிடம் இரந்தும, பிறருழைப் பைத் திருடியும் உண்ணல் மறம். இலம் - இல்லம், இல்லத்

துடையேம். வீட்டில் எல்லாம் உண்டு என உட்கார்ந்துண்டலை வெறுத்தலுமாம். உழைக்கும் தேவையிலம் எனலுமாம்.

## 105. நல்குரவு

1. இன்மையி னின்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

இன்மை - பொருளின்மை, அறிவின்மை. இரண்டனுள் ஒன்று மற்றொன்றினும் இன்னாத தென்க. நல்லார் கட்பட்ட வறுமையின் என்பதோ டொப்பிடுக.

2. இன்மை எனவொரு பாவி மறுமையும்
இம்மையு மின்றி வரும்.

அழுக்காறென வொரு பாவியோ டொற்றுமை யுடையது. மறுமைக்குரிய (அவ்வுலகம்) அருளையும் இல்லையாக்கும், வறுமையை யொழித்தாலன்றி எல்லோரும் இன்புற்றிருக்க முடியாது.

3. தொல்வரவுந் தோலுங் கெடுக்கும் தொகையாக
நல்குர வென்னும் நசை.

தொல்வரவு - பண்பு; புகழ்; மக்கள். தோல் - அழகு, அழகுக் கலைகள். வறுமை யழிந்தாலன்றி நாட்டில் பண்பாடும் கலைகளும் வளர்தலில்லை.

4. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

இன்மையிலும் பண்பு கெடாதவராகலின் கண்ணேயு மென்றார். இளிவந்த சொல் - பழியுமாம்; நாகாவாமையும். சோர்வு - மறதி, மடி; உடல் களைப்பு, தளர்ச்சியுமாம். இளி வந்த சொல் - மட்டமான நூல்களும், செய்திகளுமாம்.

5. நல்குர வென்னும் இடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

படும் - தோற்கும். மற்ற துன்பங்கள் இதனிடம் தோற்குமாகலின் நல்குரவு - துன்பத்தை வேறெதுவும் விளக்க முடியாதென்பது. பொருளின்மையால் அறி வின்மை, பண்பின்மை உண்டாகும்.

6. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

சொல்லும் பொருளும் சோர்வு படும். இயற்றிய நூலின் சொல்லும் பொருளும் இயல்பாகவே குறைபடும் அன்றி, எடுபடா வென்பது. அதனுற்றுன் தமிழர் புலவர் தம் வறுமையைப் போக்கிக் களைந்தனர். தக்க வருவாயில்லாத ஆசிரியர்கள் நன்கு கற்பிக்க வியலா தென்பது.

7. அறஞ்சாரா நல்குர வின்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

இங்கு அறிவு நல்குரவு. சான்ருண்மை யின்மை. ஈன்ற பொழுதிற் பெரிதுவவாமல், அவனை ஈன்றதையும் மறப்பா ளென்பது. 'தம் பொருள்' என்ற பொருளில் லாமையின் என்க.

8. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலு நிரப்பு.

வறுமையை நாட்டில் ஒரு நாளைக்கு மேல் விட்டு வைத்தல் அரசக் கடனன் றென்பது. ஆண்டுக் கணக் காகத் தலைமுறைக் கணக்காக விட்டு வைத்தல் கொடி தினும் கொடிது. கொன்றது போலும் - மக்களது வாழ்நாள் எல்லை குறையும்; இறப்புத் தொகை மிகும்; கொன்றன்ன இன்னு மிகும்.

9. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

நெருப்பிற்றுஞ்சல் - சித்து. சித்தராலும் தம் வறுமை யைப் போக்கிக் கொள்ள வியலாது; பசியை மாற்றிக் கொள்ள வியலாது. இரசவாதிகளும் உலகில் வறுமையைப் போக்கிக் கொண்டதில்லை.

10. துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்குங் காடிக்குங் கூற்று.

துறவாமை அவர் ஊழ் என்பது. துறப்பதும் (தவமும்) தவமுடையார்க்கன்றோ ஆகும்! துப்புரவு - தூய்மையுமாம். உடல் மனத் தூய்மைகளை இல்லையாக்கும். இவர் துறவா மலும் இரவாமலும் பிறர்க்குத் தொல்லை கொடுப்பவர்.

## 106. இரவு

1. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று.

இரத்தக்கார் - அகனமர்ந்தீவார். காக்கும் அவர் பழி இரக்கும் தம் பழியினும் பெரிதென்பது. எல்லோரும் இரத்த லாகாது; அதற்கும் தக்கார் உண்டென்பது.

2. இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை
துன்ப முறுஅ வரின்.

துன்பமுறுவரல் - இரந்தவர் இன்முகங் காணுமளவு கொடுத்தலால்வரல்; முகனமர்ந் தின் சொலால் வரலுமாம். தனக்கும் கொடுப்போர்க்கும் உலகுக்கும் துன்பமுறுவரல்.

3. கரப்பிலார் நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோர் ஏஎ ருடைத்து.

தொன்மை மாக்களின் தொடர்பறிந்தவர் (புறம்) - கடனறிவார். மேற் கூறிய மூவர்க்கும் ஏருடைத்து. உழவுக்கு ஒரு ஏர்தருமாறேற்கும் முயற்சிக்குரிய இரப்பு நன்று, சோம்பலுக்குரிய இரப்பு ஆகா தென்றுமாம்.

4. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு.

கனவிலும் தேற்றாமை - நினையாமை. தேற்றாதார் - கடனறிவார். ஈத்துவக்கு மின்பத்தை அவர்க்கு ஈதலே போலுமென்க. கனவிலும் அவர் ஈவார் ஆவார். தான்

கொடுத்தற்கு ஒரு வாய்ப்பளித்தவருக்கு நன்றி பாராட்ட வேண்டும் (விவேகாநந்தர்).

**5.** கரப்பிலார் வையகத் துண்மையான் கண்ணின்(று)
இரப்பவர் மேற்கொள் வது.

கரப்பிலார் செல்வர். செல்வர் என்பதோர் இனம் உலகில் உள்ளவரை இரப்போர் இருந்தே தீர்வர். அவர்க்கு இரக்க உரிமையுள்ளது. செல்வக் குடியிற்றோன்றிய குருடற்கும் முடவற்குமுள்ள உரிமை இவ்விரப்போர்க்கு முண்டு ; இதுவே கடனறிதல்.

**6.** கரப்பிடும்பை யில்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

நிரம்பிடும்பையெல்லாம் - சென்று பட்ட பல்குரைத் துன்பங்களுடன் நிரப்பு. இல்லாரைக் காணின் இரண்டிடும்பையும் கெடு மென்க. இரண்டும் இடும்பை. உலகில் இடும்பை தீர இரண்டும் ஒழிய வேண்டும். காணின், கெடும் - முக நோக்கி நிற்க வமையும். நிரப்பிடும்பை - பொருளை நிரப்பி வைக்கும் இடும்பையுமாம்.

**7.** இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து.

உள்ளுள் என இருமுறை கூறியது காண்கையிலும் பெறுகையிலும் என இருவகை யுவகை யென்றற்காம். இகழ்ந்தெள்ளல் - எதிரிலும் புறத்திலும் பழித்தல்.

**8.** இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்று வந்தற்று.

இரப்பார் - காண்பார். காண்பார் இல்லாமல் ஆட்டும் பாவையாட்ட மென்பது. ஈர்ங்கண் என்றதால் கொடாமை, வன்கண் என்பதாம். உண்டி கொடுத்தோர் ஏற்பார்க்கு உயிர் கொடுத்தோர், மரப்பாவை என்றதால் ஏற்போர் ஈவோர்க்கு உயிர் கொடுத்தோர் ஆவரென்பதாம்.

**9.** ஈவார்கண் என்னுண்டாந் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை.

தோற்றம் - புகழொடு தோன்றும் தோற்றம்; ஒளி. ஈவார் பிறவியை ஈடேற்றுபவர் ஏற்பா ரென்பது. தோற்றம்-முகமலர்ச்சியுமாம். ஈத்துவக்கு மின்ப மின்மையின் மலர்ச்சியில்லை.

**10.** இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

வெகுளியுடன் இன்னச் சொல்லும் வரும். கொடுப்பார் இரப்பார் இரு பக்கத்தையும் சமப்படுத்தியது. ஆன்றோ ரெல்லாம் கொடுக்கச் சொல்லியும் கொடானுகிருனென ஏற்பார் வெகுளற்க என்பது. கொடார்ப் பழித்தலுரிமை சான்றோர்க்குண்டு, இரப்பார்க்கில்லை.

## 107. இரவச்சம்

**1.** கரவா துவந்தீயுங் கண்ணன்னர் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

கண்ணன்னர் - பருகுவன்ன அருகா நோக்குடையார். நல்லாறெனினும் கொளல்தீதென்றது. கரவாது - ஒளிந்து கொள்ளாமல், உவகையைக் கரவாதுமாம்.

**2.** இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்

தன் தலையோட்டில் சிவனையும் இரக்கச் செய்தானவன். உலகியற்றியான் - அரசனுமாம். கோலொடு நின்றான் இரவு பரந்து - ஏற்றல் தொழிலே உலகில் மிகுந்து அவன் புகழ் அழிக. செல்வத்தைத் தேடிவைக்காமல் இரக்கும் மக்களைப் பெற்ற தந்தையரும் பரந்து கெடுக என்றது.

இரக்கும் பாவத்தை அழிப்பதன்றி அனுபவிக்கச் செய்வது தெய்வத்தன்மையன்று.

**3.** இன்மை யிடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

தீர்வாம் - சாவேம், இரந்துண்டே சாவேம் என்னும் வன்மை. வன்மையுள் வன்மை யென்றார் முன்பும். இதுவும்

உயிரைத் தாங்கும் பொறை. இன்மையிடும்பை - துன்பமில்லாத தொழில் இரவென்று இரத்தல் வன்மை. இன்மையுமிடும்பை இரத்தலுமிடும்பை இரண்டுள் இரத்தலிடும்பையையே மேற்கொள்வேமெனல்.

4. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு.

இடம் - குடியிருப்பு மனையை இரத்தலுமாம். இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே சால்பு - மண் தேய்த்த புகழ். சால்பு உலகை யெல்லாம் கொள்ளும் தகைத்தென்றுமாம். காலும் இரவொல்லா என்ருக்கி வருவாயுள் கால் வழங்கி வாழ்தலில் வரும் காற்பங்கை இரத்தலென்க.

5. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாள்தந்த(து)
உண்ணலின் ஊங்கினிய தில்.

முன்பு உப்பிற்கும் காடிக்கு மென்ருர். தெண்ணீரும் அடுபுற்கையுமென்க. நீரும் தான் முகந்ததாக வேண்டும். கண்ணன் அளித்ததினும் குசேலரது புல்லரிசியே சிறந்ததென்பது.

6. ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்.

பிறர்க்கென்றும், அறச்செயலுக் கென்றும் இரத்தலை வெறுத்தது. இது நன்கொடை இரத்தலுமாம். உயர்ந்தோர் இரத்தலைப் பற்றியதுமாம். இரவாகப் பெற்ற ஆவிற்கு அந்தணர் நீர் இரத்தலுமாம்.

7. இரப்பன் இரப்பாரை யெல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மி னென்று.

காப்பார் - ஒளிந்து கொள்வார். இரப்பாரை இரப்பின் என்ருக்கி இரப்பானெருவனை மற்றெருவன் இரவற்க என்றலுமாம். இரத்தலினும் கரத்தலுக்கஞ்சுக என்றது.

8. இரவென்னு மேமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

ஏமாப்பில் தோணி - உயிர்காப்புக் கெனப் புணையமை யாதது; தனித்துச் செலுத்தியது. வட இலங்கைக் கரை யோரம் பாறைகளில் மோதியுடைதலை நினைத்துக் கூறிய தாகலாம். அப்பாறையும் நீரில் கரந்திருந்தது. கரப்பார் உலகில் சேரப்பக்கு விடும்.

**9.** இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

கெடல் - ஆவியாதல். உருகியது பாலைவனத்தில் ஓடி யதும் ஆவியாயிற்று. முன்பும் வன்பாற்கண் என்றார். கரவுள்ளம் கல்மனமாகலின் உருகுதலுமின்றிக் கெடும்; அவர்கள் நெஞ்சமென ஒன்றில்லாதவர்.

**10.** கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

புக்கிலமைந்தின்று கொல்லோ என்ற வியப்பு. சொல் லாட - நடுக்கத்துடன் வருஞ்சொல். சாதல் இனித தூவும் ஈதலியையாக்கடை; இருவரும் ஒழியாமல் ஏன் இருக்கின் றனர் என்பது. கரப்பாரது உயிரும் கரக்குமோ என்றது.

## 108. கயமை

**1.** மக்களே போல்வர் கயவ ரவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்.

ஒப்பாரி - எதற்கும் அழக் கூடியவர்; உறுப் பொத்து பண்பொவ்வாதவர். மக்களே போல்வர் தேவரனையர் என்றமையான் அவர் இயல்பாக நரகர் (நரகிற்குரியர்) என்பது.

**2.** நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

கடனென்ப நல்லவையெல்லா மென்னும் சான்றோர். கயவர்க்குச் செல்வமும் உண்டு, அவலமுமில்லையெனக் கூறி நல்லவனுய் வாழ்வதிலுள்ள இடர்ப்பாட்டினை எடுத்துக் காட்டியது.

3. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

மனம்போன போக்கெல்லாம் போதல். தீ தொரீஇ நன்றின்பாற் செல்லாதவர். மேவன - அவாவின. அவா வின்பாற் பட்டவர், அழுக்காறு முதனான்கு முடையர். ஆராய்தலின்றி மனதிற் பட்டதெல்லாம் செய்பவர்.

4. அகப்பட்டி யாவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

பட்டி - சமய வாதங்களும் அரசியல் வாதங்களும் செய்து திரியுமவர்; பயனில சொல் பாராட்டுபவர். மறைவாகத் தமக்குள்ளே பழங்கதைகள் பேசி, கூட்டத்தில் கூடி நின்று கூடிப்பிதற்றுபவர். மேலே மக்களையும் தேவரையுங் கூறி இங்கு (பட்டி) நரகரைப் பற்றிக் கூறியது.

5. அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாஞ் சிறிது.

அவையகத் தஞ்சுவார்; பேடிகள். போரில் அஞ்சுவார்; அவற்கரணே இல்லை. அவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே. அச்சமிலாத் தன்மையே மனிதம் என்பது. கயமை மனிதத்திற் கெதிரானது. ஒழுக்க மென்பதே இல்லாதவர். அச்சமும் அவாவுமே வடிவானவர்.

6. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.

அரசியல் இரகசியங்களை வெளிவிடுபவர். இரகசிய போலீசுக்குத் துணையாய்க் கோள் சொல்லித் திரிபவன். மறையனைய உயர்ந்த மந்திரங்களையும் நூல்களையும் கேட்டு, வேண்டாதவரிடமெல்லாம் அவற்றைக் கூறுபவன். பறை அசுணமாவைக் கொல்லுதல் போலக் கலைகளை அழிப்பவன்.

7. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

அடித்துதைத்தாலன்றி அறஞ் செய்யான், வேலை செய்யானென்பது. ஈரங்கை விதிரார் - எச்சிற் கையாற் காக்காய் ஓட்டாதவர். சட்டஞ் செய்து அச்சுறுத்தினு லன்றி எதையுஞ் செய்யாதவர்.

**8.** சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படுங் கீழ்.

நண்பர் அழச் சொல்லத் திருந்துவர் சான்றோர், அல்ல திடிக்கத் (கொல்லத்) திருந்துவார் கயவர். தூது சொல்லப் பயன்படல். கொலையாளிகளாகத் (அடியாளாக) தொழில் புரியப் (யமதூதராகப்) பயன்படுதலுமாம்.

நல்ல மனிதற் கொருசொல், மாட்டுக் கொரு அடி. ஆனால் கரும்பனைய செல்வங்கள் கயவரிடந்தானே சேர் கிறது என உலகியலுக்கிரங்கியது.

**9.** உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்.

அழுக்காறுடையா னென்பது. சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூவுமின்றிக் கெடுமென்றார். இவ்விரண்டு தேவை களும் நிறைவேறினால் நாட்டில் கயமை ஒழியும், மனிதர் மனிதராவர். நன்றாக உண்ணவும் உடுக்கவும் தெரியாத காட்டு மிராண்டிகள் பிறர் நாகரிகத்தைக் கண்டு குறை கூறுபவர்.

**10.** எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

நாட்டையும் பண்பையும் அடிமையாக்குபவன். அடி மைத் தனத்தை நீக்கப்பாடுபடாதவரும் கயவர். விரைந்து அடிமையாய் நடத்தினாலன்றி விரைந்தொன்றுஞ் செய்யார். தனக்குக் கிடைக்கும் வீடு, பொருள், தொழில் எதனையும் பேணுமையுடையவர்.

## காமத்துப்பால்

# 109. தகையணங்குறுத்தல்

1. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.

அழகுக் கலைகளில் மயங்கிய தமிழ் மகன் பெண் அழகைக் கண்டு மயங்கியது. முன்பும் 'தகை செருக்கி' என்றார். அணங்கு - நீரர மகளிர் வரையர மகளிர் என்னும் பிற நாட்டுப் பெண்கள்; கிரேக்க, வடநாட்டுப் பெண்களா கலாம்.

நிறமும் கூந்தலும் குழையும் மயக்கியவென்பது.

2. நோக்கினள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

எதிர் நோக்குதல் என்றதால் அவளும் இவனிடம் மயங்கினளென்பது. பெண்ணைக் கொள்ளத்தான் போரிடல் (மகட்பாற்காஞ்சி) பழக்கம். இவள் ஆணைக் கொள்ளப் போரிட வந்தாள். என்னைக் கொல்ல அவளே போதும் (ஒண்ணுதற்கோ உடைந்ததே) தானையும் வந்தது, உயிரு டன் பிடித்துப் போகவோ என்றது.

எவ்வகையிலோ போரெனிற் புகன்றது. கண்டன்ன என்பதும் பாடம்.

3. பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு.

பண்டெல்லாம் கூற்று ஆணென்றுதான் அறிந்தேன். இன்று பெண்ணாக வல்லவா உள்ளதென்றது. அது படை (பாசம்) வீசிக் கொல்வது, இது கண்வீசிக் கொல்வ தென்றது.

4. கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.

உயிருண்ணும் என்றதான் உயிரோடொட்டி விட்டா ளென்பது. கண்டதும் கொண்ட காதல் உயிரில் போய் நிலைத்து விட்டது. இனி எப்பிறப்பிலும் அறுதென்பது,

பெண்ணழகில் பெண்மையும் மென்மையும் இன்றி ஆண்மை இருக்குமாயின் கவர்ச்சியும் காதலுமில்லை.

அமர்த்தன - கற்பில் அமைதியுறும் நெஞ்சம் களவில் சுழன்றுகொண்டே யுள்ளது.

5. கூற்றமோ கண்ணே பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து.

அழகைக் காண்பது கண்ணல்லவா! அதனில் நீண்ட நேரம் மயங்குகின்றனர் தலைவனும் ஆசிரியரும். கூற்ற மென்ற எண்ணம் மாறிக் கண் பிணையாக (பொன்) மானாகத் தலைவனெதிரே துள்ளி விளையாடுகின்றது. மடவரலும் மடப் பிணையுமொத்தன.

6. கொடும்புருவங் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்.

எனினும் புருவங்கள் கண்ணழகை மறைத்தலாற் கலங்குகிறான். வீரன் விழித்த கண்ணுடன் வேலெறிவான்; இவள் ஒரு கண் சிறக்கணித்தே போரிடுகிறாளென்பது, மறைப்பின் - பிறர்க்கு மறைத்து இவற்கே உரிமையாக்கியது.

7. கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.

எனினும் துகில் ஒரு சிறிது விலகாதா என்ற விழை வுடையன். களிருகிய தலைவனது கண்களுக்கிட்ட படாமு மாம். இவளது கொல்லும் கண்கட்கிட வேண்டிய படாத்தை முலைக்கிட்டனரே என்பது: அப்போதவள் கண்குறிப்பு தெரியாமையின் முலைகள் கொல்லாவாகலாமென்பது.

8. ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு.

திலகங் தைஇய தேங்கமழ் நறுநுதல். நண்ணார் - களத் திற்கே வராமல் தொலைவிலேயே அஞ்சுதல். இவள் எதிர் வந்து வென்றாள். மெலிவில்(பெண்) மயங்கியதனால் இவனும் மெலியனாயினான். ஆற்றலும் வீரமும் உடையவனையே பெண் விரும்புவாள்.

9. பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனோ ஏதில தந்து.

முதலே கனங்குழை யென்றார். கைபுனைந்தியற்றாக் கவினை அணிகள் மறைத்தலை வெறுத்தது. இவன் தோல்வி கண்டு அவளும் நாணினள்; எனவே தோற்றவன் வென்றான். பெண்ணுக்குரிய நோக்கும் நாணமுமிருந்தாலன்றிப் பெண்ணுக்கு ஆண்மை நோக்கும் நிமிர்ந்த நடையும் காதற் கவர்ச்சியுடையவாகா என்றது.

**10.** உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

அடுநறா என்பதால் இவள் இயற்கைக் கள் என்பது. இயல்பாக மரத்தில் இறக்கியது போதாமையின் தமிழர்க்கு அடுநறவில் ஆசை சென்றதுபோலும். உண்டு சுவை கண்டவன் உண்ணாதபோதும் அச் சுவைக்கொரு வழி சொலுகிறான் என்பது. கள்ளோடாயின் காமம் சுவை போலும்!

## 110. குறிப்பறிதல்

**1.** இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

அணியிழை தன்னோய்க்குத் தானே மருந்தென்பார் பின்னும். அவள் அவன் தெய்வமாவாள்: நோயைத் தருதலும் தானே தீர்த்தலும் தானேயாகலின். உயிருண் கண். நோய் - வேட்கையுமாம். மருந்து - அமிழ்தமுமாம். நோய் நோக்கு - சிறக்கணித்த நோக்கு.

**2.** கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்தில்
செம்பாக மன்று பெரிது.

களவுகொள்ளு மென்றலின் இது களவியல் என்பது குறிப்பு. நோக்கம் சிறிதாயினும் காமமும் விருப்பமும் முழுவதென்பது. முழுதும் தனக்குரியளாயினமை அறிந்தது. தமிழர்க்குக் களவியலே இன்பத்தின் முழுமை யென்றது.

**3.** நோக்கினாள் நோக்கி இறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்

யாப்பு - இருவர்க்கும் ஏற்பட்ட தொடர்பு, பிணைப்பு. நோக்குதல் யாப்பு; இறைஞ்சுதல் நீர் என்பது. இனிப் பிணைப்பு இறுகிவிட்ட தென்றது. இறைஞ்சுதல் - ஏற்றுக்

கொள்ளவேண்டுமென இறைஞ்சுதலுமாம். நோக்கினுள் நோக்கி இறைஞ்சுதல்-மேனோக்கி வளர்ந்த கொடி வளைவது போன்றது.

4. யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

நிலனோக்குதல், தலைவன் நோக்கின்பத்தை நினைத்தனுபவிக்க. இறைஞ்சுதலும் நகுதலும் இசைவுக் குறிப்பாயின. நோக்காக்கால் நக்கது எவ்வாறறிந்தான்? நோக்காமல் நோக்கிய இருநோக்கால் என்க.

5. குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

அம்பை எய்யவும், பழத்தைக் கல்லா லெறியவும் சிறக்கணித்தல்போலத் தலைவனை எய்யச் சிறக்கணித்தாள். நகுதல் நோயை மிகுவித்த தென்க.

6. உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொல்
ஒல்லை யுணரப் படும்.

விடு விடு என்றல் தொடு தொடு (பரணி) என்னும் குறிப்புடைய சொல். சொல் செயலால் உணரப்படும்.

7. செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.

கற்பிடை உற்றாரே யாவர். களவாகலின் உறார்போன்று உற்றார் ஆயினர். செறாஅச் சிறுசொல்: தலைவன் இன்னும் அறியவில்லையே என்ற ஆத்திரத்தால் வருஞ் சொல். செற்றார் நோக்கு - தாக்கணங்கு நோக்கு.

8. அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப்
பசையினள் பைய நகும்.

இளமையில் ஆண் பெண்களிடம் காமமும் கலகலப்பும் சிரிப்புமே அழகை வளர்க்கும. இன்றேல் துறவும் வெறுப்பும் அழகையும் இளமையையும் கெடுக்கும். தகை, அணங்குறுத்தாமல் அழகு (ஏர்)றுத்தியது. பெண்களுக்கழகு புன்சிரிப்பு, இன்றேல் காதல் கருகிச் சாதலாய்விடும். நோக்காக்கால் நக்கதுபோய் நோக்க நகுவதாயிற்று. மெல்ல மெல்ல இருவரும் நெருங்குகின்றனர்.

9. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

ஏதிலார் நோக்கு - செற்ருர் நோக்கு. சிறக்கணித்தல் போய் முழுநோக்கே வந்துவிட்டது. ஏதிலா ரென்றலின் பகையுள்ளும் பாடறியும் பண்புடையர் இருவரும். உலகில் பகையெல்லாம் காதலில் (அன்பில்) முடிக வென்றது.

10. கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.

கண்ணிணை - இருகண்ணும் இருகண்ணும் ஒத்தல். ஒரு கண்ணுலுற்ற நோய்க்கு மறு கண்ணல் மருந்தும் கிடைத்து விட்டது. சொல் பயனில்லை, புணர்ச்சியே பயனென்பது. வாய்ச் சொல் - சிறு சொல். வாய்ச் சொல் வேண்டாம் வாலெயிறூறிய நீர் வேண்டுமென்றது. குறிப் பறிதல் பற்றி வாத்சாயனரும் கூறுவார். வடமொழியாளரும் கூறுவர். அதனல் அவர்களைக் கண்டே ஆசிரியர் குறளை யாத்தாரெனல் அறியாமை. ஒப்புமை நூற்றுள் ஓரிரண்டிருக் கலாம். பிறன் மனைவியை யெல்லாம் எப்படிப் புணர்வதெனும் நாகரிகம் நவில்வது வாத்சாயனம். காமத்துப்பால் ஒரு குறளுக்கீடாகாது வாத்சாயன முழுவதும். மனுமுதலோரும் அறம் பொருள் கூறினர். ஆயினும் அவை ஒரு காலத்துக் கொரு நீதிகள். குறள் எக்காலத்துக்கும் ஒரு நீதி. அவை கவிச் சுவையுடையவல்ல வாதலின் புதுமைப் பொருள்கட் கெல்லாம் இடந்தரும் ஆற்றல் இலவாயின. குறள், வகையும் தொகையும் (Classification) அறிந்து சொல்லி யது. குறளின் ஒரு கவிச் சுவைக்கு மனுநூல் சுவை முழுதும் எட்டாது.

## 111. புணர்ச்சி மகிழ்தல்

1. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.

உடற் பயன், பிறவிப் பயன் ஒண்டொடி கண்ணென்பது. ஐம்புலனும் ஒன்றியது உயிரொன்று உடலிரண்டென் றற்காம். இருதலைப் புள்ளின் ஓருயிர். இதுவரை காண்டல் கேட்டல் பற்றியே பேசியமையின் முதற்கண் வைத்தது.

காமத்தில் அவை இரண்டும் செம்பாக மன்று பெரிது. இவ்வுலக இன்பத்துட் சிறந்தவென்பது.

**2.** பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னேய்க்குத் தானே மருந்து.

அம்மை நோய்க்கு அம்மைப் பாலே மருந்தாதல் போல. பிற காதற் பரத்தையும் காமக் கிழத்தியும் மருந்தாகாரென ஒருவன் ஒருத்தியை வற்புறுத்தியதுமாம், கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் என்றலுமது.

**3.** தாம்வீழ்வார் மென்ருேள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணு னுலகு.

புணர்ச்சி பெரிதும் தோள்மாறுபடுதலே போலும். மென்ருேள் - தலைவன் தலைவியின் தோள்களிற்றுயிலுதல். தாமரையும் மென்மைக் குறிப்புடையது. தேவருலகில் துயிலின்மையாலும் திருமாற்கும் அரிதுயிலே யானமையாலும் துயிற்கு இணையாகாதென்றது. துயில் - இன்ப நிறைவால் ஏற்படுவது. இன்பம் நிறையாவிடில் துயிலில்லை.

**4.** நீங்கின் தெறூஉங் குறுகுங்கால் தண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்ருளிவள்.

சமைக்கும் தீயிடைப் பழகிப் பழகி இதனைப் புதுவதாகக் கண்டு பிடித்தாளோ என்பது. ஆண்டு என்ருக்கி ஆண்டனுபவித்தறிந்தாளென்றலுமாம். அவள் நீங்கினும் அவளை நீங்கினுமென்க. அகலாதணுகியே காயும் தீ இது.

**5.** வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினுள் தோள்.

தீயைக் கூறி வேள்வியைக் கூறியது. தோள் புதுப்புது இன்பங்களையெல்லாம் தருவதென்பது. காதல் இருவரிடைப் புணர்ச்சி நிறைவிருப்பின் பின் அவர் விரும்பியதெல்லாம் கிட்டும். இல்லதென் இல்லவள் மாண்பானல் என்பது. தாமரைக் கண்ணன் உலகு வேட்டவையெல்லாந் தரும்.

**6.** உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்.

தழுவுதொறும் தன்னை மறக்கிருனென்பது. தோளிடைத் துஞ்சினுர் செத்தாரின் வேறல்லர், அதனுலேயே

உயிர் தளிர்க்கிறது. தளிர்ப்பது - துளிர்ப்பதுமாம். உறுதல் யாப்பினுள் அட்டிய நீர். மண்ணுலகிற்கோர் அமிழ்தங் கண்டது; இதுவும் பெண்பாற் கடலைக் கடைந்தெடுத்தது. காதலும், புணர்ச்சியும் வாழ்வில் சுறுசுறுப்பை நீங்காமற் காப்பன. அவளதுறுப்பொவ்வொன்றனையும் உறுதோறெனக.

7. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

பாத்துண்டல் - ஒருவர் இன்பத்தை மற்றவர்க்குப் பகுத்தல்; இருவர்க்கும் இன்பம், தம்மில் என்றதால் துச்சிலை வெறுத்தது. தமது பாத்தூண்டல் - தலைவி தானுழந் தட்டது; தாள் தந்த துண்டல், தானுழைத் துண்டாற்றான் காதலின்பம் கை கூடும். பெண், உணவு முதலியவற்றைத் தானே செய்துண்பித்தல் காதல் உணர்ச்சிக்குரியவாம்.

8. வீழும் இருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

மெய் புகுவன்ன கை கவர் முயக்கம். வீழு மிருவர் என்றதால் விருப்பம் இருவர்க்கும் நிறைந்திருந்தாற்றான் இன்பம் கை கூடுமென்றது. ஒருவர்க் கில்லாவிடினும் குறையினும் ஆகாது. மற்ற புணர்ச்சிவகையெல்லா மிருந்தும் உள்ளூறு புணர்ச்சிமட்டும் இல்லாவிடினும் இன்பம் நிறையா தென்பது.

உள்ளூறு புணர்ச்சி யனுபவத்தில் உணர்ச்சி யுச்சநிலையைக் (Orgasm) (Climax) காண்கையில் தழுவும் முயக்கத்திலேயே வளியிடைப்படா நிலையுறுகின்றது. அவ்வுச்சநிலை கூடாத விடத்துத் தழுவலும் உண்மையின்பமுமில்லை.

9. ஊட லுணர்தல் புணர்தல் இவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

இரு புணர்ச்சிக்கு ஊடே வருவதூடல் போலும். காமத்தால் இணைந்தார். உறுதோறென்றது ஊடியபின் உறுதோறென்க. உணர்தல் - ஊடலைத் தணித்தல்; தன்னை யுணர்த்தினும் காயும். ஊடலோடு கூடிய புணர்ச்சியாற்றான் இன்பவுணர்ச்சி மிகுதி போலும்.

10. அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

தொட்டனைத் தூறும் மணற்கேணி அது. முன் நுகர்ந்தது சிறிது, குறையுடைய தென்னுமாறு புதிய இன்பங்களும் காமக் களியாடல்களும் தோன்றும். விரும்பிய காமம் கை கூடாமை அறிவு வளர்ச்சிக்கும் தடையாகலாம். காம நுகர்ச்சிக்கும் இளைஞர்கள் காம நூலறிவினை நிறைய பெற்றிருக்க வேண்டுமென்பதும் குறிப்பாம்.

## 112. நலம் புனைந்துரைத்தல்

1. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

நோக்கக் குழைபவளாகலின் மென்னீரள். அனிச்சத்தைப் பாராட்டியது மோப்பவும் குழைவாளாகலின் என்க. பெண்ணுக்கு மென்மையும், ஆணுக்கு வன்மையுமே காதல் இயல்புகள். மாறினால் இன்ப வுணர்ச்சி குன்றும் என்றது, அழகும் குணமும் உடையவளையே ஆண் விரும்புவான்.

2. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

மலர் முதலிய அழகுப் பொருள்களும், ஓவியம், இசை, சிற்பம், காவியம் முதலிய அழகுக் கலைகளும் காதலைத் தூண்டுவன. அக்கலைஞர் (பரத்தையர்) காதலைத் தூண்டுவது போய் காலப் போக்கில் அவர்களே காதற்குரியராயினர். இயற்கைச் சூழலும், எழிலும் காதற்குறுதுணை. அவளது பூ(ப்பு) உடைமையில் உள்ள விருப்பம் பூவைக் கண்டதும் அரும்புகிறது.

3. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

அனிச்சம் பூவிற்கு முறிகின்ற மேனியுமாம். வாலெயிறூறிய நீரில் மூழ்கி எடுத்த முத்தமுமாம். வெறி பிடிக்கச் செய்யு நாற்றம், தலைவனது வேலையும் வெல்லும் கண்கள். குறிஞ்சிக்குரிய (புணர்ச்சிக்குரிய) வேய்த்தோள். முத்த முறுவல், வெறிநாற்ற மென்பன உடல் தூய்மையையும் குறிப்பன.

4. காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வே மென்று.

காணாமல் நீரிற்கோடிவிட்டது, நீரிலிருப்பது நில னோக்குதல், களைந்து எறியப்படும்போதுதான். எனவே நாணால் உயிரைத் துறக்குமென்பது. பெண் அழகுப் பொருள். பெண் தன்னை இயன்ற அளவு அழகு படுத்திக் கொள்ள வேண்டும். தன் அழகைக் காதலற்கு மறைப்பவள் காதற்குரிய ளாகாள். இவை பெதும்பையுமன்றி பேரிளம் பெண்ணுமன்றி ஐந்திணைப் புணர்ச்சிக்குரிய மடந்தை இலக் கணங் கூறியன. கைக்கிளையும் பெருந்திணையுமல்ல.

5. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

உண்டோ இல்லையோ என்னும் மெல்லிடையாள். பெண்ணிற்கு இடையும், எடையும் சிறியவாக வேண்டும் பறை முதலிய வன்கலைகளை நுகர்தல் காதலுக் கிடையூறும். தலைவன் இடையிற் கையிட்டுத் தூக்கத்தக்க உடலமைப்பு ஒரு பொருத்தம். பத்மினி சாதிப் பெண் போல்வாள் காதற் குரியாள்.

6. மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்.

தலைவனுடன் கூடியிருக்கும் காலமாகலின் தலைவி முகத்தில் பசலை படரவில்லை, எனவே களங்கமில்லை யாகலின் மண்ணில் ஒரு மதியுண்டு, அது சிறந்தது போலு மெனக் கலங்குதல்; அருந்ததியாகிய மீன் கலங்கியதுமாம்.

7. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

காதல் கைகூடாத போதே முகத்தில் மறுவும், பருவும் உண்டாகு மென்பர். இங்குத் தலைவி காதற் பயனுடைய ளாகலின் மறுவில்லை என்பது.

8. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

பகலிலும், இரவிலும் எக்காலத்தும் ஒளிவிடவல்லது அழகிய முகம். முறுவல் முகமாகலின் அழகிது. அத

ஞற்ருன் பல் என்ஞது முறுவ லென்ருர். கலேகளேயும், முழு நிலவுகளேயும் தவருமற் றுய்த்தவர் தமிழராகலின் மதியின் அழகில் மயங்கினர். மதியின் இயற்கையெழில் அவர்க்குக் காதற் கள்ளாயிற்று.

**9.** மலரன்ன கண்ணுள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

பிணே, அன்னம், மயில், மதி, அனிச்சம், என ஐயறிவுயிர்கள் யாவும் காதலேம்புலவின்பத்திற்கும் தூண்டுதலாகவும் துணேயாகவுமுள்ளன. உலகமெல்லாம் காதற் காட்சி வழங்குகின்றது. மதியோடுவமை கூறியது விண்ணுலக இன்பத்தாளென்பதற்காம். யாமத்துப் புணர்ந்தாஞகலின் மதிக் காட்சியை ஆரத் தனித்து நுகர்ந்தானென்பது:

**10.** அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

நெருஞ்சியிலும் அழகைக் (பழத்தை) கண்டது. முடி முதல் அடிகாறும் அழகின்பமென்பது. இதுவரை வீட்டை விட்டு வெளியே செல்லாதவளாகலின் அடி அத்தனே மெல்லியதாயிற்று. பெண்கள் ஆடவர்க்குரிய வினே செய்து வெளியே செல்லுதல் மெல்லியல்பைக் கெடுக்குமென்பர் சான்ருேர் பலர்.

## 113. காதற் சிறப்புரைத்தல்

**1.** பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

பாலும் தேனும் காதலின்பத்திற்கு உரியனவாம். முத்தத்தில் விளேந்த சுவை பற்றியது. அவள் வாலெயிற்று நீர், பால். அவன் வாய் நீர் தேனுமாம். அன்றி வாலெயிற்றினே யுடையாள் எனில் அவனது சுக்கில நீர் பாலும் அவளது சுரோணித நீர் தேனுமாம்.

**2.** உடம்போ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு.

அவளோடியைந்த காதல் அன்போடியைந்த வழக்கென்றது. இருவர் உடலும் ஒன்று, இருவர் உயிரும் ஒன்று,

பேதை பெதும்பையுள் மடந்தைப் பருவமே மணத்திற்குச் சிறந்தது போலும். காதல் உயிரில் ஒன்றியது. இருவரும் பிரிக்க முடியாதவர்.

**3.** கருமணியில் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை யிடம்.

இனி இச்சூழ்வாள் கண்ணுக ஒழுகுவானென்பது. இனி ஒருவர் மற்றவர் கண்ணுல் பார்ப்பவராவர். நோக்குமிட மெல்லாம் ஒருவர் மற்றவரையே காண்பர். ஒருவர் மற்ற வரது புலனின்பத்தையே தன்னதாகக் கொள்வர் என்பது.

**4.** வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து.

இன்பமும், துன்பமும், இறப்பும் இருவர்க்கும் ஒன்று. தமிழர் மணம் இறப்பு வரைப் பிரிக்க முடியாதது. ஒருவரை யொருவர் இழந்த முதுமை வாழ்க்கையும் இனித்தலில்லை. ஒருவரை யிழப்பின் மற்றவர் இறப்பர். ஒருவர் வாழ்வும், சாவும் மற்றவர்க்காக ; மற்றவரால் என்பது.

**5.** உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணுள் குணம்.

காதல் புணர்ச்சி யன்று, உணர்ச்சி (குணம்) யொத்த தென்பது. ஒளி படைத்த கண்ணினுள் அவள். தமிழர் காதலிலும் பொய்தீர் ஒழுக்க (குணம்) நெறி கண்டனர். எண்ண மெல்லாம் நாளெல்லாம் காதல். உடலழகில் பொருந்துவதிலும் குணத்திற் பொருந்துவதே காதல்.

**6.** கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.

அவள் கண்ணுளன் ஆயினன். நுட்பமாகிய அறி வினர். கண்ணை இமை போல் காப்பவளாவாள். இமை யன்ன துன்பமும், இமைநேரத்துன்பமும் அவற்காதலைப் பொருள் என்பது.

**7.** கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக் கறிந்து.

எப்பொழுதும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே யிருக்க விழைவர். காதல் கரப்பாக் கறிந்து, காதலுக்கு மாசுறும் எதனையும் செய்யத் துணியார்.

**8.** நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து.

பின் தூங்கல் போல அவன் வெய்துண்டபின் ஆறிய தனைத் தான் பின்னுண்ணலுமாகலாம். அவன் மனத்திற்கு வெம்மை (துன்பம்) தருவதெதனையும் சிறிதும் நினையாள். மனத்தாறு மாறு செய்யாமை.

**9.** இமைப்பிற் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே
ஏதில ரென்னுமிவ் வூர்.

கண்டு கேட்டென்றதால் காதல் கண்ணிலும் நெஞ்சிலுமே நிலைபெறுகின்றது. கண்ணின்றேல் காதல் குருடாம் போலும். இமையாமல் தூங்காமல் விழிப்புடன் காதலை வளர்த்தல் கூறியது; காதல் தெய்வீக மென்பது.

**10.** உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னுமிவ் வூர்.

மலர் மிசை யேகினான் அவன். எப்பொழுதும் ஒருவர் அணைப்பில் (அருகில்) ஒருவரிருக்க விழைவர். தொலைவிலிருப்பின் நினைவாலருகிருப்பர். அன்புடை நெஞ்சம் (உள்ளம்) தாங்கலத்தலே காதல்; அழகுடைய உடல் மட்டும் 'கலத்தலன்று'

## 114. நாணுத் துறவுரைத்தல்

**1.** காமம் உழந்து வருந்தினார்க் கேமம்
மடலல்ல தில்லை வலி.

மடல் - கடிதமுமாம். வலி - துணைவலி. உழத்தல் - சுவைத்தல். வருந்துதல் - இடையீடுபட்டு வருந்தல்.

**2.** நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து.

நோனா - நோற்காத என்றுமாம். செல்வத்திற்குப் போலத் துணைவிக்கும் நோற்க வேண்டும்: ஊழ் வழிப்படாததுமாம். உயிருமென்றதால், அதனால் இறத்தலுமுண்டென்பது. நாணம் - மடலேறல் செய்யத்தகாதாகலின் நாணுதல்.

3. நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்று ரேறும் மடல்.

மடலாகிய பொய்க்குதிரை யேறியதிலிருந்தே நல்லாண்மை இன்றிலன் என்பது புலனும். இன்று விழாக்களில் ஆடும் பொய்க்கால் குதிரை, மடலின் வழியே வந்தது போலும். இது அமரகத்தாற்றறுக்கும் கல்லாமாவாகாதென்றது. நல்லாண்மை யிருந்திருப்பின் தலைவியை மெய்க் குதிரை மீதே வைத்துச் சென்றிருப்பானென்பது.

4. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை.

ஓடக்காரன் போன்று புணையை உய்த்தற் கொருவர் இருப்பின் (தலைவி இருப்பின்) கடும் புனல் உய்க்காதென்பது. களவில் கடும்புனல், கற்பில் அமைதியான புனலென்பது.

5. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்கும் துயர்.

மாலை மலரும் நோயாகலின் மாலையுழக்குந் துயரென்றது. இம்மடலுக்கும் தானே மருந்தென்றது. பனையோலைக் குதிரையின்மேல் பனங்கருக்கிடையே அமர்ந்து செல்லும் மடலே உடற்குத் துன்பமென்றது. தீ நாற்றமுடைய எருக்கம் பூமாலையாற் றுயருமாம்.

6. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்.

யாமம் புணர்ச்சிக்குரிய காலமாகலின் புணர்ச்சி விரும்பியவன் அப்போதும் மடலூர்தலை நினைத்தான். மாலை முதல் யாமத்தும் துயருறுதல் கூறியது. படலொல்லா - தலைவன் பாற் பட வியலாத என்க.

7. கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்.

முன்பும் பெருந்தக்கதில் லென்றார். பெண் மடலூர்தலில்லை, காமத்தில் பெண் இருந்தவிடத்திருப்பவள், ஆணிடம் விரைந்தோடலில்லை. ஆணே பெண்ணிடம் ஓடுவான்; சுற்றித் திரிவானென்பது. காமத்தை அடக்கி வைப்பதில் பெண் ஆற்றல் மிக்கவள்; காம நூலார் பலர் கண்ட உண்மை இது.

காதலில் தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்ளல் வகை (Sadism, Masochism) மடலூர்தல்.

8. நிறையரியர் மன்னனியர் என்னுது காமம்
மறையிறந்து மன்று படும்.

மறை - வேதம். மறையோர் தேயத்து மன்றல் வகையைச் சேர்ந்ததன்றிது. யாழோர் கூட்டமன்று இத் தமிழ்க் களவு என்றது, கந்தர்வ வழக்கம் என்மனுரை மறுத்தது. நிறையரியர் - அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்ற தலைவனது குணங்களைக் குறித்தது.

9. அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு.

களவென்றதால் யாருமறியாததன்றிது என்றது. தமிழ்க் களவு ஊரெல்லாம் அறியுமாறு விழைந்ததேயாகும், ஒவ்வொருவரும் அறியுமாறு மறுகுதல்.

10. யாங்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

கண் களவு கொள்ளலில் நகுவ. இக்கள - வொழுக் கத்தை எண்ணி நகுவ; தம் நாட்டில், நாகரிகத்தில் இவ் வொழுக்கம் அறியாமையின் (படாவாறு). தமிழ்க்கள வொழுக் கத்தைப் பழித்தல் அறிவில்லார் செயல் என்பது.

## 115. அலரறிவுறுத்தல்

1. அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

அலரால் தலைவி தனக்குக் கிடைத்தல் உறுதியாகலின் ஆருயிர் நிற்குமென்ருன். பாக்கியம் - பேறு; அலர் களவு பற்றியது. களவியலே தமிழர்க்குயிர்; அவர் பெற்ற பேறும் அதுவே. தமிழ் நாகரிக மறியாத பலர் அதனை யறியார்.

2. மலரன்ன கண்ணுள் அருமை அறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

அறிந்திருந்தால் அவளையே ஈந்திருக்கு மென்பதாம். அலர் இருவர்க்குமுள்ள தொடர்பைக் குறை கூறுவது.

அலரும் அம்மலரும் (கண்ணல்) ஒன்றே, எதிரல்ல வென் றறிந்திருந்தால் ஈந்திராதென்பது.

**3.** உருஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெருஅது பெற்றன்ன நீர்த்து.

அலரைப் பெற்றது அவளைப் பெற்ருற் போல்வதாம். எனவே தலைவியைப் பெற விரும்புவோர் அலரை விரும்புதல் தமிழம்; அவளது பெற்ருேரை நாடுவது ஆரியம். அலர் அவளைக் கூட்டுவிப்பதில் செம்பாக மன்றென்பது.

**4.** கவ்வையால் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ்வென்னும் தன்மை யிழந்து.

உப்பமைந்தற் றென்பது. தன்மை - ஐம்புல வின்பத் தன்மை. அலர் ஒருவகைப் பாராட்டுதல். அஃது இரு வரையும் ஊக்குவித்தல் போலாம்; விறுவிறுப்புண்டாக்குவ தாம். தவ்வெனல் - சப்பெனல், இன்பச் சுவையறல்.

**5.** களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்ருற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

அலர் காமத்திற்கு விறகென்பது. களித்தல் - கள் ளுண்டு ஊரறியத் திரிதல். அதுவும் கள்ளலர். இரண்ட லரும் வேட்கையை மிகுவிக்கும்.

**6.** கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

திங்கள் - தலைவி (முகம்). அலர் சிறிது மாசு போன்ற தோற்றமுடையதேனும் (உண்மையன்று) நீடித்திராது விலகும். தலைவியைத் தானும் கொள்ளல் உறுதியென்பது குறிப்பு. பாம்பு விலகியதும் தெளிவுண்டாதல் போல அலர் ஒரு தெளிவையுண்டாக்கு மென்றது.

**7.** ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.

உழவு நினைவு ஆசிரியர்க்கு மிகுதி. அதனுற்றன் நாட்டில் தள்ளா விளையுளை முதலிற் கூறினர். இங்கு கண்ணேருழவரைப் பற்றியது. ஊரவர் அறிந்திப்போது அன்னையும்அறிந்து விட்டாள். களவு காமத்திற்கு எருவும் நீரும்போல் இன்றியமையா தென்பது.

8. நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்ருல் கௌவையால்
காமம் நுதுப்பே மெனல்.

பழி தூற்றி மணத்தைத் தடை செய்தல் போய் அவ் வலரே மணத்தை விரைந்து கூட்டிவிட்டதென்பது. காமம் தீயென்றது. அவ்வெரி அவர்க்கே தீங்காய் அவர்கள் வாயை அடைத்துவிடும்.

9. அலர்நாண வொல்வதோ அஞ்சலோம் பென்ருர்
பலர்நாண நீத்தக் கடை.

நாண வொல்லாது மகிழத்தக்க தென்பது. அச்ச மின்மை ஆண்மைக் குணமென்பது. பலரும் களவின் சிறப்பைக் கூறி அஞ்சற்கவெனத் தேற்றினர் என்றது.

10. தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்குமிவ் வூர்.

இனித் தலைவன் வந்து கேட்பின் வீட்டார் தலைவியை அவற்குக் கொடுப்பர் என்பது. அவளிடம் காதலுடைய தாய் தந்தையர் நல்குவ ரென்றுமாம். ஊரார் தாம் வேண்டின் என்ருக்கி, ஊரார் இருவர்க்கும் உறுதுணைப் பேசினுல் நல்குவர் எனலுமாம். அலர்மணம் தலைவியைத் தலைவற்குத் தந்தது.

## 116. பிரிவாற்ருமை

1. செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

கணமும் பிரியாதிருக்க வேண்டுமென்பதே காதலரின் ஆசை. வாழ்வார் - காதற் பரத்தை காமக் கிழத்தியுமாம். வல்வரவு, தலைவனுக் கியன்றபோது வரும் வரவு.

2. இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தாற் புணர்வு.

புன் கண் இருத்தலாற்ருன் இன்கண் உண்டாகிறது. ஓரளவு சிறிது காலம் பிரிவிருத்தல் காதல் மிகுதிக்கும் தூண்டுதலுக்கும் நன்றென்பர் உளநூலார்: வேறுபாடுகள் நீங்கும், நினைக்கச் செய்யும்.

3. அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.

அறிவுடையார் என்றமையின் ஓதற் பிரிவுமாம். உண்மையான் என்றதால் பிரிவு இன்றியமையா தென்பது. பிரிவு அறிவுடைய சான்ரேரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

4. அளித்தஞ்ச லென்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு.

பிரியேன், பிரியின் ஆற்றேன் என்ற உறுதியளித்தல் அஞ்சலோம் பென்றவர். ஆன்ரேர் சொற்களை ஆராயா மலே ஏற்க வேண்டுமென்பது.

5. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதாற் புணர்வு.

அரிதாற்புணர்பு - அன்று இல்லற வாழ்க்கையில் ஆடவன் பிரிந்தால் திரும்புதல் பற்றிய அச்சம் மிகவிருந்தது. ஆற்றிடைக்கள்வர், அடல் விலங்குகள், அடிக்கடி நிகழும் போர்கள் உயிர்க்கு என்றும் அச்சமாகவே இருந்தன.

6. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவ ரென்னும் நசை.

நல்குதல் - சென்று கொண்டு வந்த பொருளைப் பலர்க்கும் பகுத்துண்டு வாழ்தலுமாம். திரும்பினலன்ரே அவை யெல்லாம் ஆகுமென்பது. வன்கண்ணர் - காவற் (போர்) பிரிவுமாம்.

7. துறைவன் துறந்தமை தூற்றுகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை.

வளை இறத்தல் - உடல்மெலிதல். காதலர் பெரிதும் அருகிலேயே இருப்பதாலும் புணர்ச்சி யின்பம் நிறைதலாலுமே உடல் மெலியாமலும் நலனுடனும் இருப்பர்; மனமகிழ்வும் இருக்கும். அறிந்ததும் வளையிறத்தல்: மனமெலிவு உடல் மெலிவென்றது.

8. இன்னு தினனில்லூர் வாழ்தல் அதனினும்
இன்னு தினியார்ப் பிரிவு.

பிரியினும் தலைவி தன் குடும்பத்தாருடனே தலைவன் குடும்பத்தாருடனே இருத்தல் வேண்டும். தனித்திருத்தல்

மிகவும் தீதென்றது. இனனில்லூர் என்பததுவே. இனி யார் - நீடுதோறினியர், இனம் - அலரில் தலைவியின் பக்கல் பேசும் இனமுமாம்.

9. தொடிற்சுடின் அல்லால் காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.

நீங்கிற்றெறூஉ மென்றதும் அது. பிரியேனெனச் சூள் தொட்டாலன்றித் தணியாது. வளி, நீர், தீயெனப் பஞ்ச பூதப்பயனும் உடையது காம மென்றுமாம்.

10. அரிதாற்றி யல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

பலராகலின் யாமும் அவ்வாறே செய்யற் பாலேமென ஒருவாறு ஆற்றியது. அவற்குரிய ஒருத்தியைத் தவிர்த்த மற்ற பலருமாம். பிரிவாற்றும் பெண்கள் செயற்கரிய செய்வோராவர். பின்னிருந்து வாழ்வார் - கணவனை இழந்து கைம்மை நோற்று வாழ்வோர்க்கும் இப்பிரிவதிகாரங்கள் பொருந்தும்.

## 117. படர் மெலிந்திரங்கல்

1. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்க்(கு)
ஊற்றுநீர் போல மிகும்.

தொட்டனைத்தூறும். மறைத்தல் நெய்யால் எரி நுதுப்பலாம். முன்பும் கண்ணேருழவு பற்றிக் கூறினர். இறைத்தல் போல மறைத்தலும் ஓரளவின்றியமையாதது. இறைப்பவர் - தலைவனுமாம். தலைவி தனதுறுப்புக்களைப்பற்றி யும் காம விளையாடலிலும் வெளிப்படையாக இருந்துவிடலாகாது. சிறிது சிறிதே மறைவினையும் கூச்சத்தினையும் நீக்க வேண்டும்.

2. கரத்தலும் ஆற்றேனிந் நோயைநோய் செய்தார்க்(கு)
உரைத்தலும் நாணுத் தரும்.

தலைவற்கும் கூறலாகாததுபற்றியே அகம் என்றனர் போலும். பெண்கள் காமத்தை வெளியிட்டுக் கூறமாட்டார்கள். ஆணே அறிந்து குறிப்பாலுணர்ந்து அவர்களை நிறைவு செய்ய வேண்டு மென்பது காமநூல்.

3. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனு உடம்பி னகத்து.

காத்துத் தூங்குதலுமாம். உயிர்கா என்றதால் இரண்டும் மூச்சுப் பைகளாம். காமம் உயிர், நாண் காத்தலுமாம்.

4. காமக் கடல்மன்னும் உண்டே யதுநீந்தும்
ஏமப் புணைமன்னு மில்.

தமிழ் நாகரிகம் கடல் நாகரிகம். வேத ஆரியர் நாகரிகம் (கடலறியாதது) ஆற்று நாகரிகம், மலை நாகரிகம். அதனாலேயே குறளில் கடல் அடிக்கடி பேசப்படுவது போலும். புணை - பிணையாகிய தலைவி.

5. துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்.

நீங்கிற்றெறூஉம் தீப்போலக் காமம் மாறுபாடுடையது பிரிவில் இன்பமும் நட்பில் துன்பமும் அளிப்பதுபோலும். அது பழைமையால் ஆவதென்பது.

6. இன்பக் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது.

அடுகையில் கரை மணற் புன்னைபோலும், தாழை போலும் கலங்குவர் காதலர். நெய்தல் இரங்கல் பற்றியது. காதல் - தோல்வியில் உறும் துன்பத்திலும் பெருந்துன்பம் உலகில் இல்லை.

7. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

பிறவிப் பெருங்கடலில் இஃதோர் பகுதிபோலும். பிரிவில் விரைவும் கூடலில் அமைதியுமுடையது அப் புனல். காதலுக்கு (நுகர்ச்சிக்கு) வெறுப்பும் சலிப்பும் (கரை) என்றுமில்லை. காதல் காலத்தைக் கடந்தது (வென்றது).

8. மன்னுயி ரெல்லாந் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை.

துணைக்கு ஒரு பெண்ணையா கொள்ளவேண்டுமென் றிரங்கியது. தலைவனைத் துணையாகக் கொண்டாலும்

பயனுண்டென்றது. யாமத்திற் புணர்ந்தோர் பின்பு நன் குறங்குவர்; யாமத்திற் பிரிந்திருப்போர் இரவு முழுவதும் உறங்கார் என்றுமாம். சேர்ந்திருக்கையில் அவ்வாறு துயிற்றிடில் பயனுண்டு; அப்போது ஊர்துஞ்சாமை இடையூறு.

9. கொடியார் கொடுமையின் தாங்கொடிய இந்நாள்
நெடிய கழியு மிரா.

அங்ஙனம் முழுவதும் உறங்காமை பற்றியது 'நெடிய கழியும் இரா' என்பது. இன்பத்தில் வாழ்க்கை எளிதாக இலேசாகச் செல்லும். பிரிவில் சுமையாக நெடிதாகச் செல்லும். அவர் பிரிவும் குறித்த காலங்கடந்து நெடிதாகிறது.

10. உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண்

அடுத்த அதிகாரக் கால்கோள். உள்ளம் நினைத்தல் போன்று உள்ளத்தில் தலைவன துருவத்தைக் கண்டு கொண்டு (அகக்காட்சி) இருந்தால் வெளியே நீந்தா தென்பது. கங்குல் வெள்ளமுமாம்.

## 118. கண்விதுப்பழிதல்

1. கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

சிறு பிள்ளைத்தனமென்றது. மருந்தாகிய நோக்கு அருகில் இல்லாதபோது வருந்திப் பயனில்லை யென்றது.

2. தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்ப தெவன்.

பிரிவுண்டெனத் தெரிந்துணரா வென்க. உண் கண்-மையுண்டகண். மை, உணர்ச்சியை மறைத்த தென்றது. பிரிவு தவிர்க்க முடியாததெனப் பரிந்துணராமை.

3. கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து.

கதுமென நோக்கல் - நினைத்தபோது தலைவன் வரும் வழியை நோக்கல். நினைத்தபோதெல்லாம் காதலர் (எதிரில்)

வருவாரோ என்றது. நகல் - காதலில் கேலித்தனம் பல நிகழும் ; காதல் ஏக்கம் சிறு பைத்தியத்தை விளைக்கலாம்.

4. பெயலாற்ரு நீருலந்த உண்கண் உயலாற்ரு
உய்வில்நோய் என்கண் நிறுத்து.

நீர் இருப்பின் உள்ளவெம்மையைச் சிறிது தணிக்கும். நீர் நோய்க்கு நல்ல மருந்தென்பது. பெயலாற்ரு - வாழ் வார்க்கு வானம் பயந்தற்ருல் என்பதுடன் ஒப்பிடுக. அழுதால் துன்பம் தணியுமென்பது.

5. படலாற்ரு பைதல் உழக்கும் கடலாற்ருக்
காமநோய் செய்தஎன் கண்.

கடலாற்ரு - கடலிற் பெரிது. படலாற்ருப் பைதல் - இறத்தலனைய துன்பம். காமம் உலகமெல்லாம் பரந்து தோன்றுகிறதென்பது. கடல் - பிரிவு எக்காலத்தும் இல்லா மற் போகாது ; உலகின் எப்பகுதியிலும் காதற் பிரிவுண்டு என்பது.

6. ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது.

நோயைச் செய்த தலைவன் கண்களும் இத்துன்பத் தைப் பட்டதாயின் இனிதென்பது. தன் கண்ணுயின், ஒறுத்தார்க்குரிய ஒருநாளை யின்பமும் அதற்கில்லையே என் றது. தனக்குத் துன்பம் விளைத்தவர்க்கும் துன்பம் உண்டா யின் சிறிது ஆறுதலென்பது. இடர்ப்பட்டது என்பதும் பாடம்.

7. உழந்துழந் துள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

விழைந்து கண்டது. நோக்கி மெல்ல நகல். இழைந்து- கண்ணொடு நோக்கொக்கல். அறுக - காதலில் அடிக்கடிச் சிறு சலிப்புகள் தோன்றலுண்டு. நீரற்ருலாவது வருத்தந் தீருமென்றது. தீராக் காமத்தில் தானே தன்னை வருத்திக் கொள்ளல் (Sadism, Masochism) உண்டு.

8. பேணது பெட்டார் உளர்மன்னே மற்றவர்க்
காணு தமைவில கண்.

அருளைப் பேணுது பொருளைப் பெட்டாருமாம். காணுதமை வில என்பதால் ஒருவாறு ஆற்றுகிருள். பிரிந்த வரை மீண்டும் காண்பதற்கு அளப்பற்ற ஆவல் உண்டா மென்பது.

9. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.

காதலுக்குத் தூக்கமில்லை. ஆரஞுருற்றன - வாழ்க்கை ஒரு இன்பப் போராட்டம். தூது வாராக்கால் வரின் என்றுமாம்.

10. மறைபெறல் ஊரார்க்(கு) அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணர் அகத்து.

அறை பறை யன்னர் என்ற விடத்துடன் ஒப்பிடுக. ஆற்றத்தான் வேண்டும். பிரிவில் அளவிறந்த ஆற்ருமை சிறிது வெறுக்கத் தக்கது. அதுவும் ஒரு பறை.

## 119. பசப்புறு பருவரல்

1. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்பியார்க் குரைக்கோ பிற.

பிரிகிருனென்ற வருத்தத்தில், புணர்ச்சி, விரும்பிய வனுக்கு அதனைத் தலைவி தாராமையால் பசப்புற்றது எனலு மாம். இது காமக் கணியாடல்களில் முழுவதும் ஈடுபடாத வர்க்கும் (Neurotics) பலவகையில் அச்சமுடையவர்க்கும் உள்ளுறு புணர்ச்சி தவிர்த்த மற்ற ஆடல்களையே யுடையவர்க்கும் உண்டாகும் உடல் (பழுப்பு) நிறவேறுபாடாம் எனலுமாம்.

2. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு.

அவர் தந்த குழந்தைக்குள்ள உரிமை இப்பசப்புக்கும் உண்டென்றது. பசப்பு ஒருவித அரிப்புமாம்.

3. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையும் தந்து.

தியாகம் காதற் குணம். ஒருவர் பிறர்க்குத் தமக்குள்ள நலங்களை யெல்லாம் அளித்து அவர்க்குற்ற துன்பங்களை

யெல்லாம் தாமேற்றல். சாயல் - பெண்களின் உடல் உறுப்புக்களிலுள்ள அளவும் (Proportion) அழகும் (சமுத்திரிகா லட்சணம் போல்வன). காதல் தராசின் இருதட்டாலும் நிறுக்கும் வாணிகம் போலும்.

**4.** உள்ளுவன் மன்யான் உரைப்ப(து) அவர்திறமால்
கன்ளம் பிறவோ பசப்பு.

நினைவும் சொல்லும் காம மயமாஞலும்கூட உடல் பற்றிய புணர்ச்சியில்லையாயின் இன்ப நிறைவும் தூய்மையுமில்லை. பசலை பாயுமென்பது. உடற் புணர்ச்சியின்றி இருவரும் ஒத்துப்போயினும் அவரை யறியாமற் (கள்ளப்) பசலை யுற்றே தீரும்.

**5.** உவக்காண்எங் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்பூர் வது.

தொடுவுழித் தொடுவுழி நீங்கி (பாசி போல) விடுவுழி விடுவுழி விடலொல்லா தென்றது. பிரிவுத் துயரத்தின் நிறம் பசலைபோலு மென்றது.

**6.** விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

விளக்கென்றதால் பசலை உடலிலுள்ள ஒளியை இழக்கச் செய்யும். உள்ளத்தும் ஒரு இருள் படரும். காதல் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஒளி தருவது; மங்கலந்தருவது.

**7.** புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

கிடத்தல் - தன்னை மறந்து கிடத்தல். உடற் புணர்ச்சி இல்லாதபோதேற்படுவது பசலை யென்றிதனுற் புலப்படும். அள்ளித் தின்னக் கொண்டது. மறுபக்கம் கிடப்பதற்காகப் புடைபெயர்தல்.

**8.** பசந்தாள் இவளென்ப(து) அல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல்.

ஆடவன் வினை நினைவினஞகலின், பெண்ணே காமத்தைக் காத்து நிற்பவள். ஆணுக்கும் ஒளியிழந்த கரு நிறம் உண்டுபோலும். காதலில் பழி, பெண்ணுக்குத்தான் போலும்!

9. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின்.

அவர்க்கும் பசலை யுண்டோ வென்றையுற்றது. அவரா வது நன்ருக இருக்கட்டுமெனச் சலித்துக்கொண்டது. வாழ்த்தியதுமாம்; பின் வந்தருள்பவளுகலின்.

10. பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்ருர் எனின்.

இஃது அகமாகலின் இருவர்க்குட்பட்டதாகலின் பிறர் ஏன் பேசவேண்டு மென்பது. பிறர் பேசுவதே துன்பத்தை மிகுவிக்கின்றது. இன்றேல் இங்நிறம் அவளை நினைங் தின்புறத் தூண்டுதலாகு மென்றது.

## 120. தனிப்படர் மிகுதி

1. தாம்விழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்ருரே
காமத்துக் காழில் கனி.

ஒத்த கிழவனும் கிழத்தியுமாயின் இருவரும் ஒருவர்க் கொருவர் விரும்புவர். கல்வி, செல்வம், குணம், பருவம், அழகு, உணர்ச்சி முதலியவற்ருலொத்தவர். ஒருவர் வீழ்தல் கனி. மற்றவர் வீழ்தலின்மை காழ். கொட்டையில்லாக் கொய்யாக் கனி காமம் என்றது. கைம்மை நோற்பவரும் மணவுறவு நீக்கியவரும் (Divorce), புணர்ச்சி நினைவென்பதே ஒருவர்க்கின்றி ஆனல் கூடி வாழ்பவரும் தனிப்படர் கூறு வோரெனலாம்.

2. வாழ்வார்க்கு வானம் பயந்தற்ருல் விழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

இருவருள் ஒருவர்க்கு வேட்கையில்லையேல் அது வாழ்க் கையே அன்றென்பது. இருவரும் ஒருவர்க்கொருவர் அளிக் கும் நீர்(மை) வானம்போன்ற தென்பது. வெம்மையை மாற்றுவது. வானமென்றதால் காதல் ஆண்டவனதருள் என்பது. வானமில்லாத போது தலைவன் பொருட்காகப் பிரிகிருன். வானம் தொடங்கியதும் (கார்காலத்தில்) உழவுக் காகத் திரும்புகிருன். நல்ல மழையின்மை பிரிவுக்காரணம் போலும்!

3. விழுநர் விழப் படுவார்க்(கு) அமையுமே
வாழுந மென்னும் செருக்கு.

செருக்கு - பீடுநடை. மனமொத்து வாழும் குடும்பத்தில் ஒரு பொலிவும் மிடுக்குமிருக்கும், வாழ்வதில் சுவையிருக்கும்.

4. விழப் படுவார் கெழீஇயிலர் தாம்விழ்வார்
விழப் படாஅ ரெனின்.

இன்ப வுணர்ச்சியால் இருவரும் ஒப்பாகும்போதே உச்சநிலை (Orgasm) கைகூடும். ஒருவர்க்குக் குறையின் மற்றவர் பல வகை ஆடல்களாலும் அதனை நிறைவிக்க வேண்டும். சமயத்தில் விட்டுக் கொடுக்க வேண்டும்.

5. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை

இஃதும் ஒருவகை கைக்கிளை. பொருமையாலும் (Jealousy) ஒருபாற் காதலின்மை புலப்படும்.

6. ஒருதலையான் இன்னது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.

இருவர்க்கும் இன்பம் சமமாதலன்றி ஒருவரது சத்து (அமிழ்தம்) மற்றவர்க்குக் கலந்து பயனுதலில்லை. (திரு. வி. க.) உயிர்கா என்றதால் ஒருதலையான் உயிர்க் கேடுண்டாதலும் உண்டென்பது.

7. பருவரலும் பைதலும் காணுன்கொல் காமன்
ஒருவர்கண் நின்றெழுகு வான்.

அவன் பெண்ணுமல்லன் ; பெண்ணோடு பிறந்தவனு மல்லன் ; ஆகலின் காணுன் என்றது. இது நடுவு நிலை யன்றென்றது. ஆண் ஆணே வருத்தல் அல்லவா ஆண்மை யென்றலுமாம்.

8. விழ்வாரின் இன்சொல் பெறுஅ(து) உலகத்து
வாழ்வாரின் வன்கணர் இல்.

தலைவனதூர், உற்றூர் அல்லது தலைவனைப் பற்றிய ஏதாவது செய்தி கேட்டல் காதற்கோர் ஆறுதல். இன் சொல் - தூது (போர்) வெற்றியுமாம். ஆணினது வெற்றி

காதலை வளர்ப்பது. வினையில் வெற்றியில்லாதவன் நல்ல காதலனாகான்.

9. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.

அவனைப் பற்றிப் பேசி யிருத்தலும் பிறர் பேசக் கேட்டலும் கூட இனிமையாம். பழி கூறிக் கொண்டிருத்தலும் இன்பம். காணுக்காற் காணேன் தவறல்லவை. சான்றோன் எனக் கேட்ட தாய்ச் செவியென மகிழும். இவையெல்லாம் நினைவருமைக்கு வழிகள்.

10. உறுஅர்க்(கு) உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறுஅய் வாழிய நெஞ்சு.

கடலன்ன காமத்தைச் செறு என்றது. கடல் முதலிய காதலைத் தூண்டும் காட்சிகளைக் காண்டலாலும் நினைத்தலாலும் தனிப்படர் நீங்குமென்றது.

## 121. நினைந்தவர் புலம்பல்

1. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

தன்னோய்க்குத் தானே மருந்தாயவன் அருகிலின்மையின் புலம்பியது. நெஞ்சம் காதற்கிடம். எனவே நெஞ்சம் (உயிர்) இருக்கும் வரை தீராதென்பது. பகலில் நினைத்தும் இரவில் கனவியும் மகிழ்வர். மயக்கமுள்ள வரையிலேயே கள் மகிழ் செய்யும். காதல் மயக்கம் என்றும் தீராதென்பது.

2. எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.

எனைத்தானும் நல்லவை நினைத்தலிது ; துன்பஞ் சிறிது தீர்தலன்றி மிகுவதில்லை யாகலான். மனத்துக் கண் மாசற்ற அறமுமாயிற்று. நன்றி பயக்கும் வினை நயந்தது. உலகில் நினைத்தடையும் இன்பத்துள் தலையாயது, வேட்ட பொழுதின் அவையவை போல்வது.

3. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

வினைக்கண் வினையுடையானாகலின் இடையிடையே நினைக்கிறானென்பது. தும்மலும் அவளை நினைக்கும் அடையாளமாகிறது.

4. யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ உளரே அவர்.

அவனும் இடைவிடாது நினைப்பின் பிரிவாயினும் இவட்காறுதல் என்றது. பெண்கட்கு ஐயப்பாடும் அது வழியாய பொறாமையும் (Jealousy) மிகுதி. ஊடற்காரணமும் அது.

5. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத்(து) ஓவா வரல்.

காதலில் நாணமும் மானமும் இல்லை யென்றது. மண்டமரட்ட களிறனையான் தன்னையோர் பெண்டிரும் அருளியக் கேட்பான். கடிகொண்டதனை, தொடர்ந்து தும்மல் வாராமையாலறிந்தாள்.

6. மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடியான்
உற்றநாள் உள்ள உளேன்.

செயலின்றியும் நினைவொன்றே இன்பந்தரும் மனவியல் கூறியது. முன்பு கூடலில் இருவரும் கொண்ட களியாடல்களை யெல்லாம் நினைத்தலே தலைவனோடிருக்கும் இன்பத்தை யளிக்கின்றது.

7. மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.

மறத்தலைப் பற்றி யுள்ளினுமென்க. அவனில்லாத காலத்து அவனைத் தவிர்த்த வேறெச்செயலை யுள்ளினும் வெம்மையும் வேம்புமாகிறது. உண்டலும் உடுத்தலும் கூட. எதிலும் ஆழ்ந்த சிந்தனையுடையவர் வேறெதனிலும் பற்றுடையராகார்.

8. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு

முன்பும் எனைத்தொன் றென்றார். உலகில் எப்பொழுதும் நினைக்கக் கூடிய பொருள் காதல். எண்ணத்திற்

கெல்லாம் ஊற்றுகிறுன். எண்ணவூற்று காதல், பிற பொருள்கள் சிறிது நேரம் நினைக்கினும் தீர்ந்து விடுவன.

9. விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து.

வேறல்ல மென்றவர் பிரிந்ததும் உயிரும் பிரிந்திருக்க வேண்டும். பிரியாமையின் யானே உயிரைவிட்டு அவர் சொல்லை உண்மையாக்கு வேனென்பது. இனையம் யாமென்னப் (வேறெல்லம்) புனைந்த அளியின்மை. வேறெல்ல மென்றதால் என்னுயிர் விளிய அவருமல்லவா விளிவா ரென்றிரங்கியது. பெண்கள் பாராட்டுதலில் ஈடுபாடுடையவர்கள்; அளவறிந்தவரைப் பாராட்டவேண்டுமென்பது. காதலில் பெண்கட்கு இறக்கும் விழைவு (Death Wish) மிகுதி.

10. விடாஅது சென்றாரைக் கண்ணினுல் காணப்
படாஅதி வாழி மதி.

இருவர்க்கும் காதலைத் தூண்டும் பொதுப் பொருளைக் காதலர் விழைவர்; அவையும் நினைவைத் தோற்றுவிப்பன. நினைந்து, நினைந்து சலித்துக் காணும் விழைவுண்டாயது. கண்ணினுற் காண என இருமுறை கூறியது விழைவு மிகுதி.

## 122. கனவு நிலையுரைத்தல்

1. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து.

இசையுமினிய வென்றுளாகலின் நற்றூதே வந்தது, உடன் காதலனும் வந்தான் என மகிழ்கிறுள். மாலை யயர் கம் விருந்தென்பாளாகலின் தூதுக்கும் விருந்திடுகிறுள்.

2. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன்.

கயலின் அமர்த்த கண்ணுகலின் அமைதியுற்றுத் துஞ்சுதல் அரிதென்றது. கனவு ஒரு தனி அனுபவமுடையது. காதலனும் தானும் நடிக்கும் நாடகத்தைத் தாங்களே காண்பது போல்வது. நனவில் தாங்கள் நடிப்

பதைத் தாங்களே காணவியலா தன்றே? மற்றும் நினைத்தின் புறுவதினும் கனவிற்கண்டின்புறுதல் உண்மை அனுபவத்தில் செம்பாக மன்று பெரிது. தழுவுதல் புணர்தல் முதலிய எவ்வின்பத்தினையும் உண்மையாகவே நுகர்ந்து விடுகின்றனர்.

**3.** நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் னுயிர்.

கனவு செயற்கரிய செய்வது, என்றால் ஏழையைப் பணக்காரனாக்குவது, முடியாதவற்றையும் முடித்துச் சிறு நேரம் மனவாறுதலைத் தருவது. ஈயாதவனை இங்கு வள்ளலாக்குகின்றது. தொலைவிலுள்ளோரையும் காணச் செய்யும் தொலைக் காட்சி (Television) கனவு.

**4.** கனவினான் உண்டாகும் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு.

நனவில் நினைத்தும் நிறையாத அளவு நிறைவித்த லாற்றான் காமம் கனவிலும் உண்டாகிறது. நல்காரையும் தரற்குச் செய்கின்றது. நனவில் துன்பமாகக் கனவில் இன்பமாகிறது. எதிர்ப் பயன் தருவது கனவு. நற்கனவு தீப்பலனையும், தீக்கனவு நற்பலனையும் தருமென்பது.

**5.** நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது.

நனவில் எத்தகைய இன்பமுண்டோ அதேயின்பம் கனவிலுமுண்டென்றது. நுதல்வியர்ப்பக் கூடலில் நுதல் வியர்த்தல் (கழிவு நீர்) முதலியவனைத்தும் உண்மையில் நிகழும்.

**6.** நனவென ஒன்றில்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்.

கூடியிருக்கையில் எப்போதும் விழித்திருக்கவே விழை பவர் பிரிவில் எப்போதும் கனவிற்காகத் தூங்கிக் கொண் டிருக்கவே விழைதல் கூறியது.

**7.** நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்னெம்மைப் பீழிப் பது.

இஃது இன்ப வெறுப்பு. தனக்குப் பிடிக்காதவற்றையும் கனவில் ஒருவன் செய்கிறான். கனவில் தீமையின்றி இருக்க வேண்டில் நனவில் எனைத்தானும் மாறுநினைத்தலாகாது.

8. துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து.

தாமரைக் கண்ணானுலகுக் காட்சி கண்டது. தோளிலிருந்து நெஞ்சுட் புகுதல் அருமையுரைத்தது. விரைந்தென்றதால் இடையீடும் மறத்தலுமில்லை. நனவில் நினைவின்பமொன்றே; கனவில் சொல்லின்பமும் செயலின்பமும் கூட உண்டென்பது.

9. நனவினால் நல்காரை நோவார் கனவினால்
காதலர் காணா தவர்.

காணாதவர் - இக்கனவினைக் காணாதவர். அவர் விரும்பினும் இதனைக் காணவியலாது. இவர் காதல் மற்றவர்க்குரிமை யின்றாகலின்.

கனவின்பமின்றேல் நனவின்பமுமில்லை.

10. நனவினால் நம்நீத்தா ரென்பர் கனவினால்
காணார்கொல் இவ்வூ ரவர்.

களவில் யாருமறியாமல் இரவில் வந்துசென்றது போலவே இப்போதும் வந்து செல்கிறா னென்றது. அது களவின்பம் இது கனவின்பம்.

## 123. பொழுது கண்டிரங்கல்

1. மாலையோ அல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

உயிருண்ணும் தோற்றத்தையுடைய கண்களாற் காதலி காதலனது உயிரை யுண்ணும் மாலை. உயிர் - உயிர்ப்பு, மூச்சுமாம். உயிர்த்தறியும் புலனுண்ணும் நேரம். புணர்ச்சியிலேயே மிகுதியான மூச்சு (உயிர்ப் பாற்றல்) - மற்ற வினைகளைச் செய்யும் போதினும் - செலவழிவதாகக் கூறுவர்.

2. புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை.

இராமனும், சுக்ரீவனும் கண்ட போது கேட்டுக் கொண்டது போல்வது. மாலைக் கேள்வன் இரவுமாம். புன் கண் - கண் மங்கலாகத் தெரியுநேரம். காதல் கைகூடாத போது சிறு பிதற்றுதல் ஏற்படுதலுண்டு.

3. பனியரும்பிப் பைதல்கொள் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.

பனித்திவலைகளை வீசும் கடலோரத்தில் மாலையிற் சென்றமர்வதும் காதல் வளர்ச்சிக் காரணமாம். குளிர்ந்த நேரம் காதல் வெம்மையைத் தணிக்கும். அதனாற்றான் யாமத்தைப் புணர்ச்சிப் பொழுதாக்கினர்; கொடுவேனிலிலும் அப்போது குளிர்ந்திருக்கும்.

4. காதல ரில்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்.

தனித்திருப்பவரிடம் இன்று போய் நாளை வருகிறேன் என்னும் ஊராண்மை அதற்கில்லை. கல்லாக் கொலைஞன் போல்வதென்பது. கொலைக்கள மென்பதால் தலைவன் சென்ற போர்க்களத்தை நினைந்திரங்கியதுமாம்.

5. காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

இரவிலெல்லாம் புணர்ந்தின்புற்று அமைதியுறும் நேரம் காலையாகலின் பகையில்லை. காலை, ஒருநாளின் குழந்தை போல்வது, குழந்தையிடம் யார்க்கும் பகையில்லை.

6. மாலைநோய் செய்தல் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்.

பகலெல்லாம் பொருளுக்காக உழைத்துத் தலைவன் மீள்வது மாலையாகலின் அவன் பொருளுக்கடுத்த இன்பத்தில் ஈடுபடுகிறான், பொருட் பயனுமது, எனவே நோய் செய்யாமல் மாலை இன்பமும் செய்கிறது.

7. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

மாலை மலரும் முல்லை ஒழுக்கம் பற்றியது. அப்பூவின் வளர்ச்சியைத் (மலர்ச்சியை) தலைவி நாள் முழுதும் பார்த்

துக் கொண்டிருக்கிருள். மணப் பொருள்களும் பூச்சூடலும் காதலின்பத்திற்குரியன. பகல் முழுவதும் குடும்பத்தைக் கவனித்து மாலையில் ஓய்வுறும் பெண்ணுக்குக் காதல் நினைவு மலர்கிறது. (முல்லை) கற்பினைத் தமிழர் பூவெனப் போற்றினர். நாடொறுமன்றி நாளில் நான்குமுறை நாடிக் கண்ணுங் கருத்துமாய்க் காத்தனர்.

8. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.

கொலைக் களத்தேதிலன் கொன்றவரை எரிக்கும் அழல். செவ்வந்தி நேரமுமாம். இன்னிசை முதலிய கலைகள் காதலைத் தூண்டுவனவாம். அது முல்லையந் தீங்குழல். முல்லைப் பண்ணை ஊதிப் பொறுத்திருக்கச் சொல்லுதலால் கொல்வதாகிறது.

9. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

மதி திங்களுமாம். மதிக்கும் மாலையா இரவா எனத் தெரியவில்லையாம். ஊரரெல்லாம் காதலருடன் கூடி இன்புற யான் மட்டுமோ துன்புறுதல் என்பது. இங்கு உலகின்புறுவதனைத் தானுமின்புறக் காமுற்றது. காதலை வெறுத்தல் மனித வியல்பை வெறுப்பதாம்.

10. பொருண்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயுமென் மாயா உயிர்.

பொருட்பாலில் கூறிய, ஓதல், தூது, பொருள், பரத்தை முதலிய வகைகளிற் பிரிந்தவர் பொருண்மாலை யாளர். மாயாவுயிர் என்றதால் பொருட் பிரிவை இசைந்தது பொருளிலார்க்கு இவ்வுலக இன்பத்துட் சிறந்த காதலின்ப மில்லை.

## 124. உறுப்பு நலனழிதல்

1. சிறுமை நமக்கொழியச் சேட்சென்ருருள்ளி
நறுமலர் நாணின கண்.

சிறுமை-வறுமையுமாம். சுருங்கி யிருத்தலால் மலர்ந்த மலர்களைக் கண்டு நாணியது; மணமுமின்மை; வறுமையை நீக்கப் பொருள் தேடிச் சென்றவர்.

2. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்.

பிணையேர் மடநோக் கென்றெல்லாம் நலம் பாராட்டிய வர். கண்களை நயந்தவருமாம். நல்காமை - நன்றியின்மையு மாம். பசத்தல் - அரித்துச் சொல்லுதல்.

3. தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

ஒருவழித் தணந்தமையுமாம். தோள் கையுமாம். வீங்குதல் - நோய் வீக்கமுமாம். மணந்த நாளிற் போல வீங்கியது. கருப் பெண்களுக்கு ஆசை நிறைவேருவிடில் கைகால் வீங்குமென்பர்.

4. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

தொல்கவின் - இளமை முதல் வளர்ந்த அழகு. காதல் உடலழகையும் ஒளியையும் வளர்ப்பது. தொடிசோரும் - தொடிக்குரிய கை மோதிரத்திற்குரியதாக மெலிதல். மணத் தால் காதலர் பருத்தலுமுண்டு, மெலிதலுமுண்டு.

5. கொடியார் கொடுமை யுரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

கொடியாகிய தலைவியை யுடையார். மரம் தழுவிய கொடியை நீங்குதலில்லை. இவன் நீங்கிப் பிரிந்ததால் கொடுமையனுயினுன். தொடி கலகல வென்றுதிர்ந்து உரைத்தது.

6. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடிய ரெனக்கூறல் நொந்து.

தலைவன் எத்தனைக் கொடுமை செய்யினும் அதனைக் கூருமற் பொறுத்தலே காதல் வளர்ச்சி, கற்பெனக் கருதினர்; "போற்ரு வொழுக்கம் புரிந்தீர் யாவதும் தேற்ருவுள்ளம் உடையேன்" என்ருள் கண்ணகி.

7. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோள் பூச லுரைத்து.

அன்பில் புன்கணீர் பூசலுரைத்து, இங்குத் தோட்பூசல் உரைத்தது. தோள் முயக்கமும் தூக்கமும் தவிர்ந்து

தலைவன் அங்குத் துன்புறுதலை நினைத்துத் தோள்கள் பூசல் தந்தன.

8. முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடி பேதை நுதல்.

ஆற்றுமையில் தலைவன் எதிரிலிருப்பதாகக் கற்பனையில் தலைவி கைகளை வளைக்கிருள். நுதல் பசக்கிறது. காதலில் ஒருவரில்லாதபோதும் ஆற்றுமைச் செயல்கள் நிகழ்கின்றன. கொங்கைகளைத் தாமே ஞெமுக்கிக் கொள்ளல் முதலிய வெல்லாம் (Masterbation) அவ்வகையாகலாம். அச்செயல்கள் அளவிறந்தால் உடல் மெலிவேயாகும்.

9. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

வளியிடைப் போழப்படாவென்ருர் முன்பும். தண் வளியென்றதால் தென்றலாயிற்று. தென்றலும் குளிர் காலமும் காதற்குரியன. கார்காலத்திற்றலைவனைத் தலைவி எதிர் நோக்கல் அதற்கேயாம். தலைவனில்லாமையின் தண் வளி போழ்ந்தது. புணர்ச்சியில் காதலர் உடல் (மன) வெம்மையும் மூச்சும் இன்பத்தடையென்றது.

10. கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

நிறைபடாக் காதல் நிகழ்ச்சிகளில் அரிப்பும் (உடல்) ஒளிக் குறைவும் உண்டாகின்றன. இங்கு ஒண்ணுதல்தான் உடைந்தது.

## 125. நெஞ்சொடு கிளத்தல்

1. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து.

எனைத் தொன்றும் - சிறிதாயினும் இந்நோய்க்கு மருத்துவம் செய்துகொண்டே யிருக்கவேண்டும். யார் எந்த மருந்து கூறினும் செய்யவேண்டும் போலும், தீரா நோயாகலின்.

2. காதல் அவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

காதல் குறியெதிர்ப்பை நீரதுடைத்தன்று. ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுப்பது. ஒருவர்க்குக் குறைவுபோல் தோற்றினும் மற்றவர்க்குச் சிறிது வலிமை (Force) யிருப்பின் ஒப்பாய்விடும். கைக்கிளையையும் பெருந்திணையையும் வெறுத்தது.

3. இருந்துள்ளி என்பரிதல் நெஞ்செ பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்க ணில்.

பரிந்து - விரைந்து. கடவுதேர் பாக எனத் தேரை விரைந்து செலுத்தி வரல். வீம்பு செய்துகொண்டிராமல் பிரிந்த ஆணிடம் பெண்ணுவது சென்றுவிடவேண்டும் போலும்.

4. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று.

கண்ணைத் துயிற்றிக் கனவு கண்டு கொண்டிரு வென்றது. நினைத்தலிலும் கனவுதல் நன்றென்றது. நினைத்து நினைத்து நெஞ்சும் அயர்ந்தது.

5. செற்ரு ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்ருல் உருஅ தவர்.

பகைவர்க்கன்றி நமக்குச் செற்ருரல்லர். நீர்த்துறை படியும் பெருங்களிறுபோல்வார். உருர்போன்றுற்ருர் அவர்.

6. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பெய்யாக்காய்வு காய்தியென் னெஞ்சு.

எண்பதத்தாலெய்தி யுணர்த்தல். புலத்தல் வெகுளியன்று. காய்வு - வெகுளி. காதலில் வெகுளி நகையுள்ளுமின்னுது. அவன் உணர்வில் தானுணராமையும் அவன் உணராமையில் தான் உணர்தலும் புலவி.

7. காமம் விடுஒன்ரே நாண்விடு நன்னெஞ்சே
யானே பொறேனிவ் விரண்டு.

நாணைவிடினும் காமம் விடத்தக்கதன்றென்பது. பிரிந்தவர்க்குக் காதல் பெருஞ்சுமையாய் விடுகின்றது.

8. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் நெஞ்சு.

காதலில் விரைவு பெண்ணுக்கு முதலில் உண்டாவதில்லை. ஆண் தூண்டிவிட்ட பின்பு விரைவு விரைவில் தணிதலு மில்லை.

9. உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு.

ஆட்டைத் தோள் மேலிட்டுத் தேடியது. தன்னிடமே யிருக்கும் தலைவனைக் காணது வெளியிலெல்லாம் தேடும் தத்துவம் கண்டு நகைத்தது. காதலை உடலில் வையாது நெஞ்சுள் வைத்தது தமிழம். உடலில் வைத்தது மேலை நாகரிகம்.

10. துன்னத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
இன்னும் இழத்தும் கவின்.

சொற் செயல்களில் நிறையாமையின் கவினிழந்தது. செயல் முற்றுத வெறும் நினைவு அழகையழிக்கும்.

## 126. நிறையழிதல்

1. காமக் கணிச்சி யுடைக்கும் நிறையென்னும்
நாணுந்தாழ் வீழ்த்த கதவு.

அறிவென்னும் என்பதும் பாடம். காமக்கணிச்சி அடைக்குந்தாழைப் பூசல் தரும். நீண்ட பிரிவில் காமம் கட்டுமீறித் தன் பாலாரிடமும் (Homo-sexualism) உற்றாரிடமும் (Incest) அயலாரிடமும், அறியாதார் பலர்க்குப் பாய்ந்துவிடக் கூடும், காத்துக்கொள்க என்கிறார் ஆசிரியர். போரில் அரண் வாயில்களை உடைத்துத் திறக்கும் நினைவுற்றது.

2. காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்தும் ஆளுந் தொழில்.

கண்ணேட்டமின்றி இரவிலும் வேலை வாங்குகிற தென்றது. கண்ணின்று - நீங்காதருகிருந்தென்க. கண் ணிருந்தால் தூங்குமென்பது.

3. மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.

காம மிகுதி தும்மல் முதலிய குளிர்ச்சி நோய்களை யுண்டாக்கக்கூடும்.

4. நிறையுடையே னென்பேன்மன் யானோ என்காமம்
மறையிறந்து மன்று படும்.

மறை பிறர்க்குய்த் துரைத்தல் நிறையாகாது. அற்ற மறைக்கும் சான்றாண்மையே நிறையென்பது.

5. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றா ரறிவதொன் றன்று.

பகையென்பதே காதற்கில்லை. பகையுள்ளும் பண்பே காதல். காதலில் தோல்வியும் அடிமைத் தனமும் இல்லை.

ஏறுபோற் பீடுடையவனும் தலைவியின் கால்களில் நெடுங்கடையாக வீழ்வான். வாழ்வில் வேண்டாமை சில போது வேண்டுவதாய் விடுகின்றது.

6. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை யுற்ற துயர்.

பிரிந்தார்ப் பொறுத்தல் வல்ல அமைச்சு காதல். இழத் தொறும் காதலித்தல்போல வெறுத்தொறும் காதல் வளர் தலன்றித் தேய்தலில்லை. பண்பாட்டு வளர்ச்சிக்குக் காதல், கருவி.

7. நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

தனிமையில் காம லீலைகளுக்கு நாணுவதும் கூசுவதும் காதல் நிறைவில் மாசுண்டாக்கும். இருவரும் விரும்பியவா றெல்லாம் விட்டுக்கொடுக்க வேண்டும்.

8. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.

இன்மொழி ஆணுக்குமுரியது. ஆண்களுக்குப் பெண் களிடம் காதற் பேச்சுப் பேசத் தெரிதல் ஒரு கலை. மெல்லி யலிடம் வன்மொழி காதலைக் கடிதாக்கும். ஒண்ணுதற்குடைந் தவனிடம் பணி மொழிக் குடைந்தது.

9. புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு.

சிறையு முண்டோ காமங் கைம்மிகின் என்றது. வைய நினைத்துச் சென்றாலும் அது வாழ்த்தாக முடிகிறது. வீம்பு, விறுவிறுப்பெல்லாம் காதலில் மடங்கிவிடும்.

10. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினர்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

நெஞ்சினர் - பக்குவப்பட்ட நெஞ்சினர், கனிந்த காதலர். நிணந்தீயிலிடல் - காமத் தீயில் உடலையே இடும் வேள்வி. கூடலன்றி ஊடல் இல்லை. உருகிய பொருள் ஒன்றுதலன்றிப் பிரிந்தூடல் இல்லை.

## 127. அவர்வயின் விதும்பல்

1. வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

அவர் வரும் வழி நோக்கிச் சுழன்று கண்ணும் தேய்ந்த என்றுமாம். பார்த்த கண் பூத்துப் போயிற்று. ஓதற் பிரிவுமூவாண்டு, ஆயிரம் நாட்கள். அவ்வளவையும் ஒவ்வொன்றாகக் குறியிடுவதெனின் விரல் தேய்ந்துதானே போகும். தேய்ந்த நகம் என்பதும் பாடம்.

2. இலங்கிழா யின்று மறப்பினென் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து.

தோழியுடன் இரங்கியது. ஒருநாள் தவறினும் கலங் கழிதல் தவறாதென்பது. கலமென்றது, அதுவும் அளக்கும் கருவிபோலுமென்பது குறிப்பு.

3. உரன்நசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ யின்னு முளேன்.

உரன் - போரும், அறிவுக் கல்விப் பிரிவுமாம். உரனும் ஆடூஉமேன என்றது. உள்ளந்துணை - வினைத்திட்பம் மனத்திட்பமாகலின்; கல்விக்கு நினைத்தல். தலைவிய துள்ளந் துணையாகவுமாம். காதலியது நல்லெண்ணம் தலைவனது வெற்றிக் காரணம்.

4. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகோ டேறுமென் னெஞ்சு.

மரவுச்சியிலேறி வரும் வழிபார்த்தல். பலவாக உவகை நினைவுகள் கிளைத்தலுமாம். புலப்பேன்கொல் என்றெல் லாம் கிளைத்தல். கூடிய காலம் என்பதும் பாடம்.

5. காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்குமென் மென்றோட் பசப்பு.

களவுக்குரிய சிறு நோக்கம் போய்க் கற்புக்குரிய கண்ணாரக் காணும் பெரு நோக்கம் (முழு நோக்கம்) வந்து விட்டது.. தலைவன் வந்து கொண்டிருக்கிறானென்ற விரைவும் ஏற்பாடுகளும் தொடங்கி விட்டன. கண்ணார என்றல் விழைவு மிகுதி. பருகுவன்ன நோக்கம்.

6. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாங் கெட.

பல நாள் நீர்த்தேக்கம் ஒரு நாளில் வடிதல் போல, வந்த ஒரே நாளில் ஆர்வமெல்லாம் தணிந்து விடுகின்றது. காதல் கற்பனைமிக்கதோர் கலை.

7. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்.

கலத்தல் - புணர்தலும்; உயலுண்மை அவனிடம் சாற்றலுமாம். கண்ணன்ன கேளிர் - கண்ணுளர், அவள் கருமணியிற் பாவையாகிறான் தலைவன்.

8. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து.

வெற்றியும் விருந்துகளும், (சத்தும் சுவைகளுமுள்ள உணவுகள்) காதற்கு ஊற்றுவன. நீண்ட நாட்களுக்குப்பின் புதிதாகக் காண்டலின் விருந்து. செயல்களை வெற்றிபெறச் செய்பவற்குக் காதலி அமைக்கும் உணவு இனிக்கும்.

9. ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேட்சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

முன்பும் நாளொற்றி என்றாள். ஏழு நாள், ஒரு வாரம் கூடியிருப்போர்க்கு எழு நாள் ஒரு நாளாகும். காதலின்றி 70 ஆண்டு வாழ்வதினும் காதலுடன் 10 ஆண்டு வாழ்தல் சிறந்ததென்பது குறிப்பு.

10. பெறினென்னும் பெற்றக்கா லென்னும் உறினென்னும்
உள்ள முடைந்துக்கக் கால்.

காதல் முறிவில் இதய நோய்களும், இறப்புங் கூட நிகழ்தலுண்டென்பது.

## 128. குறிப்பறிவுறுத்தல்

1. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்க லுறுவதொன் றுண்டு.

கண்ணின் வகைமையுணர்வார் காதலர். இங்குக் கேண்மையைக் கண்ணுரைத்தது. கையால் கரப்பினுமாம். தலைவன் பின்வந்து கண்களை மறைக்க வேண்டுமென்னும் குறிப்புடையது.

2. கண்நிறைந்த காரிகை காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.

கண் கொள்ளாக் காட்சி பெண். பெண்ணைப் பாராட்டு கிறார் ஆசிரியர். பெண்ணிறைந்த நீர்மை - கற்பு. அழகும் கற்புமே பெண்ணின் நிறைவென்றது. பெண்ணிறைந்த நீர்மை - தொட்டவிடமெல்லாம் (காமம்) இன்பமென்பது.

3. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு.

மேல் இயற்கையழகு கூறி இங்குச் செயற்கையழகுரைத்தது. பெண் அணியும் அணிகளிலும் ஒரு அழகும் ஒழுங்கும் வேண்டும். அணிகளைச் சுமத்தலாகாது, அணிய வேண்டும்.

4. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

பெருஞ்சிரிப்பின்றி புன்முறுவலே பெண்ணிற்கழகு. இவளும் பூக்கின்ற இளமலரென்றது. தீ நாற்றமுடைய வாயினள் காதற் குரியளாகாள். பூச்சூடலும் ஆடை அணிகளை அழகுற அணிதலும் இன்பத் தூண்டுதல்கள்.

5. செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

கழன்ற வளைகள் இப்போது செறிந்து விட்டன. கள்ளம் - வளை யொலித்துச் சென்றது. இக்களவினால் துன்பமில்லை, துயர் தீருமென்றது. யாருமறியாத் துயர் போக்குவது காதல்.

6. பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வ துடைத்து.

பிரிதற் குறிப்புரைத்தது. பிரிவாற்றுதல் அரிதென்றது. பெட்பக் கலத்தல் - புணர்ச்சியால் காதல் இறுகுமென்பது. அன்பு காதல்.

7. தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் (வளை) கவி பாடுகின்றது. அவன் துறைச் சங்கு வளையாகலின் அவனை நன்கறிந்தது.

8. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்
எழுநாளே மேனி பசந்து.

ஒரு நாள் எழு நாட்போலென்றார். உயிர் உடலை விட்டெழு நாளேம் (இறக்கும்) எனினுமாம். மென்மையுடையது மேனி.

9. தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது.

தொடி (பிரியின்) அடியிற் கழன்று விழும் என்பது. உடன் செல் குறிப்புமுடையது. செல்லின் எனது தொடிகளை நின் கழல் தொடியாக்கிக் கொண்டு செல்க என்றதுமாம்.

10. பெண்ணினுல் பெண்மை யுடைத்தென்ப கண்ணினுல்
காமநோய் சொல்லி யிரவு.

பெண் கண் என்பது. கண்ணுடையர் என்போர் பெண்ணுடையர். வலிய வந்திழுப்பவள் காதலியாகாள். கண்ணோட்டத்திற் கவர வேண்டும். இரவு - அறப் பொருட்பாலில் வேண்டாத குணம் பல காமத்தில் வேண்டும் போலும்.

## 129. புணர்ச்சி விதும்பல்

1. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

காதல் தமிழ்க்கள், கள்ளுண்ட நேரம் போக மற்ற நேரத்தில் காமக் கள்ளுண்பரென்பது. ஆதலின் அக்கள்

ளுண்ணற்க இக்கள்ளுண்க என்றலுமாம். கள்ளொடாயின் காமம் இனிக்கும் போலும். ‘கள்ளொடு காமம் கலந்து கரைவாங்கும் வெள்ளம் தருமிப் புனல்’ (பரிபாடல் 10-69).

**2.** தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.

மூடாமை (மறையாமை)யுமாம். சிறையுமுண்டோ காமங்கைம் மிகின் என்பது. வெள்ளம் தலைக்குமேல் போய் விட்டதென்க.

**3.** பேணாது பேட்பவே செய்யினும் கொண்கனைக்
காணா தமையல கண்.

பெட்ப செய்தலைத் தான் விரும்பாதவள்போல் விரும்புகிறாள். எடுத்ததும் நேரே கலத்தலில் ஈடுபடலாகாது. நாணப் படத்தக்க பேச்சுக்களாலும் ஆடல்களாலும் கனியச் செய்ய வேண்டுமென்பது.

**4.** ஊடற்கட் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு.

ஒன்றை நினைத்து ஒன்றைச் செய்தல் காதற் கற்பனையாளரிடம் நிகழும். புணர்ச்சி திட்டமிட்டுச் செய்யக்கூடுவதன்று.

**5.** எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

பழி கண்டால் ஊடல் பகையாய் விடும். காதலிலும் ஒருவர் பொறை இருவர் நட்பு, தலைவனும் தானும் கோல் கொண்டெழுதிய அனுபவத்தாற் கூறியது.

**6.** காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை.

எல்லாம் வேட்கை மிகுதியால். தவறு, அல்லதெல்லாம் காமம் பற்றியன. ஆரா வேட்கை பொருமையையும் பிறரிடம் பழிமையுமே நினைப்பிக்கும். மெய்ப்பொருள் காட்சி அறியாமை யனைத்தையும் அழித்தல் போலத் தவறெல்லாம் மறையும்.

**7.** உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்த லறிந்தேன் புலந்து.

புலவி உண்மையன்று பொய் யென்பது. துடும் எனப் பாய்ந்து (புறம்) நீந்திப் பழகியவன். வெற்றி கிட்டாதெனத் தெரிந்தும் முயல்வது காதல்.

8. இளித்தக்க இன்ன செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

கள்வ என்றதால் களவொழுக்கத்தில் வென்றவ னென்பது, தன்னை மறந்திருக்குமிடம் காதல், ஒருவர் மற்ற வர்க்குச் செய்யும் பிழைகளை யெல்லாம் பொறுக்கச் செய் கிறது. துன்பம் உழத்தொறும் உயிர் காதற்றென்க.

9. மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

பருவத்தே மணஞ் செய்க, பயிர் செய்க என்றது. அதனை வன்மையாக்கி எழுவகை மணத்தால் நுகரற்க, களவால் நுகர்க என்பது. தொடக்கத்திலேயே புணர்ச்சி மொட்டாகும், காலந் தாழ்ந்தால் உதிர்ந்து விடும்; மலராக விரியும் மென்மையில் (நெகிழ்ச்சியில்) புணர்தலே உச்சநிலை (Climax) இன்பமாம்.

10. கண்ணின் துனித்தே கலங்கினள் புல்லுதல்
என்னினும் தான் விதுப்புற்று.

புல்லுதலேனும் முதலிலாகட்டுமென்றது. புணர்ச்சி பிறகென்பது. புல்லுதல் செம்பாகமன்று. காமத்தில் துன்பக் கண்ணீரும் இன்பக் கண்ணீரும் உண்டு.

## 130. நெஞ்சொடு புலத்தல்

1. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவனெஞ்சே
நீயெமக் காகா தது.

அவரவர் தன்னலத்தைக் கருதியதன்று; ஒருவர் மற்றவர்க் காக வாழ்தல் காதல்.

2. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறியென் நெஞ்சு.

காதலர் ஒருவரையொருவர் நெருங்குதற்கு எக்காலத்தும் அஞ்சுதலான நிலைமையாகாது. காதலனது தலைமை பற்றிய அச்சம் காதலிக்காகாது.

3. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

பெண் ஏழையென்பது, காதலர் ஒருவர்க் கொருவர் ஏழையாதல் தவறில்லை. பெட்டாங் கென்பதால் காதலில் வித்தித்தான் விளைக்க வேண்டும்.

4. இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

உன்னோடு யார் பேசுவார் என்ற வழக்கு. எவ்வளவு காதலினும் சிறிது வீம்புடையவர் பெண்கள்.

5. பெருஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அருஅ இடும்பைத்தென் நெஞ்சு.

வாராக்காற்றுஞ்சா வரிற்றுஞ்சா வென்றது. இவ் விடுக்கணுக்கும் அழிதலில்லை. இது துன்பமாகிய இன்பம். தலைவனைப் பெருமை, புணர்ச்சி பெருமை யென்க.

6. தனியே யிருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் னெஞ்சு.

அக மாதலின் பிறரோடு சேர்ந்து நினைப்பதன்று.

7. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாவென்
மாணு மடநெஞ்சிற் பட்டு.

பெண்களது மடம் இன்னதென்பது, நாணுதல் - நினைக்க நாணுதல்.

8. எள்ளின் இளிவாமென் றெண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

'உயிர்க் காதல்' என்பதுணர்த்தியது. உயிருள்ளவரை நினைத்தல் காதல்.

9. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

மருந்து பிறிதில்லை. தோழி முதலோரும் கூறுதல் ஆறுதலாகாது. அகத்திற்கு அகமே துணை.

10. தஞ்சந் தமரல்லர் ஏதிலர் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி.

காதலன் இருக்கையிற்ருன் யாவரும் தமர். இல்லாவிடத்து நெஞ்சமே தமர்- அந்நெஞ்சமுந் தமரல்லாவிடத்துக் (நெஞ்சுறுதி இல்லாவிடத்து) காதல் சாதல். அறமுதல் நான்கிற்கும் நெஞ்சமே துணை போலும்.

## 131. புலவி

**1.** புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லல் நோய் காண்கஞ் சிறிது.

காதலில் ஒருவர் துன்புற (Humiliation) மற்றவர் காண விழைவதுண்டு. அத்தகைய பிள்ளை விளையாட்டுள் புலவி ஒன்று. சிறிது என்றதனுல் பின் புணர்ந்து தீர்ப்போமென்பது.

**2.** உப்பமைந் தற்ருற் புலவி யதுசிறிது
மிக்கற்ருல் நீள விடல்.

உப்பென்றதால் காதற் சுவைக் கின்றியமையாதெனவும் ஆனுல் சிறிது கரிப்பு (வெறுப்பு) டையதெனவும் அறிக. அளவினுற் கண்ணேட்டம் போல்வது புலவி.

**3.** அலந்தாரை யல்லல்நோய் செய்தற்ருல் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

புலவி புணர்ச்சிக்கு முதற் படியாக வேண்டுமன்றி அதுவே பயனுய் விடலாகாது. ஆயின் அது பிணியாக மாறிவிடும். பிறிதினேய்ப் போற்ருத அறிவின்மையுமது.

**4.** ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

அதனுற்ருன் ஊடல், உணர்தல் பயனென்றது. உணராமையால் காதல் வேர் அற்றுவிடும். முதலென்றதால் உயிர்க்கேடு முண்டாமென்பது.

**5.** நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணு ரகத்து.

புலத்தல் உரிமை, பெண் புலத்தலும் ஆண் அணைத்தளி செய்தலும் காதலுக்கோர் அழகு (கலே).

6. துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயு மற்று.

துனி சிறிது முதலில் நிகழ்வது, புலவி பெரிது. புலவி சிறிது சிறிதே பெருகவேண்டும். இன்றேல் அது கனியாகிய பின் ஒன்று கருக்காயான மாதிரி இயற்கை யன்றும்; சுவை கெடும். கருக்காய் - செங்காய்.

7. ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று.

நீரைத் தேக்கிப் பெருக்கிப் பயன்படுத்தல் போலப் புலவி காமத்தைப் பெருக்குவது. சிறிது தடைப்படுத்திப் பெருக்குவது. புணர்வதெப்போதென்ற வேட்கையை மிகுவிப்பது புலவி.

8. நோதல் எவன்மற்று நொந்தாரென் றஃதறியும்
காதல ரில்லா வழி.

நோவற்க நொந்ததறியாய்க் கென்றது. புலவியை உய்த்துணரும் அறிவு வேண்டுமென்றது. அதனை உண்மை வெறுப்பெனக் கருதலாகாதென்பது. உண்மைக் காதலர் புலவியை விரும்புவர்.

9. நீரும் நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது.

நிழனீரும் இன்னாத இன்னா தென்றார். இங்கு இனிய இனியவென்கிறார். புலவி (வேனிலில்) நல்ல நிழலில் அமர்ந்து இளநீர் அருந்தலுமாம். மேற்கூறியாங்கதனை விரும்புவார் கண்ணேதான் புலவி இனிது.

10. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சம்
கூடுவே மென்ப தவா.

உணங்க விடுவார்-உணராதவர், உணராமை தலைவன் தலைமையையும் ஆண்மையையும் கருதலால் வரும். பெருக்கத்து வேண்டும் பணிவு காதலுக்கும் பொருந்தும்.

## 132. புலவி நுணுக்கம்

1. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

புலவி விளையாட்டென்பது இங்குப் புலப்படும். அல்லல் நோய் காண்கஞ் சிறிதெனப் பொய்க் காரணம் காண்பது. ஆணும் தன் காதலி விரும்புமாறு தன்னை அழகு படுத்திக் கொள்ள வேண்டும்.

2. ஊடி யிருந்தேமாத் தும்மினர் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

தும்மல், கொட்டாவியின் வழியே உயிர் பிரியுமென்ற நம்பிக்கை ஒரு காலத்திருந்தது. அதனுற்ருன் வாழ்த்துதல். ஊடல் தீர்க்கும் வாயில்களுள் தும்மலும் ஒன்று போலும். காதலிலும் ஒருவர் பொறை இருவர் நட்பு.

3. கோட்டுப்பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று.

தான் சூடினும் தலைவிக்குச் சூடினும். தம்மை அழகுப் படுத்திக் கொள்ளுதல் ஒருவர் பிறரை பார்த்து மகிழ்தற்காக வேண்டும், பிறர்பார்த்து மகிழவேண்டு மென்ருகாது.

4. யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினு மென்று.

பெற்ருேர், பிள்ளைகள், பரத்தை, காமக் கிழத்தி முதலியவர் யாரினுமென்று புலக்கிருள். பரத்தையை வள்ளுவர் குறிக்கவில்லை யென்பது பொருந்தாதென இவ் வதிகாரம் காட்டுகின்றது. காதலன்பு தலையாயது.

5. இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்.

காதல் எல்லையற்றது. காலமும், இடமும் கடந்த பொருளது. இம்மையென ஏன் எல்லை குறித்த தென்றது. இம்மையெனப் புனையினும் புல்லென்றது. புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன் காதலி யானென்றது.

6. உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

தன் குணம் அவனிடத் தின்மையின் புலந்தது. வினை மேற் செல்பவன் மறத்தலும் நினைத்தலுமுண்டு. தலைவி யியல்பு உள்ளிருந்து நினைத்தே யிருத்தல் (மறவாமை). அக் குணம் அவனிடம் இல்லையென்றது.

7. வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

அன்புடையார் நினைத்தலால் தும்மல் வருமென்பர். பரத்தையருள் யாருள்ளி என்றாள். காதல் ஒரு வகைத் தன்னலமுடையது. தாய் தந்தையரிடத்தினும் யாரினும் அன்பு, தன்னிடம் இருக்க வேண்டுமென விரும்புவர் காதலர். காதலை ஒருவர்க்கே உரிமையாக்கிக் கொள்ளல்.

8. தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

வினையில் (காதலில்) ஒருவர்க் கொருவர் ஒளிமறை வென்பதாகாது. ஒருவர் செய்வதெதுவும் மற்றவரறிந்த தாக வேண்டும். பெண்ணறியத் தக்கதன்று இச்செயலெனில் அது புலவிக் காரணம்.

9. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
இந்நீர ராகுதி ரென்று.

முறுக்கு வந்து விட்டால் அவளுக்கு நல்லது செய் யினும், எது செய்யினும் காயும். உலகில் தன்னொருவர் நலத்தையே உயர்ந்ததாகக் கருதவேண்டுவது காதல்.

10. நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று.

புலவிக் காலத்து, அழும் பிள்ளைகளை ஆற்றுதலினும் அருமையுடையது பெண்களை யாற்றுதல். ஆற்றும் வழி நினைத் திருந்துமாம்.

## 133. ஊடலுவகை

**1.** இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்லது அவரளிக்கு மாறு.

குழந்தையின் பிடிவாதமும் பெண்ணின் ஊடலும் ஒன்று. விரும்பியது கிட்டச் செய்யும். அழுதாலுன்னைப் பெறலாமென்றது.

**2.** ஊடலின் தோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

சிறு துனி - வாடிய நலனை தவிர்க்க வகை செய்வது.

**3.** புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன ரகத்து.

'செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாங்கலந்தவர்.' புலத்தலும் ஊடலென்றது. வான் நீரே நிலத்திற்கு வருதலால் புத்தேணுடு, புலத்தலைக் காண இங்குத்தான் வரவேண்டுமென்பது.

**4.** புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை.

புலவியில்லையாயின் புல்லுதற்குப் பின் புணர்தல் இருக்கும். புலவியாகலின் புல்லி விடாமையாயிற்று. புல்லாமைக்கும் புலவி புல்லுதலைத் தந்தமையின் இன்பமாயிற்று.

**5.** தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து.

ஊடல் பொய்யென்பது. அகறல் - பொருதகர் தாக்கற்குப் பேருந்தகைத்து. பிரிதல் கூடற்கு.

**6.** உணலினும் உண்ட தறலினிது காமம்
புணர்தலின் ஊட லினிது.

அற்றதறிந்து என்றார் முன்பும். புணர்தல் காதற் குணமென்பது. புணர்ச்சி யின்றேல் காதல் சாதல். ஊடலன்றிப் புணர்தல், உண்டதற்கு மேல் தொடர்ந்துண்பது போலாம். புணர்ச்சிக்கு நிறை வயிறும் பெரு வயிறுமின்றி,

உண்டு ஒரு மணிப்பிற்பட்ட அரை வயிறு வேண்டும் போலும்!

**7.** ஊடலில் தோற்றவர் வென்ருர் அதுமன்னும்
கூடலிற் காணப் படும்.

ஊடலில் கீழ்ப் பட்டவரே வென்ருர். அவர்க்கே இன்பமாகலின் வென்ருரென்ருர். கூடல் என்கையில் ஆசிரியர் மதுரையை நினைக்கிருர் போலும். காதலில் தோல்வியே வெற்றி.

**8.** ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல் வியர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.

புணர்ச்சியில் நுதல் வியர்த்தலும், வியர்வை காய்ந்த உப்பும் என்பது. உப்பு இன்பமுமாம், இன்ப வுச்சத்தில் (Orgasm) ஏற்படும் கை காலாட்டத்தில் வியர்வை துளிக்கும்.

**9.** ஊடுக மன்னே ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னே இரா.

புணர்ச்சியாகிய நிகழ்ச்சி நேரம் சிறிது. மிஞ்சினல் அரை மணி, ஒரு மணி. இன்பத்தை இரவு முழுவதும் நுகர விரும்புவோர் ஆடல்களில் (லீலை) ஈடுபட வேண்டும். புலவியுள் ஆடல், கிள்ளல், தழுவல், தட்டல், கூவல், கவ்வல், முத்தல், வருடல், முதலியவைகளிலெல்லாம் உவகையை மிகுத்துப் பொழுதுபோக்க வேண்டும். ஆடலில்லாத புணர்ச்சி கனியிருக்கக் காயாகும்.

**10.** ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

ஊடல் துன்பமேனும் அதுவே இன்பமென்றது. துன்பியல் (Tragedy) நாடகம் போல்வது ஊடல். அந்நாடகப் பயன் ஊடற் பயன். இன்பம் என ஆசிரியர் நூலை முடிக்கிருர். அகரத்தில் தொடங்கி, பெறின் என னகரத்தில் முடித்தலில் தமிழ் முழுவதையும் கூறியதாயும் வள்ளுவர் முழு நூல் ஒன்றைத் தந்ததாயும் பலர் பாராட்டுதல் பொருந்தும். ஆசிரியர் இப்பாடலையே கடைசியாக வைத்திருப்பார். கடவுளும் காதலும் (இன்பம்) உலகின் கண்கள்.

---

# பிழை திருத்தம்

| பக்கம் | | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 14 | — | 6 | ரெல்லாரிடத்தம் | ரெல்லாரிடத்தும் |
| 45 | — | 16 | இனையருமாம் | இளையருமாம் |
| 45 | — | 34 | பொருமை கொண்டு | பொருமை கொண்டு, |
| 63 | — | 23 | செய்தததற்காக | செய்தற்காக |
| 93 | — | 30 | சிறக்கவும் | இறக்கவும் |
| 97 | — | 13 | கூறிலின் | கூறலின் |
| 111 | — | 16 | அறுவினை | அறிவினை |
| 129 | — | 5 | உயிரச்சம் | உயிரெச்சம் |
| 145 | — | 15 | சினத்தாற்றுதல் | இனத்தாற்றுதல் |
| 158 | — | 7 | தன்மை தென்றுமாம் | தன்மைத் தென்றுமாம் |
| 171 | — | 23 | காவாத | தூவாத |
| 176 | — | 8 | என்பதற்கே | என்பததற்கே |
| 193 | — | 9 | நண்பர்களும் | நண்பர்களதும் |
| 203 | — | 33 | உட்கட்படார் | உட்கப்படார் |
| 253 | — | 26 | காப்பார் | கரப்பார் |
| 262 | — | 27 | நீறை | நிறை |
| 274 | — | 4 | அல்லால் | அல்லது |
| 281 | — | 17 | சமமாதலன்றி | சமமாயினன்றி |
| 298 | — | 29 | பழிமையுமே | பழியையுமே |

UG
RO